I should thank both Sri E. S. Narasimhacharya and Sri K. V. Jagannathan for their help. I have also to thank Sri T. Chandrasekharan, M.A., L.T., Curator, Government Oriental Manuscripts Library, Madras, for having entrusted the work of editing this volume to me, for affording me all facilities in the course of the work, and for his forbearance of the delay in the completion caused by the sudden breakdown of my health in the middle,

T. N. SUBRAMANIAM.

முன்னுரை.

உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தன்னுடைய எதிர்காலம் எவ்விதம் அமையும் என்பதை அறிய மிகவும் ஆவல் உள்ளவனாக இருக்கிறான். அதனோடு தனக்கு மிகவும் வேண்டியவர்களான மனைவி மக்கள், உற்றார் உறவினர் ஆகியோருடைய எதிர் காலத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அந்த ஆசை இன்று நேற்று ஏற்பட்டதல்ல; மிகப்பழங்காலத்திலிருந்தே—ஏன், மனிதன் தோன்றிய நாளிலிருந்தே—இருந்திருப்பதாகத் தெரிகிறது.

மனிதனுடைய இந்த ஆசையை நிறைவேற்றுவதற்காகவே எதிர் காலத்தை முன்னதாக அறிந்து கூறுவதற்கான வழிமுறைகள் பலவற்றை நம் முன்னோர்கள் வகுத்தனர். ஜோதிஷம், ரேகை சாஸ்திரம், சாமுத்திரிகா லட்சணம், சகுன சாஸ்திரம், கனா சாஸ்திரம் என்பன போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை.

இந்தச் சாஸ்திரங்கள் எல்லாம் திடீரென்று ஒரேநாளில் ஏற்பட்டவையல்ல. ஒவ்வொன்றும் இப்போதுள்ள நிலையை அடைவதற்கு நீண்டகாலம் பிடித்திருக்கும். சொந்த அநுபவங்களையும், நேரில் கண்டவைகளையும், பிறருடைய கூற்றுக்களையும் ஆதாரங்களாகக்கொண்டே அவை ஏற்பட்டிருத்தல் வேண்டும். இவ்விதம் தோன்றியவை பூர்ண வளர்ச்சிபெற்ற வரலாறே மிக்க ரசமாக இருக்கும். ஒருவனுடைய எதிர்காலத்தை நிர்ணயித்துக் கூறுவதற்கு அவன் பிறந்த காலமும் இடமும், அப்போது வானத்துக் கிரகங்களின் நிலை, பின்னால் அவ்வப் போது அவைகளுக்கு ஏற்படும் மாறுதல், அவன் உடல் அமைப்பு, அதிலே காணும் குறிகளும் லட்சணங்களும், அவற்றுள் பின்னால் உண்டாகும் மாற்றங்களும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவன் செய்யும் தொழில், சூழ்நிலை, அவனைச்சுற்றி ஏற்படும் நிகழ்ச்சிகள், கனவு, சகுனம், இன்னும் இவைபோன்ற சம்பவங்கள் முதலிய பலவற்றையும் கவனித்துக் கருத்தில் கொண்டே அவர்கள் அந்த முறைகளை வகுத்து, அவ்வப்போது நிகழ்பவை, நீண்ட காலத்துக்குப்பின் நிகழக் கூடியவை ஆகிய பலன்களை அறிந்து சொல்லியிருத்தல் வேண்டும். இவ்விதம் கணித்துக்கூறுவதில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல வேறு முறைகள் ஏற்பட்டு நூற்றுக்கும் மேலாக இருந்திருக்கும். காலக் கிரமத்தில் அவற்றைத் திரட்டித் தொகுத்து, ஒப்பிட்டு, ஒழுங்குசெய்து பல கிளைகளாகப் பிரித்திருக்கவேண்டும்.

உண்மையில் அதேபோலத்தான் அவற்றின் வளர்ச்சி ஏற்பட்டதெனத் தெரிகிறது. பகவதீ ஸூத்திரம் என்னும் ஜைனநூலில் ஆஜீவக மதத்தைச் சேர்ந்தவர்களுடைய கிரந்தங்கள் உண்டான விதத்தைக் கூறியிருப்பதிலிருந்து இது தெரியவருகிறது. ஆஜீவக சமயத்தின் முக்கிய புருஷரான மக்கலி கோசாலர் (தமிழ் நூற்களிலே மற்கலி என்று வழங்கப்

படுபவர்) முன்னிலையில் ஒருசமயம் ஆறு திசாசரர்கள் ஒன்றுகூடி நூறுக்கும் மேற்பட்ட புவ்வம் (அதாவது பூர்வம்) என்னும் தொன்னூல்களை ஆராய்ந்து அஷ்டாங்கமஹாநிமித்தங்களையும், உபயமார்க்கங்களையும் தொகுத்துப் பத்து உறுப்புக்களாகச் செய்தனராம். மற்கலியும் அவற்றைச் சிறிது ஊன்றிக்கவனித்துவிட்டு அவற்றுக்கு ஒப்பம் அளித்தாராம். அவை, அவர்களுடைய மதக்கிரந்தங்களாயினவாம். எனினும், அந்த நூல்களோ, அவற்றுக்கு ஆதாரமாக விளங்கிய பூர்வங்களோ இப்போது நமக்குக் கிடைக்கவில்லை; யாவும் மறைந்தொழிந்தன. இந்த விவரமே ஆஜீவகர்களுடைய மதத்தை மறுத்துரைக்கும் ஜைன நூல்களிலிருந்துதான் நமக்குத் தெரிகிறது.

அந்த எட்டும் எவ்வெவ்வற்றைக் குறிக்கும் என்பதும் வெவ்வேறு விதமாகக் காணப்படுகிறது. பகவதீ ஸூத்திரத்துக்கு உரை எழுதிய அபய தேவர் என்பார் மஹாநிமித்தத்தின் எட்டு அங்கங்களையும் பின் வருமாறு கூறுகிறார்—

1 திவ்யம் — தெய்வம்பற்றியது.

2 ஔத்பாதம் — உற்பாதங்கள்பற்றியது.

3 ஆந்தரிக்ஷம் — ஆகாயம்பற்றியது.

4 பௌமம் — பூமிபற்றியது.

5 ஆங்கம் — உடல் அல்லது உறுப்புகள்பற்றியது.

6 ஸ்வாரம் — குரல் பற்றியது.

7 லாக்ஷணம் — இயல்புபற்றியது.

8 வ்யாஞ்சனம் — துணைப்பொருள்பற்றியது.

ஸ்தாநாங்க ஸூத்திரம் என்னும் மற்றொரு ஜைன நூலிலும் அந்த எட்டு அங்கங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும், அவ்விடத்திலே 'திவ்யம்' என்பதற்குப் பதிலாக 'ஸுவிணே' (அதாவது ஸ்வப்நம் அல்லது கனவுபற்றியது) என்ற பெயர் காணப்படுகிறது. அந்த நூலுக்கும் அபய தேவர் உரை எழுதியிருக்கிறார். அங்கே அந்த எட்டும் 'வருங்காலப் பலனை எடுத்துரைக்கும் முறைகளாகும்' என்பதைத் தெளிவாகக் கூறுகிறார். 'உத்தராத்யயந ஸூத்திரம்' என்னும் ஜைன நூலிலும் இந்த எட்டு வகைகள் அதேபோலக் கொடுக்கப்பட்டுள்ளன. மைசூர் ராஜ்ஜியத்தில் உள்ள சிரவணபெள்கொளத்தில், கி. பி. 1398-ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் அந்த எட்டும் வ்யஞ்சநம், ஸ்வரம், நபஸ் (ஆகாயம்), தநு (உடல்), லக்ஷணம், சின்னம், பௌமம், சகுனம் என்று வேறுவிதமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. (எபிகிராபியா கர்நாடிகா, இரண்டாம் தொகுதி, சிரவணபெள்கொளம், 254-ஆம் நெ. கல்வெட்டு.)

இவ்விதம் மஹாநிமித்தத்தின் எட்டு அங்கங்கள் எவை எவை என்று கூறுவதிலே வேற்றுமை காணப்படுகிறது. அன்றி, அவற்றின்

பெயர்களைக்கொண்டு ஒவ்வொன்றும் எதைப்பற்றித் தெரிவிக்கிற தென்பதை ஊகித்துக்கொள்ளலாமே தவிர, அதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. நம்மிடையிலிருந்து ஆஜீவகமதம் முற்றிலும் மறைந்து போனதோடு அந்த மதக்கிரந்தங்களும் அழிந்துவிட்டன. எனினும், வெவ்வேறு பெயர்களில் கொடுக்கப்பட்டிருப்பினும் அவை எட்டும் வருங் காலப்பலன் உரைக்கும் சாஸ்திர நூல்களே என்பது விளங்கும்.

நடந்தது, நடப்பது, நடக்கப்போவது என்னும் முக்காலப்பலன்களையும் அறிந்து உரைப்பதிலே ஆஜீவகர்கள் நிகரற்று விளங்கினார்கள் என்பதைத் தெரிவிக்கும் குறிப்புகள் நம் நாட்டு இலக்கியங்களிலே பல இடங்களில் காணப்படுகின்றன. மௌரிய சக்கரவர்த்தியான அசோகன் அரசனாவதற்கு முன்னதாகவே அவன் பிற்காலத்தில் பெரும்புகழோடு விளங்கப்போகிறான் என்று அவனுடைய தாயாருக்கு ஆஜீவகத்துறவி ஒருவர் கூறினாராம். அந்நாளிலே அசோகன் தன் தந்தையின் பிரிய புத்திரனாகக்கூட இருக்கவில்லையாம். இந்த விவரங்கள் புத்தமதக்கிரந்தங் களிலிருந்து தெரியவருகின்றன. இதேபோன்ற மற்றொரு விவரம் தக்க யாகப் பரணியின் உரையிலிருந்து தெரியவருகிறது. திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையிலே பாண்டியன் அவைக்களத்திலே சமணர் களுடன் சமயவாதம் நடத்துவதற்கு முன்னதாக ஆஜீவகர்கள், "பிள்ளை யார் நக்ஷத்திரத்தின் நிலைமையைப் பார்த்துத் தோற்பரென வந்த வர்கள்", என்று அவ்வுரையாசிரியர் கூறுகிறார். 'ஆனால் அவர்கள் ஜோஸ்யம் பலிக்கவில்லை; அது அவர்களைக் கைவிட்டது. அவர்கள் தோற் றுப்போகச் சம்பந்தர் வெற்றிகொண்டார்' என்பதைக் கூறி ஆஜீவகர்கள் நிமித்தராக விளங்குவதைப் பரிகசிக்கவே உரையாசிரியர் அவ்விதம் எழுதினார்போலும்.

எனினும், ஆஜீவகர்களைப்போலவே அவர்களிடம் பகைமை பாராட் டியவர்கள் உள்பட, பிறமதத்தவர் பலரும் அந்தச் சாஸ்திரங்களைப் பயின்று நல்ல தேர்ச்சிபெற்று வழங்கிவந்திருக்கிறார்கள். அதற்காகச் சில சமயங்களில் அந்தச் சாஸ்திரங்களை அவர்கள் ஆஜீவகர்களிடமே கற்றுத் தேர்ந்திருக்கிறார்கள்.

ஜைனத்துறவிகள் இந்தச் சாஸ்திரங்களைக் கையாளக்கூடாது என்று அவர்களது உத்தராத்யயன ஸூத்திரம் தடை விதித்திருக்கிறது. ஆயினும் காலகாசாரியார் என்னும் ஜைனமுனிவர் ஆஜீவகர்களிடமிருந்து அஷ்டாங்க மஹா நிமித்தங்களைக் கற்றுக்கொண்டார் என்று கூறப்படுகிறது. சிரவண பெள்கொளத்தில் சுமார் கி.பி. 600-ஆம் ஆண்டுக் கணித்தான எழுத்துக் களால் பொறிக்கப்பட்டுள்ள சாசனம் ஒன்றில் பத்திரபாஹு என்பார் அஷ்டாங்க மஹாநிமித்தத்தின் தத்துவத்தால் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய திரிகால ஞானத்தையும் பெற்று உஜ்ஜயினி நகரத்தில் பன்னிரண்டு வருஷகாலத்துக்குக் கொடிய பஞ்சம் ஏற்படப்போகிறதென் பதை முன்னதாகவே அறிந்து கூறினார் என்று கூறப்பட்டிருக்கிறது. (எபி கிராபியா கர்நாடிகா, இரண்டாம் தொகுதி, சிரவணபெள்கொளம், முதல்

கல்வெட்டு). கி.பி. 1398ஆம் ஆண்டு கொண்டதாக அவ்விடத்திலே கிடைக்கும் மற்றொரு கல்வெட்டிலிருந்து அர்ஹத்பலி என்னும் பெரியார் தம்முடைய அஷ்டாங்க மஹாநிமித்த ஞானத்தால், "முக்காலத்திலும் சுகம் துக்கம், வெற்றி, தோல்வி இன்னும் எல்லாவற்றையும் நேரில் கண்டதே (சாக்ஷி) போல அறிந்திருந்தார்" என்பது தெரிகிறது (ஷை 254 நெ. கல்வெட்டு). இவற்றிலிருந்து ஜைனமதத்துறவிகளும் முனிவர்களும் தங்கள் மதக்கிரந்தங்களிலே இந்தச் சாஸ்திரங்களைக் கையாளக்கூடாதென்ற விதி இருந்தாலும், அவற்றை நன்றாகக் கற்று அவற்றிலே தேர்ச்சிபெற்றிருந்தனர் என்பது விளங்கும்.

நிமித்த பலன்களைக் கூறும் இந்த எட்டுவகைச் சாஸ்திரங்களும் இப்போது வழக்கில் உள்ளன என்று சொல்லமுடியாது. இந்நாளில் ஜோதிஷம், கைரேகை சாஸ்திரம் ஆகிய இரண்டுமே பெருவழக்கில் உள்ளன. சாமுத்திரிகாலட்சணத்தின் உபயோகம் கொஞ்சம் குறைவுதான். சகுனம் பார்ப்பது, கனவுகளைக்கொண்டு வருங்காலத்தை அறிவதுபோன்றவை அருகி வழங்குபவை. இவை பெரும்பாலும் நாட்டுப்புறங்களிலேதான் காணப்படுபவை. பரபரப்பு நிறைந்து அசுரவேகத்தில் நடக்கும் நகர வாழ்க்கையில் இவற்றைக்கவனிப்பதற்கு வேண்டிய அவகாசமே இல்லையென்று சொல்லலாம்.

எனினும், இந்த எட்டுவகைகளும் முன்னாளிலே வழக்கில் இருந்திருக்கின்றனவென்று தெரிகிறது. இவைகளைப்பற்றிய குறிப்புகள் நம் புராண இதிகாசங்களிலும் பழைய இலக்கியங்களிலும் அங்கங்கே காணக்கிடக்கின்றன. முக்கியமாக வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இராமனும், சுக்கிரீவனும் தோழமை பூண்டபோது சீதை, வாலி, இராவணன் ஆகிய மூவருக்கும் ஒரே சமயத்தில் இடக்கண்கள் துடித்தனவாம். பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நல்லதென்றும் ஆண்களுக்கு இடக்கண் துடித்தால் கெடுதலென்றும் சொல்லுவர். அதனால் அந்தத் தோழமை ஏற்பட்டவுடன் சீதைக்கு நன்மையும், வாலி, இராவணன் ஆகியோருக்குக் கெடுதலும் உண்டாகப் போகின்றனவென்பதை முன்னதாகவே இடக்கண் துடிப்பு அறிவித்தது. கர தூஷணர்களுடன் போருக்குக் கிளம்புவதற்கு முன்னதாக இராமனுடைய வலது தோள் துடித்து வெற்றி கிட்டப்போகிற தென்னும் நன்மையை உணர்த்தியதாகவும் காணப்படுகிறது. தசரதர் மிதிலையிலே தம் குமாரர்களுடைய திருமணங்களை முடித்துக்கொண்டு அயோத்தி திரும்பும்போது வழியிலே பறவைகள் விகாரமாகக் கத்துவதையும், விலங்குகள் வலமாகச் செல்வதையும் கண்டாராம். அதனால் அவர் கலவரம் அடைந்து தம் குலகுருவான வசிஷ்டரை வினவியபோது, பறவைகள் விகாரமாகக் கத்தியது கெடுதலைக் குறிப்பதாயினும், மிருகங்கள் வலமாகச் சென்றது அந்தத் தீமை விலகி நன்மையே உண்டாகும் என்பதைத் தெரிவிக்குமாதலால் கவலை கொள்ள வேண்டாம் என்று வசிஷ்டர் அவரைத் தேற்றினாராம். அதன்படியே இராமர் பரசுராமருடன் போரிட்டு வெற்றிகொண்டார். கனவுகளும் வருங்காலத்தைச் சூசகமாக எடுத்துக்காட்டுவன வென்பதைப் பற்றியும்

இராமாயணத்திலே கூறப்பட்டுள்ளது. அசோகவனத்திலே சீதைக்குக் காவலாக இருந்துவந்த திரிஜடை கண்ட கனவையும், அயோத்தியிலே இராமனுக்கு மகுடாபிஷேகம் செய்யவேண்டுமென்று தசரதர் ஏற்பாடு செய்துவந்த சமயம் தன் தாய்வழிப் பாட்டனை கேகய மன்னனிடம் சென்றிருந்த பரதன் கண்ட கனவையும் முக்கியமானவைகளாக எடுத்துக் காட்டலாம். இன்னும் இராமனுக்கு மகுடாபிஷேகம் செய்யவேண்டுமென்று திடீரென்று அவசரமாக முடிவு செய்ய நேர்ந்ததைப் பற்றிக் கூறும்போது தசரதர், இடியுடன் கூடிப் பெருங் கோஷத்துடன் ஆகாயத்திலிருந்து தம் முன்னிலையில் கொள்ளி விழுந்ததாகவும், ஜோதிட சாஸ்திரப்படி தம்முடைய நக்ஷத்திரம் குரூரக்கிரகங்களால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் அதனால் ராஜமரணமோ அல்லது ஏதாவது பெரிய விபத்தோ நேரிடும் என்று அறிஞர்கள் உரைப்பதாகவும் காரணம் காட்டியிருக்கிறார்.

சிலப்பதிகாரத்திலே, சிலம்பு விற்கப்போன கோவலன் மதுரையில் கொலையுண்டதையடுத்து அவன் மனைவி தங்கியிருந்த புறச்சேரியிலே உற்பாதங்கள் ஏற்பட்டனவாம்.

"குடத்துப் பால் உறையாமையும்
குவி இமில் ஏற்றின்
மடக் கண் நீர் சோர்தலும்
உறியில் வெண்ணெய் உருகாமையும்
மறி முடங்கி ஆடாமையும்
மால் மணி நிலத்து அற்று வீழ்தலும்
வருவது ஓர் துன்பம் உண்டு,"

[ஆய்ச்சியர் குரவை.]

"குடத்துப் பால் உறைய வில்லை; வெண்ணெய் உருகவில்லை; கன்றுக் குட்டிகள் துள்ளி ஆடவில்லை; பட்டியில் எருதுகள் கண்ணீர் சொரிந்தன; பசுக்களின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் தாமாகவே அறுந்து விழுந்தனவாம்." இவற்றைக்கண்ட மாதரியும் மற்றோரும் பெருங்கவலை கொண்டார்களாம்.

மனிதர்களுடைய குரலும் அவர்களுடைய நிலையை எடுத்துக்காட்டிவிடும் என்பதை உணர்த்தும் கதைகளும் வழக்கில் இருந்திருக்கின்றன. புத்தமத நூலான "தம்மபத"த்துக்குப் புத்தகோசர் எழுதியுள்ள அட்டகதை என்னும் உரையில் காணும் கும்பகோசகன் கதையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். கும்பகோசகன் (குடப்பணக்காரன்) பெரும்பணக்காரன். அவன் தன் செல்வம் முழுவதையும் புதைத்து வைத்துவிட்டுக் கந்தல் துணியை உடுத்து யாரும் அறியாதபடி தன்னை உருமாற்றிக்கொண்டு ஊழியர்களுக்கு ஊழியனாகக் குற்றேவல் புரிந்து அதன் வருமானத்தைக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்திவந்தானாம். ஒரு சமயம் அவன் குரலைக் கேட்ட அரசன், 'அது ஒரு பணக்காரன் குரல்," என்று கூறினானாம். அரண்மனைப் பெண் ஒருத்தி அவனைப் பலவிதமாகப் பரீட்சித்துக் கடைசியில் அரசன் கூறியது சரியே என்பதை நிரூபித்து அவன் வேஷத்தைக் கலைத்துவிட்டாளாம்.

'கதாகோசம்' என்னும் ஜைன நூலில் காணும் மூலதேவன் கதையும் இதே போன்றதுதான். மூலதேவன் பல கலைகளினும் வல்லவன். சாதாரணமாக அவனுக்குக் கிட்டாத நிலையிலிருந்த கணிகை ஒருத்தியை அடைய அவன் விரும்புகிறான். அதற்காக அவன் தன்னைக் குரூபியான ஒரு குறளன் போல உருமாற்றிக்கொண்டு அந்தக் கணிகையின் வீட்டுக்குப் பக்கத்திலே இரவு வேளையில் அமர்ந்து கர்ணாமிர்தமாகப் பாடுகிறான். இனிமையான அந்தக் குரலைக்கேட்ட கணிகை அதிலே ஈடுபட்டு மயங்கி விடுகிறாள். அதனோடு அந்தக் குரலைக்கொண்டு அவன் நல்ல அழகனாக இருத்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கிறாள். உடனே அவள் தன் சேடியை அனுப்பி அவனைத் தன் இருப்பிடத்துக்கு வரவழைக்கிறாள். அவனுடைய குரூப உருவத்தைக்கண்டு அவள் ஏமாந்துவிடவில்லை. மூலதேவனுடைய விருப்பமும் நிறைவேறுகிறதாம்.

இவைகளைக் கவனித்தால், முன்னாளிலே அஷ்டாங்கமஹாநிமித்தத்தில் அடங்கிய ஒவ்வோர் உறுப்பும் வருவதை எடுத்துரைப்பதாக எவ்விதம் வழக்கில் இருந்ததென்பது விளங்கும். இவற்றுள் சில இன்றைக்கும் அங்கங்கே வழக்கில் உள்ளன. ஆனால் அவைகளைப்பற்றிய நூல்கள் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை.

'சாமுத்திரிகா லட்சணம்' சம்பந்தப்பட்டவரையில் மிகப் பழமையானதாக நமக்குக் கிடைப்பது வராஹமிஹிரர் இயற்றியுள்ள 'பிரஹத்ஸம்ஹிதை'யில் காணும் பகுதியேயாகும். புருஷ லட்சணம், ஸ்திரீ லட்சணம் என்று இரண்டு அத்தியாயங்களில் இது விவரிக்கப்பட்டுள்ளது. [இந்த இரண்டு அத்தியாயங்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் பிற்சேர்க்கையாக இந்த நூலிலே கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, ஓர் அத்தியாயத்திலே ஜனன காலத்திலே பலிஷ்டர்களாகத் தெரிகிற கிரக நக்ஷத்திர மகிமையால் பிறக்கின்ற ஐந்துவித புருஷர்களின் லட்சணம் கொடுக்கப்பட்டுள்ளது.] அதிலே உத்தம ஸ்திரீ புருஷர்களுடைய லட்சணத்தைக் கொடுத்துவிட்டு அதிலிருந்து வேறுபடும் அசுபக் குறிகளையும் தனியாகக் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். பிற்காலத்து நூல்கள் பெரும்பாலும் பிரஹத்ஸம்ஹிதையில் உள்ளதையே விரித்துக்கூறுகின்றன; அன்றி, அசுபக்குறிகளாக விலக்கப்பட்ட ஒவ்வொன்றும் எது எதைக் குறிக்கும் என்பதையும் எடுத்து உரைக்கின்றன.

பெரும்பாலும் இந்த நூல்கள் புருஷ லட்சணத்தையே முதலில் விரிவாக எடுத்துரைக்கும். புருஷர்களுக்குக் கூறும் லட்சணங்களிலே அநேகம் ஸ்திரீகளுக்கும் ஒக்கும். அதனால் இருவருக்கும் பொதுவாக இல்லாமல் பெண்களுக்கு மட்டும் சிறப்பாக அமைந்த லட்சணங்களைத் தனியாக ஸ்திரீ லட்சணம் எனக் கொடுத்திருப்பார்கள். ஆயினும் பிற்காலத்திலே மகளிர் இலக்கணம் தனியாகவும் எழுதப்பட்டுள்ளன. அவை ஓர் அளவு பிரசித்தமாகவும் இருந்திருக்கின்றன.

சாமுத்திரிகா லட்சணத்தை உலக வாழ்க்கையில் ஈடுபட்டவர்களே அல்லாமல் வேறு சில மதாசாரியர்களும் பயின்று வந்திருக்கிறார்களென்று தெரிகிறது: ஆயினும் ஆஜீவகர்கள் கொண்டிருந்ததைப் போல இந்தச்

சாஸ்திர நூல்களை அவர்கள் மூதக் கிரந்தங்களாகக் கொள்ளவில்லை. நாகார்ஜுன கொண்ட என்னும் நாகார்ஜுனர் குன்றில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்றிலிருந்து அங்கே புத்த பகவானுடைய திருவடி சாமுத்திரிகா லட்சணப்படி அமைக்கப்பட்ட செய்தி தெரியவருகிறது; புத்தமதத்தின் பல பிரிவுகளில் ஒன்றைச் சேர்ந்தவர்கள் சாமுத்திரிகா லட்சணத்தை நன்றாகக் கற்றவர்கள் என்றும், அத் திருவடியை நிறுவியதற்கு அவர்களே முக்கியஸ்தர்கள் என்றும் கூறப்படுகிறது. சைவ மதத்தின் ஒரு பிரிவான 'ரஸேச்வர தர்சன'த்தைச் சேர்ந்தவர்களும் சாமுத்திரிகா லட்சணத்திலே நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். இப்போது நமக்குக் கிடைக்கும் சாமுத்திரிகா லட்சண நூல்கள் பெரும்பாலும் அவர்கள் இயற்றியனவே.

இன்னும் ஆடவர் மகளிர் ஆகியோருடைய சாமுத்திரிகா லட்சணத்தை எடுத்துக்கூறும் நூற்களைத் தவிர வேறு வகையான இலக்கியங்கள் சிலவற்றிலும் அது விரிவாக உரைக்கப்பட்டிருப்பதையும் நாம் காண்கிறோம்.

நம் நாட்டுப் பழைய காவியங்களிலே, அவை எந்த மொழியில் எழுதப்பட்டனவாக இருந்தாலும், காவியத் தலைவன், காவியத் தலைவி ஆகியோருடைய அங்க வருணனைகள் ஒவ்வொன்றிலும் விவரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவ்விதம் வருணிக்கப்பெறும் இடங்களிலெல்லாம் அவர்கள் உத்தம லட்சணங்களைப் பெற்றிருந்ததாகவே காணப்பெறுவர். ஆதி காவியம் எனப்படும் வால்மீகி இராமாயணத்திலும் இராமன் சீதை ஆகியவர்களின் அங்க வருணனை காணப்படுகின்றது.

இராமபிரானுடைய சாமுத்திரிகா லட்சணம் காவிய ஆரம்பத்திலேயே காணப்படுகிறது. காவிய கர்த்தாவான வால்மீகியின் கேள்விக்குப் பதில் கூறும் இடத்திலேயே நாரதர் எல்லாக் குணங்களும் பொருந்தியவனை இராமனை வருணிக்க ஆரம்பித்துவிடுகிறார். இதே விஷயம் மறுபடியும் சுந்தரகாண்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அசோக வனத்தில் துயரமே வடிவாக அமர்ந்திருந்த சீதையைக்கண்ட அனுமான் அவளுக்குத் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ளும் கட்டத்தில் இராமபிரானுடைய அங்க லட்சணங்களை எடுத்துக் கூறுவதாக ஆறு சுலோகங்கள் (35-ஆம் ஸர்க்கம், 16—21 சுலோகங்கள்) உள்ளன. முதல் இரண்டு சுலோகங்களிலே இராமன் நீண்ட கரங்கள், சங்கு போன்ற கழுத்து, அழகிய முகம், செவ்வரி படர்ந்த கண் முதலியவற்றை அடைந்தவர் என்று சம்பிரதாயமான முறையில் வருணிக்கப்பட்டுள்ளார். பின்னால் உள்ள நான்கு சுலோகங்களிலே அவருடைய லக்ஷணம் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சாமுத்திரிகா லட்சணம் அறிந்தால் தான் அந்த நான்கு சுலோகங்களுக்கும் சரியான பொருள் காணமுடியும்.

அவர் மூன்று (அதாவது, மார்பு, மணிக்கட்டு, முஷ்டி ஆகிய இடங்களில்) உறுதியானவர் : அவருடைய உடலிலே (புருவம், கை, கண்டம் ஆகிய) மூன்று இடங்கள் தொங்குபவை ; (மயிர் நுனி, பீஜம், முழங்கால் ஆகிய) மூன்று இடங்கள் சமமாக அமைந்தவை: (வயிறு, நாபி, மார்பு ஆகிய)

மூன்று இடங்கள் உயர்ந்திருப்பவை; (உள்ளங்கால், உள்ளங்கை, கடைக்கண் ஆகிய) மூன்று இடங்கள் சிவந்திருப்பவை; (காலில் உள்ள ரேகை, தலை மயிர், லிங்கம் ஆகிய) மூன்றும் மழமழப்பானவை; (பேச்சு நடை, நாபி ஆகிய) மூன்றும் கம்பீரமானவை (இம்மூன்றனுள் நடையென்பதற்குப் பதிலாக விலா என்றும் சிலர் கூறுவர்); (கழுத்திலும் வயிற்றிலும், மணிக்கட்டிலும்) மூன்று மடிப்புகள் காணப்படும்; (ஸ்தனம், அதன் நுனி, பாதத்தில் உள்ள ரேகை ஆகிய) மூன்றும் ஆழ்ந்திருக்கும்; நான்கு இடங்கள் நன்கு வெளியே தோற்றுமல் குறிப்பாகக் காட்டப்பெற்றவை (நரம்பு தோன்றாத கால், ஒரே மயிரையுடைய ரோமகூபம், மேட்ரமுடி, தசைப்பற்று இல்லாத நாபியின் கீழ்ப் பிரதேசம் ஆகிய நான்கும் என்பர் ஒரு சாரார். கழுத்து, குறி, பின்புறம், முழங்கால் ஆகிய நான்கு இடங்களும் குறுகி இருப்பதைக் குறிப்பதாகவும் கொள்வர் வேறு சிலர்); (சமம், குண்டு, விசாலம் ஆகிய) மூன்று லட்சணங்களையுடைய தலை (மூன்று சுழிகள் கொண்ட தலை எனவும் சிலர் கூறுவர்); (கையின் கட்டை விரல் அடியில் நான்கு வேதங்களையும் அறிந்தவர் என்பதைக் குறிப்பனவாக உள்ள ரேகைகளான) நான்கு கலைகள்; (நெற்றியில் காணும்) நான்கு ரேகைகள்; நான்கு முழம் (அதாவது தொண்ணூற்றாறு விரற்கடை உயரம் உள்ள) தேகம்; (கை, முழங்கால், தொடை, கன்னம் ஆகிய) நான்கும் சமமாக அமைந்தவை; (புருவம், நாசித் துவாரம், கண், காது, உதடு ஸ்தன நுனி, முழங்கை, மணிக்கட்டு, முழங்கால், பீஜம், இடுப்பின் பக்கம், கை, கால், பிருஷ்ட பாகம் ஆகிய) பதினான்கு இடங்களில் ஒன்றுக்கொன்று சமமான ஜோடி; நான்கு (அழகும் உறுதியும் வாய்ந்த) பற்கள்; (யானை, சிங்கம், புலி, எருது ஆகிய) நான்கின் நடை; பருத்து அழகான உதடு, தாடை, மூக்கு; (தலை மயிர், கண், பல், சருமம், பாதம் ஆகிய) ஐந்து இடங்களில் பளபளப்பு; (உடல், முதுகு, கை, கால், விரல் —அல்லது மூக்கு என்றும் சிலர் கொள்வர்—கண், காது, லிங்கம் ஆகிய) எட்டு இடங்கள் நீண்டிருப்பவை; (முகம், வாய், கண், நாக்கு, உதடு, கன்னம், ஸ்தனம் நகம், உள்ளங்கை, உள்ளங்கால் ஆகிய) பத்து இடங்களில் தாமரை மலர் போன்ற சிவப்பு; (மார்பு, முன் தலை, முகம், கழுத்து, தோல், பாஹு, நாபி, புஜம், பிருஷ்ட பாகம், குரல் ஆகிய) பத்தும் பருத்தவை; (தேஜஸ், செல்வம், புகழ் ஆகிய) மூன்றில் எங்கும் பரந்தவர்; (கண், பல் ஆகிய) இரண்டில் வெண்மை; (அக்குள், வயிறு, மார்பு, மூக்கு, தோள், நெற்றி ஆகிய) ஆறு இடங்களில் உயர்வு பெற்றவர்; (தலை மயிர், புறமயிர், மீசை, நகம், கட்டை விரல், சர்மம், கணுக்கால்—அல்லது லிங்கம் என்பர்

சிலர்—ஆகிய எமோடு கண் பார்வை, புத்தி ஆகியவை சேர்ந்த) ஒன்பது கூர்மையாகப் பெற்றவர் ; மூன்றில் விய பித்தவர் (நாள்தோறும் மூன்று வேளைகளிலும் செய்யவேண்டிய காரியங்களை முறைப்படி செய்வர் என்றும் ; அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றில் நிறைந்தவர் என்றும் இரு விதமாக இதற்குப் பொருள் கூறுவர்.) *

சீதையின் லட்சணத்தையும் வால்மீகி யுத்தகாண்டத்திலே (48-ஆம் சர்க்கத்தில்) வருணித்திருக்கிறார். அதை அவள் வாயாலே உரைப்பதாகக் கூறியிருக்கிறார். இந்திரஜித்தினுடைய அடிபட்ட இராமலக்ஷ்மணர்கள் உணர்விழந்து, உயிர் அற்றவர்களை போல யுத்தகளத்திலே கிடக்கையில், அவர்கள் இறந்துவிட்டார்களென்று கூறி அந்தக்காட்சியைக் காட்டுவதற்காகச் சீதையைப் புஷ்பக விமானத்தில ராட்சஸிகள் யுத்தகளத்துக்கு அழைத்து வருகிறார்கள். அப்போது அவள், "ஸ்த்ரீ ஸாமுத்திரிகா லட்சணம் அறிந்தவர்கள் என்னிடம் எல்லா லட்சணங்களும் இருப்பதாகச் சொல்லி, நான் என் கணவருடன் பட்டாபிஷேகம் செய்துகொள்வேன்

---

* அரபு நாட்டுப் பெண்களைப் பற்றிப் பழைய ஆசிரியர் ஒருவர் எவ்விதம் எழுதியுள்ளாரென்று எல்—இ கி என்னும் ஆசிரியர் பின் வருமாறு வருணிக்கிறார். "பெண்ணுக்கு நான்கு இடங்கள்—தலை மயிர், புருவம், கண் இமை, கண்ணின் கருவிழி—கறுப்பாக இருத்தல்வேண்டும்; நான்கு—சருமத்தின் நிறம் கண்ணின் வெள்ளைப் பாகம், பல், கால்—வெண்மையாக இருத்தல் வேண்டும்; நான்கு—நாக்கு, உதடு, கன்னத்தின் நடுப்பகுதி, பல் ஈறு—சிவப்பாக இருத்தல வேண்டும், நான்கு—தலை, கழுத்து, முன் கை, கணுக்கால்—வட்டமாக இருத்தல் வேண்டும் ; நான்கு—முதுகு, விரல், கை, கால்—நீண்டிருத்தல் வேண்டும்; நான்கு—நெற்றி, கண், மார்பு; இடை—அகன்றிருக்க வேண்டும் ; நான்கு—புருவம், மூக்கு, உதடு, விரல்—மென்மையாக மெலிந்து இருக்கவேண்டும் ; நான்கு—முதுகின் அடிப்பாகம், தொடை, முழங்காலுக்குக் கீழே உள்ள ஆடு சதை, முழங்கால்—கனத்து இருக்கவேண்டும் ; நான்கு—காது, கொங்கை, கை, பாதம்—சிறுத்து இருக்கவேண்டும்." (லேன் என்பார் எழுதிய "மத்திய காலத்து அரபு வாழ்க்கை", பக்கங்கள் 214—216.)

'கார்மென்' என்னும் பிரெஞ்சு நாவலில் பின் வருமாறு காணப்படுகிறது. "மங்கை ஒருத்தி நல்ல அழகாக இருக்கிறாள் என்று கருதப்பெறுவதற்கு அவள் முப்பது லட்சணம் (வரி) பொருந்தியவளாக இருத்தல் வேண்டும் என்று ஸ்பெயின் தேசத்தவர்கள் கூறுவர். அதாவது மூன்று மூன்றாகப் பத்து அடைமொழிகளால் குறிப்பிடக்கூடிய லட்சணங்கள் வாய்த்திருத்தல் வேண்டும். உதாரணமாக, மூன்று இடம் கறுப்பாக இருத்தல்வேண்டும். அவை ; கண், இமை, புருவம். ஆகும். மூன்று—கை, உதடு, கேசம்—மென்மையாகச் சிறந்திருக்க வேண்டும். இவ்விதமேதான் மற்றவைகளும். விவரத்துக்கு பிராந்தோம் பார்க்க".

என்று கூறினார்களே, பொய்யாகவா பலன் சொன்னார்கள்? அவர்கள் அசத்தியவாதிகள் அல்லவே. எவ்விதம் இந்த நிலை ஏற்பட்டது?" என்று புலம்புகிறாள். அந்த இடத்தில் அவளே தன்னுடைய தேக லட்சணத்தைப் பின்வருமாறு கூறுவதாக உள்ளது.

" ஒரு ஸ்திரீக்குப் பாதத்தில் தாமரை மலர் வடிவம் இருந்தால் அவள் ராஜாவான தன் கணவனுடன் பட்டாபிஷேகம் செய்துகொள்ளக் கூடியவள் என்கிறபடி என் பாதத்தில் தாமரை மலர் ரேகை இருக்கிறது. என் கேசம் மிருதுவாகவும நீளமாகவும், நுனி ஏற்றத்தாழ்வில்லாமல் சமமாகவும் இருக்கிறது. என் இரு புருவங்களும் நடுவில் ஒன்றோடொன்று கூடாமல் உள்ளன. இடை ரோமம் இன்றிக் குண்டாக இருக்கிறது. பற்கள் அடர்த்தியாகவும் வரிசையாகவும் உள்ளன. கன்னம், கண், கை, கால், கணுக்கால், தொடை ஆகியவை சமமாக உள்ளன. நகங்கள் குண்டாகப் பருத்துச் சமமாக உள்ளன. கொங்கைகள் நெருங்கியும், பருத்தும், உறுதியாகவும், நுனி ஆழ்ந்தும் உள்ளன. நாபி ஆழ்ந்தும் சற்றுப் பருமனும் உயர்ந்தும் இருக்கிறது. மார்பு கனமாய் விருத்தி அடைந்திருக்கிறது. தேகம் ரத்த வர்ணம் உடையது, புறமயிர் மிருதுவாக இருக்கிறது." இந்தப் பன்னிரண்டு சுப லட்சணங்களோடு மேலும் நான்கு லட்சணங்களையும் கூறுகிறாள்: "என் கை விரல்களின் மத்திய பாகத்தில் கோதுமை ரேகைகள் உள்ளன. விரல்களின் மத்தியிலே கோணலான இடைவெளி இல்லை. பாதங்கள் தேக நிறத்தையே கொண்டவை. சாந்தமான இனிய சிரிப்பே என்னுடைய ஆபரணம்." இவை யாவும் உத்தம ஸ்திரீயின் லட்சணங்களே ஆகும்.

பிற்காலக் காவியங்களிலே நாயக நாயகிகளின் அங்க வருணனைகளை நாம் கிரமமாகக் காணலாம். காளிதாசன் எழுதிய 'குமாரசம்பவ'த்தில் பார்வதி தேவியாரின் பாதாதிகேச வருணனை காண்பது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

காலக்கிரமத்தில் காவியங்களிலே நாயக நாயகிகளின் அங்கவருணனைகளை விவரிப்பதிலும் ஒரு சம்பிரதாயம் ஏற்பட்டுவிட்டது. ஆடவர்களை வருணிக்குமிடத்தில் தலையிலிருந்து தொடங்கி இறங்குமுகமாகப் பாதம் வரை ஒவ்வோர் அங்கத்தையும் வருணிப்பர்; பெண்களை வருணிக்கும்போது நேர் மாறாக, அதாவது பாதத்திலிருந்து தொடங்கி ஏறுமுகமாகத் தலை வரையில் அதேபோல் ஒவ்வோர் அங்கத்தையும் வருணிப்பர். குமார சம்பவத்தில் பார்வதி தேவியின் வருணனை பாதாதி கேசம் ஈறாக உள்ளது இதை எடுத்துக்காட்டும். இந்த நூலில் அடங்கியுள்ள சாமுத்திரிகா லட்சணங்களும் இதே முறையைப் பின்பற்றித்தான் அமைந்துள்ளன.

புராணங்களிலும் அங்கங்கே சாமுத்திரிகா லட்சண விவரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதிவீரராமபாண்டியன் காசி நகரத்தின் புராண வரலாற்றைத் தமிழில் எழுதிய காசி காண்டத்தில் மகளிர் இலக்கணம் ஓர் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. (அதை இந்த நூலில் ஒரு பிற்சேர்க்கையாகக் கொடுத்திருக்கிறோம்).

மற்றொரு வகையான நூல்களிலும், அதாவது காமசாஸ்திர நூல்களிலும், சாமுத்திரிகா லட்சணம் விவரிக்கப்பட்டுள்ளது. பத்மினி, சித்திரிணி, சங்கினி, ஹஸ்தினி என்று நான்கு வகையாகப் பெண்கள் அவர்களுடைய தேக அமைப்பின்படி காம சாஸ்திரங்களிலே பகுக்கப்பட்டிருப்பதைப் பலரும் அறிவர். ஆனால் இப்போது நமக்குக் கிடைப்பவற்றுள் மிகவும் பழமையானதான வாத்ஸ்யாயனருடைய காமசூத்திரத்திலே இந்த நான்கு வகைப் பாகுபாடு காணப்பெறவில்லை. அதிலே ஆண்களும் பெண்களும் அவர்களுடைய ஜனனேந்திரிய அளவின்படி மூன்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாகுபாட்டிலே அவர்களுடைய மற்ற லட்சணங்கள் கணக்கிடப்படவில்லை. எனினும் சாமுத்திரிகா லட்சணத்தைப்பற்றி அவர் குறிக்காமலும் இல்லை. எந்த எந்தப் பெண்களை மணக்கலாகாது என்பதைக் கூறும் இடத்திலே அதைப்பற்றி அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நான்கு வகைப் பாகுபாடு வாத்ஸ்யாயனருக்குப் பூர்வாசாரியர்களாக விளங்கிய நந்தீசர், கோணீபுத்திரர் ஆகியோர்கள் வகுத்தது என்பர். இது பிற்காலத்திய நூல்கள் எல்லாவற்றிலும் காணப்படுகிறது. கொக்கோகர் எழுதிய ரதிரகசியத்தில் விவரிக்கப்பட்டுள்ள இந்தப்பகுப்பு பிற்காலத்தில் பிரபலமாகிவிட்டது. இவைகளேயன்றி, பெண்களின் சத்துவம் முதலியவற்றைக்கொண்டு அவர்களை வெவ்வேறு வகைகளாகப் பிரித்து அவற்றுள் ஒவ்வொரு வகைப்பெண்ணும் எவ்விதம் இருப்பாள் என்று கூறும் அவளுடைய சாமுத்திரிகா லட்சணத்தையும் பிற்காலத்துக் காமசாஸ்திர நூல்களில் காணலாம். இவ்விதமான பிரிவுகளும் பூர்வாசாரியர்கள் செய்தவைகளே என்பர்.

இத்தகைய நூல்களாலேயே போலும் ஆண்களுடைய சாமுத்திரிகா லட்சணங்களைக் கொடுக்கும் நூல்களைக்காட்டிலும் பெண்களைப்பற்றிய நூல்கள் பிற்காலத்தில் அதிகமாகத் தோன்றியுள்ளனவென்றும், சாமுத்திரிகா லட்சண நூல்கள் எல்லாவற்றிலுமே சிற்றின்பம் நுகர்வதைப் பற்றிய மனப்பான்மையும் குணங்களும் அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளனவென்றும் சொல்லலாம். உண்மையில் இந்தப் பதிப்பில் அடங்கிய ஸ்திரீ லட்சணத்தின் உரைநடைப்பகுதியில் அது, "பூலோகத்திலே பிறக்கிற பெண்களிலே பதிவிரதையாயிருக்கிறவளையே விவாகம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம் பற்றிச்சுதே! அந்தப் பெண்கள் வாழ்க்கைப்படுகிறதுக்கு முன்னே பதிவிரதை என்கிறதும் விபசாரி என்கிறதும் எப்படி அறிகிறது?" என்ற கேள்விக்குப் பதில் கூறுவதாக எழுந்தது என்று அதன் ஆரம்பம் உரைக்கிறது.

சாமுத்திரிகா லட்சணத்தை அறிந்து கையாள்வது நம் நாட்டில் மட்டுமே காணப்படுவதென்று கொள்ளவேண்டியதில்லை. உலகம் முழுவதிலும் அது வழக்கில் உள்ளதென்று சொல்லலாம். பண்டைக்காலத்தில் கிரேக்கர்களிடையே அது வழங்கிவந்து பின்னர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பரவியிருக்கிறது. அவ்விதம் மேல் நாட்டிலே சாமுத்திரிகா லட்சணத்தை அறிந்து நூல் எழுதியவர்களுள் அரிஸ்டாட்டில், பிளாட்டோ ஆகியவர்களை முக்கியமானவர்களாகக் கூறலாம். விஞ்ஞான முறைப்படி சாமுத்திரிகா

லட்சணமும் ஒரு சாஸ்திரமேயாகும் என்பதை நிரூபித்து லவாதர், சார்லஸ் டார்வின் ஆகியோர் எழுதியிருக்கிறார்கள். பிற்காலத்திலும் எத்தனையோ நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் 'புதிய சாமுத்திரிகா லட்சணம்' (தி நியூ பிஸியாக்நமி) என்ற பெயரில் சாமுவேல் வெல்ஸ் என்பவர் எழுதிய புத்தகமே சிறந்ததென்பர். அதிலே ஆசிரியர் தமக்குமுன் அந்தச் சாஸ்திரத்தைப் பயின்றவர்கள் கண்ட முறைகளையும் கொண்டிருந்த கொள்கைகளையும் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

சாமுத்திரிகா லட்சணம் உடற்கூறு சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. நவீன விஞ்ஞான முறைப்படி அதை ஆராய்ந்தால் இரண்டு விஷயங்கள் தெளிவாகும். 'உள்ளத்து இயல்புகளில் காணும் வேறுபாடுகளுக்கு ஏற்பவே புறத் தோற்றத்தில் காணும் வேறுபாடுகள் அமையும்' என்பது ஒன்று. உதாரணமாக, நாம் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறோம். சிலருடைய முகம் அழகாகவும், சீராகவும் அமைந்திருந்தும், களையற்றுக் கவர்ச்சி இல்லாமல் இருக்கிறது. மற்றுஞ் சிலருடைய முகமோ, நல்ல அழகு என்று சொல்லமுடியாமல் இருந்தாலும், களை பொருந்திக் குறுகுறுப்பாக இருக்கிறது. அவர் அவர் உள்ளத்தில் தோன்றும் மனவெழுச்சிகளும் அவற்றால் ஏற்படும் மனநிலையுமே அவர் அவர் முகத்திற்காணும் களையையும் குறுகுறுப்பையும் உண்டாக்குகின்றனவென்பர். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழியும் இதை ஒட்டியே ஏற்பட்டது போலும். உடலின் ஒவ்வோர் உறுப்பின் அசைவையும் மூளை அல்லது உள்ளம் என்னும் அறிவு கட்டுப்படுத்தி நடத்துகிறது என்றும் அதனால் ஏற்படும் மாறுபாடு அந்த அந்த உறுப்பில் பிரதிபலித்து நிலைபெறுகிறதென்றும் சொல்வர். சருமத்தின் தோற்றம், உணர்ச்சி, மென்மை ஆகியனவும் அதனால் பாதிக்கப்படுகின்றனவாம். இவ்விதம் உடலின் ஒவ்வொரு பாகமும்—தலை, முகம், மார்பு, கை, கால், நடை, குரல், இன்னும் சருமம் ரோமம் ஆகியவற்றின் அமைப்பு, தன்மை எல்லாம்—சாமுத்திரிகா லட்சணத்தின் சின்னங்களாகவே விளங்குகின்றன. எனினும் ஒரு விஷயத்தை நாம் இவ்விடம் குறிப்பிடவேண்டும். முகம், கை, கால் போன்று எளிதில் பிறர் கண்ணுக்குப் படக்கூடிய இடங்களையே பிரதானமாகக் கருதிச் சாமுத்திரிகா லட்சணத்தைத் தொகுத்திருக்கிறார்கள். மற்ற உறுப்புக்களைப் பற்றிக் கூறியிருப்பினும் அவை குறைந்த அளவிலேயே உள்ளன எனலாம்.

'உடலின் பொது அமைப்புக்கு ஏற்பவே ஒவ்வோர் உறுப்பும் அமைந்திருக்கும்: அதே போல ஒவ்வோர் உறுப்பும் உடலின் மொத்த அமைப்பின் ஒரு பாகமாகும்' என்பது இரண்டாவது. இந்த உண்மையை நன்றாக அறிந்திருந்ததாலேயே முன்னாளில் ஓவியர்களும் சிற்பிகளும் தங்கள் கலைத்திறன் நன்கு மிளிர அருமையான உருவங்களைச் சமைக்க முடிந்தது. உடலின் ஒவ்வோர் உறுப்பும் மற்ற உறுப்புக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஒரு குறிப்பிட்ட அளவில் அமைந்திருக்கக் காணலாம். மணிக்கட்டிலிருந்து நடு விரலின் நுனி வரையில் உள்ள கையின் அளவு மேல்வாய்க் கட்டையிலிருந்து நெற்றிமயிர் வகிடு வரையில் உள்ள முகத்தின் அளவுக்குச்

சமமாக இருக்கும். இன்னும் முகத்தை மூன்று சமபாகங்களாக வகுக்லாம். நெற்றியுச்சியில் உள்ள மயிர் வகிட்டிலிருந்து புருவம் வரையில் ஒரு பாகமும், புருவத்திலிருந்து மூக்கின் நுனிவரையில் மற்றொன்றும், மூக்கின் நுனியிலிருந்து மோவாய் வரையில் மூன்றாவதுமாக அவை அமையும். இம்மாதிரியே, ஒருவன் தன் இரு கைகளையும் பக்கவாட்டிலே நீட்டி நின்றால் ஒரு கையின் நடுவிரல் நுனியிலிருந்து மற்றொரு கையின் நடுவிரல் நுனி வரையில் உள்ள அளவு (ஒரு மார்பு நீளம் என்று பாமர வழக்கில் குறிக்கப்படுவது) அவனுடைய உயரத்துக்குச் சமமாக இருக்கும் என்றும் சொல்வர். இதேபோல இன்னும் எத்தனையோ வகையான அளவுகள் உள்ளன. அவை சிற்ப நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. மனிதர்களிடையில் காணும் இந்த அளவுகளிலே அவர் அவர் இயல்புக்கு ஏற்ப சில சமயங்களில் நூல் பிரமாணத்தனவாக வேறுபாடுகள் காணப்படும். அவை அவர் அவர் லட்சணத்தை எடுத்துக் காட்டுவனவாக அமையும். இத்தகைய அளவுகளை நன்கு அறிந்ததாலே போதும் நேரில் காணாத ஒரு மனிதனுடைய உறுப்பு ஒன்றை மட்டும் பார்த்து விட்டு அவனுடைய முழு உருவத்தையும் சிருஷ்டித்துக் காட்டியதாகக் கூறும் சம்பவங்கள் நாடோடிக் கதைகளில் காணப்படுகின்றன. சீதை அசோகவனத்தில் சிறை இருந்த காலத்தில் அவள் இராவணனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்ததே இல்லையாம். குனிந்த தலை நிமிராமல் இருந்த அவள் அவனுடைய பாதங்களை மட்டுமே பார்த்திருந்தாளாம். எனினும் இராவணவதம் ஆகி நீண்டகாலத்துக்குப் பிறகு அவள் அயோத்தியில் இருந்த நாளில் தன் நாத்தனார், அதாவது கைகேயின் மகள், ஒருத்தியின் வற்புறுத்தலால் இராவணனுடைய உருவத்தைத் தத்ரூபமாகப் பூமியில் வரைந்து காட்டினாளாம். அதுவே அவள் இரண்டாவது தடவை வனவாசம் போவதற்குக் காரணமாயிற்று என்று ஒருகதை உண்டு. இன்னும், நீராடிக்கொண்டிருந்த ராஜகுமாரி ஒருத்தியின் தலைமயிர் ஒன்று உதிர்ந்து நீரோடு அடித்துச் செல்லப்பட்டதாம்; அதைக்கண்ட ராஜகுமாரன் ஒருவன் அந்த ஒற்றை மயிரைக் கொண்டு அவளுடைய முழு உருவம் எவ்விதம் எழில் பெற்று விளங்கும் என்பதை மனத்தால் உருவகப்படுத்தி அவளைப்போன்ற சித்திரத்தை வரைந்தானும்; அதைக் கொண்டு கடைசியில் அவன் அந்த ராஜகுமாரியையே அடைந்தானும். இம்மாதிரி எத்தனையோ கதைகள்.

இவற்றைக் கவனித்தால் சாமுத்திரிகா லட்சணத்துக்கும் அழகின் உருவத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது விளங்கும். சாமுத்திரிக சாஸ்திரப்படி உத்தம லட்சணம் பொருந்தியவர்களே யாவரும் கண்டு வியக்கும்படி அசாதாரணமான அழகு பெற்றிருப்பர் என்று கூறுவர்.

பரந்த இவ்வுலகத்திலே எத்தனையோ தேசங்கள் உள்ளன. ஒவ்வொரு தேசத்திலும் பலவகையான மக்கள் வாழ்கின்றனர். அவர்களிலே ஒவ்வொரு வகையாரும் அழகு என்பது எப்படி இருக்கவேண்டுமென்பதைப்பற்றி வேறுவேறான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்கா தேசத்து மக்களில் சிலர் பெண்மக்கள் மிகவும் பருத்த

பிருஷ்டபாகத்தைப் பெற்றிருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர்; மற்றுஞ் சிலர் தளர்ந்து சரிந்த கொங்கைகளையே விரும்புவர். சீனதேசத்தில் பெண்களின் பாதம் மிகவும் சிறுத்திருக்கவேண்டுமென்று கொள்வர். அரபுதேசத்திலே பெண்களின் இருபுருவங்களும் நடுவில் கூடியிருப்பதையே விரும்புவர் என்று அரபுக்கதைகளிலிருந்து தெரிகிறது. அந்த அந்த நாட்டுப் பெண் மக்கள் அந்த அந்த நிலையை அடையப் பல விதமான செயற்கை முறைகளையும் கையாண்டுவந்தனர் என்று கூறுவர்.

அவ்விதமாயினும், அழகின் லட்சணம் எது என்பதைப் பற்றி உலகம் முழுவதும் ஒரே விதமான கொள்கையே இருந்து வருகிறது. பல்வேறு தேசங்களின் ஆசிரியர்கள் தங்கள் இலக்கியங்களிலே அழகினை வருணித்துக் கூறுவதை ஒப்பிட்டுப் பார்த்தால் இது நன்கு விளங்கும். இத்தகைய வருணனைகள் பலவற்றைத் தொகுத்து ஹாவ்லக் எல்லிஸ் என்னும் ஆசிரியர் தம்முடைய நூலில் கொடுத்திருக்கிறார்.

நாகரிகம் இல்லாதவர்கள் என்று கருதப்படும் பூர்வீகக்குடிகளும் அழகின் லட்சணத்தைப் பற்றி இதுமாதிரியேதான் நினைக்கிறார்கள். திரு வெர்ரியர் எல்வின் என்னும் ஆசிரியர் செய்த ஆராய்ச்சிகளிலிருந்து இது தெரியவருகிறது. மலேநேசியாத்தீவுகள், ஆப்பிரிக்கா தேசம், அஸ்ஸாம் மலைப் பிரதேசத்தில் நாகர்கள் வாழும் பகுதிபோல் ஒன்றுக்கொன்று வெகுதூரம் விலகியுள்ள நாடுகளில் வாழும் மக்களிடையே அழகுவாய்ந்தவர்களென்று அந்த அந்த நாட்டார் கருதுபவர்களுடைய புகைப்படங்களைச் சேகரித்து அவர் மத்திய இந்தியாவில் வாழும் ‘பைகர்’ என்னும் பூர்வீகக் குடிகளிடம் காட்டினாராம். அவற்றைப் பார்த்த பைகர்கள் செய்த விமர்சனமும் அளித்த பதிலும் இந்த உண்மையை எடுத்துக்காட்டியதென்று அவர் கூறுகிறார்.

உலகம் முழுதும் அழகின் லட்சணம் ஒரேவிதமாகத்தான் கருதப்பட்டு வருகிறதென்னும் உண்மையை ஆராய்ந்து நிலைநிறுத்திய ஸ்ட்ராட்ஸ் என்னும் ஜெர்மன் ஆசிரியர் பூர்ண வளர்ச்சி அடைந்து அழகுவாய்ந்த பெண் ஒருத்தியின் அங்க அமைப்பு எவ்விதம் இருக்குமென்பதைப் பின் வருமாறு விவரிக்கிறார்.

மென்மையான எலும்பு அமைப்புக் கொண்ட கூடு,
உருண்டு திரண்ட அங்கங்களும் மார்புகளும்,
அகன்ற அடிமுதுகுப் பகுதி,
நீண்டு அடர்த்தியான கேசம்,
தாழ்ந்து குறுகிய பிரதேச அளவே கொண்ட அல்குல் ரோமம்,
குறைவான அக்குள் ரோமம்,
தேகத்தின் பிறஇடங்களில் புறமயிர் இல்லாமை,
மென்மையான சருமம்,
உருண்டையான மண்டை,
சிறுமுகம்,
அகன்ற கண் பள்ளம்,

உயர்ந்து மெலிந்த புருவம்,
தாழ்ந்து சிறுத்த கீழ்த்தாடை எலும்பு,
கன்னத்திலிருந்து கழுத்துக்குச் சரிவான அமைப்பு,
வட்டமான கழுத்து,
சிறுத்து மெலிந்த மணிக்கட்டு,
சின்னஞ்சிறு கைகளும் நீண்ட ஆள்காட்டி விரல்களும்,
உருண்டையான தோள்,
(வளைவில்லாமல்) நேராகச் சிறுத்துள்ள தோள் எலும்பு,
சிறுத்து நீண்ட உடற்பாகம் (கழுத்திலிருந்து இடைவரையுள்ளது),
சிறுத்த இடை,
குழிவான பிருஷ்டத்தின் மேற்பாகம்,
வட்டமாகப் பருத்து எடுப்பான நிதம்பம்,
வளைந்து குழிந்த நிதம்பத்தின் கீழ்ப்பாகம்,
உருண்டு திரண்ட தொடைகள்,
மழுங்கிய விரிகோண வடிவில் தாழ்ந்த அடிவயிற்றுக் கூடல்,
மிருதுவான முழங்காலின் சில்லு,
வட்டமான கணைக்கால் ஆடுசதை,
சிறுத்த பாடு,
சிறுத்த (கால்) விரல்கள்,
இரண்டாவது விரல் நீண்டும், ஐந்தாம் விரல் சிறுத்தும் இருத்தல்,
அகன்ற முன் பல்.

மேலே கண்ட பட்டியல் தாம் கொண்ட முடிவையே பெரும்பாலும் ஒட்டி இருக்கிறதென்று ஹாவ்லக் எல்லிஸ் கூறுகிறார். சும்மாதிரியே நம் நாட்டுச் சாமுத்திரிகா லட்சணத்தில் விவரிக்கப் பட்டுள்ளதையே அது பெரும் பாலும் ஒத்திருக்கிற தென்பதையும் காணலாம்.

அழகு என்பது திடமான ஆரோக்கியத்தைக் குறிப்பதாகும். ஆரோக்கி யம் இல்லாவிட்டால் அழகும் நலிந்து விடும். இந்த உண்மையை நீண்ட நாளாக யாவரும் அறிவர். அழகை எடுத்துக்காட்டும் நன்கு வளர்ச்சி பெற்ற உடல், பிடிப்பான தசை, மினுமினுப்புடன் கூடிய அழகிய சருமம், ஒளிபெற்ற கண், மிடுக்குடன் கூடிய நடை, இவையெல்லாம் நல்ல ஆரோக்கி யத்தின் அறிகுறிகளே. சிவனைப் பரதெய்வமாக வழிபடுபவர்களுள் ரஸேச் வர தர்சனத்தைப் பின்பற்றும் பிரிவினர்களைப் பற்றி நாம் முன்னரே குறிப் பிட்டிருக்கிறோம். அவர்கள் இந்த உண்மையை நன்றாக அறிந்து அதைத் தங்கள் மதக் கொள்கைகளுள் முக்கியமானதாக வலியுறுத்தி யிருக்கிறார் கள். அவர்களுடைய மதத்தின் அடிப்படைத் தத்துவத்தைப் பின்வருமாறு சுருக்கமாகச் சொல்லலாம். “மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வீடு பேறு அடைவதே லட்சியமாகும். அதை அடைவதற்கு ஞானம் அவசியம். வித்தையின் மூலமே ஞானத்தைப் பெறமுடியும். ஆனால் வித்தை பயில்வ தற்கு நோயற்ற வாழ்வு அத்தியாவசியமானது. உடலை நல்ல ஆரோக்கியத் துடன் வைத்து லட்சிய சித்தியைப் பெற உதவுபவை அப்ரகம், பாதரஸம் ஆகிய இரண்டுமே.” இதை யொட்டியே அவர்கள் வழிபாடு, தத்துவம்,

வேதாந்தம் ஆகிய விஷயங்கள் மட்டுமல்லாமல், ரஸவாதம், வைத்தியம், மாந்திரிகம், சாமுத்திரிகா லட்சணம், ரேகை சாஸ்திரம் போன்ற பல வேறு விஷயங்களைப் பற்றியும் நூற்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் தங்களைச் சார்ந்தோர் அனைவரும் நல்ல திடகாத்திரர்களாக இருக்கவேண்டுமென்பதை விரும்பி இன்னும் சில கட்டுப்பாடுகளையும் விதித்துக்கொண்டனர். தங்களிடம் தீக்ஷை பெறுகிறவர்கள் குறை ஏதும் இல்லாத திடமான ஆரோக்கியம் பெற்றவர்களாகவே இருத்தல் அவசியம் என்பதை அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அவ்விதம் சிஷ்யர்களாகச் சேருபவர்களுக்கு இன்ன இன்ன அங்க லட்சணங்கள் பொருந்தியிருக்க வேண்டுமென்பதையும் அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அதே போலத்தான் சைவ மடாலயத் தலைவர்களில் சிலர் குருடன், குறை அங்கத்தவன், நோயுற்றவன் முதலியவர்களைப் பார்க்கவும் கூடாதென்றும், அவ்விதம் பார்க்க நேரிட்டுவிடுமாகில் அதற்காக உடனே பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் விதிக்கப்பட்டுள்ளது.

ரஸேஸ்வர தரிசனத்தின் முக்கியமான ஆசாரியர்களைச் சித்தர்களென்றும், நாதர்களென்றும் நாத சித்தர்களென்றும் குறிப்பிடுவர். அவர்கள் எத்தனைபேர் என்பதிலே வேறுபாடு உண்டு. அவர்கள் தொகை ஒன்பது முதல் அறுபத்துநான்கு வரையில் பலவிதமாகக் காணப்படும். அதற்கு மேலும் கொள்வார் உளர். தமிழ் நாட்டிலே கர்ண பரம்பரையாகச் சித்தர்களைப் பதினெண்மர் என்று சொல்வர். எனினும் அத்தகைய சித்தர்கள் என்று கூறப்படுபவர்களின் பெயர்களைச் சேர்த்துப் பார்த்தால் அவர்கள் தொகை பதினெட்டுக்கும் அதிகமாகவே காணப்படும். அவர்களும் மேலே கூறிய விஷயங்களைப் பற்றித் தமிழிலே தங்களுக்கே உரித்தான எளிய தனி நடையில் பல நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

தமிழில் காணும் சாமுத்திரிகா லட்சண நூல்கள் எல்லாம் முருகக் கடவுள் தம் சிஷ்யரான அகத்திய முனிவருக்கு உரைக்கப்பட்டனவாகவே காணப்படுகின்றன. அவருடைய பெயர் சுப்பிரமணியக் கடவுள் என்றும் சிவ சுப்பிரமணியக் கடவுள் என்றும் குமாரசுவாமியார் என்றும் பலவிதமாகக் குறிக்கப்பட்டுள்ளது. அவரிடம் கேட்டு அறிந்தவற்றை அகத்திய முனிவர் பலருக்கும் உபயோகப்படும்படியாக எழுதி வைத்தாராம்.

அகத்தியர் எழுதியனவாகச் சாமுத்திரிகா லட்சணத்தைத் தவிர வைத்தியம், ஜோஸ்யம், மாந்திரிகம் போன்ற வேறு பல துறைகளிலும் அநேக நூல்கள் உள்ளன. இவையாவும் தமிழ் நாட்டுச் சித்தர்கள் எழுதியனவாகக் காணும் ரகத்தைச் சார்ந்தவை. அகத்தியரும் பதினெண் சித்தர்களிலே ஒருவராவர்; அவர் பெயரே முதலில் காணப்படுவது. அவரே தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரைக்கு முக்கியமானவர் என்றும் சொல்லலாம். அவரைத் தரிசிப்பதற்காகவே வடக்கிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த ஒருவர் திருமூலர் என்னும் சிவனடியாரான சித்தராக ஆனார் என்று பெரிய புராணம் கூறுகிறது. இவற்றைக் கவனிக்கும்போது இந்தச் சாமுத்திரிகாலட்சண நூல்களையும் சித்தர் வாக்கு நூல் வகையைச் சேர்ந்தனவாகவே கொள்ளவேண்டும் என்று தெரிகிறது.

இந்தத் தொகுப்பிலே புருஷலட்சணம், ஸ்திரீலட்சணம் ஆகிய இரண்டுக்கும் தனித்தனியே உரையுடன் கூடிய செய்யுள் பகுதி ஒன்றும் உரை நடைப் பகுதி ஒன்றும் உள்ளன. இன்னும் செய்யுள் வடிவில் அமைந்த சர நூல் என்னும் நந்தி நூலும் இதில் அடங்கியிருக்கிறது. அதிலே உடலையும் அதன உறுப்புகள் சிலவற்றையும் கயிறு கொண்டு அளப்பதற்கான விதிகள் உள்ளன; இன்னும் சாமுத்திரிகலட்சண விவரங்கள் சிலவற்றோடு, சாதாரணமாக ரேகை சாஸ்திர நூல்களில் காணும் விஷயங்களும் அடங்கியுள்ளன. உண்மையில் ரேகை சாஸ்திரம் சாமுத்திரிகா லட்சணத்தில் அடங்கியதே. அதனால் சாமுத்திரிகாலட்சண நூல்களில் ரேகைகளைப் பற்றிய விவரங்களும் காணப்படுவதே. பின்னால் அது தனிப் பிரிவாக பிரிந்ததாயினும் கைகளின் லட்சணங்களும் அதிலே இடம் பெற்றிருக்கும்.

இன்னும் இந்தத் தொகுப்பிலே இரண்டு பிற்சேர்க்கைகள் உள்ளன. அதிவீரராமபாண்டியன் இயற்றிய காசி காண்டத்தில் மகளிர் இலக்கணம் எனப் பெரிய முப்பத்தேழாம் அத்தியாயம் ஒன்று. தனி நூல் போலவே வழங்கப் பெறும் அது பொழிப்புரையுடன் கொடுக்கப்பட்டுள்ளது. வராஹமிஹிரர் எழுதிய பிரஹத் ஸம்ஹிதையில் காணும் புருஷலட்சணம் ஸ்திரீலட்சணம் ஆகிய இரண்டு அத்தியாயங்களின் தமிழ்மொழி பெயர்ப்பு மற்றொன்று.

இந்தப்பதிப்புக்கு ஆதாரமாக இந்நிலயத்தின் சுவடிகளுள் பின் வருபவை உபயோகிக்கப் பெற்றுள்ளன:

புருஷலட்சணம்,

செய்யுள் பகுதி—ஆர் 4386, ஆர் 2707, டி 2026 ஆர் 1800.

உரைநடைப் பகுதி—டி 2027, ஆர் 1800, ஆர் 3665.

ஸ்திரீலட்சணம்:

செய்யுள் பகுதி, ஆர் 1799, டி, 2027,

உரை நடைப்பகுதி, ஆர் 238, ஆர் 4791, ஆர் 3665, ஆர் 1799.

நந்தி நூல்:

ஆர் 924, ஆர் 1800.

மகளிர் இலக்கணம் (பிற்சேர்க்கை I) ஆர் 2706.

இவை தவிர, ஸ்திரீ புருஷலட்சணங்களின் உரைநடைப்பகுதிக்கான ஓலைச்சுவடி ஒன்றும் நந்தி நூலுக்கான சுவடி ஒன்றும் சென்னை புரோகிரஸிவ் யூனியன் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ ஈ. எஸ். நரஸிம்ஹாசாரியார் அவர்களுடைய உதவியால் ஒப்பிட்டுப்பார்ப்பதற்குக் கிடைத்தன. எனினும் சுவடிகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் குறைபாடு உள்ளதாகவே இருந்தது.

சாமுத்திரிகா லட்சணங்களின் செய்யுட்பகுதி பெரும்பாலும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவினால் ஆகியது. வேறுபாவினங்களில் அமைந்த செய்யுள்களும் சில உள்ளன. அவற்றுள் பல சந்தர்ப்பத்துக்கு ஏற்றனவாகவும் இல்லை; இன்னும் சில அதே உருவத்திலோ அல்லது ஒத்த வடிவத்திலோ நந்தி நூலிலும் காணப்படுகின்றன.

நந்திநூலும் ஆசிரியப்பாவினுல் ஆனதே. எனினும் எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தமே அதிகம். வேறு வகைகளும் உண்டு. அதன் ஆரம்பப் பகுதி அந்தாதி முறையில், அதாவது முன் செய்யுளின் ஈற்றுப் பகுதி அடுத்த செய்யுளின் ஆரம்பமாகும் முறையில், அமைந்துள்ளது. நடுவிலும் சில இடங்களில் இம்முறை காணப்படுகிறது. பல இடங்களில் இது காணப்படவில்லை. இதைக் கவனித்தால் ஒன்று அந்தச் செய்யுட்கள் முறை பிறழ்ந்து இருத்தல் வேண்டும்; அல்லது வேறு ஏதோ நூலிலிருந்து எடுக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டும். இன்னும் எடுத்த விஷயத்துக்குப் பொருத்தம் இல்லாமல் காமசாஸ்திர நூற்களிலே காணக்கூடிய செய்யுள்கள் இரண்டு மூன்றும் சேர்ந்திருந்தன. அந்தச் செய்யுள்களை இவ்விடம் கொடுக்கவில்லை. செய்யுள்கள் சில இடங்களில் சரியான பாடத்தை நிர்ணயிக்க முடியாதபடி மிகவும் சிதைந்த உருவத்தில் காணப்பட்டன. அவற்றை அந்த அந்த இடங்களில் கீழ்க் குறிப்புகளில் காட்டியிருக்கிறேன். செய்யுள்களின் சரியான வடிவை அமைப்பதற்குச் சென்னை 'கலைமகள்' ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன், எம். ஏ., அவர்கள் உதவி செய்தார்.

உரைநடைப் பகுதி கொண்ட ஏடுகளில் ஒவ்வொன்றிலும் சில பாகங்கள் விடுபட்டுப்போயிருந்தன. ஒரே மாதிரியான சொற்கள் திரும்பத் திரும்ப வருவதே இவ்விதம் விடுபட்டுப்போனதற்குக் காரணம்போலும். ஒன்றில் காணப்படுவது மற்றொன்றில் இல்லை. அவ்விதம் அந்த அந்த ஏடுகளில் காணும் பகுதிகளை ஒன்றுசேர்த்தே இந்தப் பாடம் அமைக்கப் பட்டது. அப்படியும் சில இடங்களில் குறை பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்தப் பதிப்புக்கு உதவி அளித்த ஸ்ரீமான்கள் ஈ. எஸ். நரஸிம்ஹாசாரியார், கி. வா. ஜகந்நாதன் ஆகியவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அதனோடு இந்த நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பை எனக்கு அளித்து, அதற்கு வேண்டிய வசதிகள் பலவற்றையும் செய்து கொடுத்து, இடையில் திடீரென்று எதிர்பாராத வகையில் என்னுடைய உடல்நிலை கெட்டதால் ஏற்பட்ட அசாதாரணமான காலதாமதத்தையும் பொறுத்து, இந்நூல் நல்ல முறையில் வெளிவருவதற்கு உதவிசெய்த இந்த நிலயத்து அதிபர் ஸ்ரீ தி. சந்திரசேகரன், எம்.ஏ.,எல்.டி. அவர்களுக்கும் நன்றிசெலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

தி. நா. சுப்பிரமணியன்.

PHYSIOGNOMY OF MAN.

Every man will have thirty-two signs or characteristics.

Five organs of his body should be long and these are the eyes, hands, cheeks (or alternatively, according to another version, the ears), knees and the nose.

Five others which should be soft are the hair, fingers, nail, skin and tooth.

Six places should be lofty or elevated (high): these are the forehead, shoulders, belly or paunch, arm-pits, chest and back of the palm.

Seven places should be red and they are the soles of the feet, palms, corners of the eyes, tongue (or alternatively, uvula or prepuce as variants), nails, lips and palate or roof of the mouth.

Three places which are to be broad are the hip (alternatively, the testicle according to another version), chest and the forehead.

Three others are to be thin, viz., the neck, portion below the knee (shank) and the *membrum virile.*

Three other places should be low or depressed and these are the navel, the joints and the knuckles. (These three are variantly given as the middle of the chest, the lower half of the forehead and the joints.)

One possessing all these thirty-two will rule the world under one umbrella.

The characteristic features of the several parts of body and the resultant effects indicated thereby are as follows:—

HEAD.

The head of a person should be round and proportionate. If it is round and big he will have wealth; if round and small he will have beauty and riches. If it is elongated he will have poverty. (According to another authority if the head is long and if the skull is broad, he will have long life.) Poverty is indicated if the skull-bone is not even on both the sides. If it appears as a double-head with a dent in the middle he will not have wealth and his mind will be bent on sinful actions.

Hair on the Head.

The hair on the head should be black, soft, long, dense, and of uniform growth with the end unsplit and this indicates royalty. If it is short, rought, sparse, not of uniform growth, brown in colour or with split end he will have to endure extreme poverty If the hair is long he will have greatness and dignity; if thick and black he will have wealth; and if thick and brown, poverty. Dense hair-growth indicates long life. If the hair is short and red he will be lascivious; if curly, he will be not only libidinous but also have stealthy goings; and if too long he will have to endure too much of reproach and slander. Split end indicates heavy expenditure and that, even if wealthy, he will not have enjoyable diet. If the hair resembles that of a cat (or an elephant according to a variant reading) he will suffer ill-health, but have wealth.

Circular Marks of Hair.

A clockwise whorl, i.e., a circular mark of hair with a twist to the right, in the middle of the head indicates that he will be a ruler of the world. If such a whorl is on the right side he will have long life and if two such are there he will wear a crown either of jewels or of matted hair, i.e., he will become either a king or a pontiff. A counter-clockwise whorl on the left side indicates that he will suffer from poverty while two such there indicate that it will be life-long poverty; and three such on the left, the death of father, mother and the maternal uncle. Three counter-clockwise whorls arranged like the three eyes of a coconut, i.e., like a triangle, on the head indicate that the head would become severed. If one is clockwise and the other counter-clockwise he will have poverty for a few days and then wealth. A clockwise whorl on the left side indicates that he will have good thoughts, but they will not fruition.

Forehead.

The forehead should be broad having the shape of the eighth-day moon, i.e., half-moon, and then he will be crowned. If it is four finger-breadths broad, he will be a wise person or philosopher; if it is of three finger-breadths, he will have wisdom and wealth; if of two, wealth; and only a single finger-breadth, foolishness and

this is also considered ill-omened. It is considered bad if the forehead is small, crooked, uneven or with a depression in the middle and he will have poverty.

Five lines on the forhead indicate that he will live for a hundred years; four lines, eighty years; three lines sixty years; two lines forty years; and only a single line, his life will be very short for twenty years.

A nerve or vein running up across the forehead in the middle like a chord indicates that he will be a king, lord over hundred persons or a commander. If two such are seen he will be a person of noble character, and if there are many he will have to endure disease and poverty.

Profuse hair (down) on the forehead indicates that he will be highly deceitful and if it is devoid of hair he will have greatness.

EYEBROW.

The eyebrows should be even, arched, equal to one another without joining in the middle and tapering at the outer ends with the hair soft, black and following the course. Such a person will be the ruler of the world. Thick hair indicates the strength. It is considered bad if the brows are very thick, slender, crooked, brown in colour or with breaks in the middle and poverty will attend such person. If it is a very small he will have to endure sorrow. If the brow has a dent in the middle he will have connection with forbidden women. The brows joined in the middle indicate the death of father, mother and uncle or father-in-law. If the hairs face down he will have ill-health.

EYELID.

Both the eyelids should be uniform with eyelashes dense and black. This bestows beauty and wealth on the person. If one is big and the other small, he will have ill-health.

EYE.

The eyes should be broad, equal to one another, placed on the same level, the apple of the eye dark with the portion surrounding it white having red streaks and the corners red like the *kōvai* fruit. Such a person will be ruler of the world. If the apple of the eye is small he will have long life and if it is deep dark in colour he will embrce many women. A squint eye indicates that

he will have poverty and will also be a liar, while a blinking eye, that he will embrace many women. It is considered bad if the eyes are brown, deep red, sunken or with too much of intervening space or if they are staring or goggle eyes. If they are like the petals of a lotus he will have many riches and if they resemble red water-lily he will be a second Rāma, i.e., a hero. If the eye resembles that of a cat he will run after others' wives and if it resembles that of an elephant he will have vast riches. Those resembling the eyes of a snake, tiger or fowl are bad. Congenital blindness indicates that he is a sinner and will have to endure heavy sorrow, while blindness without any defect in the eye, i.e., *amaurosis*, perverted intelligence of a high degree. If the eye has the colour of honey, he will be highly lascivious and also deceitful; and if white he will be deceitful and also be an adept in the art of (prognostication) looking at the magic black pigment (i.e.), a crystal-glazer. (According to another verse if the eye is white in colour he will be a scholar, poet or artist.) A freckle in the white portion of the right eye indicates that he will have a sharp intelligence; while that in the left eye indicates that he will be lascivious and enjoy women always. A mole of the colour of honey in the eye denotes prosperity.

FACE.

If the hair emits the smell of flesh and blood she will have distress and suffering. If it emits sweet smell like those of flowers she will have prosperity and enjoyment.

Body-odour.

If the body emits the smell of jasmine, *kōṅgu* (common caung) or lotus flower she will become queen. If the smell resembles margosa or aloe and is pungent like that of sweat or saline, she should be avoided as the Goddess of Prosperity will leave her. It is considered good if the body-odour resembles the smell of camphor, eagle-wood (*agaru*), musk, civet, coconut blossom, mahua flower, lemon, fragrant screw pine and the like, the Goddess of Prosperity will reside with her.

Mole, dot or whorl in different parts of the body.

Congenital scar, small beauty dots or red mole on the left side of a woman will indicate that her wealth will increase and she will prosper. A scar or beauty-freckle on the right breast indicates that she will give birth to one son who will become famous and four beautiful daughters. Only a queen will have a red mole inside the nostril at the tip of the nose. A black one there indicates that she will suffer and become a widow; otherwise she will wrong her husband and commit debauchery so as to be slandered by others. A mole on the left hand, neck, both the ears or the cheek indicates that she will have good progeny. If small scars or dots like the sesame seed or mosquito appear above the instep up to the navel it indicates extreme poverty and suffering. A trident line on the forehead indicates that she will live like the Goddess of Prosperity with thousand women serving her.

A clockwise whorl on the hand, chest and navel as also on the right side of the back is considered good. Two such on the rear portion indicate long life and progeny. A clockwise one on the lower portion of the *pudenda* indicates that she will become queen, while a circular one there shows that she will have long life and progeny. One big whorl extending from the waist (*Kaṭi-taṭa*) to the *pudenda* indicates that her husband and children will die. A long one from the waist (*kaṭi-taṭa*) to the belly indicates that her

husband will die, while two such there show that she will lose her chastity and be an object of ridicule for others. A whorl in the eye indicates widowhood or loss of chastity while one on the nose that she will be a chaste woman. A clockwise one on the ear or on the partition of hair indicates that she will be the death of her husband while one or two such at the top of the head widowhood. It is better to discard a woman with a clockwise whorl on the forehead. One whorl, both clockwise and counter-clockwise, in the neck indicates that she will lose her husband in one year.

While sleeping, if a woman grinds her teeth, she is to be discarded even if she possesses all the other good signs. Similarly a woman with a whorl at the waist is to be discarded even if she has all the good signs enumerated, as she will be a foreigner to chastity.

General.

The following women should be avoided; one who very often laughs, or loses and ties her chignon, or changes her dress; one who walks haughtily, or speaks harsh words or gets anger quickly; and one having a big navel.

So also a woman with short arm or small fingers or joining eyebrows and two whorls or big ears should be avoided; otherwise the man's wealth will vanish and he will get disease.

Similarly a woman having hirsute legs, speedy and resounding gait, thick neck, freckle with a clockwise twist or night-blindness, or whose body emits the stench of fish should be avoided as the person who embraces her daily will lose his life.

A woman having a long nose, screwed up face, contracted or raised abdomen, red hair, mouth or tongue in black colour or split nails should also has to be avoided and discarded as she will reduce to dust whichever place she goes to.

So also should be avoided a woman whose sole of the foot does not rest fully on the ground having an arch in the middle, as poverty will be following her.

A woman whose sole of the foot is soft like cotton or whose body emits the smell of lotus is considered good and the whole world will bow to her.

சாமுத்திரிகா லட்சணம்

காப்பு.

(கலி விருத்தம்.)

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழக்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி யல்லதோர் கருமம் இல்லையே. (க)

(வெண்பா.)

இரவி தனைவணங்கி எப்போதும் ஈசன்
திருவடியே சென்னியின்மேற் சேர்த்து-மருவினிய
சாமுத் திரிகந் தமிழால் விரித்துரைப்பம்
நாமுத் திரையால் நயந்து. (உ)

புருஷ லட்சணம்.

(ஆடவர் இலக்கணம்.)

[பின்வரும் நான்கு பாடல்களும் சில பிரதிகளில் காணப்பெறவில்லை: ஆயினும் உரைநடையில் அமைந்துள்ள சாமுத்திரிகா லட்சண நூலைக் கவனிக்கும்போது இந்தப் பாடல்கள் ஆரம்பத்திலேயே இருக்க வேண்டும் என்பது விளங்கும்.]

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

ஐந்துநீண் டைந்து நேர்ந்தா றிடம்உயர்ந் தேழ்சி வந்து[1]
முந்துமூன் றகன்று மூன்று குறுகிமூன் றாழ்ந் திருக்கும்[2]
அந்தமில் குணங்கள் முப்பா னிரண்டொடும் அமைந்த[3] மாந்தர்
இந்திரர் திருவி னோங்கி இனிதுவீற் றிருப்பர் மாதோ[4].

(என்பது) எல்லாப் புருஷருக்கும் முப்பத்திரண்டு லட்சணம் பொருந்தி யிருக்கவேண்டும். அஞ்சு இடம் நீண்டிருக்க வேண்டும். அஞ்சு இடம் மிருதுவாக இருக்கவேண்டும். ஆறு இடம் உயர்ந்திருக்க வேண்டும். ஏழு இடம் சிவந்திருக்க வேண்டும். மூன்று இடம் விசாலமாயிருக்க வேண்டும். மூன்று இடம் குறுகி இருக்கவேண்டும். மூன்று இடம் அழுந்தியிருக்கவேண்டும். இப்படிப் பிரதானமான முப்பத்திரண்டு லட்சண முள்ளவன் பூலோகம் எல்லாம் ஒரு குடையின் கீழே ஆளுவான் (என்ற வாறு.) (ங)

(பாடபேதம்) [1] ஏழு சேந்து. [2] மூன்றாழ்ந்திருக்கும். [3] அமர்ந்த ; இருந்த. [4] இருப்பார் என்றே.

நீண்டிடும் ஐந்து கண்கை கதுப்புநீண் முழந்தாள் மூக்கும்
ஆண்டுநேர்ந் திருக்கும் ஐந்து . மயிர்விரல் உகிர்தோல் வெண்பல்
ஈண்டுயர் ஆறு நெற்றி தோள்வயி றிருகை மூலம்
பூண்துயில் கொள்ளு மார்பம் பொற்புடைப் புறங்கை ஆமால்.

[நீண்டிருக்க வேண்டிய ஐந்து இடம் : கண், கை, கதுப்பு, முழங்கால், மூக்கு. மிருதுவாக இருக்கவேண்டிய ஐந்து இடம் : மயிர், விரல், நகம், தோல், பல். உயர்ந்திருக்கவேண்டிய ஆறு இடம் : நெற்றி, தோள், வயிறு, அக்குள், மார்பு, புறங்கை ஆகியவை.] (ச)

ஏழ்இடம் சிவத்தல் அங்கை இணையடி கடைக்கண் அண்ணம்
கீழிதழ் தாழ்நாக் காகுங் கிளர்த்திய வதனம் மூன்று
தாழ்மருங் கொக்கல் நெற்றி குறுகுமூன் றிடங்கள் சாற்றில்
சூழ்புலன் கனமு ழந்தாள் கீழதாண் குறியும் சொல்லும்.

[சிவக்க வேண்டிய ஏழு இடம் : உள்ளங்கை, உள்ளங்கால், கடைக்கண், அண்ணம், அதரம், உள்நாக்கு, வாய். விசாலமான மூன்று இடம் : மார்பு, இடுப்பு, நெற்றி. குறுகிய மூன்று இடம் : கழுத்து, முழங்காலின்கீழ், ஆண்குறி ஆகியவை.] (ரு)

மூன்றிடம் ஆழ்தல் உந்தி மொழியுடன் மூட்டும் இன்ன
ஆன்றவச் சிறுவன் தன்பால் அமர்ந்தன வன்றி யேயுந்
தோன்றநாண் மேன்மை யாகத் தோன்றலா லங்கை வண்மை
என்றுஇயல் பாத லால்மற் றியானிரை யாகு மென்றே.

[தாழ்ந்திருக்க வேண்டிய மூன்று இடம் : தொப்புள், சந்து, மொழி ஆகியவை. இவை பொருந்தியவன் மேன்மையாக வாழ்வன்.] (சா)

(வெண்பா.)

நெற்றிவரை ஐந்தாகில் நூருகும் நான்காகில்
பெற்றவய தெண்பதெனப் பேசுங்கால்—உற்ற
தொருமூன்றுக் கறுபதாம் ஓரிரண்டு நாற்பதாம்
திருஒன்றுக் கிருபதெனச் செப்பு.

(எ-து) நெற்றி வரை ஐந்தானால் வயது நூறு ; நாலு வரையானால் வயது எண்பது ; மூன்று வரையானால் வயது அறுபது ; இரண்டு வரையானால் வயது நாற்பது ; ஒரு வரையானால் வயது இருபது (எ-று.) (எ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

அஷ்டமி மதியம் போலும் அழகுறு நெற்றி யாகில்
பட்டமும் கட்டு மென்று பாங்கினுல் நரம்பொன் றுகில்
விட்டில நடுவு தானே விளங்கிடில் வேந்தர் தம்மோ
டொட்டிய சேனைக் கெல்லாம் ஒருவனே ஆள்வா னென்றே.

(எ-து) நெற்றியானது எட்டாம் நாள் சந்திரன் போன்று முகம் மகிழ்ச்சியுண்டாய் நெற்றியின் நடுவே கயிறு போலே ஒரு நரம்புண்டாகில் பட்டாபிஷேகமுள்ளவன் ஆவான் (எ-று.) (அ)

(எ-து) கண்டத் தொனியானது மேகத்தின் குமுறுதல் போலவும், ஆனையின் சத்தம் போலவும், அரிமுழக்கம் [சிங்கத்தின் கர்ஜனை] போலவும், கின்னரி வீணைத்தொனி போலவும் இருந்தால் ஐசுவரியமும், வீரகங்கணமும் உடையவனும் ; சேனாபதியாவான் (எ-று.) (௰௩)

கழுத்துறு வரைகள் நாலு காணவே பிடரி தன்னில்
அழுத்தமாய்த் தோன்று மாகில் அறுநிதி யாகு மென்னில்
கழுத்தின்கீழ் முதுகு மீது கலந்துற நிற்கு மாகில்
வழுத்துறு செல்வ முண்டு வயதொரு நூறு முண்டே[1].

(எ-து) கழுத்தைச்சுற்றிவரை நாலு பிடரியில் தெரிவதாக இருந்தால் தரித்திர முடையவனுவன். அந்த நாலு வரை முதுகின் மேலிருந்தால் வெகு செல்வத்தையுடையவனுய்ச் சகல கல்வி, புராண சாத்திரங்களும் வல்லவனுய் வயது நூறும் உண்டாயிருப்பான் (எ-று.) (௰௪)

கொக்கென மிடற்றி னேடுங் கோழிமுட் செவியில் தோன்ற
மிக்கதோர் வயது மில்லை மிடற்றினில் மயிருந் தோன்றில்
தக்கதோர் ஆயு சில்லை தாள்விரல் அங்கை தன்னில்
சிக்கென வுடைய னுகில் செல்வமுண் டாகு மன்றே.

(எ-து) கழுத்தானது நீண்டு மிடறு தெரிய அழகியதாயிருந்தால் அறிவுண்டு. அழகில்லாமல் நீண்டிருந்தால் ஆயுசு இல்லை. மிடற்றில் மயிர் தோன்றில் ஆயுசு இல்லை. முன்சொன்ன கோழி முள்போல் செவியாகில் ஆயுசு இல்லை. கால்விரல், கைவிரல் நெருங்கியிருந்தால் தனம் உடையவனுவான் (எ-று.) (௰௫)

(கலி விருத்தம்.)

தோளொடு நடுவிரல் தொட்டி ரட்டித்து
நீளம தாக்கியே நெற்றி யுற்றிடில்
காளைதன் உகிரொடுங் கண்ணுஞ் செய்யவாய்[2]
கோளறுஞ் சதாயுவாய்க் குலாவும் செல்வமே.

(எ-து) யாவனொருவனுக்குக் கயிற்றைத் தோளில் நிறுத்திக் கையில் நடுவிரல் அளவும் அளந்து அந்தக் கயிற்றை இரட்டித்துக் கால் பெருவிரலில் நிறுத்தில், நெற்றியில்[3] நின்றிடில் வயது நூறு உண்டாம், ஐசுவரியம் உண்டாம் என்பது. கண்ணும் செவ்வரிபோன்று அதரமும் வாயும் சிவந்து தோன்றினல் வெகு செல்வத்தை உடையவனுவான் (எ-று.) (௰௬)

மன்னிய புருவமேல் மருவில் ஆயுசும்
பன்னிய எண்பதாம் பகரும் செல்வமும்
அன்னது வாயுறில் அறுபத் தஞ்செனச்
சொன்னவிச் செல்வமும் சுருக்கம் என்பரே.

(பா—ம்.)[1] வயதுமே நூறுங் காணே. [2] கடைக்கண் செவ்விதாய்.
[3] நெற்றியின் மேலே.

தாமரை யுடைய கண்ணன் தனமிக உடைய னுகும்
தேமறு உடைய கண்ணன் திருவினை யுடைய னுகும்
பூமது உடைய கண்ணன் பொருந்துரை புலவ னுகும்.
காமரு கழுநீர்க் கண்ணன் கலியுக ராம னுமே.

(எ-து) கண்ணனது தாமரைக் கமலம் போன்றிருந்தால் வெகு திரவிய முண்டானவன். கண்களுக்குள்ளே தேன் நிறமாய் மறு உண்டா யில் மகாலட்சுமி குடிகொண்டிருப்பான். கண்ணனது வெண்மை பிறந் திருந்தால் நூல், கலை வல்லவனுவான். கண்கள் செங்கழுநீர்ப் பூப்போன் றிருந்தால் அவன் இராமவதாரமென்று சொல்லப்படும் (எ-று.) (௬)

கவிதரு செவியு மானைக் கண்ணுமுண் டாகில் மண்மேல்
தவனெனத் திருவுண் டாகும் தலைவரும் வணங்க வாழ்வர்
மலைபிறை மார்பி னுண்டேல் அணங்கினுக் கனங்க னுவன்
ரவிபிறை நாலு வெற்றி மண்ணின்மேல் திண்ணம் நன்மை.

(எ-து) வானரத்தின் செவிபோலவும் ஆனையின் கண்ணைப் போலவும இருந்தால் மகாலட்சுமிகரம் உண்டாம். மார்பிலே சந்திர பிறையைப் போன்றிருந்தால் அவன் மன்னியனுவான்; ஸ்திரீகளுக்கு மன்மதனுவன். நாலு பிறையாயிருந்தால் வெற்றியுண்டாயிருப்பான் (எ-று.) (௰)

அதரந்தா மரையே யொக்கில் அருநிதி கோடி யுண்டாம்
புகலிரு செங்கை யாகில் புகலிரு கோடி யாகும்
நிகரிலா நேமி யாகில் நீள்புவிக் கரச னுவன்
மருவளர் குழலி னுளே மறைவழி யுரைத்த வாறே.

(எ-து) அதரமானது தாமரையிதழ் போன்றிருந்தால் கோடி திரவியம் உண்டாம். கையானது செந்தாமரை போன்றிருந்தால் இரு கோடி தன முண்டாம். கையில் சங்கு சக்கரம் போன்றிருந்தால் பூமிக்கு அரசனுவன் (எ-று.) (௰௧)

சிரிப்பினுல் அழகு தோன்ரு தாயிடிற் செல்வ மில்லை
அருக்கிய நகையுந் தானே அழகதா யிருக்கு மென்னுய்
முருக்கிதழ் அதரந் தன்னில் முத்துப்பல் லுடைய னென்னும்
உரைதரத் திருவுண் டாகும்[1] உயர்பெறும் செல்வ னுமே.

(எ-து) சிரிப்பினுலே அழகு தோன்ருமல் இருந்தால் செல்வமில்லை; வறுமையுடையவன். நகை அழகாயிருந்து பல்லும் முத்துக்கோவை போலிருந்தால் செல்வ முண்டாகி அதிக வாழ்வு உண்டாயிருப்பன் (எ-று.) (௰௨)

காரியல் மேகம் போன்றும்[2] கரியரி முழக்கம் போன்றும்
சீரிய முரசு போன்றும் திகழ்குர லுடையா னுகில்
பாரிய செல்வ மன்னும் பருமணிப் பெரிய னென்னும்
ஆரியன்[3] உரைத்த நூலின் நற்பொருள் உரைத்த வாறே[4].

(பா—ம்.) [1] உரைத்தாரைத் திருவுண்டாகும். [2] காரிருள் மேகம் போலும்.
[3] ஆரியம். [4] உரைத்தார் நந்தி.

(எ-து) முன் அளந்த் கயிறு புருவ மத்தியில் வந்தால் வயது எண்பது; செல்வமுண்டாம். அந்தக் கயிறு வாயளவு வந்தால் வயது அறுபத்தஞ்சு, செல்வம் மட்டு (எ-று.)

இதன் வேறு பாடம்

மன்னிய நெற்றி தன்னில் வயதுதான் தொண்ணூ றென்றும்
எண்ணிய புருவில் நின்றால் [அவன்வயது] எண்ப தாகும்
மின்னிய மூக்கில் சேர்ந்தால் மெய்ப்புடன் எழுப தென்றார்
சன்னமாய் அறுபத் தஞ்சு தாடையில் நிற்ப தாமே.

நெற்றியளவு வந்தால் வயது தொண்ணூறு. புருவத்தில் நின்றால் வயது எண்பது. மூக்களவு ஆனால் எழுபது. தாடையில் நின்றால் வயது அறுபத்தைந்து.] (யஎ)

அக்குறி கழுத்தைவந் தண்டு மாயிடில்
துக்கிய ஆயுசு சொல்லில் ஐம்பதாம்
மிக்கது நெஞ்சுறில் வறுமை மேலிடும்
புக்கதோர் வயதெனப் புகல்வர் புத்தியால்

(எ-து) முன் அளந்த கயிறு கழுத்தைச் சேருமாகில் வயது ஐம்பது; ஐசுவரியம் குறையும். நெஞ்சில் கயிறு வந்தால் அவன் வயதில்லை (எ-று.)

இதன் வேறு பாடம்

அக்குறி கழுத்தைவந் தணையு மாயிடில்
துக்கிய ஆயுசு சொல்லில் ஐம்பதாம்
மிக்கவே நெஞ்சினில் விளங்க முப்பதாம்
பக்கமாம் மார்பினில் பருவம் இருபதே.

அந்தக் கயிறு கழுத்தை அடைந்தால் வயது ஐம்பது; நெஞ்சில் நின்றால் வயது முப்பது; மார்பு மட்டுமே வருமானால் வயது இருபது ஆகும்.] (யஅ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மறுவது தோளி னுள்ளும் புயத்தினுந் தோன்றிற் பொல்லா
செறிதரும் இடையி னுள்ளே சேர்ந்திடும் மறுநன் றாகும்[1]
குறியது விழியில் தோன்றில் கோலமாம் அரச னாகும்[2]
மறுவது வலத்தி னுண்டேல் மணிவண்ண னாகு மன்றே.

(எ-து) யாவன் ஒருவனுக்கு மறு தோளினும் இடது பக்கத்திலும் உண்டானால் செல்வமில்லை. அரைக்குள் எல்லைப்புறத்திலும் வலது பக்கத்திலும் மறுவுண்டானால் ஐசுவரியமுண்டாம். வலது விழியில் மறுவுண்டானால் மகாவிஷ்ணுவுக்குள்ள பதவியுண்டு (எ-று.) (யகூ)

(பா—ம்) [1] சேர்ந்திடில் அவன் நன்றாகும். [2] கோலமாம் அமைச்சு நாடும்.

(வெண்பா.)

மார்போடு நெற்றி அகலில்தான் வாழ்வடுக்கும்
பாருடைய வேந்தன் பணிமகனும்—சீருடைய
கொப்பூழும் மூக்குங் குரலும் பெரியனென
எப்போதும் இன்பந் தரும்.

(எ-து) மார்பும் நெற்றியும் அகன்று விசாலமாயிருக்கில் ராசாக்கள் கூட வணங்கத்தக்க ஐசுவரியத்தை உடையவன் ஆவான். தொப்புளும் மூக்குங் குரலும் பெரியன் என்னில் எப்போதும் சுகத்தை அனுபவிப்பன் ; ஆயுசுமுண்டு (எ-று.) (உ௰)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

ஒன்றுல காள நிற்கும் இரண்டுநல் லார்கள் இன்பம்
நன்றுதான் மூன்று கல்விக் கிறைவனும் நாலு நண்பால்
ஒன்றிய மக்கள் செல்வம் உடையன்ஓர் ஐந்தும் கொள்ளச்
சென்றுதான் வயிற்றி லென்று திருவினுல் அரச னுமே.

(எ-து) யாவன் ஒருவனுக்கு வயிற்றின்மேல் ஒரு வரையுண்டாகில் மக்கள் செல்வமுண்டாம் ; ராசபோக முண்டானவன். இரண்டு வரையுண்டாகில் நல்ல ஸ்திரீ போகமும் செல்வமும் உண்டாம். மூன்று வரையாகில் கல்வியுடையவனுவன். நாலு வரை யுண்டாகில் மகா செல்வமுண்டாம். அஞ்சு வரையாகில் அதிகாரபலன் [உடையவன்] (எ-று.) (உ௰க)

மன்னிய உதரந் தானும் மருவிய சுழியை யொத்துத்[1]
துன்னிய ரோமம் நாபி மேலுமேல் நோக்கி யேறில்
அன்னவன் கைகள் தம்மில் அங்குலி சிவக்கு மாகில்
துன்னிரை யிணைத்த தாகில் சொல்லரும் செல்வந் தானே.

(எ-து) யாவனொருவன் வயிறும் தொப்புளும் ஒத்திருந்தால் நல்லது. நாபியில் ரோமமில்லாமல் நாபிக்கு மேல் மார்பில் ரோமம் மிகவு முண்டாகில் வெகு நல்லது. கை வரை[2] சிவந்திருக்கில், விரல்கள் நெருங்கியிருக்கில் மிகுதியாகிய செல்வத்தை உடையவனுவான் (எ-று.) (உ௰உ)

வயிறுடன் சென்னி வாய்தான் கன்னமும் வற்றி னும்
மயிர்சிவந் துடம்பு கூனி வழிநடை கவிழ்ந்து போகில்
குயிலென மொழிந்து பல்கால் கூப்பிடுங் குரலி னுனுஞ்
செயல்வினை கள்வ னுகும்[3] செல்வத்தைத் தீண்டி லானே.

(எ-து) யாவன் ஒருவனுக்கு வயிறு, தலை பெரியதாகிவிடினும் ; கன்னம், வாய் தசையில்லாமல் மிகவும் நரம்பாய் வற்றினும் ; மீசை, தாடி, தலைமயிர் சிவக்கினும் ; யாவன் ஒருவன் குனிந்து நடக்கினும்; கவிழ்ந்து நடக்கினும் ; கீச்சுக்குரலாய்க் குரல் நெருங்கினும்; பரையில்லாமல் பலகாலும் குரூரமாய்க் கூப்பிடுகிறவனும் பாபாத்துமா வென்று சொல்லப்படும். ஒருகாலும் செல்வமில்லை (எ-று.) (உ௰௩)

(பா—ம்.) [1] சுழியும் ஒத்து. [2] கைஉகிர். [3] செயல்வினை கள்வ னுகும்.

சுழியினில் மயிரொன் ருகில் தொல்லைமா வேந்த னுவன்[1]
வழிவர இரண்டு ரோமம் மண்டியே விரவு மாகில்
எழுதரு கலைக ளெல்லாம் எதிரில்லா னுனு மைந்தும்
கழுவினிற் பொருந்தத் தக்கக் கஷ்டமே விளைக்குந் தானே.

(எ-து) யாவன் ஒருவனுக்கு நாபியில் ஒரு ரோமம் தோன்றினுல் ராசாவாவன். இரண்டு ரோமம் தோன்றினுல் சகலவித்தையிலும் வல்லவனுய்ப் புலவன் ஆவன். நாலு அஞ்சு, ரோமம் கூட்டமாயிருந்தால் வெகு துக்கத்தை அனுபவிப்பான்; சோரஞ் செய்து கழுவிலேறி இறப்பான் (எ-று.) (உ௰௪)

(வெண்பா.)

உடம்பு தனில்மயிரொன் றேயாகக் கல்வி
இடம்புடனே ரெண்டாகில் இன்பம்—மடங்கியதோர்
நன்மயிர் மூன்ருகில் நன்னுதலாய் நாலுபால்
தின்மையும் நல்குரவும் செப்பு.

(எ-து) உடம்பினில் மயிர்க்கால் பத்தி பத்தியாயிருக்கும். அதற்கு லக்ஷணம் ஏது என்னில்: ஒரு பத்தியுண்டானுல் கல்வி; இரண்டு பத்தியுண்டானுல் இன்பம்; மூன்று பத்தியுண்டானுல் துன்பம்; நாலு பத்தி உண்டாகில் துக்கம் [வறுமை] (எ-று.) (உ௰௫)

(கலி விருத்தம்.)

மன்னிய மணிக்கையிற் பிறந்த மால்வரை
உன்னிய நடுவிரல் ஊன்று மாயிடில்
பொன்னிணைப் பிடித்திடும் பூமி தேடிடும்
மன்னிய வித்தைகள் வல்ல னுகுமே.

(எ-து) மணிக்கட்டில் பிறந்த ரேகை நடுவிரலிலே சுமந்தால் திரவியமுண்டாம்; அரசனுவன்; கல்வியும், ஞானமும் உண்டாவன் (எ-று.) (உ௰௬)

வஞ்சமில் மணிக்கட்டில் எழுந்த மால்வரை
மிஞ்சிய அணிவிரல் மீது தோன்றிடில்
தஞ்சமா மிருநிதி தாங்க வாரிதி
அஞ்சலி புவிதனக் கரச னுகுமே.

(எ-து) மணிக்கட்டில் பிறந்த ரேகை அணிவிரலிலே சுமந்தால் சங்கநிதி பதும நிதி அவனிடத்திலே வாசமாயிருக்கும். சமுத்திரம் சூழ்ந்த பூமிக்கும் அரசனுவன் (எ-று.) (உ௰௭)

வாய்ந்ததன் மணிக்கட்டில் பிறந்த மால்வரை
சேர்ந்தநற் சிறுவிரல் சென்று சேர்ந்திடில்
ஏந்துதன் னுருவொடு மிசைந்த மாநிதி
வேந்தனுய்க் குடியது விளங்கு மென்பரே.

(எ-து) மணிக்கட்டில் பிறந்த ரேகை சிறுவிரலில் நின்ருல் பூமிக்கு ராசாவாய்த் திரவிய முண்டாய் நல்ல ஸ்திரீகளுடனே அனுபவித்துக்கொண்டிருப்பன் (எ-று.) (உ௰௮)

(பா—ம்.) [1] வேந்தன் ஆகும்.

தோன்று ரேகையுந் தூய மணிக்கட்டில்
மூன்று ரேகையும் நிற்கில் முழுநெதி
என்ற ஞான விரேகை நடுவிரல்
ஊன்றி ல.... த்திடும் ஞானமே.

(எ-து) மணிக்கட்டில் ஒரு ரேகை பிறந்து உள்ளங்கையிலே நின்று நடு விரல், அணிவிரல், சிறுவிரல், இந்த மூன்று விரலுக்கும் மூன்று கயிருய்ப் போய்ச் சுமந்து நின்ருல் சங்கநிதி பதுமநிதி அடைவனென்று சொல்வது. இரண்டு ரேகையாளுல் மகா ஐசுவரியமுண்டாம் ; அல்லது நாளு கலைகளுக்கும் வல்லவனுய் ஞானத்தலைவனுவன் (எ-று.) (உ௰௯)

(வெண்பா.)

ஞான வரைபோய் நடுவிரலில் ஊன்றுமேல் [1]
ஞான மவருக்கே நன்ருகும்—ஞானம்
தருமவ் வரைபோய்த் தனிவிரலி லூன்றில்
பெருகு மிருநிதியம் பின்பு.

(எ-து) ஞானவரை போய் நடுவிரலில் நின்ருல் வெகு ஞானவான் ஆவன். அவ் வரை பெருவிரல் மேலேறிளுல் ஞானமும் திரவியமும் உண்டு (எ-று.) (௩௰)

(கலி விருத்தம்.)

கையுள் ளேவரை நின்று சிவந்திடில்
மெய்யுள் ளேபல போகம் விளைத்திடும்
கையுள் ளேவரை கண்டு கறுத்திடில் [2]
மெய்யுள் ளேபல துக்கம் விளக்குமே.

(எ-து) கையிலே இருக்கிற வரை சிவந்திருந்தால் சரீரத்திலே துன்ப மில்லாமல் சுகத்தைக் கொடுக்கும். கை வரை கறுத்திருந்தால் சரீரத்திலே ரோகம் உண்டென்று சொல்வது (எ-று.) (௩௰௧)

பெருவிரற் கீழ்வரை யிணைத்த சங்கிலி
உருவெனில் நாற்ப'துக் கொன்று மில்லையாம்
திருமணம் இரண்டுள தாகு மென்றுளே
வருமக வாறுளர் அதற்குப் பின்னரே.

(எ-து) பெருவிரற் கீழ்வரையானது சங்கிலியிணையலாய்ப் பிணைந்திருந் தால் நாற்பது வயசுமட்டும் விவாக மில்லை. பிற்பாடு இரண்டு விவாகமுண்டு. பிள்ளைகள் ஆறு உண்டு (எ-று.) (௩௰௨)

குரங்கின் கைகளே கூட்டும் பொருள்களை
அரங்கு வான்புகை கையவன் பாவியான்
கரங்கள் கோணிலும் கைப்பணி செய்திடும்
பரந்த கையவன் பற்றில ளுகுமே.

(பா—ம்.) [1] நடுவிரலிலூன்றிடல். [2] கனக்க கறுத்திடில்.

(எ-து) குரங்கின்கை என்பது விரல் நெருங்கிக் கை குழிந்திருப்பது. அவ்விதம் இருந்தால் திரவியமுண்டாவன். கை புகைச் சூழ்ந்திருந்தால் பாவசீவனம் பண்ணுவான்; கள்ளன். கை குறுகியிருந்தாலும் கோணி யிருந்தாலும் ஈனத்தொழில் செய்திருப்பான். உள்ளங்கை கன்றியிருந்தால் செல்வமில்லை (எ-று.) (௩௰௩)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மகரத னுருவம் போல வாய்த்ததோர் தாரை யாயில்
புகருடைச் சங்கு நாலு கோடியாம் பூமி மீது
நிகரிலா நெதியை யாளும் நீள்முடி மன்ன னேயாம்
தகரநற் குழலாய் நன்றுய்த் தரணிமேல் வாழ்வர் கண்டாய்.

(எ-து) கையில் மகரரேகை யிருந்தால் சத்திராதிபதியாவன்.[1] புத்திர சம்பத்துண்டாம். சங்கு, சக்கரம் இருந்தால் நாலுகோடி ராச்சியத்துக்கு அரசனுவான் (எ-று.) (௩௰௪)

அங்கையின் ரேகை செம்மை அளவதாய் நீளு மாகில்
மங்கையர்க் கனங்க னுகும் மத்தியில் சிறுகும் வாழ்வு
செங்கையில் கோணிற் றுகில் திண்ணிய தொழில்க ளாய
சங்கையிற் சுகமு மில்லை தரும்பொரு ளிழப்பான் தானே.

(எ-து) கையில் உள்ளே ரேகை செவ்வையாய் நீளுமாகில் ஸ்திரீ களுக்கு மன்மதனுவான்; வெகுபோகபாக்கியமுள்ளவன். கைக்குள் வரை கத்திரித்துக் கண்டிருந்தால் துன்பம் உண்டாவன்; கை முறணித்து இருந் தால் சொப்பனத்திலும் செல்வமில்லை (எ-று.) (௩௰௫)

(கலி விருத்தம்.)

கங்கை ஆனை கனங்கொடி குண்டலம்
பொங்கு மாழி கவரி விமானமுந்
தங்க ளாயுசு சார்துடி தோரணம்
அங்கை யாகில் அரசனு மாகுமே.

(எ-து) கையில் கங்கை, ஆனை, கொடி, குண்டலம், சமுத்திரம், சாமரம், விமாநம், தமருகம், தோரணம், குடை இவை தோன்றினுல் பட்டத்துக்குரிய அரசனுவான் (எ-று.) (௩௰௬)

சங்கு தாரை நெடுங்கொடி அங்குசம்
பொங்கு நீர்கவ ரித்திரள் பொன்மழு
திங்கள் ஆளி எறிதனு வெண்குடை
அங்கை யான்அர சாள்வது முண்மையே.

(எ-து) சங்கு, தாரை, கொடி, அங்குசம், சமுத்திரம், கவரி, துடி, மழு, பிறை, குடை, இப்படிக்கொத்த ரேகையிருந்தால் அரசாளுவான் (எ-று.) (௩௰௭)

(பா-ம்) [1] தனபதி ஆவான்; க்ஷத்திராதிபதி ஆவான்.

சங்கொடு சக்கரம் தண்டு தாமரை
செங்கையில் வேல்மழு செல்வ மென்றிவை
அங்கையி லிரண்டினும் அடியி ரண்டினும்
தங்கிடின் அவனியில் தலைவன் ஆகுமே.

(எ-து) சங்கு, சக்கரம், தாமரைப் பூ, வேல், மழு, மீன் இவை கையிலும் காலிலும் இருந்தால் ஐம்பத்தாறு தேசத்துக்கும் அரசனுவான் (எ-று.) (௫௰அ)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

கொடியேறி யானை குடைசாம ரங்கள்
கயலே குலாவு வரிவாள்
வடிவேலர் கண்ணி வலநேமி யும்பர்
மலர்மாலை சங்கு முரசம்
அடியான தோகை யுயர்தோ ரணங்க
ளளிமொய்த் துலாவு கமலம்
வடிவான கும்ப மகரங்கள் கையி
லுளதாகில் மன்ன னிவனே.

(எ-து) கொடி, யானை, குடை, வெண்சாமரை, மீன், வண்டு, வேல், மாலை, சக்கரம், சங்கு, பாரிசாதம், முரசு, தாமரைப்பூ, தோரணம், குடம், மகரம் இவை முதலானதும் கையிலாவது காலிலாவது தாடை நாக்கு வாய்க்குள்ளாவது உண்டானலும் மகாராசனுவன் (எ-று.) (௫௰௯)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மொழியுடை விரல்கள் தம்மில்
முன்கையில் அங்கை தன்னில்
எழுதிய வுண்டொன் றின்பம்
இறையவ னுகு மென்னே
வழிதரு முள்ளங் காலில்
சுழியுண்டேல் மதிக்க வாழ்வார்
குழிதரும் பிடரி தன்னில்
சுழியது குற்ற மன்றே.

(எ-து) விரலிலும் உள்ளங்கையிலும் முழங்கையிலும் சுழியிருந்தால் இராசனுவன். உள்ளங்காலிலும் சுழியிருந்தால் வெகு சம்பத்து உண்டானவன். பிடரியில் சுழியிருந்தால் வெகு குற்றம் (எ-று.) (௬௰)

(கலி விருத்தம்.)

குறைய வாயின கொண்டு பெருத்தன
பெரிய வாகி வெளுத்தநி றத்தன
வரிய வாயிரை யின்றி யழிந்தனர்
செறிவிரற் குறைந்த தெத்தனை குற்றமே.

(எ-து) வாயானது குறைந்தாலும் அறவும் பெருத்தாலும் வாய் வெளுத்திருந்தாலும் விரல் குறைந்திருந்தாலும் நகம் வெளுத்திருந் தாலும் குற்றம் எனப்படும் (எ-று.) (௬௧)

(வெண்பா.)

பெருவிரற் கீழ்வரைபோய்ச் செவ்விதாய்ச் சுட்டிக்
குறுகிலொரு நூருண்டாய்க் கொள்க—மறுவிரல்
நடுவிரற் கெண்பதவ் வணிவிரற் கைம்பதாம்
சிறுவிரற் கிருபதெனச் செப்பு.[1]

(எ-து) சிறுவிரல் கீழ்வரை பெருவிரல் கீழ்வரையிலே நின்ருல் வயது நூறு ; செல்வமுண்டு. மறு விரலிலாவது நடுவிரலிலாவது நின்ருல் வயது எண்பது ; அதற்கு அடுத்த அணி விரலில் நின்ருல் வயது ஐம்பது ; சிறு விரலில் நின்ருல் வயது இருபது (எ-று.) (௩௧௨)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

கைவிரல் ஐந்து தன்னைக் கருத்தினுல் அளந்த நூலைச்
செய்யவே[2] முழங்கை தொட்டு நடுவிரல் அளவும் நீளில்
செய்தவ முடைய ஞதும் திருநிதி செல்வ முண்டாம்
மைவரை ஒன்று தாழில் மன்னனுக் குரிய ஞமே.

(எ-து) கயிற்றினுலே அஞ்சுவிரலும் அளந்து முழங்கையில் நிறுத்திப் பிடித்தால் நடுவிரலில் தீர்க்கமாய் நின்ருல் தீர்க்காயுசு நூறு ; செல்வ முண்டு. அதற்கு ஒரு வரை தாழில் புத்திர சம்பத்து செல்வமுண்டு. மற்றும் அதற்கு ஒரு வரை தாழில் செல்வமில்லை. அதற்கு ஒரு வரை தாழில் சொப்பனத்திலும் செல்வமில்லை (எ-று). (௩௧௩)

ஆங்கதோர் கோட்ட மின்றி யகன்றுதண் டளவ தாகி
வீங்கியே நரம்பு தோன்றில் வியந்ததோர் வறுமை எய்தும்
தேங்கழல் பொட்டுப் போலே இருக்கினும் செல்வ முண்டாய்ப[3]
பாங்குடை அரசர் தங்கள் பணிமக ளுகு மன்றே.

(எ-து) லிங்கமானது அகன்று நீண்டு நரம்பு தோன்றியிருந்தால் செல்வமும் ஆயுசும் குறையும்.[4] தென்னங்குரும்பை போலே சிறுகி இருந்தாலும் கூர்மை போன்றிருந்தாலும் வெகு செல்வம். உத்தமம் (எ-று.) (௩௧௪)

(வெண்பா.)

தடித்த லிங்கம் சங்கடமாய் நீளிற்
கெடுக்குயிர் தன்னைக்கே பெய்தும்—தடித்துச்
சிறுகி நரம்பெடுக்கிற் செண்பகமொட் டொப்பக்[5]
குறுகில்உல காளுமெனக் கூறு.

(எ-து) லிங்கமானது தடித்து நீளில் துக்கம் ; குறுகித் தடித்து நரம்பு தோன்றினுல் பசியுடையவன் ; செண்பக மொக்குப் போலே லிங்கம் குறுகில் ராசனுவன் அல்லது செல்வமுடையவன் (எ-று.) (௩௧௫)

(பா-ம்)
[1] பின் இரண்டடியில் வெண்டளை பிறழ்ந்தது.
[2] மைவரை.
[3] செல்வமும் எய்தும் தானும்.
[4] ஐசுவரியமும் குறையும்.
[5] செண்பகமோடொப்பாய்க்.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

நேரிதாய் நீளு மாகில் பெண்பெறும் பெருக்கில் ஆணும்
வேரிள வாசம் நாறில் மிகுநிதி யுடைய னாகும்
சீரிய மக்கட் செல்வம் செழுங்கயற் புலாலே நாறில்
சேறுடன் அழுகல் நாறில் திருவிலி யாகு மன்றே.

(எ-து) லிங்கம் நேரிதாய் நீண்டால் பெண் பெறுவான். பெருத்தால் ஆண் பெறுவான். நல்ல வாசனையாயிருந்தால் திரவிய முண்டாவான். சேறு நாறில் துக்க முண்டாவன். அழுகல் நாறில் ஈளைநோய் கொள்வன். மீன் சுறை நாறில் வறுமையுண்டாகும் (எ-று.) (௩௧௬)

நாவியே சாந்தே பூவே நல்லகிற் புகையே குய்யம்
மேவியே நாறு மாகில் மிகுபெருஞ் செல்வ னாகும்
காவிசேர் கண்ணி னாளே கட்டமே நாறு மாகில்
ஏவியே தொழில்கள் செய்தே இருநிலந் தன்னில் வாழும்.

(எ-து) லிங்கம் புழுகு வாசனையானால் ராசாவாவன். சாந்து வாசனை போன்றிருந்தால் வெகு திரவியத்துக்கு உடையவன். பூப்போலவும் அகில் சந்தனம் போலவும் இருந்தால் அஷ்டலட்சுமி சம்பத்து உடையவன். பொல்லாத நாற்றமானால் ஒருவர் அடிமைத்திறமான புத்திரன் (எ-று.) (௩௧௭)

வல்லையே புணரு மாகில் வானநாட் டுடைய னாகும்
செல்லுநாள் சிலவே யாகும் சென்றவன் புணர்ச்சி நாளில்
மல்லிகை மலரே நாறில் மன்னனும் தேனே நாறில்
நல்லசுக் கிலத்தா னாகில் நண்பொருள் உடையா னாமே.

(எ-து) ஸ்திரீயும் எஜமானனும் சையோகத்திலே இந்திரியம் சீக்கிரமாக விட்டால் செல்வமுண்டாம். நேரப்படவிட்டால் துக்கம். அந்தச் சமயத் திலே மல்லிகைப் புஷ்ப வாசனையானால் சகல ஐசுவரியமும் உண்டாவன். புத்திர சம்பத்து உண்டாம். சுண்ணாம்பு நாறினால் செல்வமில்லை. தேன் வாசனையானால் சுகவானவன் (எ-று.) (௩௧௮)

வலந்திரி தாரை யொன்றாய் விரைந்துநீர் பாயு மாகில்[1]
நலம்தரு நன்மை யுண்டாம் நல்கிடும் மக்கட் பேறும்[2]
மலர்ந்துடன் சிந்திப் பாயில் வறுமையாம் மூன்று குற்றங்
கலந்திடத் திரியு மாகில் கஷ்டமே யிழைக்கு மன்றே[3].

(எ-து) சிறுநீர் விடுகிறபோது வலப்புறமாக ஒத்த தாரையாய் விழுந்தால் சகல நன்மையும் தரும். இடது பாரிசமாய் விழுந்தால் மத்திமம்; நோய் அதிகரிக்கும். சிதறினாற்போல விழுந்தால் சரீரத்திலே துக்கம். மூன்று கயிறாய் முறுக்கி விழுந்தால் வெகு துக்கம் (எ-று.) (௩௧௯)

(பா-ம்) [1] பாயும்போது. [2] மக்கட்பேறும். [3] உரைக்கும் என்றே.

ஒன்றிய பீச மொன்றே யாகில்மே வுறுதி யில்லை
நன்றிவை யிரண்டு மொத்து நடக்கில்நன் றுகு மென்பர்
சென்றவை தாழில் தானுஞ் சிக்கறும் நீளும் வாணுள்
ஒன்றொடொன் றெவ்வா தாகில் ஊனமே யாகு மன்றே.[1]

(எ-து) பீசம் ஒன்றிருந்தால் பலமில்லை. இரண்டுஞ் சமனு யிருந்தால் பலமுண்டு ; ஆயுசுண்டு. பீசம் சமனுய்த் தாழ்ந்திருந்தால் தீர்க்காயுசு உண்டு. ஒன்றேடொன்று ஒவ்வாமலிருந்தால் மத்திமம் (எ-று.) (௩௰)

பாற்றருந் துன்ப மெய்தும் பாம்புதன் வயிறு போலா
வாற்பெற நீளு மாகில் அரும்பசி விளைக்கு மென்பர்
மேற்பட விரிந்து பட்ட நடுவுதான் மெலிவு தோன்றில்
நாற்றிய நடுவ கன்றல் வாழ்வுதான் நாச மாமே.

(எ-து) லிங்கமானது பாம்பின் வயிறுபோல நீண்டிருந்தால் பசியுடைய வன். நடு நேர்ந்து தலை பருத்திருந்தால் வறுமையாவன். நடு அகன்று விரிந்திருந்தால் செல்வம் நாசமாம் (எ-று.) (௩௧)

அலைவிலா உரக னுச்சி அனையவன் அரச னுவன்
குலைவில்ஒட் டகமும் பொல்லாக் குரங்குமே போல மூளும்
நலவிய நரம்பு பல்கில் நன்மைதான் ஒன்றும் இல்லை
குலமிகு மயிர்கள் மெத்தில் குற்றமே யாகுங் கண்டாய்.[2]

(எ-து) லிங்கமானது பாம்பின் தலைபோன்றிருந்தால் வெகு செல்வம் உண்டாம். ஒட்டக முதுகுபோலவும் குரங்கின் பிரசாபதி போலவுமிருந்தால் பொல்லாத துக்கமுள்ளவன். நரம்பு மிகுந்து மயிர் மிகுதியாய் நெருங்கினுல் செல்வமில்லை (எ-று.) (௩௨)

வேரொடு வெண்மை யாகி வெவ்விய [3] விரல்கள் நீண்டு
சீரடிப் பாடு தேய்ந்து சிறுகியே பெருமை யின்றிப்
பாரொடு கூட லில்லாக் [4] குடிலமாய்ப் பரந்து தோன்றில்
காருடை நிறுத்த லில்லா [5] வாடவன் கலதி யாமே.

(எ-து) தொடை வாழைமரம் போன்றும் கணைக்கால் இளவாழைத் தண்டுபோன்றுமிருந்தால் நல்லது. பாதமானது நீண்டு வெளுத்து அடி தேய்ந்தாற்போலிருந்தால் மத்திமம். குடில்போல நிலத்தில் அழுந்தாமல் இருந்தால் தரித்திரம் உள்ளவன் (எ-று.) (௩௩)

வட்டமாய் நரம்பு வற்றி நேரிதாய் வளைந்து மங்கே
எட்டனை நேர்மை யில்லா விரங்கிய வடிவ தாக
வெட்டிவன் மென்மை நீங்கி வெளுத்துடன் விரிந்த வேனும்
ஒட்டிடா விரல்கள் காலில் உடையவன் கலதி யாமே.

(பா-ம்) [1] ஊனம தாக்கு மன்றே. [3] வெப்பிய.
[2] ஆகும் என்றே. [4] கூடில்லாத.
[5] கூரொடு நிரைத்தலில்லா.

(எ-து) நரம்பு பாதத்தின் மேலே வெகுவாய் நீண்டும் பின்னல் போன்றும் வட்டம்போன்றும் இருக்கில் மத்திமம். பாதம் அகன்றும் வெளுத்தும் விரல் விடவிட (விலகி) நிற்கினும் விரல் ஒன்றுக்கொன்று அளவாகினும் லக்ஷ்மிகரம் இல்லை (எ-று.) (௩௨௪)

(கலி விருத்தம்.)

காலில்[1] நெஞ்சினில் காணு மிரேகையும்
மேலெ ழுந்து விரலே வினவிடில்
ஞால மெங்கும் நிகழ்தரும் நன்மையாம்
கோல மங்கை குடிபுக் கிருப்பளே.

(எ-து) உள்ளங்காலில் எழுந்த வரை கால் பெருவிரலில் வந்து நின்றால் லோகத்துக்கு ராசாவாகுவன்; திருவுண்டாம் (எ-று.) (௩௨௫)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

அடியிணை யொக்கு மாகில் அணுகிய விரல்கள் தாமும்
விடவிட நிற்கு மாகில் மிகுகிளை நின்று வாழும்
கடிமயி ரிறங்கு மாகிற் கலதியாம் ஆமை போலும்
வடிவுடைக் கயல்போல் கண்கள் மருவிடில் வளமை தானே.[2]

(எ-து) அடிகள் ஒத்திருந்தால் நல்லது; அல்லது கால் விரல் விடவிட நிற்கில் கிளையை நீத்து வாழ்வன். பாதத்தில் மயிர்கள் இருந்தால் கலதியாவன். பாதம் ஆமை முதுகு போன்றும் கண் சிவந்திருந்தால் செல்வமுள்ளவன் (எ-று.) (௩௨௬)

(வெண்பா.)

அடிபெரி தேனுமவ் வங்குலி நீண்டு
தடிப்பினுந்[3] தான்பெரி தேனும்—மடுத்துச்
சிவப்பின்றி மற்று வெளுப்பெய்து மாகில்
அவத்தமே யாகி விடும்.

(எ-து) அடிகள் பெருத்திருந்தாலும் நகம் சிவந்திருந்தாலும் நல்லது. நகம்[4] வெளுத்திருந்தால் வறுமை யுடையவன் (எ-று.) (௩௨௭)

(கலி விருத்தம்.)

வெறிதேன்தளிர் மெல்லிய விருதாமரை முகையின்
சிறையினவுகிர் செம்மையிவ் விடுசே தியவிரல்கள்
பெருகொளும் செயவெயதி பிழையாததென் வாய்மை
குருயினம் பாரொடின புலவர் மலரடியே.[5]

(எ-து) பாதமானது மெல்லிதாகத் தாமரைப்பூப் போன்று சிவந்து அழகாய், உகிர் சிவந்து செம்மையாயிருந்தால் திருவுண்டாம். (எ-று.) (௩௨௮)

(பா-ம்) [1] காலினும். [3] தடிப்பேனும்.
[2] வெண்மைதானே; வாழ்மைதானே. [4] நாவு.
[5] கடை இரண்டடிகளின் வடிவம் தெரியவில்லை.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

அடியது பெரிய னேனும் அங்கடி தடிக்கு மேனும்
கெடுபொரு ளாள னென்னுங் கேடது விளக்கு மென்னும்
அடிவிரல் நெருக்க மாகில் அத்தவன இனிய னென்பர் [1]
உடைவிரல் பெருக்கு மாகில் உண்மையன் ஆகு மன்றே.

(எ-து) பாதமானது அறவும் நீண்டு தடித்த விரலாயிருந்தால் வறுமை உடையவன். அடிவிரல் சிறுகியிருந்தால் நல்லது. விரல் பெருக்குமாகில் உண்மை உடையவன் (எ-று.) (௩௨௯)

வேர்பட விரல்கள் சேர்ந்து வெளியற விருக்கு மேனும்
சீருடைச் செல்வ னாகுஞ் சிறுகிய வெளியுண் டாகில்
பாரொடு கூட வில்லான் உடையவன் வறியோ னாகுஞ்
சீரடிச் செல்வ னாகில் திருமிக வுடையா னாமே.

(எ-து) கைவிரல் சேர்ந்து புழையில்லாமலிருந்தால் பொருள் உண்டாம்; நல்லது. விரல் சிறுகி வெளியுண்டானால் பொன்னைப் பிடித்தறியான். அடிகானது நீண்டு சிறுகியிருந்தால் உத்தமம் (எ-று.) (௩௩௰)

வட்டிய நரம்பு மூழ்கி வளர்பதஞ் சிவக்கு மாகில்
ஒட்டிய செல்வ னாகும் ஓங்கியே வெளுக்கு மாகில்
முட்டிய [2] விரல்கள் தாமும் உயர்ந்துமுன் வளையு மாகில்
கிட்டிய தீமை யின்றிக் கேடிலி யாகு மன்றே.

(எ-து) காலின் பேரிலே நரம்பு தோன்றியில்லாத பாத முடையனேனும் உள்ளங்கால் சிவந்திருந்தாலும் உத்தமம். செல்வமுடையவன்; நல்லது. கால் விரல் உயர்ந்து வளையுமாகில் மத்திமம்; செல்வம் வளரும் (எ-று.) (௩௩௧)

(வெண்பா.)

நாலும் குறுகியெழு நன்கமை ந்து நீண்டவும்
சாலவும் நேரிய தாயமைந்து—மேலாய்
உயர்ந்தவா றேசிவப்பு மூன்றாகி லோங்க
வயங்குமுன் றுய்ப்பெரிது வை.

(எ-து) காலில் விரல் குறுகில் ஒருவிரல் நீண்டால் அருஞ் சுரம் யாத்திரை போவான். செல்வம் மத்திமம். நாலு விரலும் நீண்டு கடை விரல் [3] குறுகி இருந்தால் உத்தமம். உள்ளங்கால் உள்ளங்கை உகிர் சிவக்குமாகில் உத்தமம்; ஐசுவரிய முண்டாம் (எ-று.) (௩௩௨)

கணைக்காலும் லிங்கங் கழுத்துப் பிடராம் [4]
இணைத்தாம் குறுகினவே யின்பம்—பணைத்தங்கே
அன்னமொடு பன்றியாய் அன்றிருவர் காணாத
மன்னன் அருள்போல் வரும்.

(பா-ம்) [1] எளியன் என்பர். [2] முட்டியே. [3] கைவிரல். [4] பிறவட்டம்.

(எ-து) கணைக்காலும் லிங்கமும் கழுத்தும் பிடரி, இவை குறுகியிருந் தால் இன்பம் ; ஐசுவரியமும் உண்டு. அரி அயனுந் தேடியுங் காணாத பராபரமூர்த்தி அருளுண்டாம் (எ-று.) (௩௩௩)

கையொடுகண் மூக்கு முலைநடு வொன்றாய்
ஐயிடமும் நீண்டவர் பெறுவார்—கையில்
பன்னிரைப் பட்ட வரையாய்ப் பல்லொடும்
மென்னிசையும் நேர்மைக் கிசைந்து.

(எ-து) கை, கண், மூக்கு, முலைநடு, இமை, இது முதலானது நீண் டிருக்குமாகில் உத்தமம். கை வரை அழுந்தாமலிருந்தால் நல்லது. கீழுதடு சிறுத்துப் பல் வரிசையாயிருந்தால் மெத்த நல்லது (எ-று). (௩௩௪)

உள்ளங்கால் அங்கை உகிர்வாய் விழிகடைக்கண்
எள்ளப் படாத இதழ்நாக்கும்—தெள்ளச்[1]
சிவந்தனவா வார்பெறுவார் செங்கண்மா லென்ன
வியந்துலகைக் கைப்பிடிக்கும் வேந்து.

(எ-து) உள்ளங்கால், உள்ளங்கை, நகம், வாய், இதழ், நாக்கு, கடைக் கண், விழி இவை சிவந்திருந்தால் உத்தமம் என்று சொல்லுக (எ-று.) (௩௩௫)

நெற்றி மயிர்முடிமேல் நீண்டுறக் கீழுதடு
உற்ற மிடறுத ரத்தின்கீழ்— மற்றதன்கீழ்
நாவி மணிக்கட் டெனவிவைதெற் றென்னப்
பெருகுமேற் செல்வங் குறி.

(எ-து) நெற்றி, மயிர், கீழுதடு, மிடறு, மாருக்கும்கீழ், நாபி, மணிக்கட்டு இது முதலானதும் பெருத்திருந்தால் உத்தமம் (எ-று.) (௩௩௬)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

கறுத்தவன் குறளன் தானுங் கண்ணொன்றாய் விழித்த லானன்
சிறப்படக் காது மில்லான் செவிபடர் பூனைக் கண்ணன்
உறுப்பினில் குறைந்த மாந்தர் ஊமையர் முடவர் கூனர்
குறிபில வாயர் கோடுங் குறட்டினர் கொடிய ராமால்.[2]

(எ-து) கறுவலன், கூனன், ஒரு கண் சிமிட்டிப் பார்க்கிறவன், காது சிறுகி யிருக்கிறவன், பூனைக் கண்ணன், உறுப்பில் குறைந்தவன், ஊமை யன், முடவன், குருடன், பெரிய வமர்கொள்வன்,[3] பெருங்கோபி, இவர்கள் கொடியவர் (எ-று.) (௩௩௭)

புருஷ லட்சணம் முற்றும்.

(பா-ம்) [1] மெள்ளச். [2] கொடியதாமே.
[3] பெரிய ன்மிறன்.

ஸ்திரீ லட்சணம்

(மகளிர் இலக்கணம்)

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.)

அடிமுதல் கூந்த லீறுய் அவயவம் அனைத்தும் நோக்கி
வடிநெடுங் கண்ணி னூர்தம் வாழ்க்கையு மக்கட் பேறும்
கடிமலர் மீது வாழுங் காரணப் படைப்பை யெல்லாம்
படிமிசை யேற்கச் சொன்னேம் பழிப்பில்லார் கொள்வ ரென்றே.

(எ-து) யாதொரு ஸ்திரீக்கும் பாதத்திலிருந்து சிரசு மட்டும் லட்சணம் சொல்வோம் (எ-று.) (க)

திருத்தகு பாதஞ் செம்மை யுடையதாய்ச் சிறிய வாகில்
உருத்தகு விரலுந் தம்மில் பொருந்தமுன் உயர்ந்து மண்மேற்
பொருத்தகங் கடைய வாகிப் புறவடி தசைக்கு மாகில்
வருத்தமும் போக்குந் தானும் அவளென நிற்கு மன்றே.

(எ-து) பாதமானது செவ்வையாய்ச் சின்னதாய்[1] விரல் மண்மேற் சுமந்து புறவடி கதித்துப் பொஸ்தகம் போன்றிருந்தால் உத்தமம். பாதம் சிவந்திருந்தால் உத்தமம் (எ-று.) (உ)

உகிர்நல முரைக்கும் போதி லிறைச்சிமே லிரட்டித் திட்டத்
துகிர்பொதி நிறத்த வாகிற் சொல்லுக நன்மை முற்றும்
வகிர்படப் பிளக்கு மேனும் மழுங்கிய நிறத்த வேனும்
துகிர்பழு மேனி யாளே துக்கமே விளைக்கு மன்றே.

(எ-து) பாதத்தில் விரல் நகமானது சிவந்திருந்தால் நல்லது. நகம் பிளந்தாற் போலே இருந்தாலும் வெளிரியிருந்தாலும் துக்கமும் வறுமை யும் விளைக்கும் (எ-று.) (ங)

பெருவிரல் தனக்குச் சுட்டா விரலிடை யகன்ற பேதை
மருவிய சுற்றத் தாரை அகன்றுபோய் வாழ்தல் மெய்யே
பெருவிரல் தனக்குச் சுட்டா விரலிடை நீளு மாகில்
பொருகயற் கண்ணி கள்வி வாழ்வது பொய்மெய் யன்றே.

(எ-து) பெருவிரலுடனே பக்க அணி விரல் கூடாமல் அகன்றிருந்தால் உறவின் முறையாரைத் துறந்து போய் வாழ்வள்.[2] பெருவிரலுக்கு அணித் தாகிய விரல் நீண்டிருந்தால் கள்வியாவள் அல்லது வறுமையாவள் (எ-று.) (ச)

காற்பெரு விரலிற் சுட்டா விரலிடை நீளு மாகில்
காற்பெரு விரலே நீளிற் கணவனைப் பேணு மென்க
காற்பெரு விரல்தான் மேலே நோக்கினுங் கிளையோ டொட்டாள்
காற் பெருவிரலே நீளிற் காசினி வாழ்வில் லாளே.

(பா-ம்) [1] சன்னமாய். [2] உறவின் முறையாரை விட்டுத் தூரப்போய் வாழ்வள்.

(எ-து) கால் பெருவிரலுக்கு அணிவிரல் நீண்டால் கள்வி. கால் பெருவிரல் நீண்டால் கணவனைப் பேணும். கால் பெருவிரல் மேல் நோக்கி யிருந்தால் கிளையோடு ஒட்டாள்; புருஷன் வணங்குவன். நாலு விரலும் படிந்து பெருவிரல் மேல் நோக்கி யிருந்தால் சுற்றத்தாரை விட்டு வாழ்வாள் அல்லது சோர ஸ்திரீ [யாவள்] (எ-று.) (ரு)

(கலி விருத்தம்.)

நடுவிரற் கணிவிரல் நோக்கில் நன்றுறும்[1]
தொடுவது மணியொடு முத்தும் பொன்னிவை
வடுவிலா வுரைகளும் வாழ்வுண் டாகியே
முடியுடை அரசர்பால் முதல்வி யாகுமே.

(எ-து) பாதத்திலிருக்கிற நடு விரலுக்கு அணிவிரல் நீண்டிருந்தால் நல்லது. கனகாபரணம் தரிப்பள்; தர்ம சிந்தை உடையவள்; கீர்த்தி யுடையவள் (எ-று.) (சா)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

அணிவிரல் பூமி பாவா தாள்குணம் தீயா ளாகும்
பணையுமென் தோளினுள் போய்ப் பலருடன் கூடி வாழ்வாள்
இணைவரை யனைய திண்டோ ளிருவரை யிழந்து பின்னும்
தணிவில ளாகி மங்கை தான்பிறர்க் குரியா ளாமே.

(எ-து) அணி விரலானது பூமியிலே பாவாதிருந்தால் குண மில்லாதவளாயிருப்பாள். புருஷனைவிட்டுப் பிற புருஷனைக் கூடி வாழ்வாள் (எ-று,)

[குறிப்பு.—இருவரை இழந்து பின்னும் திருபதியுறாமல் பிறரை அடைவாள் என்றும் கூறுகிறது.] (எ)

புறவடி வற்றில் துன்ப மெய்திடும் பூமி தன்மேல்
உறவிலா தேயா தாகில் உற்றதோர் அறுதை யாகும்
நிறமொடு நிமிர்ந்து தோன்றி நீடிய நரம்பு பல்கித்
திறமது தோன்று மேனுந் திருவிலி யாகு மன்றே.

(எ-து) புறவடியானது வற்றித் தசை இல்லாமலிருந்தாலும் விரல் பூமியிலே பாவாதிருந்தாலும் வெள்ளாட்டியாவள். விரல் நிமிர்ந்தாலும் பாதத்தின் மேல் நரம்பு கதித்து இருந்தாலும் சோர ஸ்திரீ [ஆவள்] (எ-று.)

[குறிப்பு.—வெள்ளாட்டி என்றும் சோரஸ்திரீ என்றும், உரையில் காணப்படினும் மூலத்தில் முறையே அறுதை என்றும், திருவிலி அதாவது செல்வமில்லாதவள் என்றுமே உள்ளன.] (அ)

சிறுவிரல் பூமி பாவா தாயிடிற் செல்வ மில்லை
வறடகை எய்து மற்ற நாலது விரலு மண்மேல்
உறுதலை யில்லை யாகில் ஒண்டொடிக் கழுத்து நூல்போய்
அறுதலி யாகிக் கோளோ டணைந்தவ ளிருக்குந் தானே.

(எ-து) சிறுவிரலானது பூமியிற் பாவாதாகில் செல்வம் குன்றும்; பர புருஷனைத் தேடுவள். மற்ற நாலு விரலும் பூமியில் பாவாமல் இருந்தால் புருஷனை இழந்து அறுதலியாவாள் (எ-று.)

[வறடகை—வறள்தகை] (கூ)

(பா-ம்) [1] நன்றுகுமேல்.

ஒன்றினே டொன்று கூடா துயாதல்விட் டகல்வாள் தானே
துன்றிமேல் நோக்கிச் சாய்தல் குத்தலே யாகு மாதல்
ஒன்றின விரல்க ளுண்டே லிடர்தனக் காகி யின்பம்
அன்றியே பசியே யாதல் பட்டன விரண்டி லொன்றே[1].

(எ-து) கால் விரல் ஒன்றோடொன்று கூடாமல் இருந்தாலும் தன் வீட்டை நீத்து வாழ்வாள். விரல் மேல்நோக்கி யிருந்தால் வறுமை; சாகுதல்; விரல் குறுகியிருந்தால் குற்றம்; எந்நேரமும் விகார சிந்தையாய் இருப்பாள் (எ-று.) (ய)

வெள்ளடி யுடைய மாதர் மிக்கதோர்[2] களவு வல்லாள்
உள்ளடி மறுவுண் டானால் ஒன்றினர் போக்குண் டென்னும்
வெள்ளியல் மறுநல் மாதர் புறவடி மேல துண்டேல்
வெள்ளிடை யில்லை துன்பம் இனிதுடன் வாழு மன்றே.

(எ-து) உள்ளங்கால் வெளுத்திருந்தால் சோரமுண்டாவாள். உள்ளங் காலில் மறுவுண்டானால் புருஷனை இழப்பள். புறவடி மேல் மறுவுண்டானால் நல்லது. அந்த மறு வெள்ளையாயிருந்தால் செல்வம் உண்டு (எ-று.) (யக)

அருங்கயப் பேடாம் அன்னம் நடையவள் அரசி யாவள்
பெரும்பற ழென்னுங் கால்கள் பிளக்கினுங் காலு மேலும்
நரம்புகள் புடைக்கு மேனும் நடையினில் நொடிக்கு மேனும்
இரங்கிய வாழ்க்கை எய்தி எளியவ ராட்டி யாமே.

(எ-து) ஸ்திரீகள் நடக்கும்போது நடையுடை பாவனை அன்னம் போலும் நடந்தாளாகில் அரசியாவள். பெரும் பறழென்னுங் கால் நகம் பிளந்திருந்தாலும்[3] விரல் விடவிட யிருந்தாலும் புறங்கால் நரம்பு புடைத் திருந்தாலும் நடக்கையில் நெட்டை பறிந்தாலும் துன்பமாகிய வறுமையை அனுபவிப்பாள். எளியவர்க்குச் சிறியாளாய் இருப்பாள் (எ-று.) (யஉ)

நெட்டென நடக்கு மேனும் நீடிய அடிய ளேனும்
திட்டென நிலத்தில் வைக்கும் சீறடி யுடைய ளேனும்
ஒட்டிய சுற்ற நாசம் முதலவை உரைக்க லாகா
மட்டவிழ் கோதை தன்னை மனையிடை வைக்க வேண்டாம்.

(எ-து) பாதமானது திட்டென நடந்தாலும் அடிகள் நீண்டிருந்தாலும் நெட்டைகள் பறிந்தாலும் தன் மாதா பிதாவுக்கும் புருஷனுக்கும் தோஷம். நடக்கும்போது அடிகள் சிறுகியிருந்தாலும் அவளை மனையிடத்தில் வைக்கத் தோஷம் (எ-று.) (யங)

மேனிய வரிசை யாகி மெல்லிய கணைக்கா லாகி
மானினம் நோக்கி தானே மங்கலக் கழுத்தி யாகும்
ஊனென்ற நோக்கி தாளில் ரோமங்கள் இல்லை யாகில்
தேனென்ற சொல்லி செல்வம் திருமக ளாகு மன்றே.

(எ-து) கணைக்கால் சிறுகி ரோமங்கள் இல்லா திருந்தால் உத்தமம். திண்ணியதாயிருந்தால் செல்வம் (எ-று.) (யச)

(பா-ம்) [1] படவீராண்டிலன்றே. [2] மீகதோர். [3] வெளுத்திருந்தால்.

ஐயவாய் மயிர்கள் புற்கென் றழகுறு கணைக்கா லாகிச்
செய்யவாய் விரல்க ளொப்ப உகிர்களும் வெளுக்கு மாகில்
நையுமாம் போக மின்றி நலந்திகழ் செல்வ மின்றி
வெய்யவேல் விழிய கண்ணாய் விதவையாய் விடுவ ளன்றே.

(எ-து) பாதமானது செவ்வையா யிருந்தாலும் பாதத்தின்மேல் மயிர் தோன்றினாலும் கணைக்காலில் மயிர் தோன்றினும் விரகதாபம் அதிகமா யிருப்பள். நகம் வெளுத்திருந்தாலும் ஐசுவரியம் இல்லாதவள் ; [விதவையாவள்] (எ-று.) (ரு)

காகத்தின் கணைக்கால் போன்று கருமயிர் கலந்து தோன்றில்
போகத்தைப் பெறுவ தில்லை பொறிப்புறங் காலு மஃதே[1]
சோகத்தைப் புணர்ந்து துன்பந்தொலைத்திடாள் தொழுத்தை யாகி
வேகத்தில் விதவை யாவள் வேறில்லை இவற்றி லன்றே.

(எ-து) காகத்தின் கால் போலவும் வற்றி மயிர்[2] தோன்றி யிருந்தால் மத்திமம். கணைக் காலில் மயிர் தெரியத் தோன்றினும் வெள்ளாட்டியாவள். மயிர் சோர்ந்து தோன்றினும் செல்வமில்லை ; கைம்பெண்ணாவாள் (எ-று.) (சு)

சிறுமுழந் தாள தாகிற் சீரிய செல்வி யாகும்
பெருமுழந் தாளும் பொல்லாக் குறங்கினில் ரோமம் நீளில்
வறுமையே யுழக்கும் வாழைத் தண்டெனத் திரண்டு நேயம்
பெருமை நீள் திருவுண் டாகிப் பெருஞ்செல்வி யாகு மன்றே.

(எ-து) முழங்கால் முழி முனை சிறுகியிருந்தால் ஐசுவரியம் உள்ளவள். அல்லது பெருத்திருந்தால் செல்வமில்லாள். வறுமை[3] என்னவும். தொடை பருத்துப் பட்டையாயிருந்து மயிர் நீண்டிருந்தால் அமங்கிலி யாவாள். வாழைத் தண்டு போன்ற குறங்காகிற் செல்வஞ் செல்வி யாவாள் (எ-று.) (எ)

(கலி விருத்தம்.)

அங்க மாழ்ந்து அரசிலை யொத்தெழச்
சிங்கை யன்றிச் சிவந்துதெள் ளெள்ளெனக்
கொங்கை மாதர்க் கிவைதனி லுண்டெனில்
சங்கு பத்மம் தடங்கையிற் செல்லுமே.

(எ-து) அல்குலானது தொடைக்குள்ளாக ஆழ்ந்து குய்யம் அகன்று அல்குல் அரசிலைபோல் அழகொத்துச் சிவந்து[4] மயிர் நுண்ணிதாய் இருந்து மயிர் எள்ளுப் பதித்தாப் போலும் இருந்து சிவந்தும் இருந்தால் சங்கநிதி பதும நிதி அவளிடத்திலே வாசமாக இருக்கும் (எ-று.) (அ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

பற்றிய அல்குல் தன்னில் மயிர்களும் பரிய வாகி
உற்றதோர் உறுப்புக் குன்றி உழையடி யனைய வாகில்
பெற்றவள் வறுமை யெய்திப் பெருந்துய ருழக்கு மென்றும்
மத்தனார் கருத்தி னாலே மாதரை யொழிக்கு மன்றே.

(பா-ம்.) [1] மாதே. [2] பொறி. [3] விதவை. [4] அழகாய்ச்சிவந்து.

தேய்ந்ததோர் துடியே போலும் மருங்குதான் சிறுகித் தோன்றி
வாய்ந்ததோர் தட்டம் போலும் வயிறுகொப் பூழு மாழ்ந்து
ஆய்ந்தநீர்ச் சுழியே போலும் அவயவம்[1] வலம தாகில்
வேந்தனுக் கரசி யாகி இனிதுவீற் றிருக்கு மன்றே.

(எ-து) இடையானது டமருகம் போலவும் சிறுகியிருந்தால் நல்லது. தட்டம் போன்ற வயிறதாகித் தொப்புள் வலஞ்சுழி போன்றிருந்தால் ராசாவுக்குப் பிரியமானவள் ஆவாள் ; அரசியாவாள் (எ-று.) (உ௰ச)

புள்ளிமான் வயிறு போலும் வயிற்றினுள் பூமி யாளும்
வள்ளலைப் பெற்று வாழும் வயிறுதான் பரந்து தோன்றில்
ஒள்ளிய மகவு மில்லாள் ரோமங்கள் உறுத்துத் தோன்றில்
கள்ளவிழ் கூந்தல் மாது கணவனைச் சேர்க்கு மன்றே.

(எ-து) புள்ளிமான் வயிறு போலே இருந்தால் நல்ல மக்களைப் பெறுவாள். வயிறு பரந்து இடம்[2] கொண்டிருந்தால் புத்திரரில்லை ; மலடியாவாள். [ரோமம் நிறைந்திருந்தால்] பிற புருஷரைத் தேடுவள் (எ-று.) (உ௰டு)

புகலும்ஆல் இலைய தான வயிற்றினுள் பூமி யாளும்
இகல்புரி புதல்வர் தம்மை ஈன்றிடும் உதரந் தானும்
அகலுமேல் புதல்வர் தாமும் அர்ப்பமா யிடும்மேல் துற்ற
மிகமயிர் தோன்றில் கொண்ட மிகமணம் வீணி லாளே.

(எ-து) வயிறு ஆலிலை போன்றிருந்தால் பட்டத்தரசியாய் நல்ல குமாரர்களைப் பெறுவாள். வயிறு பருத்திருந்தாலும் மயிர்கள் நீண்டு தோன்றினாலும் சோரமாவாள் அல்லது பிள்ளையில்லை (எ-று.) (உ௰சு)

வலஞ்சுழித் தெழுந்த கொப்பூழ் உடையவள் வாழ்க்கை யெய்தும்
விலங்கொரு வரையுண் டாகில் மிகவும்வாழ் வகலும் மேலும்[3]
இலங்கிடப் புதல்வ ரீனு ளீதன்றிப் பரந்து தோன்றில்[4]
நலம்புனை புதல்வர்ப் பெற்று நல்குர வாட்டி யாமே.

(எ-து) தொப்புள் வலஞ்சுழியா யிருந்தால் பட்டத்தரசி. நல்ல சற்புத்திரனை அடைவள். வயற்றின் மேலே வரை யுண்டாகில் வாழ்வு அகலு மென்பது ; பிள்ளையில்லை. வயிறு நெடிதாகில் மக்களைப்பெறுவாள் (எ-று.) (உ௰எ)

இடையது பெரிய தாகில் இடரினுள் உழக்கு மென்றும்
இடையது சிறிய வாகில் இன்பமே எய்து மென்றும்
துடியிடை மடந்தை யாகிற் சொல்லரும் நன்மை முற்றும்
வடிவுடை மாதர் தம்மை வகுத்தவர் உரைத்த வாறே.

(எ-து) இடையானது பெருத்திருந்தால் வாழ்வு மத்திமம். இடை சிறுத்திருந்தால் செல்வமுண்டு (எ-று.) (உ௰அ)

(பா-ம்) [1] அவ்விடம்; [2] இடை; [3] அகலு மென்னும்; [4] உயர்ந்து தோன்றில்;

(எ-து) அல்குலிலும் குய்யத்திலும் மயிர் பரிசாகி - அடர்ந்திருந்தால் வறுமையாகிய துக்கத்தை[1] அநுபவிப்பாள். அல்குலானது அழகில்லாமல் மான் அடி போலவு மிருந்தால் மத்திம லட்சணம் (எ-று.) (௰௬)

முண்டகம் அனைய கொங்கை மொய்குழ லாகந் தன்னில்
தண்டுலம் பெரிய வாகித் தரணிமேல் நோக்கிச் செல்லக்
கொண்டவன் அகன்று வாழும் கோலஞ்சேர் மதிய மாகில்
வண்டுலாங் கோதை மாது வாழ்க்கையே பெருகும் மண்மேல்.[2]

(எ-து) குய்யத்து இரண்டு புறத்துத் தண்டும் பெரிதாகிப் பூவும் பெரிதாகி நீண்டு மேல்நோக்கி இருந்தால் கொண்டவனை விட்டு வாழ்வாள். பூவானது சந்திர வட்டம் போன்று சிறுகி யிருந்தால் செல்வத்தை அநுபவிப்பாள் (எ-று.) (௨௰)

வண்டுவாழ் கூந்தல் மாது மன்னிய தனது பீடத்
தண்டுலம் மதியம் போன்றால் தனமிக உடையா ளாவள்[3]
கொண்டவன் இனிது வாழுங் கோலஞ்செய் பெருமை யாகில்
தண்டிகைத் தூக்குப் போலும் இருக்கினுங் கலதி யாமே.

(எ-து) அல்குல் பூவானது சந்திரன் போல் வட்டமாய்க் கொஞ்சமாயிருந்தால் வெகு ஐசுவரிய முள்ளவள்; நல்லது. தண்டுலமாகிய பூ பரிசாய்த் தண்டிகை மூக்குப்போலும் சிவந்திருந்தால் தன்னுடைய புருஷனைத் தேடுவள். விரக தாபமே அதிகமாக யிருப்பாள் (எ-று.) (௨௰௧)

மல்லிகை கோங்கு நாவி மற்றவை போலும் நல்ல
சொல்லரும் நாற்ற மாகில் தொழுதெழு தேவி யாவள்
இல்லையோ சேறு நீறு போலவே நாறும் நேர்மை
புல்லிய போக மெய்திப்[4] பொறுதலி யாகு மன்றே.

(எ-து) குய்யமானது மல்லிகை, கோங்கு, நாவி இப்படிக் கொத்த வாசம் போன்றிருந்தால் மகாலட்சுமிகரம் உடையவள் என்னவும். சேறு அல் சுண்ணாம்பு நாறினால் துக்கத்தை அநுபவிப்பாள் (எ-று.) (௨௰

பணைத்தகன் றெழுந்த செல்வி கணைத்தவள் கணவ னோடே
இணைப்பிரி வின்றி வாழும் இரட்டிதாண் நீளு மாகில்
துணைப்பிரிந் தவமே யெய்தித் துக்கமே யுழக்கு மென்று
கணிப்புநூற் புலவர் வல்லோர் கண்டவா றுரைசெய் தாரே.

(எ-து) குய்யமானது பெருத்திருந்தால் கணவனை விட்டுப் பிரியாள். குய்யமானது நீண்டிருந்தால் [கணவனைப் பிரிவாள்;] துக்கமும் சோரமும் உண்டு (எ-று.) (௨௰௩)

(பா-ம்) [1] வறுமையையும் துக்கத்தையும். [2] வாழ்க்கையைப் பெருக்கும் மண்மேல்; [3] உடைய வாழ்வாள்; [4] யோகம் எய்தி.

கதித்தெழும் முலைகள் விம்மிக் கடினமாய்க் கண்கள் மெல்கில்[1]
அதிற்பெருந் துன்பமெய்தும் அகலிடந் தனதே யாகில்
விதித்தநற் சுணங்கு விஞ்சி மினுங்கிநின் றடங்கு மாகில்
மதிப்புடன் வாழ்க்கை யெய்தி அமங்கலக் கழுத்தி யாமே.

(எ-து) முலை வட்டம் போன்று கதித்து, முலைக்காம்பு பரந்து சுணங்கின் முலைபோல விழுந்தால் இடை நாளில் செல்வம் ; அமங்கிலியாவாள்[2] அல்லது செல்வம் குன்றும் (எ-று.)

[சுணங்கு—நாய். குட்டி போடும் சமயத்தில் நாயின்மடி பால் நிரம்பிப் பருத்திருக்கும் ; பாலூட்டுவது நின்றவுடன் மடிவற்றிப் பழையபடியே சுருங்கிவிடும்.] (உமகூ)

இடையகன் றிருக்கு மாகில் இடர்ப்படும் இருமூ வாண்டில்
கடைப்படும் கைம்பெண் ணாகும் கருமயிர் கலந்து தோன்றில்
புடைபரந் தவைய மெய்திப் புணர்முலை சுருங்கு மாகில்
துடைநல மில்லை தோகை துக்கமே யுழக்கு மன்றே.

(எ-து) இடை பருத்திருந்தாலும் ரோமம் நுண்ணிதா யிராமல் ரோமம் கதித்துப் பெருமயிராகில் ஆறு வருஷத்தில் கைம்பெண் ஆவள். தொடை பருத்திருந்தாலும் இடைநாளிலே கைம்பெண் ஆவாள். முலை சுருங்கியிருந் தாலும் கைம்பெண். தொடை அகன்றிருந்தாலும் துக்கமும் செல்வமும் குன்றும் (எ-று.) (நூம)

நெஞ்சமும் முலைகள் தாமும் முகத்தினுக் குயரு மாகில்
வஞ்சக மடந்தை யாகும் வற்றிய முலைக ளாளும்
தஞ்சநன் றென்றே டொவ்வா முலையினுள் தவறும் வாழ்வு
நஞ்சவள் அணைய வேண்டாம் நல்குர வாட்டி யன்றே.

(எ-து) நெஞ்சமும் முலையும் அவள் முகத்துக்கு உயருமாகில் சோரம் உள்ளவள். முலை ஒவ்வாமலும் நெருங்காமல் அகலினும் முலை சுருங்கினும் துக்கத்தை யுடையவள் (எ-று.) (நூமக)

நெஞ்சமும் முலையும் கூனும் நிமிர்ந்துநீண் டழக தாகில்
வஞ்சமில் வயிற்று மேலே மருங்குதா னுயரு மாகில்
அஞ்சலி பூமி யாளும் அரசியாய்ப் பட்டம் பெற்றுக்
குஞ்சரம் அனைய மக்கள் பெறுவது கொள்கை தானே.[3]

(எ-து) நெஞ்சமும் முதுகும் முலையும் நிமிர்ந்து நீண்டு அழகாயிருந் தாலும் வயிற்றின் பேரிலே நுண்ணிதாகிய ரோமமிருந்தாலும் பூமியாளும் ராசாவுக்குப் பாரியையாய் நல்ல மக்களைப் பெறுவள் (எ-று.) (நூமஉ)

நன்முலை நெருங்கித் தோன்றில் நல்கிடும் மக்கள் செல்வம்
மென்முலை நீங்கித் தோன்றில் மிகவுமோர் குற்ற மாகும்
வன்முலை மலடி யாகும் மார்பிடை யகன்ற பேதை
தன்முலை யணைந்த மைந்தர் தம்மையே தவிர்க்கு மன்றே[4].

(பா-ம்) [1] மெல்லாய். [2] சுபமங்கிலியாவாள். [3] கொள்கையாமே. [4] தவிக்கு மென்றே.

(எ-து) முலை நெருங்கியிருந்தால் மக்களைப் பெறுவாள். மார்பில் முலை இல்லாமல் இருந்தாலும் வெகுவாய்க் கண்டிருந்தாலும் பொல்லாதாம் (எ-று.)

[குறிப்பு.—'கொங்கைகள் நெருங்காமல் விலகியிருந்தால் குற்றமாம்; கடினமாக இருந்தால் மலடியாவள்; இடையகன்றிருந்தால் மக்களை இழப்பள்' என்றும் செய்யுளில் காணப்படுகிறது.] (௩௰௩)

தண்டுபோல் நெருங்கி நீண்டு தளருமோர் தையல் தன்னை
கொண்டவன் அகன்று வாழும் குலாவிய ரோமம் நீளில்
வண்டுவாழ் கூந்தல் மாதர் விதவையாய் மனையு மாகும்
பண்டையோர் மொழிந்த நூலின் பருமையால் பதிய தாமே.

(எ-து) முலையானது சுப்பல் போல் நீண்டு தளர்ந்திருந்தால் மத்திமம். ரோமவழியானது மயிர் கறுத்து நீண்டிருந்தால் இடைநாளிலே கைம் பெண்ணாவாள் (எ-று.)

[சுப்பல்—சுள்ளி]

(௩௰௪)

தானமங் கையில் தோளில் தளிர்தசை யொன்று மின்றி[1]
ஊனமே யுடம்பு தோன்றில் உண்மையே யாகு மென்ப[2]
ஈனமாம் வடிவ தேனும் இலங்கிய வியாதி யாகும்
தேனெனக் கோழி நெஞ்சு தீமையே[3] யாகு மன்றே.

(எ-து) கையிலும் தோளிலும் தசையில்லாமல் இருந்தால் மத்திமம். சௌந்தரியம் இல்லாமலிருந்தால் பொல்லாது. கோழி நெஞ்சு போன்றிருந்தால் மத்திமம் (எ-று.) (௩௰௫)

சினைக்கெளி றனைய வாகிச் சிவந்தகை செறிந்த வாக
மனைப்புல வாழ்க்கை யெய்தி மங்கலக் கழுத்தி யாகும்
அனைத்திடா விரலு மேலே அழுதுய ருழக்கு மென்றும்
தனித்தனி முனிவ ரெல்லாம் சாற்றினர் தார ணிக்கே.[4]

(எ-து.) கைவிரலானது செம்மையாய்ச் சினைக்கெளிறு போன்று உள்ளங்கை சிவந்திருந்தால் உத்தமம்; அல்லது விரலானது நீண்டு சிறுகியிருந்தால் பொல்லாது (எ-று.)

[சினைக்கெளிறு—ஒரு வகை மீன்; கெளுத்தி எனவும் படும்.] (௩௰௬)

தொக்கெனத் தோகை மாதர் தோள்திரண் டங்கை தன்னில்
சக்கரஞ் சங்கு வட்டம் தாமரை பதாகை தன்னை
ஒக்கநால் வரைக ளுண்டேல் உலகுடை ஒருவர்க் காகி
மக்களைப் பெற்று வாழும் மங்கலக் கழுத்தி யாமே.

(எ-து) தோள் திரண்டு கையானது தசையுடன் கூடியிருந்தாலும் உள்ளங்கையில் சக்கரம் சங்கு தாமரை பதாகை இது முதலானதும் இருந்தால் அரசியாய்ப் புத்திர சம்பத்தும் செல்வமும் உண்டு (எ-று.) (௩௰௭)

(பா-ம்) [1] யொன்று மிஞ்சி. [2] ஊனமே யாக மென்மை பகருமே யுடம்பு தோன்றில். [3] இன்மையே. [4] தரணியோர்க்கே.

கைவிரல் பயற்றங் காய்போல் கலந்திறைக் கருமை யின்றிச்
செய்யதா மரைய தாகில் திகழ்ந்திடும் வரைகள் நீண்டு
துய்யபூப் பொதிந்த வெள்ளைத் துகில்புனை நிறத்த வாகில்
வெய்யவேல் வேந்தர் தம்மால் விளங்கியே வாழு மன்றே.

(எ-து) கைவிரல் பயற்றங்காய் போலே அழகாயிருந்தால் இறை மழுங்கிச் சிவந்து தாமரைப் பூ விரிந்தாப்போலேயும் உகிரானது பவழம் போன்று இறையானது நீண்டு இறை மழுங்கியிருந்தால் வெகு செல்வம் உடைய அரசி யாவாள் (எ-று.) (௩௰அ)

கைவரை யாழ்ந்து நேர்மை உடையவள் கலந்து நீளில்
மைவரை திரண்ட கண்ணாள் மங்கலக் கழுத்தி யாமே
ஐவரை யைய மாகில் அவலமே யுழக்கு மென்றுங்
கைவரைக் குறிய தோன்றுங் கைம் பெண்ணே யாகு மன்றே.

(எ-து) கையில் வரை யழுந்தி மழுங்கினாற்போல் இருந்தால் வெகு நல்லது. வரை நீண்டிருந்தாலும் சிவந்திருந்தாலும் நல்லது. குறுகியிருந் தால் கைம்பெண் ணுவாள் (எ-று.) (௩௰௯)

அங்குசங் கும்ப மாலை அணிகள்குண் டலங்கள் மஞ்ஞை
பொங்கிய யாளி சங்கு புணரிதா மரைகள் போலே
அங்கையில் வரைகள் தோன்றில் அரசர்க்குத் தேவி யாவள்
மங்கைதான் களிறு போல மக்களைப் பெறுவா ளன்றே[1].

(எ-து) உள்ளங்கையிலிருக்கும் ரேகை அங்குசம் கும்பம் மாலை அணி குண்டலம் மயில் சங்கு சக்கரம் சமுத்திரம் தாமரைப் பூ இப்படிக்கொத்த ரேகை உண்டாகில் அரசர்க்குப் பாரியையாய்ச் செல்வியாய் நல்ல புத்திர சம்பத்து உண்டு (எ-று.) (௪௰)

மிக்கமாந் தளிரே போல விளங்கிய கொடுங்கை மீது
தக்கதா மரைப்ப தாகை தமருகம் புனைந்த தாரை[2]
ஒக்கநல்[3] வரைக ளுண்டேல் உலகினர்க் கொருவ ராய
மக்களைப் பயந்து தானும் மதிப்புடை மங்கை யாமே.

(எ-து) கையானது மாந்தளிர் போலவும் உள்ளங்கையில் மகுடம் தாமரைக்கொடி தமருகம் இப்படிக்கொத்த ரேகையுண்டாயிருந்தால் அரசி யாய் நல்ல புத்திரனைப் பெற்று வாழ்வாள் (எ-று.) (௪௰௧)

காண்டருங் கோதை மாது கழுத்துசங்கோ ரளவ தாக[4]
நீண்டது தாழ்வு[5] செய்யில் நிறைபெறும் செல்வி யாகும்
மீண்டுதான் குறுமை நேர்மை பெருமையென் றிவைகள் மூன்றும்
வேண்டிலார் உளவர் இந்நூல் வியந்தவ ருரைத்த வாறே.

(எ-து) கழுத்தானது சிறுகிச் சங்கு போன்றிருந்தால் வெகு உத்தமம்; அல்லது பருத்தும் குறுகியும் நேர்ந்தும் இருந்தால் பொல்லாது (எ-று.) (௪௰௨)

(பா-ம்) [1] பயக்கு மென்றே. [2] புனைந்தா ளாகில். [3] நால்.
[4] அழகிதாக. [5] தாழ்ச்சி.

கழுத்தழ குடைய மாதர் கலங்களங் குடையா ளாகும்
வழுத்திய ஆரம் பூண்டு மங்கலக் கழுத்தி யாகும்
எழிற்றிரு உடம்பு மிக்க போதினில் அகில்போல் நாறில்
தொழுதெழுந் தேவி யென்று சொல்லுவார் செல்வந் தானே.

(எ-து) கழுத்தானது அழகு பொருந்தி இருந்தால் ஆபரணம் பூணு வாள். கழுத்தானது அகில் வாசம் போன்றிருந்தால் மகாலக்ஷ்மிகரம் உண்டாம் (எ-று.) (சடுங)

முழுமதி அனைய வாகி முகத்தொளித் துப்புக் காட்டின்
எழுதரு ஞாயி றென்ன இலங்குதோள் திகழு மாகில்
பழுதிலா மக்கட் பேறும் பங்கய மடந்தை போலச்
செழுமலர்க் கோதை மாது திருமக ளென்ன லாமே.

(எ-து) முகமானது பூர்ண சந்திரன் போல, வட்டம் போன்று அருணப் பிரவேசம்போல் களை உண்டாகில் லக்ஷ்மிதேவி திருவுண்டாம். [நல்ல மக்கட் பேறும் உண்டாம்] (எ-று.) (சடுச)

நாவிதழ் எயிறு மூன்றும் ரத்தமே யின்றிக் கன்றில்
பாவியைச் சேர வேண்டாம் பருத்திதழ் தொங்கித் தோன்றில்[1]
மேவிய நன்மை யில்லை மிகத்திரண் டிரண்டு பாடுந்
தேவுடை இதழ தாகிற் சிறப்புடைச் செல்வி யாமே.

(எ-து) நாக்கு இதழ் எயிறு சிவந்திருந்தால் வெகு நல்லது. கறுத் திருந்தால் பொல்லாது. இதழ் பருத்துத் தொங்கியிருந்தால்[2] அந்தப் பாவியைச் சேரவேண்டாம். இதழானது சிறுகிப் பவழம் போன்றிருந்தால் உத்தமம் (எ-று.) (சடுரு)

நித்திலம் நிரைத்த போலும் நேரழ குடைய பல்லாள்
உத்தம மடந்தை யாவள் ஒளியின்றிக் கன்றி னாலும்
தெத்தலு மிரண்டு பல்லும் செறிவல்லாப் பெரும்பல் லாலும்
அத்தகு வறுமை யெய்தி அவலமே யுழக்கு மன்றே.

(எ-து) பல்லானது முத்துக்கோவை போன்றிருந்தால் செல்வி. ஒளி உண்டாகில் நல்லது. பல்லானது ஒளியில்லாமல் கறுத்திருந்தால் துன்பம். நுனிப்பல் பெரிதாய் உதட்டுக்கு மிஞ்சித் தோன்றில் மத்திமம் (எ-று.)

[குறிப்பு.—தெத்துப் பல்லானாலும், இரு வரிசையாயிருந்தாலும், நெருக்க மாக இல்லாமல் இருந்தாலும் வறுமையுண்டாகுமாம்.] (சடுசா)

நாக்குவாய் கரியா ளேனும் பல்லிடைச் சதையா ளேனும்
மூக்கினில் நெடுமை காட்டி முன்னுயர்ந் திருக்கு மாகில்
எற்கவிற் புருவங் கூடி[3] யிருக்கினுஞ் சுழிக்கு மேனும்
போக்கிடும் இவளை ஐயா புக்கிடம் பொடிசெய் வாளே.

(எ-து) நாக்கு, வாய், சிறுகரி தடவினாற் போலே இருந்தால் பொல்லாது. பல்லிடையில் சதை வளர்ந்திருந்தால் பொல்லாது; மத்திமம். (எயிறு) ஈறு

(பா-ம்) [1] பொங்கித் தோன்றில். [2] பொங்கி இருந்தால். [3] எற்கவே புருவம் கூடி.

உயர்ந்திருந்தால் மத்திமம். மூக்கு நீண்டு இருந்தாலும் உயர்ந்திருந்தாலும் கூர்மையாயிருந்தாலும் புருவங் கூடியிருந்தாலும் சுழித்து இருந்தாலும் மத்திம லக்ஷணம் (எ-று.)

[குறிப்பு.—இவளைக் கூடலாகாது ; புகும் இடத்தைப் பொடி செய்வாள் என்கிறது செய்யுள்.] (சுயஎ)

சிலைத்தமூக் குடையா ளாகில் தீயளாந் தணிந்த மூக்காள்
உலப்பிலா விடரை எய்தும் முடிபணி பணிந்த மூக்கே
சலித்தவள் பலரை நோக்குந் தகைவிலா ளாகில் மங்கை
வலித்திவள் குறுக வேண்டாம் வஞ்சக மனத்தி யாமே.

(எ-து) நுனிமூக்கு அகன்றிருந்தாலும் இரண்டு நாசியும் நெருங்கியிருக்கினும் மூக்கு சப்பையாய் இருக்கினும் இப்படிக்கொத்த மூக்குடையவள் பொல்லாத வஞ்சகமும் கோளும் உடையவள் (எ-று.) (சுயஅ)

காவியொத்[1] திரண்டு நீண்டு கடைசிவந் தகன்று கோல
மாவடு நோக்கி தானே மங்கலக் கழுத்தி யாவாள்[2]
பாவிய மாசு மட்டம் புரைக் கண்ணே வன்கண் தானும்
பாவியாம் பரித்த கண்ணே குழிக்கண்ணும் பாவி யாமே.

(எ-து) கண்கள் கடை சிவந்து நீண்டு அடிக்கண் சிறுத்து மாவடுப்போன்றிருந்தால் நல்லது. கண் வெளிரி மாசு மூடினும் புரைக்கண் போலிருந்தாலும் பூனைக்கண்போலிருந்தாலும் கண் பிரிந்து குழிக்கண்ணுமிருந்தாலும் மத்திம லட்சணம் (எ-று.) (சுயகூ)

பாலினில் சுரும்பு[3] வீழ்ந்து பதுமமே யனைய கண்ணுள்
கோலமா முகத்தை யேறக் குனிந்துமேல் விரித லன்றிச்
சாலவே கயல்கள்[4] தாமும் சரமெனும் போல வாகி
வேலென நீண்ட கண்ணுள் வேந்தனுக் கமிர்த மாமே[5].

(எ-து) கண்களானது பாலில் சுரும்பு[6] விழுந்தாற்போலவும் தாமரைப் புஷ்பம் போலவும் கண்கள் செவ்வரி படர்ந்து அம்புபோலவும் வேல் போலவும் நீண்டிருந்தால் அரசியாவாள் (எ-று.) (ருய)

வரிசிலைக் குனிவை யொத்த வரிகரி கீறிணற் போல
புருவமே யழகுண் டாகில் பூமக ளென்ன வாழ்வாள்
பருமயி ரோமங் கன்றிப் பாங்குகள் பயிலா வாகி
அரிமரைக் கண்ணி மாதர் யாவர்க்கும் ஆகா

(எ-து) புருவம் வில் வளைந்தாற்போலவும் கரிகீ
அழகுண்டாகில் உத்தமம். புருவத்தில் மயிர் மி
லாமலிருந்தாலும் யாவர்க்குமாகாது (எ-று.)

...பரிய ...ம், கோபி, (சூய)

(பா-ம்) [1] காவியொன்று. [2] மங்கலக் கிழத்தியா. [4] கண்கள். [5] அமுத மாமே. ...ர்வசாரஸில்.

அன்னம்போல் மழலைச் சொல்லாள் அறிவினால்[1] அரசி யாகும்.
தென்னவாங் குயில்மொ ழியாள் தேன்மொழி இருந்து வாழும்
மின்னுங்கார் மேக நேராள் விக்கலும் துக்க மாகும்[2]
இன்னஞ்சொல் கழுதை காக்கை இவர்க்கிறை இல்லை வாழ்வே.

(எ-து) குரல் தொனியானது அன்னம், கிளி, மயில் போலச் சின்ன மழலைச் சொல்போலிருந்தால் வெகு நல்லது. மேகம் குமுறுதல் போலவும் மின் சத்தம் போலவும் விக்கல் போன்றும் குரலானது பொல்லாது (எ.று.) (௫௰௨)

[குறிப்பு.—கழுதை, காக்கை போன்ற குரலானால் மிகவும் பொல்லாதாம்.]

வள்ளைதன் வடிவ தாகி வணங்கின மயிர்க ளின்றி
அள்ளிய குறும்பி நாற்றம் அளறுக வுடைய வன்றேல்
எள்ளிய சிறுவர்ப் பெற்றுப் பதியினை உடைய வாழ்க்கை
எள்ளிடர் போது மன்றி இனிதுடன் வாழு மன்றே.

(எ-து) வள்ளைத்தண்டு போன்ற காலில் மயிர்களில்லாமலும் குறும்பை நாற்றம் இல்லாமலும் இருந்தால் சற்புத்திரனையும் பதியையும் பெற்றுச் செல்வத்தை யனுபவிப்பாள் (எ-று.) (௫௰௩)

கரிவரிக் கண்ணி னுள்ளே முடமயிர் கலந்த கண்ணாள்
வரிநடுக் கண்ணி னுள்ளே வாலிய பூனைக் கண்ணாள்
வெருவுரு விழிக்கு மேனும் வெம்புலி தன்னைப் போலச்
செருவிடை விழித்த கண்ணாள் இவளுடன் சேர வேண்டாம்.

(எ-து) கண்ணுக்குள்ளே மயிரிருந்து தண்ணீர் வீழினும் பூனைக்கண்ணையிருந்தாலும் மெய்விழி போலிருந்தாலும் புலிக்கண் போலிருந்தாலும் அவளை மருவலாகாது; மறிதலையுண்டாம். அவளைச் சேரில் குற்றம் (எ-று.) (௫௰௪)

கண்ணொரு பாகம் நோக்கில் கணவனை விட்டுப் போவள்
திண்ணிய வட்டக் கண்ணாள் ஒளியுமென் திருவைப் போக்கும்[3]
மண்ணிய கயல்மா வைவா ளிகன்றன கண்ணாள் தானும்
பெண்ணினுள் பெரிது வாழ்ந்து பெருந்திரு வாட்டி யாமே.

(எ-து) ஒரு கண்ணை விழித்து ஒரு கண்ணை மூடிப்பார்த்தாலும் சாய்ப் ...வையாகிலும் புருஷனைவிட்டுப் பிரிவள்; அல்லது விபசாரியாவாள். ...ன் போலவும் வட்டக்கண்ணாகில் அறுதலியாவள். கயல்போலவும் ...போலவும் வாள்போலவும் கண்ணுடையாளாகில் ஐசுவரியம் ...-று.) (௫௰௫)

...ன மயிர்கள் நீளாக் கூந்தலாள் இவளை நாளும்
...ணிய வேண்டாம் மடைமறித் திட்டு வாழ்வள்
...ர்கள் சாலப் பெரியவாய்க் குறிய வாகில்
...டைய வாகில் முகடியாய் வாழு மன்றே.

---

[2] தென்மொழி திருந்தி வாழும் மின்னுங் காரனைய வாசை லுந் துக்க மாகா. [3] தெரிவைதன் தாலி மங்கும்.

(எ-து) கண்ணானது இல்லிக் கண்ணாகில் தலைமயிர் அழகில்லாமலும் சுருட்டையாயிருக்கிலும் வெகு சண்டாளி (எ-று.)

[முகடி—மூதேவி] (ருமகூ)

உதிரமே இறைச்சி ஊறல் ஒளிந்ததா துக்கள் போல
மதுரமே நாறு மென்று மரமலர் திகழு மென்றும்
மதிகறுத் திரட்சி யெய்தி மங்கலக் கழுத்தி யாகி
அதிபதி தனதே யாகி அரசியா யிருக்கு மன்றே.

(எ-து) தலைமயிர் இரத்தம் போலவும் மாம்சம் போலவும் நாற்றமானால் துக்கத்தை அனுபவிப்பள். மல்லிகைப் பூப்போலவும் நாறும் வாசம் போன்றிருந்தால் வெகு ஐசுவரியத்தை யுடைய அரசி ஆவாள் (எ-று.) (ருமஎ)

வேம்புகற் ருழை மற்றும் வெடிப்புடன் வேர்வை[1] நாறும்
தாம்புரம் நாறுமாகில் தையலைச் சேர்வொண் ணாது[2]
தேம்படு கமலப் போதில் திருமகள் சேர்ந்தி ராள்போய்ப்
பாம்பிவ ளெண்ணச் செல்வம் பையவிட் டேகு மன்றே.

(எ-து) ஸ்திரீகள் பேரில் வாசமாகிய மல்லிகை கோங்கு தாமரைப் பூ வாசனையாகில் அரசியாவள். வேம்பு கற்ருழை முதலிய வெடிப்புக்குறை நாற்றமானால் அவளைச் சேர்ந்தால் லக்ஷ்மிதேவி அவளிடத்திலே இருக்காள் (எ-று.) (ருமஅ)

நாவிகர்ப் பூர மற்றை நல்லகில் தென்னம் பாளை
காவிசேர் இலுப்பைப் பூவும் கழல்எலு மிச்சை தாழை
மேவிய வதுவை தம்போல் இருபுறம் நாறு மாகில்
தேவியித் திருவை யொத்துத் திகழ்பெருஞ் செல்வி யாமே.

(எ-து) ஸ்திரீகளுக்குச் சரீரம் வாசனைக் கர்ப்பூரம் புனுகு தென்னம் பாளை, மல்லிகை, இலுப்பைப்பூ, எலுமிச்சம்பழம், ஓலைப்பூ, தாமரைப்பூ இந்த வாசனையுண்டாகில் மகாலக்ஷ்மிகரம் உண்டாகும் (எ-று.) (ருமகூ)

அடிக்கடி நகைப்பா ளேனும் அணிகுழல் விரிப்பா ளேனும்
உடுத்துடுத் துரிப்பா ளேனும் உந்தியில் பெரியா ளேனும்
கடுக்கென நடப்பா ளேனும் கடுஞ்சொல்லிக் கோபி யேனும்
அடுத்தடுத் திவளைச் சேர்ந்தால் அறுமிடை யாகு மன்றே.

[அடிக்கடி காரணம் இல்லாமல் சிரிப்பவள், கூந்தலை அவிழ்த்து அவிழ்த்து முடிபவள், ஆடையை அடிக்கடி மாற்றி உடுப்பவள், பெரிய தொப்புள் உடையவள், கடுக்காக நடப்பவள், கடுஞ்சொல் பேசுபவள், கோபி, இத்தகைய பெண்கள் ஆகாது.] (சுய)

வேறு

குட்டைக் கைச்சி குறுவிரற்சி
    கூடும் புருவம் இருசுழிச்சி
சட்டச் செவிச்சி இவள்தன்னை
    சார்ந்த தாங்க ளாறுதனில்
வட்டத் திருக்க லட்சுமிபோம்
    வாரா நோயும் வந்தெய்தும்
சட்ட முடனே சொன்னேன்காண்
    தம்பிரான் ஆணை தப்பாதே.

(பா-ம்) [1] வெக்கை. [2] சேர்வசாகில்.

[குட்டைக் கை உடையவள், விரல் சிறுத்தவள், கூடும் புருவத்தாள், இருசுழி உடையவள், பெரிய காது உடையவள், ஆகிய பெண்களுடன் கூடினால் செல்வம் போம். நோயும் உண்டாகும்.] (கூ௧)

வேறு

காலினில் மயிரு மாகா கடியதோர் நடையு மாகா
மாலையுங் கண்க ளாகா வலச்சுழி மறுவுண் டாகில்
தோளதில் சிரசு பாய்ந் தெட்டிடில் கவிச்சு வீசில்
சாலவே இவளை நாளும் தழுவினால் உயிர்கள் போமே. (கூ௨)

[காலில் மயிர் உள்ளவள், வேகமாக நடப்பவள், மாலைக்கண் உள்ளவள், வலச்சுழி மறு உள்ளவள், தடித்த கழுத்து உள்ளவள், கவிச்சநாற்றம் வீசும் தேகத்தாள், இவர்களை மணக்கலாகாது.]

மூக்குநீண் டிருப்பா ளேனும் முகஞ்சுழித் திருப்பா ளேனும்
எக்கிய வயிற்று ளேனும் எரிநிறக் குஞ்சி[1] யேனும்
நாக்குவாய் கரியா ளேனும் நகம்பல வுடையா ளேனும்
போக்குநீ அவளை வேண்டாம் புக்கிடம் பொடிசெய் வாளே. (கூ௩)

[நீண்ட மூக்குடையவள், முகம் சுழித்திருப்பவள், எக்கிய வயிற்றுள், சிவந்தநிற மயிர் பெற்றவள், நாக்கு வாய் ஆகியவை கறுத்தவள், நகம் பிளந்தவள், இவர்களும் ஆகார்.]

பஞ்சில்மெல் லடியா ளாகில் பங்கய நிறத்தா ளாகில்
அஞ்சனக் கண்ணி னார்க்கு நன்மையாய் உலக மெல்லாம்
தஞ்சமென் றடியு ளத்துச் சாலவே அகலு மாகில்
நஞ்சிவள் அணைய வேண்டாம் நல்குர வாட்டி யாமே. (கூ௪)

[பாதம் பஞ்சுபோல் மென்மையாக உள்ளவள், தாமரை நிறத்தைக் கொண்டவள், நன்மை பொருந்தியவள். உலகம் அவளுக்கு வணங்கும். பாதம் பூமியில் பாவாமல் விலகியிருந்தால், அவளை மணக்கலாகாது; வறுமை உடையவள்.]

ஸ்திரீ லட்சணம் முற்றும்.

(பா-ம்) [1] எரிபலக் குஞ்சி.

குறுக்காக எழுந்து கண்டால் அவன் அநேகம் பேருக்குக் கர்த்தனுவன். இரண்டு நரம்பு தோன்றியிருந்தால் சற்குண புருஷனுவான். வெகுசாய் நரம்பு தோன்றினுல் வியாதியும் வறுமையும் உண்டு.

நெற்றியிலே மயிர் மிகுதியானுல் வெகு கபடியாவான். நெற்றியிலே மயிர் இல்லாமல் இருந்தால் பெருமையுண்டு.

புருவம்.

கண் புருவத்து மயிர் இரண்டு கடையிலும் சாய்ந்து கறுத்து மிருதுவாயிருந்தால் உலகாளுவான். புருவத்து மயிர் பருத்தால் பலம் உண்டு. கீழ்நோக்கியிருந்தால் வியாதியடைவான். கூடும் புருவமானுல் மாமன் மாதா பிதா மரணம்.

இமை.

இமை மயிர் நெருங்கித் தோகையுண்டானுல் செல்வமும் அழகும் உண்டு. இமை (மயிர்) ஒன்று சிறுத்து ஒன்று பருத்திருந்தால் வியாதி உடையவன்.

கண்.

கண் விசாலமாய்ச் செவ்வரியோடிச் சரியாகக் கடைக்கண் [கோவைப் பழம்போல்] சிவந்திருந்தால் உலகாளுவன். சிமிட்டுக் கண்ணுனுல் வெகு பெண்களை அணைவான். மாறுகண்ணுனுல் வறுமையும் பொய்யும் வரும். கண் சிறுவிழியானுல் ஆயுசுண்டு. கருவிழி மிகுதியுங் கறுப்பானுல் வெகு பெண்களை அணைவான். கண் தேன் நிறமாயிருந்தால் வெகு காம விகாரியாய்ப் பெருங் கபடியாயிருப்பான். கண் வெள்ளைக்கண்ணுனுல் கபடியுமாய் அஞ்சனவித்தை பார்க்கிறவனுவான். ஆனைக்கண்ணுனுல் பிறர் மனையாள் நாட்டமாயிருப்பான்.[1]

கண்மறு.

வலது கண்ணிலே வெள்ளை விழியிலே மறுவிருந்தால் புத்திக் கூர்மையாம். இடது கண்ணிலே வெள்ளை விழியிலே மறுவிருந்தால் காம விகாரியாய் நாலு சாமம் புணருவான்.

கண் பிறவிக் குருடானுல் அவன் பாவியாய் (மனத்தாபத்தை) வெகு துக்கத்தையடைவான். விழிக்கண் குருடானுல் மிஞ்சின துர்ப்புத்தியுடையவன் ஆவான்.

முகம்.

முகம் சிறு முகமானுல் அழகு உடையவனுவான். வதனம் சிங்க முகம்போலப் பருத்த முகமானுல் செல்வனுவான்; எல்லாருக்கும் அதிபனுவான்.

(பா.-ம்.)— [1] பூனைக் கண்ணுனுல் பிற மனையாளை நத்துவான்.

முகத்திலே மயிர் கறுத்துப் பருத்திருந்தால் செல்வமுண்டு. சிவந்திருந்தால் கபடியாவான். மிருதுவானால் அழகுண்டாம். சுருண்டிருந்தால் ஆண வார்த்தைகளைப் பேசுவான்; வார்த்தை செல்லும்.[1] மயிர் நெருங்கியிருந்தால் வெகு காமியம் உள்ளவனாவான். மயிர் அற்பமாயிருந்தால் அற்ப போகியாவான்.

மூக்கு.

மூக்கு உயரமாய் அவரவர் கையினால் நாலு[2] அங்குலமாய்க் குமிழம் பூப்போலே இருந்தால்[3] உலகாள்வான். மூக்கு அவரவர் கையினாலே மூன்று அங்குல மானால் செல்வமுண்டு; ஆயுசும் அழகும் உண்டாம். மிகுதியாய் நீண்டால் கடின போகம். குறைந்தால் அற்ப போகம். மூக்கு பருத்திருந்தால்[4] திரவியவானாவான். மூக்கு நடு தாழ்ந்தால் கபடியுமாய் வறுமையுமாவான். ஒரு புறஞ் சிறுத்து ஒரு புறம் பருத்திருந்தால் வியாதியாவான்.

மூக்கு நுனி நடுவே மறுவிருந்தால் சோரச்செலவு உண்டாவான். மூக்கு வலது புறத்திலே மறுவிருந்தால் செல்வமுண்டு. இடது புறத்திலே மறுவிருந்தால் வறுமையாவான். மூக்கிலே பிறவி வடுவிருந்தால் உலகாள்வான்.

வாய்.

வாய் அகலமானால் பிடித்தது விடான். வாய் சிறுத்திருந்தால் செல்வமுண்டு. வாய் சிவந்திருந்தால் அழகுண்டு. வாய் கறுத்திருந்தால் கபடு; மிகக் கறுத்தால் மிடியுண்டு.

வாயினுள்ளே சங்கு சக்கரமும் இரண்டு புறத்திலேயும் இருந்தால் உலகையாள்வான். சுவேதை[5] இருந்தால் ஞானமுண்டாம். கமலமிருந்தால் வித்வானாவான். உபயசாமரை யிருந்தால் தீர்க்காயுசும் செல்வமுமுண்டு. அங்குசமிருந்தால் வெற்றியுண்டு. குடை இருந்தால் செல்வமுண்டு; அரசும் உண்டு. பாம்புபோலே யிருந்தால் வறுமையுண்டு; கபடுமுண்டு.

குரல்.

வார்த்தை வலுவானால் முன்கோபி யாவான். கபடில்லை. வார்த்தை மெதுவானால் கபடுடன் குணமுண்டு. கீழ்க் குரலானால் கபடஞ் செய்வான்; செய் நன்றி கொல்லுவான். பிறவி ஊமையானால் பாவியாய்க் கபடியாவான்.

தாழ்வாய் (மோவாய்).

மோவாய் (தாழ்வாய்) பருத்து இரண்டாகப் பிரிந்திருந்தால் கபடியாவான். ஒன்றாயிருந்தால் செல்வம். தாழ்வாயிலே வலஞ்சுழியிருந்தால் நல்ல பொசிப்பு உண்டு. இடஞ்சுழியானால் வறுமை. தாழ்வாயின்

(பா.-ம்.)—[1] வார்த்தை சொல்ல வல்லவன். [4] பதிந்திருந்தால்.
[2] மூன்று அங்குலம். [5] சுவேதம்; வேலாயுதம்.
[3] குமிழானது பூப்போலிருந்தால்.

கீழே ஒரு சுழி வலம்புரியானால் சுகபோசனம் உண்டு. இடத்திலே இடம் புரியானால் தலை வெட்டுப்பட்டுப் போம். வலத்திலே இடம்புரியானால் சில நாள் செல்வம், சில நாள் வறுமை. இடத்திலே வலம்புரியானால் உலகாள்வான். இரண்டுபுறத்துச் சுழியும் வலம்புரியானால் உலகாள்வான். இரண்டுபுறத்துச் சுழியும் இடம் புரியானால் வியாதியும் வறுமையும் உண்டு.

கன்னம்.

கன்னம் நெடுகியிருந்தால் கபடனாவான் [1]. ஒன்றுனால் செல்வமுண்டு. [உயர்ந்தால் நல்லது; சதைப்பற்றுக் கொண்டிருந்தால் செல்வம்; போகம் உண்டு. உலர்ந்திந்தால் துக்கம்.] இரண்டு கன்னத்திலும் வலம்புரிச் சுழியானால் வார்த்தை சொல்லவல்லவனாவான்; செல்லும். இடம்புரிச் சுழியானால் வறுமை உண்டு.

பல்.

பல் பருத்திருந்தால் திரவியம் சேதமாம்; வறுமை. சிறுத்தால் அழகுண்டு. நீக்குப் பல்லானால் மிகுதியும் காம விகாரியாவான்; ரதியும் [2] முந்திப்போம். தெத்துப்பல்லானால் வித்தையுண்டாம்; அழியும். சொத்தைப்பல்லானால் வியாதியுடையவனாவான். பல்லு பழுப்பானால் மனசு கிலேச முண்டு. மேல் வாயிலே தான் கீழ் வாயிலே தான் நடுவே ஒரு சிறு பல் இருந்தால் புத்திரரும் வெகு செல்வமும் உண்டு; புத்தி மானாவான் [3].

உதடு.

அதரஞ் சிறுத்தால் அழகும் செல்வமும் உண்டு.

காது.

காது மேல்செவி அகலமானால் முன்கோபி ஆவான். காது குறுகி யிருந்தால் செல்வமுண்டு. மேல்செவி உள்ளே மடங்கியிருந்தால் கபடனாவான். உள் செவி பருத்திருந்தால் வறுமையுண்டு. உள் செவி வலம் புரிபோலே யிருந்தால் உலகையாள்வான். செவியின் மேல் மயிர் கறுத்துப் பருத்து நெருங்கியிருந்தாலும் மேல் நோக்கியிருந்தாலும் சவுரியவானாவான். கீழ்நோக்கி யிருந்தால் வறுமை; மிடியுண்டாம்.

கழுத்து.

கழுத்து அவரவர் கையினாலே நாலு அங்குலமானாலும் பாடும் போது நரம்பு எழாமலிருந்தாலும் திரண்டிருந்தாலும் செல்வமும் அழகும் ஆயுசும் அரசும் உண்டு. நரம்பு கண்டு கட்டியிருந்தால் மிடியுண்டு. கழுத்து நெடுகியிருந்தால் வறுமையும் கபடும் உண்டு. அறக் குறுகினால் நினைத்த கருமம் முடியாது. பருத்தால் செல்வமுண்டு.

(பா.-ம்.)— [1] சம்பத்து உள்ளவன். [3] புத்தியில்லாதவனாய் இருப்பான்.
[2] இந்திரியம்; போகம்.

கழுத்திலே நாலு வரையிருந்தால் தீர்க்காயுசும் செல்வமும் உண்டு. மூன்று ரேகையிருந்தால் அழகும் ஆயுசுமுண்டு. இரண்டு வரையானால் கபடனுவான்; ஏகபோகனும். ஒரு வரையானால் நினைத்த கருமம் முடியாது. ஒரு வரையும் இல்லாதிருந்தால் மனக் கிலேசமுண்டு. செல்வமுண்டு.

பிடரி.

பிடரியிலே இரண்டு ரேகையிருந்தால் சுகபோசனம் உண்டு. பிடரி உயர்ந்திருந்தால் செல்வமுண்டாம். தாழ்ந்திருந்தால்[1] வறுமையுண்டாம்.

தோள்.

தோள்கள் இரண்டும் உயர்ந்தால் செல்வமுண்டு. தாழ்ந்திருந்தால் ஆயுசு உண்டு. சரியாயிருந்தால் அறிவுண்டு. தோள்கள் இரண்டிலும் மயிர் மிகுதியானுல் நினைத்தது முடியாது.

அக்குள்.

அக்குள் உயர்ந்தால் மயிர் சிறுத்துக் கறுத்துத் துர்க்கந்தமில்லாமலிருந்தால் உலகையாள்வான். துர்க்கந்தமாய்க் கற்ருழை நாற்றம் போலிருந்தால் வெகு காம விகாரியாவான். சுண்ணும்பு நாற்றமானுல் மிடியுண்டு. ஆனை மூத்திரம் போலும் எரிப்பு[2] நாற்றமானுல் அற்ப போகியாவான். இளநீர் வாசனையானுல் தீர்க்க போகியாம். தாமரைப் பூ வாசனையானுல் அநேகம் பெண்கள் சதா காலமும் அவனைக் கூடியிருப்பார்கள். அக்குள் மயிர் சிவந்து நெருங்கித் தாழ்ந்திருந்தால் வறுமையாய் அலைந்து திரிவான். ஒரு மயிரும் இல்லாமலிருந்தால் கோழிப் போகமாவான்[3].

கை.

கைகள் முழங்காலின் கீழே வந்து நீண்டால் வெகு செல்வமுண்டு. தீர்க்க ஆயுசும் அரசும் உண்டு. முழங்கால் மடிப்பிலே நின்ருல் செல்வம். முழங்காலுக்கு ஒரு விரலுக்கு மேலே நின்ருல் நல்ல போசனம் உண்டு. இரண்டு விரல் மேலே நின்ருல் சொல் செல்லும்[4]. மூன்று விரல் மேலே நின்ருல் ஆயுசும் அழகும் உண்டு. நாலு விரல் மேலே நின்ருல் அற்பமான செல்வம். அஞ்சு விரல்கொண்டு மேற்பட்டதெல்லாம் வறுமையுங் கிலேசமும் கபடும் உண்டாம். கை மிருதுவாய்த் திரண்டு மட்டிலே பருத்தால் அழகும் ஆயுசும் உண்டு. மெத்தப் பருத்தால் கிலேசம். முன் கை சிறுத்து இருந்தால் மிடியுண்டு.

கை விரல்.

சிறுவிரல் அணிவிரல் மட்டுமிருந்தால், இறைக்குச் சரியானுல் நூறு வயதிருப்பான். அணிவிரல் மேலிறை மேலே யிருந்தால் தொண்ணூறு வயதிருப்பான். அணிவிரல் மேலிறையிலே வந்தால் எண்பது வயது இருப்பான். நடுஇறையின் நடுவே சிறுவிரல் வந்தால் எழுபது

(பா.-ம.)—[1] உலர்ந்திருந்தால். [2] எருமை. [3] குக்குட போகமாம். [4] சோரச் செலவு உண்டு.

வயதிருப்பான். நடுவரையின் கீழ் வரையில் வந்தால் அறுபத்தைந்து வயதிருப்பான். கீழிறை நடுவே வந்தால் அறுபது வயது உண்டு. அதன் கீழ்ப்பட்டால் அற்பாயுசும் கிலேசமும் உண்டு.

உள்ளங்கை ரேகை.

உள்ளங்கை ரேகைகள் அற்ப சொற்பமாய்ச் சிவந்து சிறுத்து இருந்தால் செல்வமும் ஆயுசும் அரசும் உண்டு. கனத்திருந்தால்[1] துக்கம் உண்டு. வலது கையிலே சிறிது ரேகை சங்கு போலவும் சக்கரம் போலவுமிருந்தால் அந்தக் கையினாலே பலகாலமுந் திரவியம் வந்து பின்னையும் வாங்குகிற பேருக்கெல்லாம் கொடுக்கப் பண்ணும். வலது கையிலே மச்ச ரேகையிருந் தால் மிகுந்த செல்வமுண்டு; இறுகலா யிருப்பான். குடைபோலே யிருந் தால் விதரணமுண்டு. தமருகம் போலே யிருந்தால் புகழுடையவன்; மிகுந்த செல்வமுண்டு; இறுகலாயிருப்பான். சந்திரன் போலே யிருந்தால் வித்து வானவான். வாள் போலே இருந்தால் வீரியவனுவான். கும்பம்போ லிருந்தால் பெருமையுடையவனுவான். வெண் சாமரை போலிருந்தால் வெகு ஜனங்களுடன் கூடி வாழ்ந்திருப்பான். தாமரைப் பூ போலிருந் தால் எந்த நாளும் லக்ஷ்மி அவனிடத்திலே இருப்பாள். மாலை போலேயிருந்தால் எந்த நாளும் ஸ்திரீ போக முண்டாயிருப்பான். வேல் போலிருந்தால் வெற்றியுண்டாயிருப்பான். லிங்கம் போலிருந்தால் சிவ பக்தி, தேவதா பக்தி முதலானவையுண்டு. ரிஷபம் போலேயிருந்தால் வாகன முண்டு.

நடு மணிக்கட்டு தொடுத்து நடுவிரல் நுனி மட்டும் ஒரு ரேகை இடையறுது இருந்தால் முழுதும் ஞானவானுவான். அது நடுவிரலடியிலே வந்தால் வித்துவானுவான். அது சிறுவிரல் அடியிலே வந்தால் செல்வமுண்டு. அது அணிவிரலடியிலே வந்தால் ஆபரணம் பூணுவான்; கிலேசமுண்டு. அது சுண்டு விரலடியிலே வந்தால் காம விகாரியாவான்; சோரச் செலவு உண்டு; சொல்லும் செல்லும். அது பெரு விரலடியிலே வந்தால் அநேகம் பெண்களைப் புணருவான். அது நடு உள்ளங்கையிலே நின்றால் செல்வமும் பிள்ளைகளும் உண்டு. அந்த ரேகை இல்லாவிட்டால் முடவனும்.

உள்ளங்கையிலே ரேகைகளும் பருத்துப் புகை நிறமானால் மகா பாவி

விரல்களின் இறை.

பெரு விரலின் அடியிறையிலே சங்கிலி போலே ஒரு ரேகை யிருந்தால் வெகு தொழிற்படுவன்[2]. பெரு விரலின் நடுவிறை பலவானால் வெகு தானிய முண்டு ஒன்றுயிருந்தால் அலைந்து திரிவான். மேலிறை ஒன்றானால் பக்தன் ஆவான். பலவானால் கபடு உண்டு. மேலிறை மேலே வலஞ் சுழியிருந்தால் வெகு செல்வமுண்டு; இடஞ் சுழியாயிருந்தால் ஆயுசுண்டு. மடிப்பானால் வறுமையுண்டு.

சுட்டுவிரல் அடியிறை ஒன்றானால் வறுமையுண்டு. பலவானால் வெற்றி யுண்டு. நடுவிறை ஒன்றானால் சிக்கன முண்டு. பலவானால் விதரணம்

(பா.-ம்.)—[1] கறுத்திருந்தால். [2] பலராலும் தொழப்படுவான்.

உண்டு. மேலிறை ஒன்றுனால் வித்தை உண்டு. பலவானால் கபடுண்டு. மேல் வலஞ்சுழி யிருந்தால் உலகையாளும் மந்திரியாவான். இடஞ்சுழி யாயிருந்தால் புத்திமானவான். மடிப்பானால் ஆயுசுண்டு[1].

நடுவிரல் அடியிறை ஒன்றுனால் செல்வமுண்டு. பலவானால் துன்ப முண்டு. நடுவிறை ஒன்றுனால் வித்தை; பலவானால் ஸ்திரீ போகம். மேலிறை ஒன்றுனால் அற்ப போகமுண்டு[2]. பலவானால் வெகு போகமுண்டு[3]. மேலிறை மேலே வலஞ்சுழி யிருந்தால் நல்ல சுகபோசன முண்டு. இடஞ்சுழியானால் (நல்ல) பொசிப்பில்லை. மடிப்பானால் வீண் செலவுண்டு.

அணிவிரல் அடியிறை ஒன்றுனால் வெகு பூஷணமுண்டு. பலவானால் வித்தையுண்டு[4]. நடுவிறை ஒன்றுனால் அலைந்து திரிவான். பலவானால் இனங் களை ரட்சிப்பான். மேல்வரை ஒன்றுனால் சகல தேசங்களுக்கும் போவான். பலவானால் வெகு காமியாவான். மேலிறையின் மேலே வலஞ்சுழியிருந் தால் எல்லாருக்கும் உபகாரஞ் செய்வான்[5]. இடஞ்சுழியானால் வார்த்தை செல்லும்[6]. மடிப்பானால் கிலேசமுண்டு.

சிறுவிரல் அடியிறை ஒன்றுனால் கபடியாயிருப்பான். பலவானால் விஷகுணமுண்டு[7]. நடுவிறை ஒன்றுனால் அழகுண்டு. பலவானால் ஆயுசுமுண்டு. மேலிறை ஒன்றுனால் பிடித்தது விடான். பலவானால் ஏழையாயிருப்பான். மேலிறை மேலே வலஞ்சுழியிருந்தால் தீர்க்காயுசுண்டு. இடஞ்சுழியானால் பலன் உண்டு. மடிப்பானால் வெகு செலவுண்டாயிருப்பான்.

இடது கை பெண்களுக்கும் வலது கை புருஷருக்கும் பார்க்கவேண்டும். இடது கை புருஷர்களுக்கும் வலது கை பெண்களுக்கும் பார்க்க ஒண்ணாது.

கை லட்சணத்தில் சில பெண்களுக்கும் ஒக்கும்; புருஷருக்கும் ஒக் கும். இதிலே அளந்து பார்க்கிறது சில உண்டு. அதை இனி மேலே சொல்லுகிறோம்.

வலது கையிலே ஆறு விரலாகில் வெகு செல்வமுண்டு. இடது கையிலே ஆறு விரலாகில் மிடியுண்டாம்.

சிறு விரலின் கீழே கை யோரத்திலே ஒரு ரேகையிருந்தால் ஒரு விவாக முண்டாம். இரண்டுக்கு இரண்டு, மூன்றுக்கு மூன்று, நாலுக்கு நாலு, அஞ்சுக்கு அஞ்சு. அப்பால் எத்தனை ரேகையிருந்தாலும் களத்திரம் அல்ல; அவையெல்லாம் வைப்புகள் என்றவாறு. விவாகமில்லை என்றறிக.

பெருவிரல் அடியிறையின் கீழ் ரேகையுள்ள தெல்லாம் புத்திரரென்றிக.

(பா — ம.)—[1] வீண் செலவு உடையவனுவான்.
[2] அற்ப போசனம் உண்டு.
[3] யோகம் உண்டு.
[4] ஒன்றால் போகம் உண்டு. இரண்டானால் வெகு பூஷணம் உண்டு. பலவானால் வெற்றியுண்டு.
[5] யாவரிடத்திலும் உபசாரம் உள்ளவன்.
[6] அதிக வார்த்தையாடுபவன்.
[7] விகட குணம் உண்டு.

புறங்கை.

புறங்கை மிருதுவாய் உயர்ந்திருந்தால் செல்வமும் அழகுமுண்டு. நரம் பெழுந்தால் வறுமையுண்டு. மயிரெழுந்தால் இரக்கம் இல்லை; ஈதலில்லை. விரல் மிருதுவானுல் செல்வமுண்டு. உரத்தால் அழகுண்டு. குவிந்தால் காமவிகாரியாம்.

நகம்.

கைவிரல் நகம் மிருதுவானுல் செல்வம். உரத்தால் அழகு. குவிந்தால் காமவிகாரி.

நகம் விரிந்தால் அனுகூலம்[1]. சிவந்திருந்தால் செல்வமுண்டு. வெளுத்திருந்தால் மிடியாம். கறுத்திருந்தால் வியாதியாம்.

விரல்கள் மெல்லிசாயிருந்தால் அழகும் ஆயுசும் உண்டு. பருத்தால் திடம். நீண்டால் குணமுண்டாம். குறுகினுல் மிடியுண்டாம்.

முழங்கை.

முழங்கை மிகப் பருத்தால் செல்வமுண்டு; கபடியாவான். மிகச் சிறுத்தால் வறுமையுண்டாம். முன் கையில் உள்ள மயிர் சிறுத்துக் கறுத்தால் எந்நேரமும் பெண் போகமுண்டு. மயிர் சிவந்தால் வறுமையாம். மயிர் பருத்தால் பலன் உண்டு. சந்துகள் ஆழாமானுல் செல்வமுண்டு. எலும்பு தோன்றினுல் மிடியாம். நரம்பு தோன்றினுல் ஏழை; துக்கம்; உலைந்தவனுவான். முழங்கையிலும் சந்திலும் வலஞ்சுழி இருந்தால் விதரணம் உண்டு. இடஞ்சுழி இருந்தால் உலுத்தன். முழங் கைக்கு மேல் தோள்[2] மட்டும் மயிரில்லாமலிருந்தால் அழகுண்டாம். மயிர் எழுந்திருந்தால் மிடி[3].

மார்பு.

மார்பு அவரவர் கையினுல் இருபத்து நாலு அங்குலமாய் இரண்டு கட்கம் அளவு குறுக்கே[4] ஒரு ரேகை இருந்தால் எல்லோரும் வணங்க அரசாள்வான். மார்பு குறுகக் குறுகச் செல்வமும் அறிவுங் குறையும். மார்பில் மயிர் பருத்து நெருங்கினுல் வறுமையுண்டாம். சிறுத்து நெருங்கினுல் அழகுண்டு. மயிர் நுனி பிளந்திருந்தால் கபடனுவான். மார்பில் வலஞ் சுழியிருந்தால் வெகு செல்வமுண்டு. இடஞ்சுழியினுல் வறுமையுண்டாம். முலைக் காம்பு சிறுத்தால் அழகுண்டு. பருத்தால் வீரியம் விடாது; வியாதியுண்டாம்.

வயிறு.

வயிறு குடம்போலே தொந்தியாயிருந்தால் வெகு செல்வமுண்டு. பூசனிக்காய் போலே தொந்தியாயிருந்தால் மெத்தப் பொசிப்பன்[5]. வயிறு மிருதுவானுல் அனேகம் புத்திரருண்டு. கடினமானுல் மிகுதியும் பேசு

(பா.-ம்.)—[1] பிரிந்திருந்தால் அனுகூலமான பெண் பிரிந்து பின் பகையாகும்.
[2] தொப்புள்.
[3] விதரணமும் உடையவனுயிருப்பான்.
[4] கமுக்கட்டுக்கும் குறுக்கே.
[5] போசிப்பான்.

வான் ; பழிச் சொல் பெறுவான். வயிறு குளிர்ந்திருந்தால் வாத மு லான வியாதியே அடைவான். வயிறு வெதும்பி இருந்தால் பித்த சரீ மாய் வெகு காமியாவான். வயிறு உலர்ந்திருந்தால் [1] மூலாக்கினி அதி மாம். தொந்தி வட்டமானால் வியாதி. வயிறு குறுக்கே நீண்டிருந்தா மலடனுவான். தொந்தி மேலே அஞ்சு மடிப்பு இருந்தால் இரக்க முள்ள னுவான். நாலு மடிப்பானால் யாவரிடத்திலும் பகையுண்டு. மூன்று மடிப்பானால் அறிவுண்டு. இரண்டு மடிப்பானால் வெற்றியுண்டாம். ஒ மடிப்பானால் சுக போசனமில்லை. ஒரு மடிப்புமில்லாவிட்டால் அலைந்த திரிவான்.

தொப்புள்.

தொப்புளுக்கு நாலுபுறத்து மயிரும் தொப்புளைப் [2] பார்த்திருந்தால் செல்வமுண்டு. நாபி வலஞ்சுழியாயிருந்தால் அரசாள்வான். இடஞ் சுழியா யிருந்தால் வறுமையாவன். ஆழமா யிருந்தால் குணமுண்டு உயரமாயிருந்தால் திரவியங்கள் உண்டு.[3] கீழ்நோக்கி நீண்டிருந்தால வெகு பசியுண்டு.

விலா.

விலாப்பக்கம் நரம்பும் மயிரும் எழாமலிருந்தால் செல்வ முண்டு. நரம்பும் மயிரும் உண்டானால் வறுமையுண்டு. வலது விலாவிலே வலஞ்சுழியாயிருந்தால் ஸ்திரீபோகம் மிகுதியாயுண்டாம் ; இடஞ்சுழியானால் வியாதியாவான்[4] அல்லது பெண்டிழப்பான். இடது விலாவிலே வலஞ்சுழி யிருந்தால் இகழப்படுவான். இடது விலாவிலே இடஞ்சுழியிருந்தால் கீர்த்தி பெறுவான்.

முதுகு.

முதுகிலே மயிர் மிகுதியானால் தீரனுவான். மயிர் கொஞ்சமானால் பயங்கொள்ளி. மயிர் இல்லாமல் இருந்தால் [5] அழகுண்டு. முதுகு ஒன்றானால் [6] புத்தி மந்தனுவான். நடுவில் தாழ்ந்து முதுகு இரண்டானால் அழகும் ஆயுசும் வெற்றியும் உடையவன். முதுகு நடுவிலே ஒரு வலம் புரிச் சுழியானால் ஆயுசுண்டு. இடம் புரியானால் பாவியாவான். இரண்டு சுழி வலம் புரியானால் வெற்றியுண்டாம். இரண்டு சுழி இடம் புரியானால் காமவிகாரியாவான். ஒன்று வலஞ்சுழியும் ஒன்று இடஞ் சுழியுமானால் உலக மெல்லாந் திரிவான். மூன்று முதலாகப் பல சுழியிருந்தால் மிகுதியும் வறுமையுண்டு. ஒரு சுழியுமில்லாவிட்டால் மலடனுவான்.

லிங்கம்.

ஆண்குறி அவரவர் கையினாலே ஆறு அங்குலமானால் அழகும் செல்வமு முண்டு. ஏழு அங்குலமானால் அரசாள்வான். எட்டு அங்குலமானால் தீர்க் காயுசுண்டு. ஒன்பது அங்குலமானால் வித்தையுண்டு. பத்து அங்குலமானால்

(பா.-ம்.)— [1] சிறுத்திருந்தால். [2] மறைத்திருந்தால். [3] ஆழமாயிருந்தால் திரவியம் உண்டு ; உயரமாயிருந்தால் குணம் உண்டு. [4] விர்த்தி அதாவது க்ஷேமம் உடையவன். [5] மிகுதியானல். [6] கோணினல்.

பலம் உண்டு; இந்திரியம் நிற்கும். பதினொன்று அங்குலமானால் வறுமை யுண்டு. பன்னிரண்டு அங்குலமானால் வறுமையும் விசாரமும் வியாதியு முண்டு. பதின்மூன்று அங்குலமானால் வெகு பாவியாவான். கோசத்தின் பேரிலே நரம்பு கண்டால் வறுமை யுண்டு.

மணி.

மணி சிறுத்தால் இந்திரியம் நில்லாது. மணி பருத்திருந்தால் வெகு போகியாவான். நீண்டிருந்தால் முந்திப் பெண் பெறுவான். மணி பருத்து வட்டமாயிருந்தால் முந்தி ஆண் பெறுவான்.

தேன் வாசனையானால் செல்வமுண்டு. புலால் நாற்றமானால் வெகு புத்திரருண்டு. அழுகல் நாற்றமானால் வறுமையுண்டு. மணி சிவந்திருந்தால் எந்த நாளும் சுகம் உண்டு. கறுத்திருந்தால் துன்பமுண்டு. வெளுத்திருந்தால் அற்பமான செல்வம்; வியாதி யுண்டு.

சிறுநீர்.

சலம் விழும்போது ஒரு தாரையாய் வலம்புரியாய் விழுந்தால் உலகை யாள்வான். இடம்புரியாய் விழுந்தால் வறுமையுண்டு. சிதறி விழுந்தால் வியாதி யுண்டு. இது வெல்லாம் பதினாறு வயசுக்குமேல் பார்ப்பது. பெண்களுக்கும் உட்குறி பன்னிரண்டு வயதுக்கு மேல் பார்ப்பது.

இந்திரியம்.

வீரியமானது உதிரம்போலே நாறினால் நோவுஉற்பத்தி மிகுதியுமுண்டு. இளநீர் வாசனையானால் மிகுதியும் நல்லது. சுரிகுழல் வாசனைஉள்ளவன் சுக முண்டு. ஸ்திரீ வாஞ்சையுண்டு. சுண்ணாம்பு நாற்றமானால் வறுமையுண்டு. தாமரைப்பூ வாசனையானால் உலகாள்வான். சேறுபோலே நாறினால் மிகுதியும் பெண்டிழந்து போவான்; பாடு அழிந்துபோம். ஆசை தீரப் புணரவும் கிடையாது. வெள்ளை நிறமானால் அழகுள்ளவனாவான். மஞ்சள் நிறமானால் கபடனாவான். நீலம்போலேயானால் வார்த்தைகள் பேசுவான்; சொல்(ல) வல்லவன். வாழைக்காய்ப் பால்போலேயானால் அலைந்துதிரிவான். கஞ்சிபோலே யானால் பெண்யோனி பட்டவுடனே போகிக்கும்.

பீஜம்.

பீசமானது இரண்டும் ஒன்றைப் போலேயானால் அழகும் ஆயுசுமுண்டு. இரண்டு விரையும் பருத்து நீண்டிருந்ததானால் செல்வமுண்டு. சிறுத்து நீண்டிருந்தால் உலகையாள்வான். மிருதுவானால் அற்ப போகியாவான். கடினமானால் வெகு போகியாவான். வலது புறத்திலே குறைந்தால் வியாதியுண்டு. இடப்புறத்தில் குறைந்தால் கபடனாவான். விரை உருண்டிருந்தால் மலடனாவான். தட்டையாயிருந்தால் வெகு உற்பத்தியுண்டு. கழற்கொடி போலச் சிறுத்து உருண்டிருந்தால் அவனுடன் கூடின பெண்கள் பிரியமாட்டார்கள். வீசத்தில் மயிர் சிறுத்து அற்பமானால் செல்வமுண்டு; பருத்து நெருங்கினால் வறுமையுண்டு. வலத்தில் வலஞ்சுழியிருந்தால் உலகாள்வான். இடத்தில் இடஞ்சுழி யாயிருந்தால் செல்வமுண்டு. மாறு

பாடாயிருந்தால் வறுமை யுண்டு. வலது பீசத்திலே மறு விருந்தால் பிறர் மனையாளை அணைவான். இடது பீசத்திலே மறு விருந்தால் பெண்ணாசை யில்லை. சமானமாய் இரண்டும் பருத்துச் சரியொத்திருந்தாலும் மயிர் சிறுத்து அற்பமாயிருந்தாலும் உலகாள்வான். மயிர் பருத்து நெருங்கி யிருந்தால் செல்வ முண்டு. உலர்ந்து சிறுத்தால் வறுமையுண்டு.

சகனம் (கடிதடம்).

வலது சகனத்தில் வலஞ்சுழியிருந்தால் வெற்றியுண்டு. இடது சகனத்திலே இடஞ்சுழி யிருந்தால் ஆயுசுண்டு. மாறுனால் மிடியும் வியாதியும் உண்டு. வலது சகனத்திலே மறு விருந்தால் இருக்குமிடத்தில் இருந்து செல்வம் அனுபவிப்பான். வடுவிருந்தால் பலன் ஒக்கும்.

தொடை.

தொடை இரண்டும் உருண்டு இருந்து மயிர் சிறுத்துக் கறுத்துச் சுருண்டு அற்பமாயிருந்தால் செல்வமும் ஆயுசும் அரசும் உண்டு. மயிர் சிவந்தால் மிடியுண்டு. மயிர் பருத்தால் விகாரியாவான். நெருங்கியிருந்தால் கபடனு வான். மயிர் நுனி பிளந்திருந்தால் வறுமை யுண்டு. மயிர் இல்லாவிட்டால் அற்ப போகியாவான். வலது தொடையிலே மறு விருந்தால் நன்மையுடையவ னுவான். இடது தொடையிலே மறு விருந்தால் தீமையுடையவன். வலது புறத்திலே வலஞ்சுழியாயிருந்தால் உலகாள்வான். இடது புறத்திலே இடஞ் சுழியா யிருந்தால் செல்வமுண்டு. மாறுனால் அலைந்துதிரிவான்.

முழங்கால்.

முழங்கால் வட்டமானுல் அழகுண்டு. நீண்டிருந்தால் வறுமையுண்டு. தாழ்ந்திருந்தால் செல்வமுண்டு. உயர்ந்திருந்தால் வறுமை, வியாதி. முழங்காலிலே மயிர் மிகுதியானுல் உலைச்சல்[1] உண்டு. வலத்திலே வலஞ்சுழி யானுல் சுகமுண்டு. இடத்திலே இடஞ்சுழியானுல் அநேகம் பெண்கள்[2] வணங்குவார்கள். மாறுனால் மாதா பிதா மரணம்.

கணைக்கால்.

கணைக்கால் வரால் மீன் போலே யிருந்தால் உலகாள்வான். மயிர் சிறுத்துக் கறுத்து அற்பமானுல் செல்வமுண்டு. மயிர் பருத்து நெருங்கி யிருந்தால் காம விகாரியாவான். வலத்திலே வலஞ்சுழியாயிருந்தால் திரவியமுண்டு. இடத்திலே இடஞ்சுழியாயிருந்தால் வெற்றி யுண்டு. சிவந் திருந்தால் கிலேசமுண்டு. நுனி மயிர் பிளந்திருந்தால் அலைச்சலுண்டு. வலத்திலே மறு விருந்தால் அழகுண்டு. இடத்திலே மறு விருந்தால் மிடியுண்டு.[3]

பரடு.

கறடு தராசுத் தட்டுப்போலே இருந்தால் உலகாள்வான் ; நீண்டிருந்தால் அலைச்சல் உண்டு. பருத்திருந்தால் காமவிகாரம். நரம்பு கண்டால் வறுமை. மயிர் கண்டால் மாதா பிதா மரணம். மறு விருந்தால் பிதா மரணம்.

(பா-ம்.) [1] அலைச்சல். [2] பேர். [3] வலிமையுண்டு.

குதிக்கால்.

குதியானது பந்துபோலே இருந்தால் உலகாள்வான். வலது குதியிலே மறு விருந்தால் திரவியவானுவான். இடது குதியிலே மறுவிருந்தால் கபடனுவான்.

புறங்கால்.

புறங்கால் ஆமை முதுகு போலேயும் பொஸ்தகம்போலேயும் நடுவே உயர்ந்து மயிர் கறுத்துச் சிறுத்து அற்பமாயிருந்தால் உலகாள்வான். படம் போல் பதிந்திருந்தால் குரு ஆவான், அல்லது அரசனுவான். மயிரில்லாதிருந்தால் வறுமை யுண்டு. புறங்காலின் வலத்தில் வலஞ்சுழியிருந்தால் செல்வ முண்டு. இடத்தில் இடஞ்சுழியிருந்தால் (ஆம் என்ற வார்த்தை) ஆமென்பதை அல்லவென்பான். மாருனல் வல்லாண்மையுண்டு[1]. வலத்திலே மறு விருந்தால் தொடுத்தது முடியும். இடத்தில் மறு விருந்தால் நினைத்தது முடியாது.

உள்ளங்கால்.

உள்ளங்கால் மிருதுவாய்ச் சிவந்துஇருந்தால் அற்ப காரியத்துக்கும் அஞ்சுவான். நடுவே குறுக்கே எறும்புபோக இல்லாமல் நல்ல ரேகை உண்டானுலும் உலகாள்வான். உள்ளங்கால் நிலத்திலே பதிந்திருந்தால் செல்வம். கடினமானல் துன்பம். மிருதுவானல் உலகாள்வான். வலப்புறத்திலே மறுவிருந்தால் ஆயுசுண்டு. இடப்புறத்திலே உள்ளங்காலில் மறு விருந்தால் அலேச்சலுண்டு.

உள்ளங்கால் ரேகை.

உள்ளங்காலில் சங்கு சக்கரம் இருந்தால் உலகாள்வான். தாமரைப்பூ போலே ஒரு ரேகையிருந்தால் வித்தையுண்டு. குடைபோல் இருந்தால் நன்மை. கொடிபோல் இருந்தால் ஆயுசு விருத்தி. யாளிபோலே[2] இருந்தால் வெகு செல்வமுண்டு. மாலேபோலே ரேகையிருந்தால் வெகு செல்வம்.[3] தமருகம் போலிருந்தால் வெல்லும்சொல்லே யுடையவன். கும்பம் இருந்தால் பலம் உண்டு. மத்தளம் போலிருந்தால் கீர்த்தியுண்டாம். வாள் போலேயானல் பலனுண்டு; தீரனுவான்.[4] சாமரைபோல் ரேகையிருந்தால் பெண் போகம் தினமுமுண்டு. சந்திரன் போலேயிருந்தால் புத்தியுண்டு. மச்சம் போலிருந்தால் திரவியமுண்டு. சிவந்திருந்தால் செல்வமுண்டு. கறுத்திருந்தால் வறுமையுண்டு.

குதிக்கால் தொடுத்து ஒரு ரேகை நுனி விரல் மட்டும் நடுவில் அருதிருந்தால் அவன் மிதித்த இடமெல்லாம் செல்வமேயாகும். குறுக்கே ஒரு ரேகையும் நெடுக்கே ஒரு ரேகையும் புள்ளடிபோலே யிருந்தால் மிதித்த இடமெல்லாம் குட்டிச் சுவராய்ப் போய் விடும். இரண்டு புள்ளடி போலே யிருந்தால் அவன் முகத்திலே விழிக்க ஒண்ணுது. கட்டில் போலே நாலு ரேகை யிருந்தால் வெகு சனங்களை ரக்ஷிப்பான்.

(பா-ம்.) [1] வறுமை. [2] யானேபோலே. [3] யோகியாவான். [4] திரவியனுவான்.

கால் விரல்.

இரண்டு கால் விரல்களும் பெருவிரல் தொடுத்து அஞ்சுவிரலும் ஒன்றுக் கொன்று குறைந்து சிறுத்திருந்தால் உலகாள்வான். பெருவிரல் குறுகி[1] அடுத்த விரலும் நீண்டிருந்தால் சோரச் செலவு உண்டு. சிறு விரலும் அதுக்கு அடுத்த விரலும் நீண்டிருந்தால் பழியுடையவன். விரல்கள் நெருங்கியிருப்பவன் திரவியவானுவான்; அலக்கலக்காயிருந்தால் பணம் சேராது. வலது காலிலே ஆறு விரல் இருந்தால் வெகுசெல்வம். இடது காலிலே ஆறு விரல் இருந்தால் அலைச்சல். விரல்களிலே மயிர் நெருங்கி யிருந்தால் திரவியம் சேரும். விரல்கள் ஒன்றன்மேலொன்று குன்றிலேறினுல் போலே இருந்தால் வறுமையாவான். பெருவிரலுக்கு அடுத்த விரல் மிகுதியும் நீண்டிருந்தால் வெகுபூஷணமுண்டு. நடுவிரல் நீண்டால் வயது நூறுண்டு. விரல்கள் சுருண்டிருந்தால் செல்வமுண்டு. வலது கால் பெரு விரலிலே வலஞ்சுழியா யிருந்தால் உலகாள்வான். இடஞ்சுழியா யிருந்தால் அலைந்துதிரிவான்.

கால் விரலில் மறு.

வலதுகால் பெருவிரலிலே மறு விருந்தால் அரசனுவான். இடதுகால் பெருவிரலிலே மறு விருந்தால் செல்வம் உண்டு. மற்றவிரல்களில் மறு விருந்தால் வறுமை. வலதுகால் பெருவிரலிலே மயிராதல் மறுவாதல் குமிழ் மறு வாதல் ஒத்தமறுவாதல் வலஞ்சுழியாதல் இருந்தால் உலகாள்வன். இடஞ்சுழி இருந்தால் அதிக சம்பத்து உடையவனுவான். [2]மற்ற விரல்களிலே வலஞ்சுழியாயிருந்தால் செல்வம். இடஞ்சுழியிருந்தால் பொருள் சேரும். இடதுகால் பெருவிரலிலே இடஞ்சுழி இருந்தால் தொடுத்த காரியம் முடியும். வலஞ்சுழி இருந்தால் ஈனரிடத்திலே நடக்க வேண்டும். மற்ற விரல்களிலே இடஞ்சுழி இருந்தால் நினைத்தது முடியும். வலஞ்சுழியானுல் காமவிகாரி யாவான். மூன்று வகை மறுக்களும் காலில் விரல்களிலே இருந்தால் செல்வமுண்டு.

மறு (மச்சம்).

உள்ளங்காலிலே வலத்திலே நடுவே ஒரு மறுவிருந்தால் வயது நூறுண்டு. இடத்திலே இருந்தால் பாவம் பண்ணுவான்.[3] புறங்காலில் வலத்தில் நடுவே மறு விருந்தால் நினைத்தது முடியும். இடது புறங்காலில் நடுவே மறு விருந்தால் மிடியுண்டு; நினைத்த காரியம் முடியாது. கணுக்காலில் வலத்தில் மறுவிருந்தால் அழகுண்டு. இடத்தில் மறு விருந்தால் மிடி யுண்டு. வலது முழங்காலிலே மறு விருந்தால் செல்வம். இடது முழங் காலிலே மறு விருந்தால் அலைச்சல்.

வலது தொடையில் மறு விருந்தால் நன்மை. இடது தொடையில் மறு விருந்தால் தீமை. வலது சகனத்தில் மறுவிருந்தால் செல்வமுண்டு. இடது சகனத்தில் மறு விருந்தால் அலைச்சல் உண்டு; செல்வமுண்டு. வலது பீசத்தில் மறு விருந்தால் பிறர் மனை நோக்குவான். இடது பீசத்தில் மறு விருந்தால் பெண்ணுசையில்லை. கோசத்திலே மறு விருந்தால், நடுவாக

(பா-ம்.) [1] பெருவிரலுக்கு. [2] அலைவான். [3] நல்லது.

இருந்தாலும் வலது பக்கத்திலிருந்தாலும், பெண் போகத்தில் எந்நேரமும் மனசாயிருப்பான். இடது பக்கத்தில் மறு விருந்தால் பெண்பேரில் மனசு இல்லாமலிருப்பான் ; ஞானம் உள்ளவனுக இருப்பான்.

முதுகு நடுவிலே மறு விருந்தால் உலகையாள்வான். வலது புறத்தில் மறு விருந்தால் செல்வமுண்டு. இடது புறத்திலிருந்தால் வறுமையுண்டு. இடது விலாவிலே மறு விருந்தால், போகமில்லை. வலது விலாவிலே மறு விருந்தால் வெகு போகமுண்டு.

வலது புறம் தொப்புளில் மறு விருந்தால் வெற்றியுண்டு. இடதுபுறம் தொப்புளில் இருந்தால் சோறு கிடையாது. நடுத் தொப்புளிலே மறு விருந்தால் உலகாள்வான்.[1] வலது புறம் வயிற்றில் மறு விருந்தால் செல்வம். இடதுபுறம் வயிற்றிலே மறு விருந்தால் வயிற்றில் வியாதியுண்டு. நடுவயிறு மறுவாஞல் கபடியாவன்.

வலது மார்பில் மறு இருந்தால் உலகாள்வான் ; செல்வம். இடது மார்பில் மறு செல்வமும் பழியும் உண்டு. வலது முலையில் மறு இருந்தால் கூடின பெண் பிரியமாட்டாள். இடது முலையில் மறு சுகபோகன முண்டு ; போசனத்தில் வெறுப்பு. வலது தோளில் மறு வெகு செல்வமும் வெற்றியும் உண்டு. இடது தோள் மறு திரவியம் சேதமும்[2] பயமும் உண்டு. வலது முழங்கை மட்டும் உள்ள மறு வசீகரம் உண்டு. இடது முழங்கைமட்டும் உள்ள மறு பகை உண்டாகும். வலது முன்கை மறு செல்வம். இடது முன்கை மறு வலிமை. வலது உள்ளங்கை மறு விதரணம் உண்டு. இடது உள்ளங்கை மறு வறுமை.

வலக் கைப் பெருவிரலிலே மறு விருந்தால் ஞானமுண்டு. வலது சுட்டு விரலிலே மறு விருந்தால் அறிவுண்டு. வலது நடுவிரலிலே மறுவிருந்தால் தீர்க்காயுசுண்டு. அணி விரலிலே மறுவிருந்தால் பூஷணமுண்டு. சிறு விரலிலே மறு விருந்தால் புத்திரருண்டு.[3] இடதுகைப் பெரு விரலிலே மறு விருந்தால் பாவமுண்டு. சுட்டு விரலில் மறு விருந்தால் புத்தி மந்தமாம். நடுவிரலி லிருந்தால் அற்பாயுசு. அணிவிரலி லிருந்தால் வறுமையுண்டு. சிறுவிரலி லிருந்தால் மலடனுவான். வலது புறங்கையிலே மறு விருந்தால் பெருமையுண்டாம். இடது புறங்கையில் இருந்தால் கிலேசமுண்டு.

இடது அக்குளில் மறு விருந்தால் வெகு கபடனுவான்.[4] வலது அக்குளி லிருந்தால் விதரண முண்டு ; செல்வமுண்டு. வலது கழுத்தில் மறு விருந் தால் எந் நேரமும் ஸ்திரீ போகமுண்டு. இடது கழுத்தி லிருந்தால் ஸ்திரீ போகம் கட்டுப்பட்டுப்போம் ; உண்டாஞல் அற்பமாம்.

வலது கன்னத்தில் மறு விருந்தால் வெகு செல்வம் ; சம்பத்து உண்டு.[5] இடது கன்னத்திலிருந்தால் வறுமையுண்டு. இடது தாழ்வாயில் மறு விருந் தால் மனக்கிலேசம் உண்டு. வலது தாழ்வாயிலிருந்தால் பெண்போகமுண்டு. நடுத்தாழ்வாயில் மறுவிருந்தால் தீர்க்காயுசு உண்டு. கீழ் அதரம் வலது புறத்தில் மறு விருந்தால் சுகபோசனமுண்டு. இடதுபுறம் மறு பொசிப்புக்

(பா-ம்.) [1] வறுமை. [2] செல்வமும். [3] நன்மையுண்டு. [4] கள்ளன் ஆவான். [5] அலேச்சல் உடையவன்.

கிடையாது. நடு மறு வெகுபோசனமுண்டு. மேல் அதரத்தில் வலது புறத்தில் இருந்தால் சோரச் செலவு உண்டு. இடது புற மறு தூஷணம் சொல்லப்படும். நடு மறு நினைப்ப தொன்றும் சொல்லுவதொன்றுமாகப் பண்ணும்.

மேல் காதுக்கும் கீழ்க் காதுக்கும் நடு ஓரங்களில் மறு விருந்தால் வெகு போசனமுண்டு. இடதுபுறம் முகத்தில் மறு விருந்தால் துன்பமுண்டு. வலதுபுற முகத்திலிருந்தால் வெகு போசனம் பண்ணுவான். சம்பன்ன னுவான்.

மூக்கில் வலதுபுறம் மறு செல்வம். இடதுபுறம் மறு வறுமை. நடு மறு சோரச் செலவு. மூக்கு முன்னே நுனியிலே மறு விருந்தால் புத்தி மானுவான். மூக்குத்தண்டு மேலேயிருந்தால் வெகு செல்வமுண்டு. இடது புறம் குவளை யோரத்திலே மறு விருந்தால் நினைக்கிறது ஒன்றும் சொல்லுவ தொன்றுமாகப் பணணுவான்.

வலது கண் வெள்ளை விழியிலே மறு விருந்தால் புத்திமான்; சோரச் செலவுண்டு. இடது கண் வெள்ளை விழியிலே மறு விருந்தால் வெகு காமி யாவான். வலது புருவம் மறு நல்ல பெண்களைக் காணப்பண்ணும். இடது புருவத்தில் மறு பொல்லாததைக் காணப் பண்ணும். புருவமத்தியில் மறு மிகுந்த வார்த்தை உண்டாகும்.

நெற்றியில் வலது புறத்தில் மறு விருந்தால் செல்வமுண்டு. இடது புறத்தில் மறு விருந்தால் வறுமையாவான். நடு மறு ஆயுசு உண்டு.

வலது காதில் மறு விருந்தால் எந்நேரமும் தானங்களைப்பண்ணி, தர்மங் களைச் செய்து, சிவகதைகளை இசை ஆசையாய்க் கேட்பான். இடது காதிலிருந் தால் பழிகளைச் சொல்லுவான் ; அசப்பியங்கள், பொல்லாத வார்த்தைகளை விரும்பிக்கேட்கப்பண்ணும். அதர்மங்களைச் செய்விக்கும். வலது காதினுள்ளே வலஞ் சுழியோ மறுவோ இருந்தால் நவகோடி திரவியம் தேட வல்லவனு வான். இடது காதினுள்ளே இடஞ்சுழியோ மறுவோ இருந்தால் உவமை யில்லா வறுமையாவான். மாலாகிச் சில களவுகள் செய்வான். தலையில் வலது புறத்தில் மறு விருந்தால் முடி சூட்டி வாழப் பண்ணும். இடது புறத்திலே மறு விருந்தால் சடை கட்டிக்கொண்டு இரக்கப் பண்ணும். தலையிலே நடுவில் மறு விருந்தால் மத்தியில் தரித்திரனுவான்.

சுழி, மறு, வடு, தான் காணும் இடத்திலும் காணுத இடத்திலும் இருந்தால் பலிக்கும். அதிலேயும் பிறர் காணுதே இருக்கிறது பலிக்கும்.

இன்னும் அளவிறந்த லட்சணம் உள்ளேயும் புறம்பேயும் உண்டு. அதிலே சில சில சொல்லுகிறோம். அதிலே புறக்குறிப் பலன்களும் உட்குறிப் பலன்களும் மிகுதியும் பலிக்கும். புருஷருக்கும் பெண்களுக்கும் புறக்குறி யினுலே உட்குறிகள் சிலவும் அறியலாம். இன்னும் அளவிறந்த குறிகளும் உண்டு. கன்னமும் அக்குளும் முகமும் அங்கையும் வாயும் உட்குறி அறியும் வழியாய் இருக்கும் என்றறிக.

கயிறு அளந்துபார்க்கிற லட்சணம்.

அதிலே கயிறு அளந்து பார்க்கிற லட்சணம் பெண்களுக்கும் புருஷருக் கும் பொதுவாயிருக்கும். பெண்களுக்குப் பன்னிரண்டு வயதுக்குமேல்

ஐம்பது வயது மட்டும் அளந்து பார்ப்பது. புருஷருக்குப் பதினாறு வயதுக்கு மேல் ஐம்பது வயது மட்டும் அளந்து பார்ப்பது.[1] லட்சணம் [அப்போது தான்] ஒத்திருக்கும். முன்னும் பின்னும் பார்க்கிற லட்சணம் ஒத்துவராது.

கால் பெருவிரலிலே தொடுத்து நெற்றியிலே மயிர்ப்பற்றளவு கண்ட அளவினோடே அவரவர் மார்பிலே சுற்றிக் கண்ட அளவிலே நாலத்தொன்று கூட்டிக்கொண்டு அங்குலக் கணக்காக அவரவர் கையினாலே அளந்து பார்க்க நூற்றெட்டு அங்குலமானால் உலகமெல்லாம் ஒரு குடையின் கீழே ஆளுவான். ஏறினாலும் குறைந்தாலும் வேறே வேறே பலனுண்டு.

[இந்தப்பகுதி ஒரு பிரதியில் பின்வருமாறு காணப்படுகிறது :

காலில் தொட்டு நெற்றி மயிர் அளவு மட்டும் அளந்து அந்த அளவுடனே அந்தக் கயிற்றை அவன் மார்பு அகல மட்டுக்கும் அளந்து இரண்டும் ஒன்றாய்க் கூட்டி அவன் அங்குலத்திலே நூற்றெட்டு அங்குலமானால் உலக மெல்லாம் ஆளுவான். நூறு இருந்தால் மந்திரியாவான். தொண்ணூறு இருந்தால் உத்தமம். எண்பது அங்குல மிருந்தால் மத்திமம். எழுபத்தைந்து அங்குலமிருந்தால் ஏழையாவான். எழுபது இருந்தால் மகா தரித்திரன். அறுபத்தைந்து இருந்தால் பாவி யாவான். அறுபது இருந்தால் துரோகியாவான்.]

வலது கைவிரல்கள் ஐந்தையும் அளந்த கூட்டி முழங்கையில் வைத்து அளக்க நடுவிரல் நுனி மட்டும் வந்தால் உலகாள்வான். நடுவிரலின் மூன்றாம் இறைமேலே வந்தால் மதி மந்திரியாவான். நடுவிரலின் நடுவே நின்றால் நன்மையுண்டாம் ; பாக்கியவானாவான். நடுவிரலின் அடியிலே வந்தால் அலைந்து திரிவான். உள்ளங்கையிலே வந்தால் முழு வறுமை யுண்டாம்.

வலது தோள் தொடுத்து வலதுகை நடுவிரல் நுனிமட்டும் கண்ட அளவை இரட்டித்துக் கால் பெருவிரல் தொடுத்து நெற்றி மட்டும் வந்தால் வயது நூறு இருப்பான் ; மிகுந்த செல்வ முண்டு. புருவத்தின் நடுவே வந்தால் வயது எண்பது; செல்வமுண்டு. மூக்கிலே வந்தால் எழுபதுவயது இருப்பான்; இரக்கமுமுண்டு. வாய் மட்டுக்கும் வந்தால் வயது அறுபது இருப்பான் ; சொற்பமான போக முண்டு. கழுத்து மட்டும் வந்தால் வயது ஐம்பதுண்டு; துக்கமுண்டு. மார்பிலே வந்தால் வயது நாற்பது இருப்பான். முழுதும் வறுமையுண்டு என்று அறிக.[2]

அளக்கிற நூலுக்குச் சந்தனம் குங்குமம் சாந்து புனுகு மஞ்சள் ஏதுவா கிலும் பூசி அளக்கவும். மறந்து பூசாமல் அளந்தால் ஆயுசு க்ஷயமாக (அதாவது குறைவாக) இருக்கும். அளந்து பார்க்கும் லட்சணங்கள் எல்லாம் பெண்களுக்கும் புருஷருக்கும் ஒக்கும்.

புருஷ லட்சணம் முடிந்தது, முற்றும்.

---

[1] 'பெண்களுக்கு ஒன்பது வயதுக்கு மேலும் புருஷர்களுக்குப் பதினைந்து வயதுக்கு மேலும் அளந்து பார்ப்பது' என்று மற்றொரு பாடம்.

[2] இந்த விதமாக அளந்து வயது நிர்ணயிப்பதிலே நூறுவயதுக்குக் கீழ்ப்பட்ட அளவு விவரம் ஓர் ஏட்டிலே பின்வருமாறு வித்தியாசமாகக் கூறப்பட்டுள்ளது :

நடு நெற்றிக்குவந்தால் வயது தொண்ணூற்றைந்து. புருவத்துக்கு வந்தால் தொண்ணூறு; மூக்கில் வந்தால் எண்பத்தைந்து; உதட்டுக்கு வந்தால் எண்பது; வாய்க்கு எழுபத்தைந்து, மோவாய்க் கட்டைக்கு வந்தால் எழுபது. கழுத்துக்கு வந்தால் அறுபத்தைந்து. நெஞ்சுக்கு வந்தால் அறுபது. இதற்குத் தாழ்ந்தது எல்லாம் ஆயுசு சொல்பம் என்று சொல்லப்படும்.

ஸ்திரீ லட்சணம்

(மகளிர் இலக்கணம்)

பெண்கள் லட்சணங்கள் அறிவது :

" பூலோகத்திலே பிறக்கிற பெண்களிலே பதிவிரதையா யிருக்கிறவளையே விவாகம் பண்ணவேண்டு மென்று திருவுள்ளம் பற்றிச்சுதே ! அந்தப் பெண்கள் வாழ்க்கைப்படுகிறதுக்கு முன்னே பதிவிரதை என்கிறதும், விபசாரி என்கிறதும் எப்படி அறிகிறது ? " என்று அகஸ்திய மகாமுனிவர் சுப்பிரமணியரைக் கேட்கச் சுப்பிரமணியர் அகஸ்தியருக்குத் திருவுள்ளம் பற்றினது யாதெனில் : " அப்படிக்கொத்த பெண்கள் வாழ்க்கைப் படுவதற்கு முன்னே பதிவிரதை யென்கிறதும் விபசாரி யென்கிறதும், அற்ப ஆயுசு என்கிறதும் தீர்க்காயுசு என்கிறதும், செல்வமுண்டென்கிறதும் வறுமை யுண்டென்கிறதும், சுகத்திலே யிருப்பாளென்கிறதும் கஷ்டப்படுவாள் என்கிறதும், தன் தேசத்திலே இருப்பாள் என்கிறதும் அன்னிய தேசத்திலே போவாளென்கிறதும், விதரணை யுண்டாயிருப்பா ளென்கிறதும் உலைச்சலாயிருப்பாளென்கிறதும்,[1] புத்திருண்டாயிருப்பாள் என்கிறதும் மலடியென்கிறதும், அழகுண்டென்கிறதும் அழகில்லை யென்கிறதும், கபடுஉண்டென்கிறதும் கபடில்லையென்கிறதும், அவள் நினைத்தது முடியு மென்கிறதும் முடியாதென்கிறதும், ஸ்திரீகளுடைய சரீரத்திலே பாதாதி கேச பரியந்திரமும் உள்ள லட்சணங்களைப் பார்த்து அறிந்து நிச்சயிக்கலாம் " என்று சுப்பிரமணியர் திருவுள்ளம் பற்ற, அகஸ்திய மாமுனிவர் தண்டம் பண்ணி, "சுவாமி, அப்படி இருக்கிற லட்சணங்களை எல்லாம் வெளி[ப்படை]யாக ,அடியேனுக்குத்திருவுள்ளம்பற்ற வேண்டும்" என்று வணங்கிக் கேட்க, சுப்பிரமணியர் அகஸ்தியருக்கு வெளியாகச் சொன்னபடி :

"பெண்களுக்கு உள்ளும் புறமுமாக அளவில்லாத லட்சணம் உண்டு. அதிலே சிறிது சொல்லுகிறோம் " என்று திருவுள்ளம்பற்றுகிறார்.

பாதம்.

பெண்களுக்கு உள்ளங்கால் வெது வெதுத் திருந்தால்[2] வெகு செல்வம் உண்டு ; குளிர்ந்திருந்தால் வறுமையுண்டு. பாதமானது செவ்வையாய்ச் சின்னதாக விரல் ஒத்து மண்மேல் சுமந்து [படிந்து] புறவடிக்கு இசைந்து உயர்ந்து இருந்தால் வெகுசெல்வம். அவள் இருந்த வீட்டுக்கு உண்டான வெகு போக பாக்கியத்தை அனுபவிப்பாள் ; உத்தமம்.

உள்ளங்கால் ரேகை.

உள்ளங்காலிலே ரேகைகள் கொடிபோல இருந்தால் முற்றும் அழகாயிருப்பாள். மீன் போலே ரேகை யிருந்தால் வெகு காமவிகாரியாவாள். சக்கரம்போலே யிருந்தால் வெகு திரவியம் உண்டு; மேலும் திரவியம் சேரும். சங்குபோலே யிருந்தால் நூறு வயது இருப்பாள். டமருகம்போலேயிருந்தால்

(பா-ம்.) [1] உலுத்தம் உண்டென்கிறதும். [2] வெதும்பி அதாவது சூடாக இருந்தால்

அவளுடைய வார்த்தை மேலாயிருக்கும். கும்பம்போலே யிருந்தால் வெகு கபடியாயிருப்பாள். மத்தளம்போலே யிருந்தால் வெகுளி மனசா யிருப்பாள். வாள்போலே யிருந்தால் வெகு கொலைபாதகஞ் செய்வாள். வெண்சாமரைபோலே இருந்தால் வெகு சனங்களை ரட்சிப்பாள்.[1] சந்திரன் போலே இருந்தால் விபசாரியாவாள். சூரியனைப் போலே இருந் தால் பதிவிரதையாவாள். ரேகைகள் சிவந்திருந்தால் சுதேசத்திலே[3] இருப்பாள். கறுத்திருந்தால் அன்னிய தேசத்திலே போய்த் திரிவாள்.[2]

குதிக்கால் முதற்கொண்டு நடுவிரல்நுனிமட்டும் ஒரு ரேகை இடையறு திருந் தால் அவள் மிதித்த இடமெல்லாம் பொன்னும். அவளிடத்திலே லக்ஷ்மி குடி யாயிருப்பாள். எல்லாச் செல்வமும் அவள் இருக்கிற இடம் தானே வரும். அவளுடைய முகத்திலே விழித்தாலும் செய்த பாவங்களெல்லாம் போகும். அவளைக் கொண்ட புருஷன் அநேகம் பேருக்குக் கர்த்தனுவான். அந்த ரேகையிலே குறுக்கே புள்ளடியாக யிருந்தால் அவள் சன்மம் உள்ளமட்டுக் கும் முழுவறுமை யாவாள்.

பாம்பு போலவும் எலி போலவும் கழுகுபோலவும் இருந்தால் வறுமை யாவாள். அவள் போயிருந்த இடமெல்லாம் வறுமையாம். சதுரமாக ஒரு ரேகையிருந்தால் அவளை எவனுகிலும் சரிபோகம் புணரமாட்டான்; கபட கோசமாதல், கூழ்ங்கை யாதல் வேண்டும். அவள் அதமியாவள்; (விதவையாவள்). உள்ளங்காலிலே ஒரு ரேகையும் காண்பியாதிருந்தால் சொப்பன போகம்.[4] மிகுதியாய் அவள் பிசாசுப் புணர்ச்சியினுலே திருப்தி[5] யடைவாள்: மற்றது எல்லாம் பொருந்தாது.

நடை.

[அவள்] நடக்கிறபோது நிலம் அதிர நடந்தால் அவள் மிதித்த இடம் எல்லாம்[6] குட்டிச்சுவராய்ப் போம். அவள் முகத்திலே விழிக்க வொண்ணுது. நடக்கும்போது குதிக்காலிலே நெட்டை முறிந்ததுபோலச் சத்தமுண்டானுல் ஒருத்தர் மேலும் பற்றுதல் இல்லாதவள்.

உள்ளங்கால்.

உள்ளங்கால் பதிந்து பூமியிலே பட இருந்தால் வெகுசெல்வமுண்டு. உள்ளங்கால் நடுவே எறும்பு போக வழியிருந்தால் வெகு கோபி யாவாள்; கொஞ்சமாய்ச் செல்வம் உண்டு. உள்ளங்கால் மிருதுவானுல் வீரி யம் முந்திப்போம்; அற்ப போகியாவாள். உள்ளங்கால் கடினமாயிருந்தால் வீரியம் பொட்டென விடாது; வெகு போகியாவள்; கொஞ்சமானுல் செலவும் உண்டு. அலைச்சலுண்டு.[7]

(பா-ம்) [1] இனங்களை நன்றும் ரக்ஷிப்பாள் [2] சுகத்திலே.

[3] வாழ்க்கைப் படுவாள்; தேசதேசத்திலே போய் திரிவாள்; அன்னிய ரிடத்திலேபோய்ச் சேர்வாள்.

[4] அதாவது சொற்ப போகம் என்று கொள்ளலாம். (பா-ம்) [5] கீர்த்தி.

[6] அவள் இருந்த வீடு எல்லாம். [7] உலைச்சல் உண்டு.

குதிக்கால்.

குதிக்காலானது பந்து போலே இருந்தால் ஆயுசு உண்டு. குதிக்கால் நீண்டிருந்தால் ஏழையாயிருப்பாள். குதிக்கால் பருத்திருந்தால் கபடியாவள். குதிக்காலிலே ஒரு சுழியாதல் கறுத்த மறுவாதல் இருந்தால் அவள் தொட்டதெல்லாம் பொன்னுகும். இத்தனை லட்சணமும் பெண்களுக்கு இடது காலிலே பார்ப்பது. இத்தனையும் வலது காலிலே யிருந்தால் மாறுன பலனுகுமென்று சொல்வாருளர்.

கால்விரல்.

இடது காலிலே பெரு விரல் நீண்டிருந்தால் அழகு உண்டு. பெருவிரலினுலேயும் உடல்குறி சில சில அறியலாம். பெருவிரல் தட்டை[1] யானுல் கைம்பெண்ணுவாள். மெத்த நீண்டிருந்தால் வறுமையாவாள். மற்ற நாலு விரலும் பெருவிரலை யொத்து நீண்டிருந்தால் அன்னிய புருஷர் மேலே மனதாயிருப்பாள் ; புணரக் கிடையாது கட்டுப்பட்டுப் போம். நாலு விரலும் மிக நெருங்கி[யிருந்தா]ல் வேலை மிகுதியாய்ச் செய்வாள். அன்பு இராது. நாலு விரலும் மெத்தக் குறுகினுல் அற்பாயுசு. நாலு விரலுங் குன்றேறினுல் போலே இருந்தால் அமங்கலையாவாள் அல்லது அவனைக் கூடினுல் பின்பு அவனைக் கூடவேண்டி இராதேபோம். நாலு விரலும் அலக் கலக்கலா யிருந்தால் (அதாவது விலகி இருந்தால்) அவளுக்கு ஒரு காசும் ஆஸ்தி யாய்ச்சேராது.

சிறு விரல் பூமியிலே படாதிருந்தால் அவள் தன் புருஷனை மெத்த ஒறுப்பாள். பெருவிரலண்டை யிருக்கிற விரல் பெருவிரலினும் நீண்டிருந்தால் அவள் சிறுபெண்ணுய் விளையாடுகிறபோது தானே சிறு பிள்ளைகளுடனே கூடிப் புணர்ந்துகொண்டு திரிவள். அவள் பின்பு பதிவிரதையாவாள். அஞ்சு விரலும் ஒன்றுக்கொன்று குறைந்து சிறுத்துப் பொஸ்தகம் போலே இருந்தால் ஆயுசும் அழகும் செல்வமும் உண்டு. அஞ்சு விரலும் ஒன்றுபோல் சரியாகியிருந்தால் வெகு கபடியாவாள்.

காலின் விரலின்மேலே மயிர் மிகுதியானுல் மனக்கிலேசம் உள்ளவளா யிருப்பாள். விரலிலே நரம்பு எழுந்து கண்டால் வறுமையாவாள் ; அல்லது வெகு தூரம் போகவேண்டும். அஞ்சு விரலும் வளைந்து சுருண்டு இருந்தால் காம மிகுதியாம் ; புணர்ச்சி கிடையாதே போம், அல்லது வறுமை உடையவள் ஆவாள். விரல்களெல்லாம் அற உலர்ந்தால் அழகு பொட்டெனப் போய்விடும். கால் பெருவிரலிலே மயிர் மிகுந்து பருத்து நெருங்கினுல்[2] உழைப்பு மிகுதியாம். மயிர் சிறுத்து நெருங்கினுல் கைம்பெண்ணுவாள். மயிர் சிவந்து நெருங்கினுல் வெகுதுன்பமும் சிறையு முண்டு; அல்லது மாமி, நாத்தனுர், புருஷன் முதலானவர்களாலே வெகு துன்பமுண்டு. சிறுவிரலும் அடுத்த விரலும் ஒத்துச் சரியானுல் விபசார முண்டு ; ஆனுல் அது அடக்கமாயிருக்கும். கால் பெருவிரலுக்குச் சுட்டுவிரலானது நீளமாகில் கன்னி தன் கணவனைப் பேணும். மங்கை காலின் பெருவிரல் நீளில் கன்னியே கணவனைப் பேணும். நாலு விரலும் பூமியிலே படிந்து இருந்தாலும் பெருவிரல் எடுத்து இருந்தால் சுற்றத்தாரை விட்டு வாழ்வாள்.

(பா-ம்) [1]கட்டை. [2]கறுத்து நெருங்கினுல்.

பாதத்திலிருக்கிற நடுவிரலுக்குச் சரியொக்கில் நல்ல குணம். பொன்னும் மணியும் முத்தும் உண்டாகிய ராசாவுக்குத் தேவியாவாள். அணி விரல் பூமியிலே பாவாதிருந்தால் செல்வம் குன்றும் ; குணமில்லை. அவள் தன் புருஷனை விட்டு வேறொரு புருஷனைக் கூடி வாழ்வாள். விரல்களிலே சுழி யுண்டாயிருந்தால் வெகு வெகு செல்வ முண்டு.

நகம்.

நகம் வட்டமாய்ப் பணம் போலே யிருந்தால் அழகுண்டு. நகம் சிவந் திருந்தால் தீர்க்காயுசுண்டு. நகம் மிருதுவானால் புணர்ச்சி எந்நேரமும் கிடைக்கும். நகம் வெளுத்திருந்தால் இகழ்ச்சிப்படுவாள். உரத்திருந் தால் நாணம் இல்லாதவளா யிருப்பாள். நகம் நீண்டிருந்தால் எவர் பேரி லேயும் மனசாயிருப்பாள் ; பற்றும் கூடக் கிடையாது. நகமானது பிரிந்து இறைச்சிக் கொத்துப் போலே சிவந்திருந்தால் வெகு நன்மையுண்டு. நக மானது விரலுடன் சதையுடனே கூடி ஒன்றித் தளிர்போல் இருந்தாலும் நகமானது மழுங்கியிருந்தாலும் நகமானது பிளந்திருந்தாலும் துக்க மென்பது.

புறங்கால்.

புறங்கால் பதிந்திருந்தால் அவள் தன் புருஷனை எதிர்த்து [வார்த்தை] சொல்லுவாள். புறங்காலிலே மயிர் இருந்தால் வெகுகோபி யாவாள்.[1] புறங்காலிலே நரம்பு தோன்றில் வறுமையுண்டு. புறங்காலிலே யாகிலும் விரல்களிலே யாகிலும் சுழி உண்டானால் செல்வமுண்டு.

பரடு.

கறடு தராசுத் தட்டுப் போலே இருந்தால் வெகு செல்வமுண்டு. கறடு திரண்டிருந்தால், நீண்டிருந்தால், உலைச்சலுண்டு. கறடு சிறுத்தால் அழ குண்டு. கறடு மிகவும் பருத்திருந்தால் வறுமையுண்டு.[2] அன்னிய தேசத்திலே போகவேண்டும். கறட்டிலே மயிர் இருந்தால் வீணாய் அவள் கொலையிலே சாவாள்.

கணைக்கால்.

கீழ்க்கால் வரால் மீன் போலிருந்தால் அவள் அனேகம் பெண்களுக்கு நாயகியாவாள்.[3] கீழ்க்காலில் நரம்பு தோன்றினால் வறுமையாவாள். மயிர் தோன்றியிருந்தால் கோபியாவாள். கணைக்கால் மயிர் நெருங்கியிருந் தாலும் பருத்துக் கறுத்து இருந்தாலும் மலடியாவாள். மயிர் சிவந்திருந் தால் தன் புருஷனை ஒறுப்பாள். கணைக்கால் மயிர் நுனி பிளந்திருந்தால் மாமன் மாமி முதலான பேரையும் மிஞ்சி நடப்பாள்.

முழங்கால்.

முழங்கால் வட்டமாயிருந்தால் அழகுண்டு. முழங்கால் நீண்டிருந்தால் விபசாரியாவாள்.[4] முழங்காலிலே ஒரு சுழியிருந்தால் அவளுக்குச் சரியொக்கப் புணரக் கிடையாது அவள் கிரமத்திலே[5] மிஞ்சுவாள். கபட கோசம் வேண்டியிருப்பாள்.

(பா-ம்) [1] காமியாவாள். [2] ஆயுசு உண்டு. [3] மீன் போலிருந்தால் நன்மை.
[4] வெகு காமியாவள். [5] காமத்திலே.

தொடை.

தொடையானது இரண்டும் ஒத்து இடைவெளி இல்லாமல் வாழைத் தண்டு போலே இருந்தாலும் மருங்கி இருந்தாலும் அழகுண்டு ; ஆயுசும் செல்வமும் உண்டு. தொடையிலே மயிர் மிகுதியானால் அமங்கலையாவாள். தொடையிலே நரம்பெழுந்தால் வறுமையாவாள். இரு தொடைக்கும் இடைவெளியானால் கிலேசமுண்டு. தொடைகள் கடினமானால் வெகு காம விகாரியாவாள். தொடையிலே சுழியிருந்தால் வெகு கபடியாவாள்.

புறக்குய்யம்.

புறக்குய்யத்தில் மயிர்கண்டால் மலடியாவாள். கடினமானால் அனேகம் பேரைக் கொல்லுவாள். மிருதுவானால் செல்வமுண்டு. சங்குபோலே திருகின புழையானால் மலடியாவாள்.

அல்குல்.

அல்குல் அவர் அவர் கையினாலே ஆறங்குலமாகி அகலமானால் வெகு செல்வம் உண்டு. அஞ்சு அங்குலமானால் வெகு புத்திரருண்டு. நாலு அங்குலமானால் மலடியாவாள். மூன்று அங்குலமானால் அவள் பெற்ற பிள்ளையெல்லாம் ஓடிப்போம் அல்லது மரிக்கும். இரண்டு அங்குலமானால் முழு வறுமை. அல்குல் மூன்று கோணமானால் அவளிடத்திலே லட்சுமி தானே சென்று குடியிருப்பாள். அல்குல் அரசிலைபோலே இருந்தால் வெகு செல்வமுண்டு ; சுகத்தை அடைவாள். காமம் கிடையாது. அவரை விதை[1] போலேயிருந்தால் எவரையும் வலியப் புணருவாள். எருமை நாக்குப் போலேயிருந்தால் மிகுதியும் சலக்கட்டுண்டு. சுகத்தை அறியாள்.[2] அல்குல் சதுரமாகயிருந்தால் பாவங்களையே பண்ணுவள். வட்டமானால் தைரிய வாளாவள் (தைரியவதி ஆவாள்). சத்துரு விசயம் செய்வாள்.[3].

அல்குல் இடப்புறம் உயர்ந்திருந்தால் ஆண்பிள்ளை முந்திப் பெறுவள். வலப்புறம் உயர்ந்திருந்தால் பெண்பிள்ளை முந்திப் பெறுவள். இருபுறமும் சரியாயிருந்தால் மலடியாவள். அல்குல் இடப்புறத்திலே ஒருசுழி இடம்புரியாயிருந்ததானால் உலகாளும் மன்னனுக்குத் தேவியாவள். வலஞ்சுழியாயிருந்தால் புருஷனை இழந்து தானே உலகாளுவள். அல்குல் வலது புறத்திலே ஒரு சுழி இடம்புரியானால் வறுமையாவள். வலம்புரியானால் அற்பமான செல்வம் ; வெகு காமமுண்டு.

அல்குல் ரோமம்.

அல்குல் மயிர் பருத்துக் கறுத்து நெருங்கினால் அமங்கிலியாவள். கறுத்துச் சிறுத்துக் கலக்க ஒவ்வொன்றாயிருந்தால் ஆயுசு பரியந்தம் திரவியம் அடைந்து புருஷனுடனே கூடி வாழ்ந்து கொண்டிருப்பள். எலி மயிர்போலே மெதுவாயிருந்தால் பதிவிரதையாவள். மயிர் சிவந்து நெருங்கியிருந்தால் வெகு விபசாரியாவள். [அல்குல்]மான் குளம்படிபோலே இருந்தாலும், மயிரில்லாதே இருந்தாலும் இனங்களை இரட்சிப்பள்.

(பா-ம்) [1] வளர்பிறைபோலே. [2] சிலகனுண்டு ; சுகத்தை அடையாள். [3] திருடவே செய்வாள்.

மணி.

மணி சிவந்து சிறுத்து உள்ளடங்கியிருந்தால் பதிவிரதையானவள். மணி பருத்து நீண்டிருந்தால் விபசாரியாவள். மணி சிறுத்து நீண்டிருந்தால் வறுமையும் விபசாரமும் உண்டு. மணி வட்டமாய்க் குமிழ் நுனி போலே இருந்தால் மலடியாவள். மணி கறுத்திருந்தால் போகமுண்டு.[1] வெளுத்தால் வியாதி. கிளிமூக்குப்போலே இருந்தாலும் கூர்மையாய் இருந்தாலும் அன்னியதேசத்திலே போய்ப் பிழைக்கவேண்டும். மணி தேன் வாசனையானால் செல்வமுண்டு. இந்திரியம் மிகுதியாம். மணி இளநீர் வாசனையானால் ஆயுசு . . . . .பால் வாசனையானால் இந்திரியம் முந்திப் போம். தாமரைப்பூ வாசனையானால் அழகுண்டு. செண்பகப் பூ வாசனையானால் அவள் வார்த்தை செல்லும்; மிடியாம். மல்லிகைப் பூ வாசனையானால் அவள் எல்லாருக்கும் அன்பாயிருப்பாள்.

மணி உதிர நாற்றமானால் ஏழு பிள்ளைகள் உண்டு. அழுகல் நாற்றமானால் வறுமையும் [பார. மு.] முண்டு. சுண்ணும்பு நாற்றமானால் உலைச்சல்படுவள். புலால் நாற்றமானால் காமமும் இச்சையும் மிகுதி யுண்டு; கிடையாது. மணி கஷாய நாற்றமானால்[2] பிறந்த பிள்ளைகளெல்லாம் மரித்துப்போம். வெதும்பியிருந்தால் கண்டதுக்கெல்லாம் ஆசைப்படுவாள். மணி குளிர்ந்திருந்தால் வெகு போகியாவள். மணி எழுந்து மடிந்திருந்தால் கோபியுமாய் அற்பாயுசு உண்டு.

சிறுநீர்.

சலம் விழும்போது வலம் புரியாய் ஒரு தாரையாய் விழுந்தால் செல்வமுண்டு. புத்திரரும் ஆயுசும் உண்டு. இடம்புரியாய் ஒரு தாரையானால் உலகாளுவள். வலம் புரியாய்ச் சிதறிவிழுந்தால் அதமியாய்த் திரிவள். இடம்புரியாய்ச் சிதறி விழுந்தால் பதிவிரதையாய்ப் புத்திரரைப் பெறுவள். வெகு சத்தமாய் விழுந்தால் எல்லாரையும் வலியப் புணருவள். அழுந்த விழுந்தால்[3] எந்நேரமும் புருஷனைப் பிரியாமல் இருப்பாள்; புணர்ச்சி மிகுதியும் வேண்டியிருப்பாள்.

உள் குய்யம்.

உள் குய்யம் இரு விரலினாலே சுற்றிப் பார்த்தால் குடகாய் வெகு விசாலமாய் இருந்ததானால் வெகு காமியாவள். பதினாறும் பெறுவள்; செல்வமுண்டு. உள் குய்யம் சிறுத்தால் வறுமையுண்டு. உள் குய்யத்தினுள்ளே நடுவே தாமரைக்காய்போலே[4] ஒரு தசை எழுந்து இருந்தால் ஆயிரம் பேரை இரட்சிப்பாள்; வெகு காமியாவள். அந்தக் குறி மிகுதியும் நீண்டிருக்கக் கண்டால் மலடியாவாள். கடினமானால் அநேகம் பேரைக் கொல்லுவாள். மெதுவாக இருந்தால் செல்வம். சங்கிலி திருகினாற்போலே புழையாய் இருந்தால் மலடியாவள். உள்குய்யம் இடது புறத்திலே சாய்ந்திருந்தால் பதிவிரதை. வலது புறத்திலே சாய்ந்து இருந்தால் விபசாரம். செவ்வையாயிருந்தால் (மையமாக இருந்தால்) செல்வமுண்டு. ஆயுசும் திரவியமும் உண்டு.

(பா-ம்) [1] பலமுண்டு. [2] கெட்ட நாற்றமானல். [3] அமர்ந்து விழுந்தால். [4] காரைக்காய்போலே; களாக்காய்போலே.

அடிவயிறு.

அடிவயிறு கீழே பருத்து வரவரச் சிறுத்தால் செல்வமும் அன்பும் உண்டு. அடிவயிறு அடி சிறுத்து மேலே பருத்தால் அழகும் கடின குணமும் உண்டு. அடிவயிறும் மேல்வயிறும் மிதத்துப் பூசனிக்காய்போலே இருந்தால் வெகு பொசிப்புவேண்டும். வெகுகாமமும் வேண்டும். அடிவயிற் றின்மேலே மயிரொழுங்கு குய்யம் அளவாகக் கீழ்நோக்கியிருந்தால் ஒரு பிள்ளையை உலகமெல்லாம் (ஆளக்) கொண்டாடப் பெறுவள். அந்த ரோம ரேகை மேலே நோக்கியிருந்தால் எல்லாரையும் உதாசினமாகப் பேசு வாள் ; சிரிப்பாள். அந்த மயிர் சற்றும் இல்லாதிருந்தால் பதிவிரதை யாவள்.

நாபி (தொப்புள்).

நாபி இடஞ்சுழியாய் உள்ளே குவிந்திருந்தால்[1] நல்லகுணம் உண்டு. பதிவிரதையாய்ச் செல்வமும் உண்டு. நாபி வலஞ்சுழியானால் மிடியும் விபசாரமும் உண்டு. உயர்ந்திருந்தால் மிடியும் விபசாரமும் களவும் உண்டு. நாபி கெட்ட நாற்றமானால்[2] வெகு கிலேச முண்டு. சுண்ணாம்பு நாற்றமானால் பொய்யே சொல்லுவள். இளநீர் வாசனையானால் வறுமை யும்[3] காமமும் உண்டு. சுகந்த புஷ்ப வாசனையானால் அவளைக் கண்ட புருஷ ரெல்லாம் ஆசைப்படுவர். அவர்கள் கூடினாலும் பிரியமாட்டார்கள் ; பிரிந் தால் உடனே மரிப்பர்.

வயிற்று மடிப்பு.

வயிற்றில் மடிப்பு ஒன்று, மூன்று, அஞ்சானால் வெகு செல்வம் உண்டு ; காமமில்லை. நாலு, இரண்டு மடிப்பானால் செல்வமும் காம மிகுதியும் உண்டு. மடிப்புச் சிறுத்து நடுவில் ஒற்றி[4] (அதாவது ஒற்றை யாகி)க் கடைசியிலே இரட்டித்துக் கண்டால் வெகு வித்தை யுண்டு ; கோபி யாவள். ஒரு மடிப்பும் இல்லாதிருந்தால் வெகு புத்திரருண்டு. வயிற் றில் மடிப்புகளைப் பிடித்து நெருடிப் பார்த்தால் உள்ளே ஒரு சலாகை போலேயிருந்தால் மலடியாவள். அடி மடிப்பிலே ஒரு சுழியிருந்தால் அவள் பெற்ற பிள்ளைகளெல்லாம் செல்வமாயிருக்கும். இரண்டாம் மடிப் பிலே ஒரு சுழியிருந்தால் அவள் பெற்ற பிள்ளைகள் எல்லாம் செத்துப் போகும். மூன்றும் மடிப்பிலே ஒரு சுழியிருந்தால் அவள் பெறுகிற பிள்ளைகளெல்லாம் பெண்ணும். நாலாம் மடிப்பிலே ஒரு சுழியிருந்தால் வெகு கோபியாய்ச் சண்டைக்காரி யாவாள். அஞ்சாம் மடிப்பிலே ஒரு சுழியிருந்தால் அலைச்சலுண்டு ; கிலேசமுங் கபடும் உண்டு. வயிற்றிலே ஒரு சுழியும் இல்லாதிருந்தால் பதிவிரதையாவள் ; காமத்திலே வெகு ஆசை யுண்டு ; புணரக்கிடையாதுபோம். மடிப்புகள் மிருதுவாக இருந்தால் வெகு புத்திரருண்டு. மடிப்புக் கடினமானால் மலடியாவள் ; அல்லது பிள்ளை பிறந்தாலும் செத்துப்போம்.

(பா-ம்) [1] குழியாய் இருந்தால். [2] நாயக்கவி நாற்றமானால். [3] பொறுமையும். [4] மடித்து.

வயிறு.

வயிறு தட்டையானால் கிலேசமுண்டு. மிஞ்சினால் விதவையாவள். நரம் பெழுந்தால் வறுமை. இடைவெளியானால் கிலேசம். மிஞ்சின தொந்தியானால் மாமனுக்கு மரணம். வயிற்றிலே மயிர் மிகுதியானால் விதவையாவள். மயிரில்லாதிருந்தால் கைமையாவள். மயிர் நெருங்கினால் விபசாரியாவள்.

ரோமவல்லி.

ரோமவல்லி நாபி தொடுத்து முலைமட்டும் மயிர் ஒத்து ஒரு கீற்றுப் போல் கீழ்நெருங்கியிருந்தால்[1] அழகும் ஆயுசும் செல்வமும் சோரச் செலவும் உண்டு. ரோமவல்லி கோணலாயிருந்தால் அமங்கிலியாவள். ரோமம் சிவந்தால் கோபியாய்த் திருடியாவள்.[2] ரோமம் இடைவிட்டிருந்தால் செல்வம் வந்துபோய், வறுமை வந்து போய்ப் பின்னும் செல்வம் வரும். மார்பிலே மயிர் இல்லாமல் இருபுறமும் சரியாய் மட்டிலே உயர்ந்திருந்தாலும் அழகு ஆயுசு உண்டு. மார்பில் மயிர் இருந்தால் புருஷன் போவான். அவள் விபசாரியாவள்.

மார்பு.

மார்பு அவரவர் கையினாலே பதினேழு அங்குலமானால் உல...ள்வள். பதினெட்டு அங்குலமானால் விபசாரியாய் உலகாளுவாள். பத்தொன்பது அங்குலமானால் தீர்க்காயுசும் அழகும் கற்பும் நற்குணங்களும் உண்டு. இருபது அங்குலமானால் ஆயிரம் பெண்கள் ஊழியம் செய்வார்கள். அதுக்குமேல் எத்தனை அங்குலம் இடமானாலும் அற்பாயுசாய்ச் சாவாள். பதினேழு அங்குலத்தின் கீழே எத்தனை அங்குலம் குறுகினாலும் அந்த அளவு செல்வம் சிறுக்கும்.

கொங்கை.

முலை கிண்ணம் கவிழ்த்தாற்போலே இருந்தால் செல்வம் மிகுதியுண்டு. செப்புக் கவிழ்த்தாற்போலே இருந்தால் அழகும் ஆயுசும் உண்டு. இடங்கொண்டிருந்தாலும் மெத்த மிருதுவானாலும் மெத்த விழுந்துபோம்; அவள் புணர்ச்சிக்கு நல்லவள். மார்பிலே சதையும் இடப்புறம் மறுவும் இருந்தால் சம்பத்து உண்டு; புண்ணியவதியுமாய் இருப்பாள். வலது மார்பு ஒன்று அகலமாயிருந்தால் வெகு புத்திர சம்பத்து உண்டு. கவிழ்ந்த மார்பானாலும் மேட்டு மார்பானாலும் வறுமையாம்; பொல்லாத திருடியும் ஆவள். ஸ்தனம் கதித்து எந்து முலையானால் விவேகம் உண்டாம்; புருஷவாஞ்சை உண்டாம்; புணரக் கிடையாது. பருத்துச் சுணங்கு[3] சிந்தியிருந்தால் புருஷன் பேரில் வெகு ஆசையுண்டாக நல்ல குணமுண்டாம். வெகு பூச்சிமாக இருந்தால் ஆகாது. [நெருங்கி இருந்தால்] புத்திரருண்டு. கூடினவன் பிரிய மாட்டான். ஐசுவரியம் உண்டு. அகன்று இருந்தால் தனக்குச் சொல் மேலாய் இருப்பாள். நாலு பேரும் மெச்ச நடப்பாள். மங்கலியக் கழுத்துமாவாள். முலை இரண்டும் இடையகன்றால் இரண்டு மூன்று வருஷத்திலே

(பா - ம்) [1] கீழ்நோக்கியிருந்தால். [2] திட்டுவாள். [3] சுணங்கு=தேமல்.

கைம்பெண் ஆவாள். பொல்லாதவளும் ஆவர்ள். புடைபருத்த முலை யுமானால் வறுமையாய்க் கஷ்டப்படுவாள் ; பிள்ளை அற்பம். [கயறுங்கலக் கொடியாயிருப்பாள்.] பண்டி முலையானால் எண்ணமும் துக்கமும் பாதிநாள் ; சுகம் பாதியுமாய் வெகு காமியாவாள். அகன்று பருத்த முலை யானாலும் முகத்துக்கு உயரமானாலும், அவள் துணிச்சலான மனம் பெறு வாள். வறுமை திரும்பிப் பொல்லாங்கு செய்வாள். ஒன்று பருத்து ஒன்று சிறுத்தால் கபடி ; வறுமையும் தூர்த்தத் தனமும் உண்டு. இரு [புறமும் சமமாக இருந்தால்] சுகம் பண்ணுவாள். இரண்டும் நெருங்கி இருந் தால் மக்கள் செல்வம் உண்டு. கல்லுப்போலக் கனமாயிருந்தால் மலடி யாவள். மார்பெல்லாம் பரந்து அகன்றிருந்தால் புருஷனுக்கு ஈனம் வரும் ; பொல்லாதவளாயிருப்பாள். புணர்ச்சி விருப்பமாய் இருப்பாள். புணர்ச்சி இடையாது. கூவிளம்பழம்[1]போலே இருந்தால் பதிவிரதை. நல்ல பாக்கிய வதியுமாய்க் குணம் (வாய்ந்தவளாய்) இருப்பாள். முலைக்காம்பிலே நரம்பு எழுந்தால் பிள்ளை உண்டு. நல்ல பாக்கியமுண்டு. நரம்பு இல்லா திருந்தால் மலடியாவள் ; பாடுபட்டு உழைத்து உண்ணவேண்டும் ; வெகு துக்கம் உண்டு, படுபவள். தொப்பை முலையானால் வெகு துக்கப்படுவாள் ; வறுமை யுண்டு. சற்றே சரிந்த முலையானால் புருஷநாட்டமாய் இருப்பாள்; வெகு அடக்க அவிசாரியுமாவள். வெகு போகியுமாவள். நாய் முலைபோலே ஒட்டியிருந்தால் வெகு கஷ்டமான துக்கமே உளைக்கும்; நல்ல வயதிலேயே விதவையாவாள். பருத்து நீண்டிருந்தால் வெகு மோகி. புணர்ச்சிமேலே விருப்பம் ஆவாள். வெகுபொல்லாதவள். ஆங்காரி. புருஷனை அதக் குவாள். முலைக்காம்பு பருத்திருந்தால் வெகு மோகி. இஷ்டமுள்ளவரைக் கொள்ளுவாள். அற்பப் பதிவிரதை. அற்பத் திரவியம் உண்டு. நாலு பேரையும் சிநேகிதம் பண்ணுவாள். பின் வறுமை.

மிகுதியும் பருத்து முலைக்கண் சிவந்தால்[2] அடக்கமாய் விபசாரியாவள். முலை உயர்ந்து கூர்ச்சாய்க் குத்து முலையானால் இகழப்படுவள். முலையின் மேலே முலையாக இரட்டை முலையானால் அதிகக் காமி. அவளைக் கனவிலுந் தீண்டவொண்ணாது, தீண்டினால் ஆயுசு குறையும் ; நம்பப்போகாது. சுரைக் காய்போலே பருத்திருந்தால் வாதமதியமாம். அவளைப் புணரும்போது துர்க்கந்தம் மிகுதியாய் வீசும். பஞ்சு ஒட்டிணுப் போலே இருந்தால் வசப்படு வள். பித்தம் அதிகரிக்கும். வரண்டிருந்தால் வியாதி. அவள் நடக்கிறபோது பின்னாலே பார்த்தால் இரண்டு முலையும் இரண்டு புறமும் பிதுங்கிக் காண்பித் தால் அவளை எத்தனை விதத்தாலே புணர்ந்தாலும் விசைக்குவிசை இந்திரியம் திரளாய் ஊறும். வெகுசத்தமாய்ப் பிறக்கும். இரண்டு முலைக்கு நடுவெளி நாலு (அங்குலம்) விரல் கடையாயிருந்தால் வெகுகபடியாவள். முலைக் கண் எந்த நாளும் கறுத்து இருந்தால் அழகும், ஆயுசும், புத்திரருமுண்டு. முலைக் கண் குழைந்திருந்தால் [3] மலடியாவாள். முலைக்கண் பருத்திருந்தால் [3] கபடியாய் விபசாரியாவாள். முலைக்கண் கடினமானால் ஒருத்தர் மேலும் ஆசையில்லாதவளாவாள். மிருதுவானால் வெகு போகியாவாள். முலைக்

[1] கூவிளம்பழம்—வில்வப் பழம். (பா-ம்.) [2] சிறுத்தால். [3] குழிவிழுந்திருந்தால்.
[4] பதிந்திருந்தால்.

கண்ணுக்குள்ளே நெருடிப் பார்த்தால் உள்ளே ஆணி நிறுத்தினுப் போலே முலை மேலே காண்பியாது (அதுக்கு மலட்டு மலை ஆணி யென்று பேராம்) இருந்தால் மலடியாவாள். முலையிலே விசை நரம்பு [1] தோன்றினுல் அவளைப் புணரும் புருஷனுக்கு விகாரமற்று வீணைய்த் தண்டு சோர்ந்து போம். வலது முலை உயர்ந்து இருந்தால் ஆண்பிள்ளை முந்திப் பெறுவாள். இடது முலை உயர்ந்து இருந்தால் பெண்பிள்ளை முந்திப் பெறுவாள்.

கொங்கையில் மறுவும் சுழியும்.

முலையிலே எள்ளுமாத்திரமாக ஒரு பிறவிவடுவாதல், ஒத்த மறுவாதல் இருந்தாலும் இடஞ்சுழியாதல் இருந்தாலும் உலகையாள்வாள். இடது முலையில் மறுவிருந்தால் பதிவிரதை யாவாள். வலஞ்சுழியா யிருந்தால் விபசாரியாவாள்; உலகாள்வள். வலது முலையிலே இப்படிக் கொத்த மறுக்களிருந்தாலும் வலஞ்சுழியா யிருந்தாலும் வறுமையும் கிலேசமும் கபடும் உண்டு. இடஞ்சுழியாயிருந்தால் அவள் கொலை அடைவாள். முலையிலே மயிர் கண்டால் விபசாரியாய் அலைந்து திரிவாள். இரண்டு முலைக்கு நடுவே மார்பிலே ஒரு பிறவிவடுவாதல், ஒத்தமறுவாதல், குமிழ்மறுவாதல், வடுவாதல், மீன்மறுவாதல், மயிர் மறுவாதல் இருந் தால் வித்தையும் புத்தியும் உண்டு. அவளைப் புணர்ந்தால் மறுத்துப் புணரவேண்டியிராது. அவ்விடத்திலே வலஞ்சுழியா யிருந்தால் வெகு வறுமையாவாள். இடஞ்சுழியா யிருந்தால் செல்வமுண்டு. வலது முலையின் கீழேயாவது மேலேயாவது பக்கத்திலேயாவது ஒத்தமறுவாதல், மயிர்மறுவாதல் இருந்தால் வெகு சேதம் உண்டாகும். இடது முலையிலே இப்படியிருந்தால் வெகு ஆதாயம் உண்டாகும். முலைக் கண்களிலே மறுவாதல், வடுவாதல் இருந்தால் செல்வமுண்டு; புணர்ச்சி கொஞ்சமாம்.

முதுகு.

முதுகு நடுவெலும்பு மறைத்து மயிர் இல்லாதிருந்தால் செல்வம் உண்டு. நடுவே எலும்பு தோன்றினுலும் வறுமையாம். நடு எலும்பின் பேரிலே நரம்பு தோன்றினுல் வியாதியாம். மயிர் தோன்றினுல் திடமுண்டு.

கீழ் முதுகில் மயிர் மிகுதியும் கறுத்துப் பருத்து இருந்தால் வெகு கபடும் ஆயுசும் அழகும் உண்டு. திரவியமு முண்டு. முதுகிலே சுழி பலவாய் இடம் புரியானுல் மலடியாம். வலம்புரி யானுல் பாவியாவாள். ஒன்ருய் இடஞ்சுழி யானுல் உலகையாளுவள். ஒன்ருய் வலஞ்சுழியானுல் விபசாரியாவாள். முதுகு இரண்டாயிருந்தால் பழி சேரக் கற்புடையாள் ஆவாள். ஒன்ருனுல் கற்பு உடையவள். முதுகுத்தண்டு கோல்போல் நீண்டு இருந்தால் புருஷனை அகன்று போய் வாழ்வாள். நெளி முதுகானுல் வெகு துக்கம். தூர்த்தத் தனம் உண்டு. எலும்பு தோன்றினுல் வறுமையாவள்; வெகு பாவி; திருடியுமாவள். முதுகு பொஸ்தகம் சோர்ந்தாற்போல் இருந்தால் வெகு போக போக்கியமுண்டு; ராஜஸ்திரீயாவள். உத்தம குணமாக இருப்பாள். தர்ம சிந்தையாவள். முதுகிலே மயிர் மிகுதியானுல் திருடுவாள்; பயப்படாள். முதுகிலே எலும்பும் நரம்பும் எழுந்து கண்டால் மிடியுண்டு. முதுகு அற

(பா-ம்) [1] விழு நரம்பு; பச்சை நரம்பு

உயர்ந்தால் சுமை சுமக்கவேணும். அறத் தாழ்ந்திருந்தால் உலேச்சலுண்டு. முதுகிலே இரண்டு வலஞ்சுழியாயிருந்தால் அவள் நினைத்ததெல்லாம் முடியும். இரண்டு இடஞ்சுழியாயிருந்தால் வெகு போகியாவாள். ஒரு சுழி வலஞ்சுழியாயிருந்தால் அநேகம் பேரை ரக்ஷிப்பாள். ஒரு சுழி இடஞ்சுழியாயிருந்தால் வறுமையுண்டு. மூன்று முதலாய்ப் பல சுழியாயிருந்தால் வெகு போகியாவள். ஒரு வலஞ்சுழி இருந்தால் விபசாரியாவள். ஒரு சுழியிலே வலம்புரியும் இடம்புரியுமானால் மலடியாவாள். நரம்பும் மயிரும் இல்லாவிட்டால் செல்வமுண்டு. மாறுகில் வறுமையுண்டு.

விலா.

இடது விலாவிலே ஒரு இடஞ்சுழியிருந்தால் அவிசாரியாவாள். அலைந்து திரிவாள். காமமும் கிடையாது. வலது விலாவிலே வலஞ்சுழியிருந்தால் கற்புண்டாயிருப்பாள். இரண்டு முதலான பல சுழி வலம்புரியாகவிருந்தால் வறுமையுண்டு. மாறுனல் விபசாரமுண்டு.

அக்குள்.

அக்குள் உயர்ந்தால் செல்வமுண்டு. தாழ்ந்தால் வறுமை. மயிர் நாற்றமும் இல்லாவிட்டால் உலகையாள்வள். கொஞ்சமான போகியாவாள். அக்குள் அழுகல் நாற்றமானல் வெகு போகியாவாள். சுண்ணும்பு நாற்றமானல் வறுமையுண்டு. ஆனை மூத்திரம் போல் நாற்றமானல் மெத்த ஆசைபடுவாள்; பாட்டுக்காரியாவாள். அக்குள் மயிர் சிவந்திருந்தால் வறுமையுண்டு. கறுத்திருந்தால் செல்வமுண்டு. பருத்திருந்தால் பலம் உண்டு. அக்குள் இளநீர் வாசனையாயிருந்தால் நல்ல புடைவை உடுப்பாள். தாமரைப் பூ வாசனைபோலே யிருந்தால் நல்ல பொசிப்பு உண்டாவாள்.

தோள்.

தோள் வெகு நெடுந்தோளா யிருந்தால் வெகு செல்வம் உண்டு. கற்பு உடையவள். நல்ல குணமாக இருப்பாள். தோள் உயர்ந்திருந்தால் வெகு வயதுண்டு. தாழ்ந்திருந்தால் மிடியுண்டு. பருத்தால் செல்வமுண்டு. சிறுத்தால் வெகு துக்கமுண்டு. வலது தோளிலே மயிர் இருந்தால் விபசாரியாவாள். இடது தோளிலே ஒரு இடஞ் சுழியாயிருந்தால் உலகாள்வாள்.

கைகள்.

புசம் பருத்திருந்தால் வெகு செல்வம். புருஷர்பேரில் வாஞ்சையும் தூர்த்த குணமும் உலுத்த குணமும் உண்டு. கைகள் முழங்காலின் கீழே வந்தால் வெகு செல்வமுண்டு. முழங்கால் முட்டியிலே நின்றல் கற்பு உண்டு. முழங்காலுக்கு ஒரு விரலுக்கு மேலே நின்றல் நல்ல பொசிப்பு உண்டு. இரண்டு விரலுக்கு மேலே நின்றல் விபசாரியாவாள். மூன்று விரலின் மேலே நின்றல் அழகுண்டு. நாலு விரலின் மேலே நின்றல் புணர்ச்சி கிடையாது. அஞ்சிலே[1] ஆயுசுண்டு. அஞ்சு விரல் தொடுத்து மேற்பட்ட தெல்லாம் கிலேசமுண்டு. கை குறுகக் குறுகக் கபடு அதிகமாம்.

(பா - ம்.) [1] அதிலே.

புறங்கை.

புறங்கைகள் திரண்டு மிருதுவாய் உயர்ந்திருந்தால் செல்வமுண்டு. நரம்பு எழுந்தால் வறுமையுண்டு; மயிர் எழுந்தால் புருஷனைக் கொல்லுவாள்.

நகம்.

நகம் சிவந்து குவிந்தால் செல்வங்களுண்டு. வெளுத்துக் குவிந்திருந்தால் மிடியாம். கறுத்துக் குவிந்திருந்தால் வியாதி யுண்டு. சிவந்து விரிந்தால் உலைச்சல் உண்டு. வெளுத்து விரிந்தால் புருஷனைக் கூடியிராள். கறுத்து விரிந்தால் கைம்மையாம். நகம் உரத்தால் போகம் நிற்கும். சில்[1] நகமானால் நில்லாது.

கை விரல்.

கைவிரல்கள் சிறுத்து நீண்டால் அழகு உண்டு. பருத்து நீண்டால் பலம் அதிகமாம். சிறுத்துக் குறுகினால் உலைச்சல்[2]. பருத்துக் குறுகினால் உழைப்பு உண்டாம்.

கைவிரல் இறை.

பெருவிரல் அடியிறை [........][3] ஒன்றானால் அற்பபோகமாம். பலவானால் மிடியும் வெகு போகமுண்டு. மேலிறையின்மேலே வலஞ் சுழியானால் செல்வ முண்டு. இடஞ் சுழியானால் ஆயுசுண்டு. மடிப்பானால் விபசாரம் உண்டு.

சுட்டுவிரலினுடைய அடியிறை ஒன்றானால் கற்புடையவள் ஆவள். பல வானால் விபசாரம் உண்டு. [நடுஇறை] ஒன்றானால் மனத்திலே விபசாரம். பலவானால் வார்த்தையிலே விபசாரம். [மேலிறை ஒன்றானால் விபசாரம்] அற்பமாய் மறைக்கப்படும். பலவானால் விபசாரம் மிகவுமுண்டு; மறைப் படாது. மேலிறையின்மேலே வலஞ்சுழியாயிருந்தால் தேவதா பத்தியுண்டு. இடஞ்சுழியானால் கீர்த்தியுண்டு. மடிப்பானால் அவச் செலவுண்டு.

நடுவிரல் அடி இறை ஒன்றானால் மெத்தக் கசப்பு, சலிப்புண்டு. பலவானால் வியாதியுண்டு. நடுஇறை ஒன்றானால் ஆயுசுண்டு. பலவானால் அற்பாயுசு ஆவாள். மேலிறை ஒன்றாகில் சுகபோசனமுண்டு. பலவாகில் போசிப்புக் கிடையாது. மேலிறையின் மேலே வலஞ்சுழியாயிருந்தால் எல்லாருக்கும் நல்லவளாயிருப்பாள். இடஞ்சுழியாயிருந்தால் கோபியாவாள். மடிப் பானால் அபிமானி யாவாள்.

அணிவிரல் அடியிறை ஒன்றாகில் பூஷண முண்டு. பலவானால் கீர்த்தி யுண்டு. நடு இறை ஒன்றாகில் கனவிலே பல பேரையும் புணருவாள். நனவிலே[4] கிடையாது. பலவானால் செல்வம் மிகுதியும் உண்டு. மேலிறை ஒன்றாகில் உழைப்புண்டு. பலவானால் சுகமுண்டு. மேலிறையின் மேலே வலஞ்சுழியாய் இருந்தால் தீர்க்காயுசு உண்டு. இடஞ்சுழியானால் ஆங்காரியாவாள். மடிப்பானால் மலடியாவாள்.

[சிறுவிரலைப்பற்றிய பகுதி காணவில்லை.]

(பா-ம்) [1] சிலை. [2] உத்தம குணமாம்.

[3] இந்த இடத்திலே ஒரு பகுதி விட்டுப்போயிருப்பதாகத் தெரிகிறது.

(பா-ம்) [4] பகலிலே.

புறங்கை.

இடது புறங்கையிலே மயிராதல் மறுவாதல் ஒத்த மறுவாதல் குமிழ் மறுவாதல் பிறவி மறுவாதல் இருந்தாலும் வெகு செல்வமுண்டாம் திரும்பின வயதிலே வறுமை வரும். இந்த மறுக்கள் தோளிலேயாவது கண்ணுக்குத் தெரியாத இடத்திலே இருந்தாலும் ஆயுசு பரியந்தம் செல்வமும் அழகும் உண்டு.

கழுத்து.

கழுத்து மட்டாக நீண்டிருந்தால் நிறை செல்வம் உண்டு. வெகுவாய் நீண்டிருந்தாலும் வெகு துக்கம்; விபசாரி யாவாள். குறுகித் தடித்திருந்தால் அதமியுமாய் வெகு வறுமை யுண்டு. கழுத்து கமுகுபோலே இருந்து மயிரும் நரம்பும் இல்லாது இருந்தால் வெகு அழகும் ஆயுசும் உண்டு. ஆபரணமும் பூணுவாள். வெகுபோக முண்டு. மங்கலியக் கழுத்தியாவாள். கழுத்திலே மயிர் இருந்தால் வறுமை யுண்டாம். நரம்பு எழுந்தால் வியாதியுண்டு.

கழுத்துவரை.

கழுத்திலே மூன்று வரை வலம்புரிச் சங்குபோலே இருந்தால் உலகையாள்வாள். கற்புடையவளுமாய் நற்குணியுமாய் இருப்பாள். நாலு வரை இருந்தால் வயது நூறும் இருப்பாள். அஞ்சுவரை யிருந்தால் மிடியாவாள். இரண்டு வரை யிருந்தால் உலைச்சலுண்டு. ஒரு வரை யிருந்தால் மலடியாவாள். ஒரு வரையு மில்லாவிட்டால் அறுதலி யாவாள். கழுத்தின் நடுவே மூன்றும் வரையில் மறுவாதல் பிறவிவடுவாதல் இருந்தால் அழகும் செல்வமும் ஆயுசும் சோரச் செலவுமுண்டு. கழுத்தில் இடப்புறத்திலே ரேகை நாலில் ஒன்று இருந்தால் புருஷனுக்கு வேண்டாதவளாவாள். கழுத்தில் வலதுபுறத்திலே நாலில் ஒன்று இருந்தாலும் கைமையாவாள். பிடரி நடுவேயிருந்தால் உலகாள்வாள். காமம் இடையாது. கழுத்தைச் சுற்றி ஒரு ரேகை யிருந்தால் அவளைப் புணர்ந்தவர்களெல்லாரும் மரிப்பார்கள். கழுத்திலே சிலரேகை இருந்தால் வலிய நாணம் கொண்டு நஞ்சு தின்று சாவாள். ரத்த ரேகை யிருந்தால் அவள் கழுத்திலே எந்த நாளும் மங்கலியம் இருக்கும். இரண்டு சுழி இடஞ்சுழியா யிருந்தால் அநேகம் பிள்ளைகள் உண்டு. இரண்டு சுழி வலம்புரியா யிருந்தால் புருஷன் ஒரு தேசமும் தான் ஒரு தேசமுமாவாள். மூன்று சுழி வலம்புரியானால் விபசாரியாவாள்.

தலைமயிர்.

உச்சி மயிர் அவர் அவர் கையினாலே முப்பத்து........ங்குலமானால் அவள் புருஷன் அநேகம் பேருக்கு உதவியாயிருப்பான்.

தலை.

நடுத் தலையிலே ஒரு சுழி இடம்புரியா யிருந்தால் மிகுந்த செல்வம் உடையவள்; பாவி.

முகம்.

பட்டை முகமாக இருந்தால் பாவி, வெட்டிக் குணம், வறுமை. அவள் முகம் பார்க்க வெகு தோஷம். சிறுத்த முகமாக இருந்தால் வெகு லாபமுண்டு, கற்புடையவள். புத்திசாலி. தனபதி.

குரல்.

குரல் ஆழ்ந்திருந்தால் வறுமை, பாவி, தொழில் செய்யும்.

வாய்.

சப்பை வாயாக இருந்தால் பொல்லாதவளாயிருப்பாள்.

உதடு.

உதடு பருத்திருந்தால் வெகு கஷ்டப்படுவாள். சோரத்தனம் உண்டு. குறை உதடாயிருந்தால் காமத்து மேலே அபேட்சையும் கள்ளியுமாய் இருப்பாள். தொங்கு உதடாக இருந்தால் காமி; வறுமையாயிருப்பாள். இரு உதடும் சிறுகி இருந்தால் உத்தம ஸ்திரீயாய் நல்ல குணமும் செல்வ மும் உண்டு. உதடு, நாக்கு, [உள்ளங்] கை, [உள்ளங்] கால் இவை கறுப்பா யிருந்தால் வெகு துக்கம்; மகா பாவி, தரித்திரமாவாள்.

பல்.

பல்லு முத்துக் கோவையா யிருந்தால் ராசபோகம். உத்தமம், சற்குணி, வெகு போகி. ஒரு ஒளியுமில்லாமல் நீங்கி இருந்தால் வெகு துன்பம். வறுமை. தூர்த்தத்தனம் உண்டு. இரண்டு பல்லும் சிறுத் தாலும் பருத்த பல்லாக இருந்தாலும் வெகு துஷ்டை, பாவி, காம சிந்தனை யாவாள்.

முகம்.

முகம் பூர்ண சந்திரன் போலே இருந்தால் ராசபோகம் உடைய வள். வெகு செல்வம் உண்டு. புத்திரருண்டு. சூரியமண்டலம் போலே இருந்தால் வெகு ஐசுவரியம் உண்டு. பூர்ணாயுசும் நல்ல குணமும் வெகு புத்திரரும் உண்டு. சிங்கமுகம் போலே இருந்தால் வெகு துக்க முண்டு. இரண்டு சுழி இடம்புரியானால் நூறு வயசு. செல்வமுண்டு. மூன்று சுழி இடம்புரியானால் அநேகம் பெண்கள் சூழ இருப்பாள். ஒரு சுழி இடம் புரியானால் தாய் மரணமாவாள்; தான் வாழ்ந்திருப்பாள். மூன்று சுழி இடம்புரியானால் பிதா மரணமாம். அவள் நூறு வயசு சுகமாயிருப்பாள்.

பொது.

முன் சொன்ன லட்சணமெல்லாம் புருஷ லட்சணத்திலே சில லட்சணம் பெண்களுக்கும் புருஷருக்கும் ஒக்கும்.

அளந்து பார்க்கிற லட்சணம் எல்லாம் இரண்டு வகை பார்க்கிறதும் ஒக்கும். பெண்களுடைய லட்சணத்திலே சொன்ன மயிர் மறுவும் குமிழ் மறுவும் பெண்களுக்கும் புருஷருக்கும் சில ஒத்திருக்கும். எல்லோர் கண்ணும் காண இருக்கிற வடுவும் மறுவும் எல்லா லட்சணங்களும் மெத்தப் பலியா. அவரவர்கள் காணாதிருக்கிறதிலும் மெத்தப் பலியாது. தன் கண்ணுக்கும் பிறர் கண்ணுக்கும் காணபியாத லட்சணமெல்லாம் நன்றாய்ப் பலிக்கும்.

பெண்களுக்குப் பன்னிரண்டு[1] வயதுக்குமேல் நாற்பது வயதுமட்டும்[2] எல்லா லட்சணமும் பார்த்தால் எல்லாம் ஒத்திருக்கும். புருஷனுக்குப் பதினறு வயதுக்கு மேல் ஐம்பது வயதுமட்டும்[3] பார்த்தால் எல்லா லட்சணமும் ஒத்திருக்கும். இதுக்கு முன்னும் பின்னும் ஒவ்வாது. [இப் படிச்சொன்ன லட்சணம் எல்லாமுள்ள பெண்கள் முன்னே பத்து மாக் கொத்தும் புருஷருக்கு ஒத்திருக்கும்.][4] எல்லா லட்சணமும் உள்ள பெண் களை மற்றப் பெண்கள் ஆயிரம்பேர் எந்நேரமும் சூழ்ந்துகொண்டு இருப் பார்கள்.

(என்று) சுப்பிரமணிய சுவாமியார் ஸ்திரீ சாமுத்திரிகா லட்சணம் அகஸ் தியருக்குப் போதனையாகச் சொல்லியது.

முற்றும்.

[1] சில பிரதிகளிலே இந்த வயது 'ஒன்பது' என்று குறிக்கப்பட்டுள்ளது.
[2] சில பிரதிகளில் இந்த வயது 'ஐம்பது' என்று காணப்படுகிறது.
[3] 'எழுபத்தைந்து வயது மட்டும்' என்ற பாடமும் உண்டு.
[4] இந்தப்பகுதி விளங்கவில்லை.

நந்தி நூல்.

சர நூல்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

திரிபுர மெரித்தோன் மைந்தன் தினகரன் அடியை வாழ்த்து
மருவிய நந்தி நூலின் வளமையைப் புகலக் கேளீர்[1]
சரிவர முனிவோர் தாமும்[2] சரநூல தாகத் தோன்றக்
குருவரு ளாலே போற்றிக் குணமுடன் செப்பு வேனே. (க)

செப்புவேன் நடத்தைக் கண்டு[3] திறமுடன் குறிக ளெல்லாம்
கப்பிய கரிமு கன்தன் கனமுடை அடியை வாழ்த்தி
உப்பன மாக வேதான் வரையெல்லாம்[4] இனியா ராய்ந்தும்
அப்பிய குறிக ளெல்லாம் அளவுடன்[5] உரைப்பன் அன்றே.[6] (உ)

[உப்பனம்-விரைவாகவே ; உண்மையாகவே]

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

என்னவென்று உலகிலுள்ளோர் விபரங் கேளீர்
இக்குறிகள் ஆய்ந்துசொல்வோர்க் குறுதி யாகும்
மன்னவனே வருகுமிடர் அறிய வேண்டி
மாநிலத்தி லுரைப்பவர்க்கு வகுத்துச் சொல்வேன்
இன்னபடி வகைவகையாய்ப் பிரித்துச் சொல்வேன்
இந்நிலத்தில் குறிப்பறிந்து இயம்ப லாகும்
சொன்னபடி ஒவ்வொன்றாய்க் குணித்துப் பாரும்
சுத்தமுடன் அக்குறிகள் தோற்றும் தோற்றம்.[7] (ந)

தோற்றுமடா அக்குறிகள் யுத்தி யாலே
சொல்குருவைத் தெய்வமென்று நினைந்த பேர்க்கு
ஏற்றமுங் குறையுமில்லை விபரம் தோற்றும்[8]
இக்குறிகள் வெளியாகும் இனித்தப் பாது
மாற்றமாய் நிலவுகின்ற இடர்கள் யோகம்
வறுமையெனச் செல்வமென வருவ தெல்லாம்
சாத்திரத்தால் குறிப்பறிந்து சொல்வோர்க் காகத்
தரணியுள்ள மானிடர்க்குச் சாற்று வேனே. (ச)

தரணிதனில் மானிடர்க்குச் சொல்வேன் கேளு
தன்மையுடன் குருபாதம் தஞ்ச மென்றே
கரணமுடன் இக்குறிகள் தோற்று மாறல்[9]
கசடர்குறிப் பறியாமல் பொய்தா னென்பர்
திரணமுமே தெரியாத மூடர்க் கிந்நூல்[10]
தெரியாது இந்நூலை அவர்க் கீயாதே
அரணமுனி வோருரைத்த[11] சரநூல் தன்னை
ஆராய்ந்து குறிப்பினிலே அறிந்து கொள்ளே.[12] (ரு)

---

[1] (பா-ம்) வண்மையைப் புகழக்கேளீர். [2] தாரம்.
[3] பிரதிகளில் ' நடத்திகண்டு ' என்றே காணப்படுகிறது.
[4] (பா-ம்) முறையெல்லாம். [5]. வளமுடன்.
[6] உரை செய்வேனே ; உரைப்போம் என்றே. [7]. தோற்றும்.
[8] விவரத்தோர்க்கு. [9] தோற்றமாகும். [10] ஈந்தால்.
[11] அருணமுனிவோர் உரைத்த. [12] குறிப்பு இனிமேல் அறிவில் கேளே.

கேளப்பா முகக்குறியும் கரத்தி னுள்ள
 கிளர்ந்தோடும் [1] வரைகளெல்லாம் விரித்துச் சொல்வேன்
மீளப்பா நூலினுள [2] விபர மெல்லாம்
 விரைந்துசொல்வேன் நன்றாக விபரங் கேளாய்
நாளப்பா மூன்றிரண்டும் ஒன்றின் மேலே
 நன்றாகப் பார்அந்தக் குறிகள் காணும்
சூளப்பா இனிக்குறிகள் விபர மெல்லாம்
 சொல்லுகிறோம் [3] நன்றாகத் திறந்து தானே.

துரந்துதான் சொல்லுகிறோம் விபரங் கேளாய் [4]
 சுழிமறுவு மங்குமுதல் பஞ்ச ரேகை
பரந்துபல விதமாகக் காண்ப தெல்லாம்
 பாரிலுள்ள மானிடர்க்கா ராய்ந்து சொல்வோம்
விரைந்துசொல்வோம் நந்திநூல் முறைமை தன்னை
 விபரமெல்லாம் [5] கேட்பதற்குக் குறிப்புக் காணும்
சிறந்ததொரு தேகமதில் வரைகள் கண்டு
 தெரிந்து [6] சொல்வோம் அக்குறிகள் தெளிந்து பாரே [7]. (எ)

[மங்கு - மச்சம்]

வாரென்ற நெற்றிதனில் வரைகள் கண்டால்
 வண்மையுடன் உட்கழுத்தில் வரையுங் காணும்
பேரென்றால் அக்குறிகள் விபர மெல்லாம்
 பிரித்தினிமேல் சொல்லுகிறோம் பிரிய மாகப்
பாரென்று சொல்லுகிறோம் யுத்தி யாலே
 பார்மிசையில் உள்ளவரே [8] குறியா ராய்ந்து
கூறென்று விபரமெல்லாம் வெளியாய்ச் சொன்னோம்
 குறிப்பறிந்து ரூபத்தைக் கூறு மன்னே. (அ)

மன்னியதோர் நெற்றிதனில் வரைகள் நாலும்
 வானுலகம் உட்கழுத்தில் வரை மூன்றாகில்
உன்னியமாங் கனகபதி யோக மென்னும் [9]
 உத்தமனே சொன்னபதி யோகங் கேளாய்
எண்ணியதோர் நாலுபத்தை யாறுக் குள்ளே
 எளிதாகத் தாரம்இரண்டு இதமாய்த் தோன்றும்
வண்ணியவ னிதைவிந்து வகைய தாகில்
 வானுலகில் பிதாவுக்கு வியாதி யாமே. (கூ)

ஆமெனவே நெற்றியினில் வரைகள் மூன்று
 அருமையுடன் உட்கழுத்தில் வரைரெண் டாகில்
தோமெனவே குமிழிதனில் [10] வலது பாகம்
 சுத்தமுடன் மறுவுமொன்று தோன்று மாகில்

(பா-ம்) [1] சிறுமையாய். [2] நூலினிட. [3] சொல்லுகிறேன். [4] கேளீர். [5] விபரமாய்க். [6] தெளிந்து. [7] திறமென்பாரே. [8] உள்ளவரைக். [9] வாழ்மன்னுளில். [10] முதுகுதனில்.

லாமெனவே ஒருதாரம் வீணாய்ப் போகும்
    லுண்மையுடன் மறுதாரம் வனிதை காண்பான்
ஆமெனவே யுரைத்தோம்மூன் றிருபத் துக்குள்[1]
    அக்குறிகள் இந்நிலத்தி லாகுந் தானே. (௰)

[குமிழ் - கழுத்தின் பின்புறம், பிடரி.]

தானென்ற நெற்றியினில் வரைகள் ரெண்டும்
    தண்கமல மிடமதனில்[2] மங்கு தோன்றில்
ஊனமென்று சொல்லுகிறேன் மனைவி மக்கள்
    ஒறுத்திருப்பார்[3] இந்நிலத்தில் ஒருநாற் பஃதில்
தானென்று பொருள்தோன்றும்[4] தரணி தன்னில்
    தயவில்லார் உதவிகெட்டுத் தானே நிற்பான்
காணுமென்றேன் இக்குறிகள் பொய்தா னல்ல
    கண்டுரைத்தோம் நந்திநூல் கருணை பற்றி[5]. (௰௧)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

நெற்றியில் வரைகள் ஐந்து
    நிலைக்குறி யதுவே தோன்றில்
மெத்தவும் விசன முண்டு
    விரும்பிய பொருள்நில் லாது
கைத்தலந்[6] தன்னி லந்தக்
    குறிகளே தோன்று மாகில்
புத்திர னில்லை யென்று
    புகழ்பெற உரைத்தார் நந்தி. (௰௨)

வன்னமாய் நெற்றி தன்னில் வரைகளே மூன்றுண் டாகில்[7]
இன்னமுங் கழுத்தில் அந்த இனிவரை தோன்று மாகில்
சொன்னமும் பலவுண் டாகில்[8] தோன்றிய பலனு மில்லை
பண்ணிய பயிர்வெள் ளாமை பலித்திடா தினிமங் கானல்.[9] (௰௩)

மங்கது பால்போல் தோன்றி மறுவது வலத்தில் நிற்கத்
தொங்கிய குமிழு மாகில் சொல்லுறேன் யோகங் கேளீர்
அங்கொரு மூன்று பத்து ஆறெனும் ஆயு சுக்குள்
கங்கையில் இடர்கள் வந்து கழிவது நிசம்தான் மண்ணில்.[10] (௰௪)

சீர்பெரு நெற்றி தன்னில் தெளிந்ததோர் வரைகள் மூன்றும்
பேர்பெறு[11] கழுத்தில்ரெண்டு பெரியதோர் வரையாய்த் தோன்றில்[12]
தாரணி[13] மூன்று பத்துத் தரணியோ ருறுக் குள்ளே[14]
கூர்தரு[15] யோகம் எல்லாம் குறித்து[16] நீ யுரைக்கக் கேளே. (௰௫)

(பா-ம்) [1] கேள் மூன்றுபத்துக்குள்ளே. [2] தப்பாமல் இடதுபுறம். [3] ஒத்திருப்பர். [4] தோற்றுத். [5] தானே. [6] கொத்தலந். [7] கண்டால். [8] முன்பலன் உண்டாகில். [9] பலித்திடா தனிமங்கானல். [10] மன்னே [11] மார்பெரக். [12] வரையது பெரிதாய்த்தோன்றில். [13] தார்க்குடன். [14] ஆரித்துள்ளேன். [15] கார்க்கின்ற ; கூறுகின்ற. [16] கருத்தினில்.

கேளுமைந் தாயு சுக்குள் கெங்கையின் இடர்கள் தோற்றும்
மீளவே வருகும் யோகம் விபரங்கள் கேளாய் நீயே
நாளிலே இடர்க ளில்லை நலமுடன் பொருளும் சேரும்
மீளவே யதிக மாகி மிகுதிபெற் றிருப்பா னன்றே[1]. (௬௬)

கழிந்தபின் னுரைக்கக் கேளாய் காண்பதந் தாயு சுக்குள்
குழந்தைகள் ஐந்துண் டாகும் குணமதில் ஆண்கள் மூன்றே[2]
தழைந்திடும் தலைச்சன் பாலன் தனக்கொரு பனிரண் டுக்குள்
வளர்ந்தெழும் புவனே யென்று மாமுனி வோர்கள் சொன்னார். (௬௭)

இதனின்மேல் யோகம் கேளீர் எண்ணமுந் துசர மில்லை[3]
விதனமு மில்லை சொன்னோம் வேணுமென் றவர்கட் கெல்லாம்
உதவியாய்ப் பொருளுஞ் சேரும் உச்சித மாக வேதான்
பதிதனில் யோக னென்று பார்முனி வோர்கள் சொன்னார். (௬௮)

[துசரம் - துயரம்]

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

மண்ணியதோர் குமிழ்நீண்டு கூர்ச்சி யாக
வானுலகில் காவிசிறுத் திருந்தோ னுக்கு[4]
புண்ணியமாம் வலதுபுற மச்சங் காணும்
புருவங்க ளேதுடிக்கில் நாலு பத்துள்
சொர்ன்னமிகும் துரைகள்மெச்சச் சுகமாய் வாழ்வான்
சொல்லுகிறேன் இன்னுமொரு குறியைக் கேளாய்
வன்னமதா யக்குலத்தில் அரச னென்று
வானுலகி லேயுரைத்தோம் வண்மை கண்டே. (௬௯)

[காவி - நரம்பு]

குமிழ்நீண்டு காவிசிவப் பாகத் தோன்றில்
கோபியவன் உலகமதில்[5] குறித்துச் சொன்னோம்
தமிழுடையோன் பொருள்பெருத்தோன்[6] உலகந் தன்னில்
சாந்தமுள்ள பேர்களுக்குச் சாந்த னுவான்
குமிழ்பெருத்துக் காவியது பச்சை யாகில்
கோலமாய் அவர்களுக்குக் குறியைக் கேளாய்
புவியதனில் ஒருதாரம் தீயில் வீழ்ந்து
போகும்இரு தாரமெனப் புகழ்ந்து சொல்லே[7]. (௨0)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

நெற்றியில் வரைகள் ரெண்டு நன்கழுத் ததுபோல் தோன்றில்
முத்தியாய் மலர்ச்சி யுற்று[8] மூக்கது நீண்டு நிற்கில்
மத்திபம் வரைகள் ரெண்டும் மகிழ்ச்சியாய் நெற்றி தன்னில்
அத்துணை[9] தோற்று மாகில் அக்குறி யுரைக்கக் கேளே. (௨௧)

(பா-ம்) [1] மிகுதியற்றிருப்பானென்றே.
[2] ஆணும் மூன்று.
[3] அதனுட யோகம் கேளீர் அறிவினில் எண்ணம் வேண்டாம்.
[4] காவியது சிறுத்தோனுக்கு. [5] உலகுதனில்.
[6] மிகுந்தோன். [7] போகுமது மறுதாரம் புவியில் கண்டே.
[8] மலர்சி றுத்து. [9] அத்தனை.

உரைக்கிறேன் தாரம் ரெண்டு யுக்தியில்[1] அசட னுவான்
சிறக்கவே முப்பத் தொன்றில் தெளிந்துசொல் ஆணு மொன்று
பொறுக்குமே கடனுஞ் செல்வம் பூர்த்தியாய்ச் சரிபோல் நிற்கும்
வருத்தமாய் விதன மில்லை வடுப்படும் சகோத ரத்தில். (உ௰உ)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

சகோதரத்தில் பெண்ணினும் ஆணி னுந்தான்
தன்மையுடன் வடுப்படுங் காவி தன்னில்
சோகமுடன் ஒருபிள்ளை நதியில் வீழும்
சொல்லுகிறேன் இக்குறிகள் இறுதி யாகும்
அகோரமுடன் இக்குறிகள் நாலு பத்துள்
ஆகுமெனக் குறிப்பினிமே லறிந்து சொல்வோம்
சுகமுண்டாய்த் தினம்நாலு பெரியோ னுவான்
தோன்றுமது பின்பிறந்த பிள்ளை யாலே. (உ௰ங)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

அஷ்டமி மதியம் போலே அழகுறு நெற்றி யாகில்
இஷ்டமாய்க் காவி தன்னில் இனிக்குறி பசுமை யாகில்
பட்டத்துக் குடைய னுவான் பார்தனில் அரச னுவான்
ஒட்டிய சேனைக் கெல்லாம் ஒருபடைத் தலைவ னுமே. (உ௰ச)

காவிளை மலரைப் போலே காவியில் தோன்றி யின்னம்
தூவிய மலர்கள் போலே தோன்றிடக் குமிழு மீதே
மேவிய மச்ச மொன்று விரைந்திட வலத்தில் தோன்றில்
தாவினில் பெரியோ னென்று தவமுனி வோர்கள் சொன்னர்.
(உ௰ரு)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

இடதுபுறம் மங்கிருந்து மறுவுந் தோன்றில்
இனிவரும் ஊனமெல்லாம் இயம்பக் கேளீர்
படிமிசையில் நெற்றிவரை யிரண்டு மூன்றில்
பருத்தவரை யாய்ப்பலருங் கூடி நின்றால்
அடுத்துடனே இனிச்சொல்வேன் [2] பொருள் நில்லாது
வாழ்கின்ற உயிர்மனைவி சேத மாகும்
தொடுத்தவரை நாலிருந்தால் வலத்தில் மங்கில்
தோன்றுது இக்குறிகள் தொலையுந் தானே. (உ௰சு)

தெளிந்துசொல்வேன் இன்னும்ஒரு சேதி கேளாய்
சிரமுடனே இதழ்ரெண்டும் சிறுத்து நிற்கில்
கொழுந்துமலர் [3] போலிருக்கும் காவி கண்டால்
குணமுடனே திண்டகண்டம் [4] குறியைக் கேளாய்

(பா-ம்) [1] முதலில். [2] வடுத்துயியம்னயினிதொன்று.
[3] தெளிந்த மலர், [4] காவிக் கழகுண்டாம் திறமுடனே கண்டமது.

வெளுத்தமுக மாய்வந்து வலத்தில் மச்சம்
வீற்றிருந்தால் யோகனென்னும் விபரந் தோற்றும்
தலங்களுக்கு முதல்வனென்று புகழ்ந்து சொன்னோம்
தாரணியில் ரசனென்று சாற்ற லாமே. (உ௰எ)

சாற்றுகிறேன் அடியிதழும் பெருத்து நீண்டு [1]
தலைகனத்து இடத்தில்மங்கு தனியாய்த் தோன்றில்
மாற்றமுடன் கடன்அழுந்தி வருமுப் பத்துள்
வழுத்துகின்ற ஆசானும் மாறிப் போவான்
வாய்த்ததுணை ஒருவரில்லை ஒருவன் நிற்பான்
வளம்பெறவே பெண்ணுதவி [2] வருவ துண்டு
கூற்றெனவே இக்குறிகள் எல்லாம் தோன்றும்
குழந்தைமுதற் பெண்பிறக்கு மென்று சொல்லே. (உ௰அ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

நெற்றியில் பய்று போலே நேசமாய் வரைகள் ஐந்தும்
உற்றமுன் கழுத்தில் மூன்று உதவியாய் வரையி ருந்தும்
மற்றதில் மாலை யாக மணிக்கழுத் ததுபோல் தோன்றில்
வெற்றியாய் வலது கன்னந் தனில்மறு விருந்தாற் கேளே. (உ௰கூ)

கேளொரு மூன்று பத்துக் கிருபையாய் அஞ்சுக் குள்ளே
மீளவே பால னுரும் விசனமும் அலைச்சல் தோன்றும்
தாளவே மூன்று போகும் தாரணி தனிலே சொன்னோம்
ஆளவே குறியி தென்று அருள்முனி உரைத்த நூலே. (௩௰)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

கூறியதோர் நெற்றியினில் வரைகள் நாலுங்
குறித்தநடு வரைகள்ரெண்டு [3] துண்டாய் நின்றால்
மீறியதோர் உள்கழுத்தில் வரைகள் மூன்று
வீற்றிருந்தால் சொல்லுகிறோம் விரைந்து கேளீர்
தாரணியில் பொருள்அதிக மில்லை சொன்னோம்
தன்பிறப்பில் அஞ்சில் ரெண்டு [4] தணிந்து போகும்
ஆறுமைந்து [5] மூன்றுபத்துக் குள்ளே தோற்றும்
அருமையறிந்து [6] உண்டெனவே அறிந்து கொள்ளே. (௩௰க)

முத்தியுடன் நெற்றியினில் வரைகள் மூன்று
முகமலர்ந்து கழுத்தில்வரை ரெண்ட தாகில்
அத்தனையுங் காணுமென்று குறிகள் சொன்னோம்
அக்குறியைப் பொய்யெனவே அகற்ற வேண்டாம்

(பா-ம்) [1] பெருத்து நின்று. [2] வாழ்பெறவே ஒன்றுதவி. [3] குறித்தாடும்வரை ரெண்டு. [4] அஞ்சுரெண்டும். [5] அருமையிது. [6] ஆறுமஞ்சு.

வெற்றி[1] பெரு விரலடியில் விரைந்து பார்க்கில்
வெண்கமல குண்டலம்போல் வீற்றி ருந்தால்
பத்தியுடன் மூன்றுபத்து அஞ்சுக் குள்ளே
பார்மிசையி லேயலைந்து[2] பலனு ண்டாமே. (௩௰௨)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

சொல்லுவேன் நெற்றி தன்னில் துணைவரை நாலுண் டாகில்
அல்லலால்[3] உட்க ழுத்தில் இனிவரை ஒன்றே யாகில்
தொல்லுல கத்தில் வாழ்வு[4] சொல்லுவேன் யோகங் கேளீர்
கல்வியும் பொருளு மில்லை கடன்மிக வில்லை என்னே. (௩௰௩)

இன்னமொன் றுரைக்கக் கேளாய் ஏழோடு மூன்று பத்தில்
வன்னமாய்ப் பொருளு மில்லை வாழ்ந்திட அரசு மில்லை[5]
மன்னிய வனிதை ரெண்டு வானுல கத்தி லுண்டாம்
சொன்னேன்அவ் வாயு சுக்குள் மனைவியைப் பிரிவா னென்றே.
(௩௰௪)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

பொன்னிறமாய்ப் பயறதுபோல் நெற்றி தன்னில்
பூட்டிருக்கும் வரைநாலில் ஒன்று துண்டாய்
இன்னமந்த உள்கழுத்தில் வரைரெண் டாகில்[6]
இசைந்துவரும் யோகமெல்லாம் இயம்பக் கேளீர்[7]
பன்னியதோர் மூன்றுபத்தில் வற்றுச் செல்வம்[8]
பகர்வானென் றேயுரைப்போம் பாரி னுள்ளே[9]
சன்னமாய் வலத்தில்மச்சந் தோற்றில் சொல்வேன்
தனக்குமந்தக் குறிகள்கண்டால் சாற்ற லாமே[10]. (௩௰௫)

சாற்றலாம் யோகமுண்டு தனங்க ளுண்டு
சகலருக்கும் உபகாரி சாந்த னுவான்
ஊற்றமுண்டாம் பொருளுமுண்டாம் விபரம் உண்டாம்
உதவியொடும் அஞ்சுமூன் றினிக்கக் கண்டாய்[11]
மாற்றமின்றி வாழ்ந்திருப்பார் எண்பத் தேழு
வயசுக்குள் அதிகமாய் வாழ்வு கொள்வார்
வேற்றிலகு மென்றேதான்[12] முனிவர் ஆய்ந்து
விபரமுரைத் தார்களினி விரும்பிக் கேளே. (௩௰௬)

(பா-ம்) [1] நெற்றி. [2] பார்மீதில் தான் அலைந்து. [3] எல்லையாம்.
[4] தொல்லுலகில் வாழ்வுதானும். [5] சுகமும் இல்லை.
[6] உன்னி லத்தில் குறிகள் கண்டால் சொல்லக் கேளு. [7] இயம்புவேன் கேள்.
[8] மூன்றுபத்து அஞ்சுக்குள்ளே. [9] வற்றாநற் செல்வமுண்டாய் வாழ்ந்தி ருப்பான்.
[10] சாற்றக் கேளே. [11] உண்மையுடன் அஞ்சுமூன் றினிலே கண்டம்.
[12] வேற்றியுண் டன்றெனவே.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

நெற்றியில் வரைகள் ரெண்டு நிலைகுலைந் ததுபோல்தோன்றில்
மெத்தவும் பொருளு மில்லை வியர்த்த மாய்ப்[1] பொருளுந்
சித்தமா யிரண்டு பத்து சேர்ந்ததோர்[2] மூன்றினுள்ளே [தோற்பான்
இக்குறி காணு மென்றே[3] இயம்பினர் முனிவோர் தாமே. (௩௰௭)

இத்தின்மேல் தார மென்னில் இருபத்தஞ் சுள்ளே யாகும்
தத்துவ மொன்று தோணும் தனக்குறு குறிகள் கண்டால்[4]
முத்துறு பொருளுண் டாகும் முன்பிறந் ததுவே யானால்
வெற்றியு மாகு மென்று விளம்பினர் முனிவர் தாமே. (௩௰௮)

கைவரை பார்க்க

நெற்றியில் வரைகள் மூன்றும் நிலைக்குறித் துண்டாய்[5] நின்றால்
மத்திபங் கழுத்தில் ரெண்டு வரையது தோன்று மாகில்
சித்தமா யிடர்கள் தோன்றும் என்றுசொல் இருப துக்குள்
மெத்தவும் வறுமை ஏக்கம்[6] விரைந்துகேள் இனிமேல் என்றே.
(௩௰௯)

என்றன[7] யினிமே லந்த இருபத்தஞ் சாயு சுக்குள்
நன்றெனப் பொருள்கள் சேரும் நல்லதோர் வித்தை யுண்டாம்
பெண்டிர்கள் வண்மை வாழ்வும் பிரியமா யதுமேல் வாழ்வான்
சென்றதோர் தார மொன்று சிதறிப்போம் தீயி லன்றே[8]. (௪௰)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

செங்கையிலே வரைகளுடை யோகங் கேளீர்
சிவந்திருக்க அன்னவரைக் கொக்கி யாகத்
தங்கியது மேலேறிக் கொடுங்கை போலே
தன்னருகில் கதிர்போல வரையொன் றாகில்
அங்கையொரு சிறுவிரலில் வரைகள் நாலு
அங்குலத்தில் ரெண்டுவரை யாகில் கேளீர்
பங்குவித மாயிருபத் தஞ்சுக் குள்ளே
பழமையிடக் கண்துடிக்கும் இன்னம் பத்தில். (௪௰௧)

இன்னமதற் கொருகுறிப்பு[9] உண்டு சொல்வேன்
இடதுகண்ணும் படபடென்று துடித்து நிற்கும்
சின்மயமாய்[10] வலப்புறத்தில் மச்ச மொன்று
சிறந்திருக்கும் மார்பதனில் தொடையி னுள்ளே

(பா-ம்) [1] வியமாய்ப்; வினையுடன். [2] திருமபெர. [3] இத்தலக் குறிகள் காணும். [4] தத்துவமாகத் தோன்றும் தனக்குமிக் குறிகள்கண்டால். [5] நிலைக்குறித் துண்டாய். [6] மெத்த மேல் வருகும் யோகம். [7] என்றிட. [8] தீயினில் சிதறு மென்றே. [9] தீர்ப்பு. [10] சின்னமையாய்; சின்னமாய்.

மன்னவனுக் கிக்குறிகள் இருந்தால் கேளு
வறுமையினால் அகத்தைவிட்டு வருஷம் போவான்[1]
முன்னையொரு பெண்பிறந்து அதுவும் போகும்
முறைமையுடன்[2] ஆண்பிறக்கு மொழியைக் கேளே. (சுயஉ)

மொழிந்திடுவேன் அதன்மேலும் நடத்தை கேளாய்
மூன்றுபத்தஞ் சுள்படவே வறுமை தீர்ந்து
பழகிவந்த வினைகளெல்லாம் பறந்து போகும்
பார்மிசையில் செல்வமிகும் கல்வி சேரும்[3]
தளவாய்போல் அதிகமாய் நினைத்த தெல்லாம்
தனக்குறுதி யாமென்று சார்ந்து சொன்னோம்
உள்ளதென வேயுரைத்தோம் குறிகள் பார்த்து
உமக்குறுதி யாகுமென்றோம் உண்மை தானே. (சுயஙு)

கைதனிலே[4] அன்னவரை கீழே நோக்கிக்
கனத்த[5]ரெண்டு வரைபிரிந்தால் அதனைக் கேளாய்[6]
உய்பெரிய[7] விரலடியில் பிணைந்து நின்றால்
உத்தமனே உறவுசெய்யும் யோகங் கேளாய்
மெய்யுரைத்தோம் பொருளுமில்லை கடனுந் தேர்ந்து[8]
விசனமெத்த அணைத்திருக்கும் விளைவு மில்லை
பொய்யெனவே சொல்வதில்லை இனிக்கு றிப்புப்
போன்ற[9]மச்சம் இடத்தில்நின்றால் பிரித்துச் சொல்லே.
(சுயச)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

பெருவரை கையி னுள்ளே பிரியமாய்த் தனித்துப் பார்க்கில்
மருவிய மணிக்கை தொட்டு வருவரை ஆணில் சேர்ந்தால்
தெருவினில் வந்த ரேகை சிறந்த[10]பெண் ணோடே நிற்கில்
வருவது போவ துண்டு வான்பொருள் அதிக மில்லை. (சுயரு)

கூடிய மணிக்கை தன்னில் குடியிருந் தெழுந்தாற் போலே
நாடியே வருகும் போது நடுவிலொன் றட்டம் வீழ்ந்தால்
தேடிய தனங்க ளெல்லாம் தெருவினி லிறைத்தாற் போலே
ஓடியே போகும் என்று உரைத்தனர் பெரியோர் நந்தி.[11] (சுயசு)

மணிதனி லிருந்த ரேகை வழிகண்ட மனுஷன் போலே
துணைகொண்டு வருவ தாகில் சொல்லுவேன் யோகங் கேளாய்
இணைகொண்ட பெண்ணின் மீதில் ஏறியே தாட்டி[12] நின்றால்
தனமது சேரும் பத்து நான்கினில் தனக்குத் தானே. (சுயஎ)

(பா-ம்) [1] செல்வான்; எல்லாம். [2] முகமையுடன். [3] மருவிச் சேரும்; கலவி சேரும்.
[4] கையதனில். [5] கருது. [6] அதைக் கேளீர்.
[7] உய்யபெரு. [8] தோத்து. [9] தோன்ற. [10] சிறப்புடன்.
[11] அன்றி உயிரும்விட்டகன்று போகும்; யேந்துரப் பெண்ணுயிரு விட்டகலத்தானே.
[12] தாண்டி.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

வரையென்றே அறிவதற்குப் பொருளைக் கேளாய்
வானகத்தில் மீன்வரைதான் [1] அன்ன மாகும்
தெருவில்நின்ற நடுவரைதான் பெண்ண தாகும்
தேற்றியதோர் மேல்வரைதான் ஆண தாகும்
குருவரைகள் [2] எதென்றால் விளங்கக் கேளாய்
குறுக்கிருந்து ஆணில்நின்றால் டமர மாகும்
பெருவிரலி னடியிலொரு கீற்றாய் நின்றால்
பேசியதோர் அவ்வகையே [3] பிழைப்பி மூக்கும். (சத்அ)

பெண்வரையி லிருக்கும்வரை யோகங் கேளாய்
பேசியதோர் உட்புறத்தில் குறுக்கி நின்றால்
வண்வரையே வடவனென்று[4] உரைக்க லாகும்
வரிசைநடு வரைநோயே வரையென் றெண்ணு
தென்புறத்தில் குறுக்கிலும் சாப்பில் [5] நின்றால்
செல்வவரை யிதுவெனவே திறமாய்ச் சொல்லு
ஆண்குலத்தில் அன்னமதில் குறுக்கில்[6] நிற்கில்
அவ்வரையே பஞ்சையென அறிந்து கொள்ளே. (சயகூ)

மத்தகத்துக் குள்படவே ஆணின் பக்கம்
வாழ்ந்தவரை தத்துவென வகையாய்ச் சொல்லு
முத்திபெற ஆண்பெணுக்கும் நடுவில் நிற்கும்
மோகனமா வரையெனவே முனிந்து சொல்லு
பத்திபெற வித்தவரை ஏதோ வென்னில்
பரிந்தன்னம் பெண்நடுவே பகிர்ந்து பாரு
வெற்றிபெற ரெண்டுவரை சேர்ந்து நிற்கும்
வித்தைவரை யென்றுசொல்லி விரைந்து பாரே. (ருய)

தனவரையும் பெண்வரைக்குள் [7] தயங்கி நின்றால்
தனதுபொருள் வருவதுவும் போவ துண்டு
தனவரையும் பெண்தாட்டி அன்னம் பார்க்கில்
தரணியி லேயுனக்குத் தனங்கள் சேரும்
தனவரையும் அன்னவரை சேர்ந்து நிற்கில்
தனஞ்சேரும் இனஞ்சேரும் தரணி தன்னில்
தனவரையு மிதுவெல்லாங் கடந்து நின்றால்
தானடக்குங் குறிகுணங்கள் அதற்குக் கொள்ளே [8]. (ருயக)

(பா-ம்) [1] வான்கரத்தில் முன்வரைதான். [2] குறுவரைகள். [3] அவ்வரையே. [4] பணவரையென்றேயுலகில். [5] குறிகில் உறுசாய் ; குறுகியது சாய்ந்து. [6] குறுக்கி. [7] பெண்வரையும். [8] தரணியினை யாளவென்றே சாற்று வோமே ;

இந்தப் பாட்டின் பின் இரண்டு அடிகளுக்குப் பின்வருமாறு வேறு பாடம் காணப்படுகிறது :

இனஞ்சேரும் தரணி தன்னில் தனவரையும்
இதுவெல்லாம் கடந்துநின்றால் சொல்லக் கேளு
நன்னயமாய் உலகுதனில் மானி டர்க்கு
நடக்கும் குறிகுணங்கள் நவிலக் கேளே.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

நிலையன்ன வரைகள் தாட்டி
நெல்மூக்குப் பருவங் காணில்
பலவான்என் றுலகம் சொல்லும்
பிரியமாய்ப் பொருள்கள் சேரும்
பலர்க்குப காரி யாவான்
பாரினில் நீளங் காணில்
உலகத்தில் ராசா வாவான்
மூங்கநெற் பருவங் காணில். (ருயஉ)

சொல்லிய வரைகள் தாண்டித் தோற்றமாய் அங்கு லத்தில்
எல்லையி லேறி நிற்க இனிவரும் யோகங் கேளீர்
செல்வமும் மிகவுண் டாகித் திரவியத் துடனே வாழ்வான்
வெல்லவே முழிகள் தாட்டில் வேந்தனென் றுரைக்க லாமே. (ருயங)

ஓங்கிய நாகந் தன்னில் ஒருமுழ் தாட்டி நிற்கில் [1]
பாங்குடன் மேல்மு ழிக்குள் பற்றியே நிற்கு மாகில்
தாங்கிய [2] குழவி பெண்டிர் தனங்களே[3] ஒறுத்து நின்று
தேங்கியே நாலு பத்துச் சித்தனென் றுரைக்க லாமே. (ருயச)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

சிந்தைதனி லேநினைந்து திறமாய்ப் பார்க்கில்
தேயுவெனும் அங்குலத்தில் குறிகள் கண்டால்
மைந்தருக்கு விசனமுண்டாம் பொருள் நில்லாது
வரும்பூசல் வரையின்கீழ்க் குறுக்கி நின்றால்
விந்தையுடன் பொருளுமுண்டாம் புறத்தின் மேலே [4]
வீற்றிருந்தால் நல்லதென்று விரும்பிக் கொள்ளாய் [5]
அந்தரத்தில் குறுக்கிநின்றால் யோக னென்று
அறிவுடனே இக்குறிப்பை யறிந்து சொல்லே [6]. (ருயரு)

ஒவ்வொரு விரலுக் கைவரை யிருக்கும்
ஓங்கியதோர் அங்குலங்கள் நாலுக் குள்ளே
நவ்விய வரைக்குப்பேர்தான் சொல்லக் கேளாய்
நட்சத்ர வரையென்று நாமம் சொல்லு
இவ்வுலகில் அறிவோர்க்கு நன்றாய்த் தானும்
இயல்பாகப் பூட்டினோம் நந்திநூல் தன்னில்
ஒவ்வியதோர் வரைகளுடை யுறுதி தன்னை
உரைத்திடுவீர் நன்றாக உலகத் தோர்க்கே.

(பா-ம்) [1] நின்றால். [2] தாங்கியே. [3] தங்களை.
[4] அதனின்மேலே. [5] யோகனென்று விளம்பு வார்கள்.
[6] அந்தமுடன் இக்குறிப்பை ஆய்ந்து பார்த்து
அறிவுடனே மானிடருக்கு அறிந்து சொல்லே.

[இதன் வேறு பாடம்.

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

ஒவ்வொரு விரலுக் கைவரை யிருக்கும்
ஓங்கிய அங்குலம் நாலில்
ஒவ்விய வரைக்கு நாமமே தென்னில்
நட்சத்ர மென்றினி யுரைத்தோம்
இவ்வுல கத்திற் குறிப்பறி வோர்க்குப்
பூட்டினேம் நந்திநூல் தன்னில்
ஒவ்விய வரையி னுறுதிக ளறிந்தே
உரைத்திடும் உலகத்தோர் தமக்கே.] (௩௰௬)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

கொடுங்கையினில் வரையிருக்கும் யோகங் கேளீர்
கூடியதோர் அன்னவரை ஏறின் மேற்கே
வடங்கமில்லா வரையிருந்தால் உதவி யென்று
வானுலகில் கண்டுசொல்லும் வழியாய்ப் பார்த்துத்
தொடங்கியதோர் அன்னவரை விரற்குக் கீழே
தோற்றுமிகத் தாரைவரை துணிந்து தானே
அடங்கியதோர் வரைகளெல்லாம் மனத்தில் நோக்கில்
அவ்வரையை யுத்தியினால் அறிந்து கொள்ளே.]

[இதன் வேறு பாடம்.

அங்கையிலே வரையிருக்கும் யோகம் கேளீர்
அன்னவரை தன்னுடைய பேரின் மேற்கே
வங்கமில்லா வரையிருந்தால் உதவி என்று
வானுலகில் கண்டுசொல்லு வழியாய்ப் பார்த்து
துங்கவனே ரெண்டுவரை வேருய்த் தோற்றும்
தொல்லுலகில் மிகத்தானே துணிந்து தானே
அங்கியதோர் வரைகளெல்லாம் மனத்தில் நோக்கி
அவ்வரையை யுக்தியினால் அறிந்து கொள்ளே.] (௩௰௭)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

கரமதில் எழுந்த கடைவிரல் நாமம்
கண்டுகொள் அப்புஎன் றுரைத்தோம்
சிறுவிரல் தாட்டித் தேங்கிய விரலைத்
தேயுவாய் வாயுவாய் உரைப்போம்
மருவிய காட்டு மவ்விரல் நாமம்
வானென்றே உரைத்தனர் முனிவர்
பெருவிரல் அதுவே ப்ரிதிவியென் றுரைப்போம்
பார்மிசை யுள்ளோர்க ளறிய. (௩௰௮)

அப்பினில் பிறந்த அடிவரை மேஷம்
அக்குறி போலினி அறிவாய்
இப்படி நாலு விரலுக்குள் ளடங்கி
இருக்கும்மீன் ராசியின் நேர்மை

செப்பிய ப்ரிதிவி விரலினுக் குள்ளே
தீர்க்கமா யிருக்கின்ற வரைக்கு
ஒப்பிய உரைத்தோம் குண்டல மெனவே
உகந்துகொள் ளுலகினுள் ளோரே. (௫௰௯)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

வாயுவெனும் நடுவிரலில் சோதி பக்கம்
மதிப்பில்லாச் சிதர்போல வரையொன் றாகில்
தாயகமாய் மேலேறி நிற்கும் போது
சஞ்சலங்க ளில்லைவீடு தனங்கள் சேரும்
ஆயுசெனும் தொண்ணூற்று ரண்டே யோங்கும்
அக்குறிகள் கண்டக்கால் அறிந்து சொல்லு
போய்விடும் வறுமையெல்லாம் நாலு பத்தில்
புத்திரர்கள் ஐந்தெனவே புகழ்ந்து சொல்லே. (௬௰)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

அப்பெனும் அங்கு லத்தில் அணிவரை மேஷத் தின்கீழ்
ஒப்பியே வரையொன் றாகில் உத்தமர்க் குதவி [1] மட்டும்
தப்பிலா ரிஷபத் தின்கீழ் தயங்கிய வரையு மாகில்
சர்ப்பனை கால மென்று தயவுடன் உரைத்தார் நந்தி [2]. (௬௰௧)

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

இன்னமொரு குறிப்புண்டு சொல்லக் கேளாய்
இசைந்தவரை யிரண்டுக்குள் நட்டு நிற்கில் [3]
சொன்னதா ரெண்டுமொன்று [4] தோன்று மாகில்
சொல்லுவேன் அவர்களுக்கு மோச மில்லை.
வன்னமதாய்ப் பொருள்சேரும் உள்ளத் துக்குள்
வாழ்ந்திருப்பா ரென்றுமுனி வகுத்த நூலை [5]
மன்னுலகில் வாழ்வதற்குக் குறிகள் சொன்னோம்
வகைவகையாய் இக்குறிகள் வகுத்துச் சொல்லே. (௬௰௨)

அறிந்துகொள்வாய் இன்னுமொரு குறிப்புச் சொல்வேன்
அளவியுரங் கடந்துநடு விரலும் நிற்கில்
தெரிந்துமுன்னே சொன்னதிலே அதிக மாகுஞ்
செல்வம்மிகும் மக்கள்பெண்டிர் வருவா யென்று [6]
திருவுலகில் வாழ்ந்திருப்பார் நூற்றாண் டுக்கு
திரவியத்தின் மேல்படுப்பான் [7] செல்வ னுவான்
மருவியதோர் மங்கைசுகம் அனுபோ கித்து
வாழ்ந்திருப்பார் இனியெனவே [8] வகுத்துச் சொல்லே. (௬௰௩)

(பா-ம்) [1] உற்றதுக்குதவி. [2] உரைத்த நூலே.
[3] விரலுக்குள் எங்கும் நிற்கில.
[4] சொன்னதொரு குணமொன்று ; சொன்னதுதான் ரெண்டிலொன்று.
[5] வகுத்துச் சொன்னர். [6] சேர்ந்து வாழ்வர். [7] மேற்படுவான். [8] பார்தனிலே.

செல்வம்பேர் மிகுதியுண்டாம் அங்குஷ்டம் தாட்டில்[1]
திரமான வரையொன்று குறுக்கில் நிற்கில்[2]
கல்விபொருள் மக்கள்பெண்டிர் கனமா யுண்டு
கனகமணிச் சிவிகைவரும் கண்டு கொள்ளும்
சொல்லிசைய[3] உலகமதில் யோக னுவான்
துரைகள்மெச்சி அதிகமுடன் பட்டம் வைப்பார்
தலைவனெனத் தண்டிகையே தனக்குண் டாகில்
சகலருக்குங் குருவெனவே சாற்ற லாமே. (கூ௰௪)

முன்கையினில் வரையிரண்டு சரியாய் நின்று
முன்னிருக்கும் இருவரையும்[4] பிணைந்து நிற்கில்
தங்கியதோர் நாலுமொன்று யிடர்கள் தோன்றும்[5]
தானொருவ னேஅரசுக் கதிக னுவான்
பெண்களிரண் டுடன்பிறப்பு உண்டாய் நிற்கும்
பெரியதோர் பன்னிரண்டில் யோக னுகும்.
இங்கிதமாய் இன்னமுள்ள பலன்க ளெல்லாம்
இசைவுடனே சொல்லுகிறேம் இருந்து கேளே. (கூ௰௫)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

கூரிய மணிக்கை தன்னில் குணவரை யொன்ற தாகில்[6]
தாரணி தனிலே யுள்ளோர் தனக்கெளி யவனே யாகும்
வீரிய வரைரெண் டாகில் விசனமும் பொருளு முண்டாம்
நேருள்ள வரைமூன் ருகில் நினைத்திடும யோகங் கேளீர். (கூ௰௬)

யோகமாய்ப் பொருளும் சேரும் உதவிகள் அனந்த முண்டாம்
தேகமும் வாடா தென்று திருவுல கத்தில் சொன்னேம்
ஆகமா மணியும் யோகம் அரும்பொருள் மிகவுண் டாகும்
ஆகுமென் றுரைத்திட் டோமே ஆறஞ்சு பத்தி னுள்ளே. (கூ௰௭)

மூன்றுதான் வரையாய் நெற்றி முழுக்காகத் திரண்டு மாகில்
பூண்டிடும் தார மொன்று புத்திரன் முன்பில் தோன்றும்
ஈண்டிய நாலு பத்தில் விசனமே மிகுதி யுண்டாம்
ஆண்டிடு மிதன்மே லேஆண் பிள்ளையாற் பொருளுண்
[டாமே. (கூ௰௮)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

பிரிதிவியெனு மேல்முழிக்குள் வரைகள் பார்த்துப்
பிள்ளைவரை யதுவென்றே பிரித்துச் சொன்னேம்
குறையில்லா வரையிருந்தால் குணித்துப் பார்த்துக்
குழவியெனும் அக்குறிகண் டினிமேல் கூறும்

(பா-ம்) [1] மனுஷர் தாட்டில். [2] குறுகி நிற்கில்.
[3] சொல்விசைய. [4] இவ்வரையும். [5] தயங்கி நிற்கில்.
[6] ஒன்றேயாகில்,

கரியெனவே அவ்வரையில் காணும் போது
கைநழுவிப் போச்சுதென்றே கருத்தில் சொன்னோம்,
வரையதுவே பளபளெனச் சிவப்பாய்த் தோன்றில்
வந்தபிள்ளை யதுவெனவே மகிழ்ந்து சொல்லே. (சூ௬௧)

மத்தகத்தி லிருக்கும்வரை குழவி யாகும்
வடுப்படா தேயிருந்தால் மகிழ்ந்து சொல்லு
அத்தியில்லாச் சரிபோக நின்றால் சொல்லு
அங்குலத்தில் மங்கிநின்றால் மலைக்க வேண்டாம் [1]
இத்தலத்தில் பளபளென வரைகள் கண்டால்
இயம்புவீர் அதுகுழவி யென்றே சொல்லு
உத்தியிலே கண்டுகுறி குணங்கள் சொன்னால்
உமக்குறுதி யாகுமென்று உரைத்தார் முன்னோர். (௭௰)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

பெருவிரல் முழியின் மேலே பிரியமாய்க் குழிந்து பார்த்தால்
குறையில்லா வரையி ருந்தால் கூறுவீர் உண்மை யென்று
சிறுபெரு வரையில் அங்கே சிவந்தினி திருக்கும் போது
மீரியவே பிறந்த தென்று விபரங்கள் தெரிந்து சொல்லே. (௭௰௧)

சொல்லுவேன் கேளு மின்னம் தூக்கறுப்ப தனில் தோன்று
எல்லையில் மடிந்த தென்றே யினங்குறித் ததுவே சொல்லும்
தொல்லையில் புனைந்து நின்றால் துணையினும் பிறக்கு மென்று
நில்லுநீ குணித்துப் பார்த்து நீயது குறித்துச் சொல்லே. (௭௰௨)

ஐவிர லதுபோல் தோன்றும் அங்குல மதனி லெல்லாம்
செய்விர லதனி லெல்லாம் தெளிந்துநீ பார்க்க வேண்டாம்
உய்பெரு விரலி லொன்றே உணர்ந்துநீர் குணித்துப் பார்க்கில்
பொய்யுரைத் திடவு மில்லை பூட்டினார் முனிவர் தாமே. (௭௰௩)

முனிவர்கள் உரைத்த நூலை மூவுல கறியச் சொன்னோம்
கனிவுடன் வரைகள் யோகக் கருத்தறிந் துரைப்ப பவர்க்கும்
நினைவினில் வெளிச்சம் காணும் நீடியே குறிப்புச் சிக்கும்
மனதினில் வரைஆ ராய்ந்து மகிழ்ந்தினி உரைத்தி டாயே. (௭௰௪)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

ஆண்வரையும் பெண்வரையும் அன்னந் தானும்
அதுமூன்றும் சரிபோக இருக்கு மாகில்
தானலைந்து தான்பிழைப்பான் சிறிது நாளில்
அகங்குறையா திருக்குமங்கே பொருள்கள் சேரும்
ஊண்குறைந்தால் அன்னமது குறைய நிற்கும்
உத்தமனே தனங்குறைந்தால் பெண்குறைந்து நிற்கும்
ஆண்குறைந்தால் தனக்குமொரு சலிப்புத் தோன்றும்
அக்குறிகள் ஆராய்ந்து அறிவால் சொல்லே. (௭௰௫)

(பா-ம்) [1] மறுக்கவேண்டாம்,

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

கரமது நீட்டிப் பார்க்கில் கையினில் விரல்கள் சேரச்
சரிவர இடைவி டாமற் சார்ந்துற இருக்கு மாகில்
பொருளுண்டு வறுமை யில்லைப் புகழ்ந்துதா னிடைவிட் டக்கால்
வரவரச் செலவா மென்று வாழ்முனி உரைத்தார் நூலே. (எயசு)

கையினில் வரைகள் எல்லாம் கறுத்திடத் தோன்று மாகில்
மெய்யுளே பலவி சாரம் வேண்டிய கடனும் தோன்றும்
செய்யவே வரைகள் எல்லாம் சிவந்திட உறுதி சேரும்
மெய்யுளே செல்வம் யோகம் விளையுமென் றுரைத்தார் முன்னோர்.
(எயஎ)

நெய்நிறம் போலே யந்த நீள்வரை நீல மாகில்
பையவே கடனுஞ் செல்வம் பகர்ந்திட்ட வழியாய்த் தோன்றும்
உய்யமா னிறமே போல உறுதிகள் தோற்று மாகில்
எய்மூன்று பத்தி ஞலில் இடர்வரு மென்று சொல்லே. (எயஅ)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

அச்சரமா யன்னவரைக் குள்ளே ஆகில்
ஆண்வரைக்கும் பெண்வரைக்கும் நடுவே யாகில்
வச்சதொரு சவுக்கமதாய் வரையொன் றாகில்
வானுலகிற் கனகபதி யோகங் கேளீர்
எச்சுவய தாய்வாழ்வர் இனியுத்தி யோகம்
இசைத்தவரை மூர்த்தியென் றியம்ப லாகும்
ஒச்சமில்லா வாழ்வடைவர் இருபத் தஞ்சுள்
உத்தியோக மாகுமென்று உகந்து சொன்னோம். (எயகூ)

அன்னவரை மேலேறில் அதிகம் செல்வம்
ஆறஞ்சுக் குட்படவே அதிகம் காணும்
அன்னவரை கீழ்நோக்கில் வறுமை வாட்டும்
ஐம்பதுக்குப் பொருளுமில்லை அலைச்சல் காணும்
அன்னவரை நடுக்கையிலே இருக்கு மாகில்
ஆதரவாய் வாழ்ந்திடுவீர் அதிகந் தானே
அன்னவகை தன்னிலுறு பலன்க ளெல்லாம்
ஆதரவா யறிந்துநீ அறைகு வாயே (அய)

இனி, கைவிரல் வரை கயிறு அளந்து பார்க்கிற விபரம் வருமாறு :
நூல் அளக்கிற விபரம்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

[வேறு ஒரு பிரதியில் காணும் இந்தப் பாடல் இவ்விடம் சேரவேண்டும் போலும்.

கடிகொள் குங்குமச் சேறேடு நூலினல் காம னன்ன
அடிமுதல் முடியீ றாக நான்முறை அளந்து நோக்கி
நெடுமையும் குறுக்கும் நூற்றெட் டங்குல மாக்கி நின்றால்
படிமுதல் உலகங் காக்கும் பார்த்திபன் ஆவன் என்றே.]

கைவிரல் ஐந்து தம்மைக் கருத்தினால் அளந்த நூலைச்
செய்யவே முழங்கை தொட்டுத் தெளிந்ததை நீட்டிப் பார்க்கில்
ஐவரை தாட்டி நிற்கில் [1] அருமைசேர் யோகங் கேளீர்
வையகம் நூறு காலம் வாழ்குவார் சிவிகை யேறி. (அ௰க)

அப்படி வரைகள் தாட்டி அணிவரை கடந்து நின்றால்
செப்பமாம் [2] மனைவி மக்கள் திரவியத் துடனே வாழ்வார்
ஒப்பமா யினங்கள் சேரும் உதவிகள் மிகவுண் டாகும்
தப்பிலாக் குறிகள் கண்டால் தரணியில் வேந்த னாமே. (அ௰உ)

அணிவரை தனிலே நிற்கில் அக்குறி யுரைக்கக் கேளாய்
துணைவரும் யோகம் செல்வம் தோன்றிடும் பொருளும் நன்றாய்
அணிபல சனங்கள் கூடும் ஆயுசும் நாலு பத்துள்
மணியமாம் யோக மென்று மகிழ்வுடன் உரைத்தார் நூலோர்.
(அ௰௩)

நூலென உரைத்தோம் நாமே நூதன மறியா மூடர் [3]
சாலவே குறிப்புக் காணார் தட்டழிந் திடுவார் கோடி [4]
கோலமாய்க் குறிப்புக் கண்டால் குருவரு ளாலே மேவி
ஓலமாய் உறுதி என்றே உரைத்தனர் முனிவர் தாமே. (அ௰௪)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

கூறியதோ ரிவ்வரை[5] மேல் அணுகும் போது
குறிப்பறிந்து சொல்லுகிறோம் கூர்ந்து கேளும்
மீறியதோர் மனைவிமக்கள் பொருளு முண்டாம்
மிகுதிபெற வாழ்ந்திருப்பார் வினையு மில்லை [6]
ஓரிரண்டு பத்தஞ்சில் தனமும் சேரும்
உத்தமனே உனக்கதிக மாகுஞ் சொன்னோம்
தாரணியில் இக்குறிகள் தப்பா தென்று
தவமுனிவர் புகழ்ந்துரைத்த சரநூ லாமே. (அ௰௫)

அம்முழியில் அடிவரையி லிருக்கும் போது
அருமையுடன் மேவுகின்ற யோகங் கேளீர்
உன்மனையில் [7] துயரமுண்டு செல்வ முண்டாம்
உத்தமனே அக்குறிப்புக் கடனுஞ் செல்வம்
செம்மையுடன் இரண்டுதான் சரிபோய் நிற்கும்
தெளிந்துசொன்னோம் இக்குறிகள் பொய்யென் றுதே [8]
வண்மையுடன் ஐவரைக்குள் [9] அடங்கி நின்றால்
வறுமைகளே தோற்றுமென்று வழுத்தி னோமே. (அ௰௬)

(பா-ம்) [1] ஐயமில்லாமல் கேளு. [2] செப்பமாய். [3] மோடர்.
[4] மெத்த. [5] இருவரை. [6] வினையம் இல்லை.
[7] உன்மனத்தில், [8] பொய்யே இல்லை. [9] அவ்வரைக்கும்,

வாழ்த்தினேம் அடிமுழியில் இருந்தால் கள்ளன்
வறுமையினால் இனங்களுக்குப் பாவி யாவான்
சாற்றினேன் பஞ்சையென்று உலகத் தோர்க்கு
துணிந்துகுறிப் பறிந்துசொல்லு தெப்பா தன்று
எத்துவீர் இக்குறிகள் அறிந்து தானே
இயம்புவேன் மனந்தனிலே பயமும் வேண்டாம்
ஆற்றுநீர் வந்தாற்போல் அலைவான் சித்தம்
அக்குறிகள் ஆகுமென்றே அறிந்து சொல்லே.

[இந்தப் பாடலின் வேறுபாடம் :
வாழ்த்தினேம் அடிமுழியில் இருந்தோர் நல்லன்
வறுமையினால் உங்களுக்குப் பாவி யாவான்
தூற்றுவார் பஞ்சையென உலகத் தோர்கள்
துணிந்துகுறி யறிந்து சொல்லும் தப்பா தென்று
ஏற்றமுடன் இக்குறிகள் அறிந்து தானே
இயம்புவீர் மனந்தனிலே பயமும் வேண்டாம்
ஆற்றுநீர் ஓடலென அலைவான் சித்தன்
அப்புறமே மேற்குறிகள் அறிந்து சொல்லே.] (அ௰எ)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்).

தேடிய வரைக[1] ளொன்றில் சேர்ந்திடும் கயிறு மாகில்
கூடிய மனைவி மக்கள் குறைந்திருப் பவனே யாகும்
நாடதில் ஒருவ னாகி நலங்கியே முட்டி யேந்தி
வீடுகள் தோறும் பிச்சை வேண்டியுண் டிறந்து போவான். (அ௰அ)

முடியினில் கயிறு மேற மொழிகிறேன் ரெண்டு பத்தில்
திடமுடன் உயிர்விட் டேகு[2] மென்றுரைத் திடுவர் சித்தர்[3]
படிமிசை தன்னிற் சொல்வோம் பத்தஞ்சில் தாதை போவார்
மடிவது நிசந்தா னென்று வாழ்முனி உரைத்தார் நூலே. (அ௰கூ)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

இன்னுமொரு குறிப்புமுண்டு[4] சொல்லக் கேளும்
இட்டவிரல் ஐந்துதனை வளையங் கொண்டு
சொன்னபடி அந்நூலை வளைத்துக் கொண்டு[5]
சுற்றிய மணிக்கைதனில் சரியாய் நிற்கில்
மன்னவனே தனக்குவரும் யோகம் கேளாய்
வாழ்வுமிகும் பொருளுமுண்டு பலனு முண்டாம்
வண்ணமதாய் நூல்குறைந்தால் பொருளு மாகா
வறுமையெனு மிவ்வுலகில் வழுத்து வீரே. (கூ௰)

(பா-ம்) [1] வகைகள்.
[2] திரமுடன் ஊர்விட்டேகும். [3] சித்தம்.
[4] குறிகளுண்டு. [5] வளையங்கொண்டு.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

பெருவிரல் வளையங் கொண்டு பிரியமாய் அளந்த நூலை
இருகயி றங்கு லத்தில் இஷ்டமாய் அளந்து பார்க்கில்[1]
மருவிய முப்ப துக்குள் வயசினைப் பார்ப்போ மென்றால்
ஒருவிரற் கிரண்டு காணு மோதக மறையுந் தானே. (கூ௰க)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

அந்தவகை கயிறளந்து முப்ப தின்மேல்
ஆயுசினிப் பார்ப்பமென்று லருமை கேளே
சிந்தைதனில் நினைந்துசிறு விரற்கு நாலு
தெரியவுள்ள ஆயுசென்று செப்பு வாயே
விந்தைபெற அந்நூலே முன்கை தொட்டு
விரல்நீட்ட அடிமுழியில் இருப தாகும்
முந்திபெறு[2] மேல்முழிமேல் ஐம்ப தென்று
முகமறிந்தும் உத்தியினால் முனிந்து சொல்லே. (கூ௰உ)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

பத்திய[3] ஆயு சுக்குள் பார்மிசை வயசு பார்க்கில்
மெத்தவும் எண்ண வேண்டாம் விரலுக்கொன் றரையே யாகும்
சித்தமாய்க் குணித்துப் பார்த்துத் தெளிந்துநீ சொல்லும் போது
கைத்தலந் தனிலே யாயுள் காணுமென் றுரைத்தார் முன்னோர்.
(கூ௰ங)

இப்படிக் குறிகள் சொன்னோம் இனியதை உலகில் உள்ளோர்
செப்பமாய்க் குணித்துப் பார்த்துத் தெரிந்துசொல் குறிக ளெல்லாம்
கப்பிய குருவின் வாக்குக் கருத்தினில் மறந்தி டாமல்
அப்படி யிருந்தோ ணுக்கு அக்குறி காணு மென்றே.[4] (கூ௰ச)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

ஒருநூலைக் கழுத்ததனில் மாலை யாக
உண்மையுடன் மார்முனைமேல்[5] வைத்து நீட்டிச்
சிரமதிலே வளையங்கொண்டால் சரிபோல் நிற்கில்
தேறியவன் பெண்ணுறவு மில்லை சொன்னோம்
மருவியதோர் கயிறுமே லேறி[6] நிற்கில்
மங்கைஉற வுண்டெனவும் வகுத்துச் சொல்லும்
தெருவில்அவன் திரிவதில்லை பதுமை யென்று
செப்புவீர் இக்குறிகள் செப்பு வீரே. (கூ௰ரு)

(பா-ம்) [1] குறுகயிருக்கித் தானும் கொண்டுதான் அளந்து பார்க்கில். [2] விந்தைபெற. [3] பத்தினி. [4] தோணுமென்றே. [5] முலைமேல். [6] மீறி.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

கடைக்கண்ணோ டளந்த நூலைக் கருத்துட னிருக்கக் கொண்டு
கடைக்கையில் வளையங் கொண்டு கயிறுதான் கூடச் சேர்த்து
நடுக்கையில் முழங்கை தொட்டு நீட்டியே பார்க்கும் போது
படுக்கையாய் நடுமுழி தன்னில் பற்றியே நின்றால் நன்றே. (கூயசு)

(கலி விருத்தம்.)

தோளொடு நடுவிரல் தொட்ட திரட்டியே
நீளம தாகியே நெற்றியில் நீண்டிட
மீளவவ் வயதுநூறு விரும்பினர் வாக்கினால்
தாளுமை யல்லவே தவமுனி யுரைத்தனர். (கூயஎ)

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

மன்னிய நெற்றி தன்னில் வயசுதொண் ணூறாறே சொல்ல [1]
எண்ணிய புருவில் நின்றால் எண்பதென் றுரைக்க லாமே
மின்னிய மூக்கில் சேர்ந்தால் பேசினன் எழுப தென்றார் [2]
வன்னமாய் அறுபத் தஞ்சு தாடையில் நிற்ப தாமே. (கூயஅ)

(கலி விருத்தம்.)

அக்குறி கழுத்தைவந் தணுகி நின்றிடில்
துக்கிய ஆயுசு சொல்லு மம்பதே
மிக்கவு நெஞ்சினில் விளங்கில் முப்பதாம்
பக்கமாம் மார்பினில் பகருவ மிருபதே. (கூயகூ)

(எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

மானிடர்க்கு நடக்குமந்த யோக மெல்லாம்
வாழ்த்தினேம் இக்குறிகள் சர நூ லாலே
தானடந்து உலகிள்ளோர் கண்டு சொல்லத்
தன்மையுடன் உரைத்துவிட்டோம் விவர மாக [3]
கூனருக்கும் குருடருக்கும் கிட்டா தென்று
குறிப்பறிந்து சொல்லிவிட்டோம் அதுதப் பாமல்
நானிலத்தில் குறிகுணங்கள் சொல்வ ரெல்லாம்
நாடலாங் குருவெனவே [4] நாட்ட லாமே. (ரா)

சுழிலட்சணம்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.)

தாடையில் சுழியொன் றாகில் தரணியில் வேந்த னாவான்
தாடையில் சுழிரெண் டாகில் தானதி கார னாவான்
தாடையில் சுழிமூன் றாகில் தனக்கொரு மூன்று பத்துள்
நீடியே யோகி யென்று நிலைக்குறி யுரைத்திட் டோமே. (ரக)

(பா-ம்) [1] தொண்ணூறாறுஎன்றும். [2] மெய்ப்புடன் எழுபதென்றார். [3] சர நூலாலே. [4] குருவென்றே.

நெற்றியில் வலது பக்கம் [1] வலம்புரிச் சுழியே நிற்கில்
சித்தமாய் உலகு தன்னில் செங்கோலுக் குடைய னுவான்
உத்தமர்க் கிடது பாகம் உகந்திடம் புரியாய்த் தோன்றில்
நித்தியா நந்த யோகம் நிலைக்குறி தோன்று மன்றே. (௱௨)

வலத்தினில் தோளி னுள்ளே வலம்புரிச் சுழியொன் றுகில்
தலத்தினில் பெரியோ னுவான் தனக்கினிப் பொருளும் சேரும்
குலத்தைஉத் தரிக்க நல்ல கூர்மனத் துடனே வாழ்வான்
கலைக்கவும் இடர்கள் வந்து காணிடா தென்று சொல்லே. (௱௩)

மார்பிடை வலது பாகம் வலம்புரிச் சுழியு மாகில்
மீறியே கொடுங்கை தொட்டு விளங்கிய பாதம் மட்டுஞ்
சீர்பெற வலம்பு ரியாய்த் தெளிந்திடச் சுழியு மாகில்
கூரிய சுழிகள் நன்றே கூறுவோம் இன்னங் கேளே. (௱௪)

தனக்கொரு உள்ளங் காலில் வலம்புரிச் சுழியு மாகில்
சினத்தினில் மூன்று பத்துள் தேசமே வறி நிற்பான்
தனித்தஇக் குறிக ளெல்லாம் இடம்புரி யாக நின்றல்
மனத்திலே [2] விசன மென்று வாழ்முனி உரைத்தார் நூலே. (௱௫)

இப்படி இடது பாகம் இடம்புரி யிருந்தால் சொல்வேன்
ஒப்பிய தன்கைப் பாடால் தேடியே [3] உண்ண லாகும்
செப்பிய வலது சுற்றுய்த் தெளிந்திட வறுமை யாகும் [4]
தப்பிலாச் [5] சரநூ லாலே தானெடுத் துரைத்தா ரன்றே. (௱௬)

கொடுங்கையில் இரண்டி லேதான் குணமுடன் சுழியி ருந்தால்
நடுங்கிய திருட னென்று நாலஞ்சுள் கட்டு ளாவான்
தொடங்கிய இடஞ்சுற் றுகில் தோன்றிடுங் குறிதப் பாமல்
மடங்கிய வலஞ்சுற் றுகில் வந்திடா தென்று சொல்லே. (௱௭)

காலமுன் சொன்னுற் போலே காட்டிய சுழியு மாகில்
சீலமாய் விலங்கு வந்து சேர்ந்திடு மென்றே சொல்லும்
பால்வலம் புரிய தாகில் பகர்ந்திட வேண்டாம் சொன்னேம்
கோலமாய் விலங்கு தானும் வந்திடா தென்று சொல்லே.[6]

(நந்தி நூல் முற்றும்) (௱௮)

(பா-ம்) [1] பாகம்.
[2] மனத்தினில். [3] ஊணகளும்.
[4] வண்மையாகும். [5] தப்பில்லை.
[6] கோலமா முனிவர் சொன்ன குறிப்பினை அறிந்து கொள்ளே.

அதிகப் பாடல்கள்

சிறுவிரல் தன்னி னின்று தர்ச்சனி யளவுந் தீரா
அறுவரை கிடந்த வற்ருல் ஒழிவது மாயு ளேது
நறுமலர்த் தாள்க ளொத்து நசைந்துவோ வெழாது நன்காய்
உறுபர டொத்த வாற்ருல் உலப்பருந் திருவி னுவான்.

அங்கையின் வரைகள் அற்ப மாகியும் சிவந்து மேய
சங்கொடு குலிசத் தோடு தனுவவிர் மகரம் போல
இங்கிவன் றன்பால் வாய்த்த இலக்கணம் கிடக்கை தன்னு
.... [கடைசி அடி கிடைக்கவில்லை.]

நந்திநூல் நூற்றுப் பத்து நன்மைசேர் இந்நூல் தன்னைச்
சிந்தையில் உணர்ந்து நன்ருய்த் தேருமே பலன்சொல் வோர்க்கு
இந்தமா வுலகி னுள்ளே யாவரும் வணக்கம் செய்வார்
எந்தையா நந்தி பாதம் இடையரு தேத்தி வாழ்வீர்.

பிற்சேர்க்கை—1.

மகளிர் இலக்கணம்.

[அதிவீரராம பாண்டியர் எழுதிய காசிகண்டம் என்னும் நூலின் முப்பத்தேழாம் அத்தியாயம் ; தனி நூல்போலவும் வழக்கில் உள்ளது.]

1. நண்ணு கோத்திரம் ஒன்றினில்
 உதித்துளோர் நலிதரு பிணியுற்ரோர்
பெண்அ லாதுஉயர் நன்மகப்
 பெறுகிலாப் பேதையர் வழிவந்தோர்
மண்ணில் நின்றவான் பழிபடு
 மரபினில் வந்துளோர் வரைபாந்தள்
விண்ணின் மீன்நதி பறவையின்
 பேர்உளோர் வேட்டிடல் விதி அன்றே.

[ஒரே கோத்திரத்தில் பிறந்தவர்கள், நலிவையே கொடுக்கும் வியாதியஸ்தர்கள், பெரும்பழிபெற்ற மரபில் பிறந்தவர்கள், ஆண் குழந்தை பிறக்காத குடும்பத்தில் தோன்றியவர்கள், மலை, பாம்பு, நக்ஷத்திரம், ஆறு, பறவை ஆகியவற்றின் பெயரைத் தரித்தவர்கள், இவ்விதம் உள்ள மாதரை மணக்கலாகாது.]

2. இனிய மென்மொழி யுடையளாய்த்
 தன்னினும் இளையளாய் எவரோடு
முனிவி கந்திடு குணத்தளாய்ப்
 பொருந்திய முயற்கறை ஒழிந்தோங்கு
பனிசெய் வெண்மதி முகத்தளாய்
 மைந்தர்கள் பலரொடும் பிறந்தாளாய்த்
துனியி லாதநற் கன்னியை
 வேட்டிடல் தொன்மறை வழக்காமால்.

[இனியமென்மொழி உடையவள், தன்னினும் வயதில் இளையவள், எவரிடமும் கோபிக்காமல் சாந்த குணம் வாய்ந்தவள், முயல் ஆகிய களங்கம் நீங்கப்பெற்ற வெண்மதிபோல் குளிர்ச்சி பொருந்திய முகத்தை உடையவள் ; அண்ணன் தம்பிகள் பலரோடு பிறந்தவள், துன்பம் இல்லாதவள் இத்தகை மாதரை மணத்தல்வேண்டும்.]

3. இழிந்த புன்குலத் தாதல்தன்
 குலத்தினும் இயல்புற மேம்பட்டுக்
கழிந்த நற்குலத் தாதல்பொன்
 அனையவர் கவன்உடை வடிவெல்லாம்

மொழிந்த நூல்வழி பிறந்தமெல்
உருவினர் முகிண்முலே முயக்குற்றுல்
அழிந்து போகுநல் லுணர்வு ; அழல்
நிரயமும் ஆங்குஅவர்க்கு அணித்தாமால்.

[தாழ்ந்த அற்பமான குடியில் பிறந்தவள், தன் குலத்தைக்காட்டிலும் இயல்பாகவே மேம்பட்டு, பிறகு அந்நிலையிலிருந்து குறைந்த குலத்தில் பிறந்தவள், அழகுவாய்ந்த உருவம் எல்லாம் கூறிய (சாமுத்திரிக) நூல் வழியினின்றும் பிறழ்ந்த வடிவை உடையவள், ஆகிய பெண்களை மணக்கும் ஆடவருடைய நற்புத்தி ஒழிந்துபோகும் ; அக்கினி மயமான நரகமும் நெருங்கும்.]

4. அரக்கு எறிந்தசெந் தாமரை
எனச்சிவந்து அரும்பிய வியர்வின்றிப்
பெருத்தல் அஃகுதல் இன்றிமெல்
அனிச்சமேற் பெயர்ப்பினுங் குழைவாகி
உருத்த ஐம்மையோடு உள்ளடி
அமைந்ததின் உறுவரை கொடிமீனம்
தரித்த சக்கரம் வளைகுடை
போன்மெனில் தக்கமன் னவர்க்காமால்.

[உள்ளங்கால் அரக்கை வென்ற செந்தாமரை மலர்போல் சிவந்து, வேர்வை அரும்பாமல், பூரித்தல் குறைதல் இல்லாமல், மிருதுவான அனிச்ச மலரை மிதித்தாலும் குழைந்து உருத்துவதாக அச்ச வடிவாகி அதில் உள்ள ரேகை கொடி, மீன், சக்கரம், சங்கு, குடை ஆகியவைபோல் இருந்தால் அரசன் தேவியாவாள்.]

5. நடுவு மெல்விரல் அளவுமேல்
நோக்கிஒர் வரைநனி கிடந்துற்றுல்
அடையு நல்திரு ; பாந்தள்வெம்
பேர்எலி யாய்மயிர்க் கழுகேபோல்
உடைய நீள்வரை கிடந்திடின்
நல்குரவு ஒழிவுறுத் துயர்மேவும் ;
வடிவ மைந்தநற் பெருவிரல்
திரண்டுஎழில் வாய்ந்திடில் திருவெய்தும்.

[மெல்லிய நடுவிரலின் அளவுக்கு மேல்நோக்கி ஒரு ரேகை தெளிவாகக் கண்டால், நல்ல செல்வம் வரும் ; பாம்பு, பெரிய எலி, கழுகு இவைபோன்ற நெடிய ரேகைகள் இருந்தால் தரித்திரம், நீங்காத் துன்பம் உண்டாகும் ; பெருவிரல் உருப்பெற்று நன்றாக உருண்டு அழகு பெற இருந்தால் செல்வம்.]

6. அன்ன மெல்விரல் அகன்றிடில்
கைம்மையாம் ; நீண்டிடில் திருஅஃகும் ;
சொன்ன தன்மையின் அன்றிமற்று
ஏனைய தொகுவிரல் அறநேர்கின்
மன்னு ருத்திரு ; நீளுமேற்
பிறனல மகிழ்ந்திடு ; நெருக்குற்றால்
இன்னல் உற்றிடும் தாசியாம் ;
குறுகிடில் இறந்திடும் சின்னாளில்.

[அந்த மெல்லிய விரல்கள் விலகி இருந்தால் விதவையாவாள் ; நீண்டிருந்தால் செல்வம் குறையும் ; அவ்விதம் அன்றி, கூடிய அவ் விரல்கள் மிக மெலிந்திருந்தால் செல்வம் சேராது ; நீண்டிருந்தால் பிற ஆடவரை விரும்புவாள் ; நெருங்கியிருந்தால் துன்பம் மிகுந்த தாசி யாவாள் ; குறுகினால் சிறிது நாளில் இறந்துபோவாள்.]

7. விரல்கள் ஒன்றின்மேல் ஒன்றுறிற்
காதலன் வீந்திடும் ; அகன்றால்நற்
பொருள் அகன்றிடும் ; கடைவிரல்
நிலத்திடை பொருந்திடா தெனிற்காதல்
பெருகு கேள்வரை ஒறுத்திடும் ;
பெருவிரற்கு அடுத்தமெல் விரல்நீளின்
அரிய நன்மணம் ஆற்றுமுன்
பலரொடும் அன்புறப் புணர்கிற்பாள்.

[கால் விரல்கள் ஒன்றன்மேல் ஒன்று சேர்ந்தால் கணவன் இறப் பான் ; அகன்றிருந்தால் செல்வம் நீங்கிப்போகும் ; கடை விரல் பூமியில் பாவாது மேலே நிற்குமானால், தன் காதலனை வெறுப்பாள் ; பெரு விரலுக்கு அடுத்த விரல் மெலிந்து நீண்டிருந்தால் அவள் திருமணத் துக்கு முன்னதாகவே பலரோடுகூடிப் புணர்வாள்.]

8. அறவு மென்மையாய் அளவினில்
பருத்துவேர்வு அரும்பொடு நரம்பின்றிச்
சிறிது உயர்ந்திடின் நன்று ; உயர்
நரம்பொடு சேர்ந்திடில் சேண்செல்லும் ;
உறவ ளைந்திடின் இரப்புறும் ;
கோலென உயர்ந்திடில் சிறப்புஇன்றாம் ;
வெறிய பன்மயிர் திளைத்திடில்
சிலதியாய் அளப்பில்நாள் மெலிகிற்பாள்.

[மிகவும் மெல்லியதாய், அளவாகப் பருத்து, வேர்வை அரும்பி, நரம்பு இல்லாமல் சிறிது உயர்ந்து இருந்தால் நல்லது ; உயர் நரம்போடு கூடினால் தூரதேசம் செல்வாள் ; மிகவும் வளைந்திருந்தால் பிச்சை எடுப் பாள் ; கொம்புபோல உயர்ந்திருந்தால் நன்மை இல்லை ; ரோமம் நிறைந் திருந்தால் குற்றேவல் செய்பவளாய் நீண்ட காலம் வருந்துவாள்.]

9. ஒளி உமிழ்ந்தநல் வட்டமாய்ச்
சிறிதுசேப்பு உண்டிடு நகமென்னில்
களிவி ளைந்திடும் ; துகள்எழ
நடந்திடுங் கன்னிதன் குலமூன்றும்
விளிவு கண்டுமற்று அயலவர்ப்
புணர்ந்திடும் ; மென்பரட்டு இயல்கூறின்
அளியு றத்தசைந்து உயர்நரம்பு
எழாதுஉருண்டு அழகுஉறின் இனிதாமால்.

[நகம் பிரகாசமாகவும் நல்ல வட்டமாகவும் சிறிது சிவந்தும் இருந்தால் இன்பம் விளைவிக்கும் ; புழுதி கிளம்ப நடக்கும் பெண் தன் மூன்று குலத்தைச் சேர்ந்தவர்களும் இறத்தல்கண்டு, பிறபுருஷரைக் கூடுவாள் ; மென்மையான பரட்டின் தன்மை கூறுவதாயின், மதுரமாகத் தசை உண்டாகி நரம்பு காணமல் அழகாக இருந்தால் நன்மை பயக்கும்.]

10. நரம்பு எழுந்துமென் பரடுஉயர்ந்
திடில்திரு நண்ணுரு ; குதிபந்தின்
நிரம்பு பேரெழில் வாய்ந்திடில்
விழுமிய ; நீண்டிடில் துயர்எய்தும் ;
வரம்பி கந்துஅற உயர்ந்திடின்
ஏதிலார் மணந்தனில் மனம்போக்கும் ;
திருந்தல் இன்றியே பருத்திடில்
அளப்பருஞ் செல்வம் அஃகிடுமன்றே.

[நரம்பு எழுந்து பரடு உயர்ந்திருந்தால் செல்வம் அணுகாது ; குதிகால் பந்துபோல் அழகாக இருந்தால் சிறப்பாகும். நீண்டால் துயரம் வரும் ; அளவுமீறி மிகவும் உயர்ந்திருந்தால் அயலாரிடம் காதல் கொள்வதில் மனம்செல்லும் ; செவ்விதாக இல்லாமல் பூரித்திருந்தால் மிகுந்த செல்வமும் குறைந்துபோகும்.]

11. மயிர் இகந்துமேல் வரவரப்
பருத்துஇணை வாய்ந்துஒளி யுடைத்தாகி
உயர் நரம்புஎழாது உறுகணைக்
கால்எழில் ஓங்கின்மன் னவர்க்காகும் ;
செயி லாமுழந் தாள்உயர்
பாண்டிலாய்த் திரண்டில் அழகாகும் ;
பயிலு மென்தசை யொழிந்திடின்
முலைவிலை பகருமா தரிற்சேரும்.

[ரோமம் இல்லாமல், மேலே செல்லச் செல்லப் பருத்து, இரண்டும் ஒத்து, ஒளி உடையதாக, நரம்பு தோன்றமல் உள்ள கணைக்கால் அழகுடன் விளங்கினல் அரசர்க்குத்தேவியாவள் ; குற்றமில்லாத முழங்கால் உயர்ந்து வட்டமாகத் திரண்டிருந்தால் அழகு ; அங்கே மென்மையான தசை இல்லாவிடில் பால் கொடுக்கும் தாதியாவள் ; அல்லது, பரத்தையாவள்.]

12. குறங்கு நீள்நரம் பொடுமயிர்
இன்றிமற் றென்றொடொன்று உறக்கூடி
மறங்கொள் யானையின் தடக்கைபோல்
திரண்டுமேல் வரவரப் பருத்துஒங்கில்

சிறந்த வாம் ; மயிர் பொருந்திடில்
கைம்மையா ; நீங்கிடில் துயர்சேரும் ;
பிறங்கி டாதெனில் சீர்கெடும் ;
வன்மையாய்ப் பெருத்திடின் இரப்பாமால்.

[தொடை நீண்ட நரம்புடன் மயிர் இல்லாமல் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பொருந்தி, மதயானையின் துதிக்கைபோல் திரண்டு மேலே செல்லச் செல்லப் பூரித்து விளங்கினல் சிறப்புடையது ; மயிர் இருந்தால் விதவையாவள் ; ஒன்றற்கொன்று விலகியிருந்தால் துயரம் உண்டாகும் ; பெரிதாய் இல்லாமல் (சிறுத்தால்) சீர்கெடும் ; வலியுடன் பெருத்திருந்தால் பிச்சை எடுப்பாள்.]

13. எண்ணும் அங்குலம் ஓர்ஆறு
நான்கதாய் எழில்பெறும் கடிநன்றாம் ;
வண்ணம் வாய்ந்துற உயர்நிதம்
பத்தொடும் சதுரமாய் வனப்பேறி

நண்ணு றுதுஅற நீண்டுதாழ்ந்து
உயர்ந்திடின் நனிமயிர் இடைசேரில்
கண்ணும் வெந்துயர்ப் பிணிபிடித்து
அலைப்புறக் கைம்மையாய் விடுமன்றே.

[அல்குல் ஆறு, நான்கு அங்குலங்கள் பெற்று அழகு பெற விளங்குவது நல்லது. வடிவம் அமைந்து உயர்ந்த நிதம்பத்தோடு, சதுரமாய் அழகு நிறையாது, மிகவும் நீண்டாவது தாழ்ந்தாவது உயர்ந்தாவது இருந்தாலும், இடையிலே ரோமம் அதிகமாக இருந்தாலும், கொடிய துன்பமாகிய பிணிகொண்டு வருத்த விதவை ஆவள்.]

14. பருத்து உயர்ந்துஅற மென்மையாய்த்
திரண்டிடும் சகனமேல் பரிவோடும்
பொருத்து உறுங்கல விக்குநல்
இன்பமே பூத்திடும் ; மாறுகில்

அருத்தி செய்திடாது ; ஆர்அஞர்
பயக்குறும் ; அம்பகட்டு அகல்அல்குல்
பெருத்த ஆமையின் முதுகுஉயர்
யானையின் பிடரிவாய்ந் திடின்நன்றே.

[பூரித்து உயர்ந்து மிகமென்மையாய்த் திரண்டிருக்கும் சகனமாயின் ஆசையோடு கூடும் கலவியில் நல்ல இன்பத்தை அளிக்கும் ; மாறுனல் ஆசையைத் தூண்டாது ; மிகுந்த துன்பம்கொடுக்கும் ; அழகாக எடுப்பாக அகன்ற அல்குல் பெரிய ஆமையின் முதுகுபோலாவது உயர்ந்த யானையின் பிடரிபோலாவது இருந்தால் நண்மையாம்.]

15. வலம்உயர்ந்திடின் அழகுடைப்
பெண்கிருர் வயிறுவாய்த் திடுமென்ப ;
அலது இடப்புறம் உயர்ந்திடின்
மைந்தரை அளித்திடும் ; கமலம்போல்
உலவு மெல்அர சிலையென
மான்குளம் படியெனப் பருத்தோங்கி
எலியின் மென்மயிர் போன்மயிர்
அணிந்துஇள மணிஅமைந் திடின்நன்றே.

[வலதுபுறம் உயர்ந்திருந்தால் அழகுவாய்ந்த பெண் குழந்தைகள் பிறக்கும் என்பர் ; பதிலாக இடதுபுறம் உயர்ந்திருந்தால் ஆண் குழந்தைகள் பிறக்கும் ; தாமரை இதழ்போலும் மெல்லிய அரசிலைபோலும், மான் குளம்படிபோலும் பூரித்து உயர்ந்து எலியின் மென்மையான ரோமம் போல் மயிர்கொண்டு சிறிய மணியுடன் இருந்தால் நல்லது ஆகும்.]

16. சங்கின் மென்துளை போன்றிடின்
மகப்பெறுள் ; தடம்புழை விரிவாகித்
துங்க மாய்மணி செறிமயிர்
பருத்திடில் துயர்உறும் ; மடிப்பாமேல்
பங்க முற்றிடு சிலதியாம் ;
இடப்புறம் பள்ளமாய்ச் சுழியெய்தின்
மங்க லத்தபேர் அணியிழந்து
அயர்வோடு மம்மர்நோய் உழல்கிற்பாள்.

[சங்கின் துளைபோல் இருந்தால் குழந்தை பெறமாட்டாள் ; பரந்த குறியின் வாய் விரிவாகி, மணி நிமிர்ந்து, ரோமம் நிறைந்து, நன்கு பூரித்திருந்தால் துன்பம் அடைவாள் ; மடிப்பானல் பங்கம் அடைந்து குற்றவேல் புரிபவள் ஆவாள் ; இடதுபுறம் தாழ்ந்து சுழி இருந்தால் மங்கலியத்தை இழந்து தளர்ச்சியோடு மயங்கத்தக்க நோய் பெற்று வருந்துவாள்.]

17. இடுகு நுண்இடை வறுமைஎய்
திடில்திரு வெய்திடும் ; பெரிதாகில்
படரு றந்திடும் ; உந்திஆழ்ந்து
அகன்றுஎழில் புயில்வலஞ் சுழியாகில்
அடையு நற்றிரு ; நாம்போடு
மயிர்அணிந்து உயர்ந்துஇடஞ் சுழியாகில்
உடலம் வன்துயர் ; மென்மையாம்
வயிறுஎனில் மகப்பல உயிர்க்கிற்பாள்.

[ஒடுங்கிச் சிறுத்த இடை நன்கு மெலிந்து இருந்தால் செல்வம் உண்டாகும் ; பருத்திருந்தால் துன்பம் அடைவாள். நாபி ஆழ்ந்து அகன்று அழகாக வலஞ்சுழியுடன் இருந்தால் நல்ல செல்வம் கிட்டும். நரம்பும் ரோமமும் எழுந்து உயர்ந்து இடஞ் சுழியாக இருந்தால் வியாதியால் உடல் வருந்துவாள் ; வயிறு மிருதுவாக இருந்தால் பல குழந்தைகளைப் பெறுவாள்.]

18. அவ்வ யிற்றெழில் தவளைமெல்
வயிறென அமைந்திடில் புவிகாக்கும்
செவ்வி வேந்திளங் குமரரை
உயிர்க்கும் ; ஆலிலையெனச் சிறப்பெய்தி
எவ்வி டத்தினு மயிர்உறுது
இருந்திடில் இகழருஞ் சிறப்பெய்தும் ;
நவ்வி நோக்கியர் வயிற்றினில்
அணிவரை மூன்றுஉறின் நலன்ஆமால்.

[அழகிய அந்த வயிறு தவளையின் மெல்லிய வயிறு போல அமையு மானால் உலகம் காக்கும் அரச குமாரரைப் பெறுவாள் ; ஆல இலை போல் சிறந்து, ரோமம் சிறிதும் இல்லாமல் இருந்தால், தாழ்வற்ற சிறப்பை எய்து வாள். மான் விழியாள் வயிற்றில் மூன்று அழகிய ரேகைகள் இருந்தால் நன்மை.]

19. வயிற்றின் மென்மடிப்பு உயர்ந்துநீள்
சுழிபல வதிந்திடின் மலடாகிச்
செயிர்ப்பி னோடுதன் பதிஅகன்று
எங்கணும் திரிந்துகா மமும்இன்றிப்
பயிர்ப்பில் தாசியாம் ; குடமென
முழவெனப் பருத்திடு மெனில்நாளும்
உயிர்ப்பு அவிந்துஉயிர் உலந்திடும் ;
மனநிரப் புற்றுவெந் துயர்கூரும்.

[வயிற்றின் மெல்லிய மடிப்புகள் உயர்ந்து நீண்ட பல சுழிகள் பெற்றிருந்தால் அவள் மலடாகி, துன்பத்தோடு தன் பதியைவிட்டு எங்கெல்லாமோ சுற்றி, காமம் இல்லாமல், நாணமற்ற பரத்தையாவாள் ; குடம் போலவும் மத்தளம் போலவும் பூரித்திருக்குமானால் எப்போதும் மூச்சு நின்று உயிர் போகும் கஷ்டம் ; மனம் வருந்தித் துயர் உறுவாள்.]

20. நீறு பூத்துஉயர் பூசணிக்
காயென நெல்லென வயிறுஎய்தில்
சோறு அளப்பில துய்த்திடும் ;
அகன்றிடில் துயர்உறும் ; மிகநாலில்
கூறு மாமனைக் கொழுநனைக்
கொன்றிடும் ; விலாப்புடை தசைமேவி
ஊறின் மென்மையாய் நரம்புஎழாது
அழகுறின் உலப்பறு திருமேவும்.

[சாம்பர் படர்ந்து உயர்ந்த பூசணிக்காய், நெல் ஆகிய இவைபோன்ற வயிறு ஆனால் அதிகச் சோறு உண்பாள் ; பரந்திருந்தால் துன்பம் அடைவாள் ; மிகவும் தொங்கினால் மாமனையும் கணவனையும் இழப்பாள் ; விலாவில் தசை நிரம்பி மிருதுவாகி நரம்பு தெரியாமல் அழகு பொருந்தியிருந்தால் நீங்காத செல்வம் அடைவாள்.]

21. நரம்பு எழுந்துஉறு மயிரொடும்
விலாப்புடை நண்ணுமேல் அவள் நூலின்
நிரம்பி லக்கணம் உடையாள்
ஆயினுந்திரு நீங்கும்; அவ் வயிற்றின்கண்
பொருந்து நன்மயிர் ஒழுக்குஅற
மென்மையாய்ப் பொழிகதிர் உமிழ்நீலத்
திருந்து கோலெனக் கிடந்திடின்
மலருறை திருவினும் சிறப்பெய்தும்.

[விலாப்புறம் நரம்புதோன்றி மயிரோடும் இருந்தால் அவள் சாமுத்திரிகா சாஸ்திரத்தில் காணும் வேறு இலட்சணங்கள் எல்லாம் நிரம்பப் பெற்றிருந் தாலும் செல்வம் அகலும் ; அழகிய வயிற்றில் உள்ள ரோம வரிசை மிக வும் மெல்லியதாகவும் கிரணங்களை வீசும் நீல மணிக் கொம்பு போல கிடந்தால் தாமரையில் வசிக்கும் திருமகளைக் காட்டிலும் சிறப்பு எய்து வாள்.]

22. மயிர்ஒ ழுக்கம்உள் வளைந்திடில்
கைம்மையாம் ; அம்மயிர் சிவப்பேறில்
செயிரு றுங்குணம் எய்திடும் ;
இடையிடை சிதைந்திடில் திருநீங்கும் ;
இயல்பொ டும்சம மாய்மயிர்
இன்றிநல் இதயம்ஆழ்ந் திடாதாகின்
உயிரி னும்சிறந்த இன்னுயிர்க்
காதலன் உவப்புறச் சிறப்பாமால்.

[வயிற்றில் ரோம வரிசை உள்புறம் வளைந்திருந்தால் விதவையாவாள் ; மயிர் சிவந்திருந்தால் தீமை பயக்கும் குணம் உண்டாகும் ; நடு நடுவே விலகி இருந்தால் செல்வம் நீங்கும் ; நல்ல இதயம் இயற்கையாகவும் சமமாகவும் மயிர் இல்லாமலும் ஆழ்ந்திராமலும் இருந்தால் உயிரினும் சிறந்த ஆருயிர்க் காதலன் களிக்கச் செம்மை அடைவாள்.]

23. இதயம் மென்மயிர் அணிந்திடில்
காதலன் இறந்திடும் ; அகலுற்றால்
மதனன் ஐங்கணை வருத்திடப்
பலரையு மணந்துஅளி இல்லாகும் ;
சிதைவில் அங்குலம் ஓர்பதி
னெட்டதாய்ச் சிறிதுஉயர்ந் திடின்நன்றும் ;
ததையு மென்மயிர் அணிந்துஅறப்
பருத்திடில் சார்வருந் துயராகும்.

[மார்பில் மிருதுவான மயிர் பெற்றிருந்தால் கணவன் இறப்பான் ; மார்பு பரந்து இருந்தால் மன்மத பாணத்தால் வருந்தி அன்பு இல்லாதவள் ஆவாள் ; பதினெட்டு அங்குல அளவாய்க் கொஞ்சம் உயர்ந்திருந்தால் நல்லது ; நெருங்கிய மென்மயிர் இருந்து மிகவும் பருத்திருந்தால் சொல் லரிய துன்பம் உண்டாகும்.]

24. வடம்கொள் வெம்முலை பணைத்துஅடி
கனத்துஇணை வாய்ந்துஇடை வெளியின்றிக்
கடைந்த செப்பினிற் புடைபரந்து
எழில்தவழ் கண்கறுத் திடின் நன்றும் ;
தடங்கண் மங்கைதன் வலமுலை
உயர்ந்திடில் ஆண்பெறும் ; தளராது
குடம்ப ழித்து உயர் இடமுலை
உயந்திடில் பெண்பெறும் குறிப்பாமால்.

[மாலையணிந்த கொடிய கொங்கை பூரித்து அடிகனத்து ஒன்றுக் கொன்று சமமாகி இடைவெளி இல்லாமல் கடைந்து எடுத்த செப்புப் போல் பக்கம் பரந்து, அழகு விளங்கும் முலைக்கண் கறுத்து இருந்தால் நல்லது ; விசாலமான கண்களையுடைய மங்கையின் வலது கொங்கை உயர்ந்திருந்தால் ஆண் குழந்தை பெறுவாள் ; தளராமல் கும்பத்தை ஒத்த இடது கொங்கை உயர்ந்திருந்தால் பெண் குழந்தை பெறுவாள்.]

25. அடிக னத்துமேல் வரவர
நேர்ந்திடில் சிறிதுநாள் அழகெய்தும் ;
வடிவம் இன்றியே திரிகைபோல்
பதிந்திடில் வசைபடு குணனுகும் ;
ஒடிவில் கண்இணை பருத்திடின்
நீண்டிடின் உயர்ந்திடின் உதிஆழில்
கடின மாய்அற நீங்கிடு
முலையெனில் கனவிலுந் தொடலாகா.

[அடி கனத்து மேலே வரவரச் சிறுத்திருந்தால் சிறிது காலம் அழகாக இருப்பாள் ; உருவில்லாமல் சக்கரம் போல் படிந்திருந்தால் தீமை பொருந் திய வசைபடும் குணம் உடையவள் ; ஒடிதல் இல்லாத முலைக்கண் இரண்டும் பருத்திருந்தாலும் நீண்டிருந்தாலும் உயர்ந்திருந்தாலும் துருத்திபோன்ற முனை அழுந்தியிருந்தாலும் கடினமாய் ஒன்றுக்கொன்று முற்றிலும் விலகி யிருக்கும் கொங்கையானாலும் அவளைக் கனவிலும் தீண்டலாகாது.]

26. கழுத்து அடிப்புறத்து என்பு எழாது
அமைந்திடின் திருவுறும் ; கவின்யாதும்
ஒழித்து மேலெழுந்து உயர்ந்துதாழ்ந்
திடின்திரு ஒழிந்திடும் ; அழகார்ந்த
பழிப்பில் தோளிணை குறுகுதல்
நீடல்மற் றின்றிமென் பணைபோல்
விழுப்பம் எய்துறின் நன்று ; தோள்-
மயிர்உறின் கைம்மையாய் விடுமன்றே.

[கழுத்து அடிப் புறத்து எலும்பு தோன்றாமல் அமைந்திருந்தால் செல்வம் உண்டாகும் ; சிறிதும் அழகு தோன்றாமல் மேலெழுந்தாவது உயர்ந்தாவது தாழ்ந்தாவது இருந்தால் செல்வம் நீங்கும் ; அழகு வாய்ந்து குற்றம் இல்லாத இரு தோள்களும் குறுகுதலோ நீளுதலோ இல்லாமல் மென்மையான மூங்கில் போல் சிறப்புற்றிருந்தால் நல்லது, தோளின் மேல் ரோமம் இருந்தால் விதவையாவரள்.]

27. தோளில் என்புமேல் எழுந்திடில்
கைம்மையாம் ; உலர்ந்திடின் துயர்எய்தும்
கோளில் சந்துகள் தசைத்துதோன்
றாவெனின் குற்றமொன் றிலதாகும் ;

நீள்கை மூலமென் மயிரொடும்
உலர்ந்திடல் பருத்திடல் நெறியாகும் ;
வாள்கொள் செம்மயிர் ஆழ்தல்நீள்
நரம்பொடு வழியும்வேர் உறின்தீதாம்.

[தோளிலே எலும்பு மேலெழுந்து தெரிந்தால் விதவையாவாள் ; குற்றம் இல்லாத சந்துக்கள் தசைப்பற்று கொண்டு தெரியாமல் இருந்தால் சிறிதும் குற்றம் இல்லை ; நீண்ட கைமூலம் (அக்குள்) மெல்லிய ரோமத்தோடு உயர்ந்தும் பூரித்தும் இருத்தல் முறையாகும் ; ஒளி கொள்ளும் சிவந்த ரோமத்தோடு ஆழமாகவும் நெடிய நரம்புகளோடும் வேர்வை வழிந்தும் இருந்தால் கெடுதல்.]

28. உலறு பன்மயிர் இன்றிநீள்
நரம்பொடுஎன்பு உயர்ந்திடாக் கரம்நன்றாம் ;
குலவு பன்மயிர் என்பொடு
நரம்புஎழில் கொடியவெந் துயர்எய்தும் ;

இலகு தாமரை நனையெனப்
பெருவிரல் இயைந்திடில் சிறப்பெய்தும் ;
அலகில் பேரெழில் அங்கைமென்
முயல்வயி றாமெனக் குழைவுற்றே.

[சிலும்புகின்ற பல ரோமம் இல்லாமல், நெடிய நரம்போ எலும்போ தோன்றாத கை நல்லது ; நெருங்கிய பல மயிர், எலும்பு, நரம்பு தோன்றினால் மிகக் கொடிய துன்பம் எய்துவாள் ; விளங்கும் தாமரை மொட்டுப்போல் பெருவிரல் இருந்தால் சிறப்பு அடைவாள் ; குற்றம் இல்லாத மிக்க அழகுவாய்ந்த உள்ளங்கை மிருதுவான முயல்வயிறு போல் குழைவாய் இருந்தால் நலம்].

இதுவும் அடுத்த பாடலும் குளகம்.

29. அரத்தம் ஊட்டிய செய்யபொற்
றாமரை அகவிதழ் எனச்சேந்து
பொருத்து மெல்விரல் இடைவெளி
யின்றியே பொருந்திய வரைத்தாகி

யிருத்தல் நன்று ; உயர் புறங்கையில்
நரம்பொடு என்புஎழாது மென்தசைமூடிப்
பெருத்து நீண்மயிர் ஒழிந்துஎழில்
வாய்ந்திடல் பெட்பொடும் திருவெய்தும்.

[செந்நிறம் ஊட்டிய சிவந்த பொற்றாமரையின் உள்ளிதழ்போல் சிவப்பெய்தி, இணைந்த மெல்லிய விரல்கள் இடைவெளியில்லாமல் முறையான அளவு உள்ளதாக இருத்தல் நலம் ; புறங்கை உயர்ந்து, எலும்பு, நரம்பு தோன்றாமல் மெல்லிய தசைப்பற்றுடன் பூரித்து நெடிய ரோமம் இல்லாமல் அழகு பெற்றிருந்தால் பெருமையும் செல்வமும் அடைவாள்.]

30. அங்கை நீள்வரை பலஉறில்
கைம்மையாம் ; அகன்றிடின் திருவஃகும் ;
தங்கு நீள்நரம்பு உயர்ந்திடில்
இரக்கு; நீள் புறங்கையில் தலைப்பெய்து
துங்க மாமயிர் செறிந்திடில்
காதலன் தொலைவன் ; நீள் நரம்புஎய்தில்
பங்கமுற் றுஉயர் நிரப்புற
நாள்தொறும் படுதுய ரிடைவீழும்.

[உள்ளங் கையில் நீண்ட பல ரேகைகள் இருந்தால் விதவையாவள் ; பரந்திருந்தால் செல்வம் குறையும் ; நெடிய நரம்பு தோன்றினால் பிச்சை எடுப்பாள் ; நீண்ட புறங்கையில் ஒன்றாகக்கூடி நிமிர்ந்த மயிர் நெருங்கி யிருந்தால் கணவன் இறப்பான் ; நெடிய நரம்பு தோன்றினால் துன்பம் அடைந்து மிகத் தரித்திரமடைய, எக்காலமும் அதிகரிக்கும் துன்பத்தில் ஆழ்வாள்.]

31. இடைய றுதுஉறச் சேர்ந்திடத்
தோன்றிடாது எழில்திகழ் வரையாவும்
இடையு றுதுசெங் கயலெனக்
கிடந்திடின் விழுமிது ; கமலம்போல்
வடிவம் வாய்ந்திடில் அரசரின்
கிழத்தியாய் மகப்பெறும் ; வளைஆமை
குடைநி கர்த்திடில் விண்ணவர்க்கு
அன்னையாய்க் குறைவில்சீர் பெறுமாதோ.

[இடை விலகி இல்லாமல் பொருந்தச் சேர்ந்து, காணப்படாமல் அழகு விளங்கும் ரேகைகள் எல்லாம் நடுவே இல்லாமல் சிவந்த கயல்மீன் போல் உருவம் கிடந்தால் சிறப்புடையது ; தாமரை போன்ற உருவம் இருந்தால் அரசனுடைய தேவியாகி மக்களைப் பெறுவாள் ; சங்கு ஆமை குடைபோன்றிருந்தால் தேவர்க்கு அன்னையாகிக் குறைவற்ற சிறப்பு அடைவாள்.]

32. கற்பு வாய்ந்திடும் சுவத்திகம்
நிகர்த்திடில் ; கமழ்வலம் புரிநேரின்
ஒற்றை வெண்குடை மன்னவர்க்கு
உரியாளாம் ; உறுதுலே யெனச்சேரின்
மற்றை நாய்கர்தம் மனைவியாம் ;
நுகத்தோடு சகடமாம் வடிவெய்தில்
அற்பி ேைடநல் உழவர்தம்
மனைவியாய் அறம்வளர்த் திடுமென்றே.

[சுவஸ்திகம்போல் இருந்தால் கற்பு உடையவள் ; மணம் கமழும் நந்தியாவர்த்த மலர்போல் இருந்தால் உலகத்தை ஒரு வெண்குடைக் கீழ் ஆளும் மன்னன் தேவியாம் ; பொருந்திய தராசுபோல் இருந்தால் வியாபாரிகள் தலைவன் மனைவியாவள் ; நுகத்தடி சக்கரம் ஆகிய வடிவம் ஆனல் ஆசையோடு நல்ல உழவர் மனைவியாகத் தர்மத்தை வளர்ப்பாள்.]

33. வேழம் வாம்பரி வில்விடை
வச்சிரம் வீசுசா மரம்தோட்டி
ஆழி ஒப்புறின் அரசரின்
கிழத்தியாம் ; ஆடல்வேல் கதைசூலம்
சூழ்சு டர்க்கொலே வாள்இவை
போன்றிடின் தொகுபொருள் குவையாவும்
வீழு னர்க்கெலா மகிழ்வுற
நாடொறும் வேண்டுவ நனிநல்கும்.

[யானை, தாவிச் செல்லும் குதிரை, வில், எருது, வச்சிராயுதம், வீசுகிற சாமரை, அங்குசம், சக்கரம், இவைபோன்றிருந்தால் அரசன் தேவியாவாள் ; போர்புரியும் வேலாயுதம், கதை, சூலாயுதம், குலவும் கிரணம் பொருந்திய கொலை செய்யும் வாள், இவைபோன்றிருந்தால் பொருள் தொகுதி மிகுதியும் தரித்திரர்கள் களிக்கத் தினந்தோறும் விரும்பிய வகையில் அதிகமாய்க் கொடுப்பாள்.]

34. அரவம் ஒட்டகம் தவளைசெந்
நாய்கழுகு அரற்றுவெங் கரம்பூனை
நரியு டற்றுதேள் நிகர்த்திடில்
அருந்துயர் நண்ணும் ; அங் குட்டத்தில்
வரைகள் இட்டிகை அளவுஉறின்
காதலன் மரித்திடும் ; எழில்வாய்ந்த
விரல்கள் ஊழ்முறை நேர்ந்துஉறு
சந்துகண் மிகுந்திடா வெனில்நன்றும்.

[பாம்பு, ஒட்டகம், தவளை, செந்நாய், கழுகு, கத்துகிற கொடிய கழுதை, பூனை, நரி, துன்பப்படுத்தும் தேள், இவைபோன்றிருந்தால் மிகுந்த துன்பம் உண்டாகும் ; பெருவிரல் வரைகள் செங்கல் அறுக்கும்

இட்டிகைபோல் இருந்தால் கணவன் இறப்பான் ; அழகுவாய்ந்த விரல்கள் நேராக மெலிந்து பொருந்திய சந்துகள் மிகுந்திராமல் நெருங்கியிருந் தால் நல்லது.]

35. மயிர்ந ரம்புஎழுந்து உயர்ந்துஅற
வன்மையாய் வளைந்துநேர்ந்து இடைநீங்கில்
செயிர்வி ளைந்திடும் ; கூர்உகிர்
நீண்டிடில் சிவந்திடில் சிறப்பாகும் ;
பயிலு நல்லொளி யின்றியே
பொன்மையாய்ப் பள்ளமாய் விளர்ப்புற்றால்
துயர் உழந்திடும் ; புள்ளியாய்
விளர்ப்புறில் தோய்ந்திடும் பலரோடும்.

[மயிரும் நரம்பும் தோன்றி, மிகவும் கடினமாய், வளைந்து, மெலிந்து இடைவெளியோடு இருந்தால் துன்பம் உண்டாகும் ; கூரிய நகம் நீண் டிருந்தாலும், சிவந்திருந்தாலும் சிறப்பு அடைவாள் ; நல்ல பொலிவு இல்லாமல் பொன் நிறமாயும், பள்ளமாயும், வெளுத்தும் இருந்தால் துன்பம் அடைவாள் ; புள்ளியோடு வெளுத்திருந்தால் பலரோடும் இன்பம் துய்ப்பாள்.]

36. முதுகு சேர்ந்திடும் என்புமென்
தசையினில் மூடிநீண் மயிரின்றி
விதியின் நல்லெழில் வாய்ந்திடின்
நன்று ; கூன் மேவிவன் மயிர்வேய்ந்து
தசையும் என்பொடு நரம்புஎழுந்து
உயர்ந்துஅறத் தாழ்ந்திடில் தீதாகும் ;
பொதிந ரம்புகோண் இன்றிமென்
தசையினில் பொருந்திடிற் சுவனன்றும்.

[முதுகு அதைச் சேர்ந்த எலும்பு மெல்லிய தசையினால் மூடப் பெற்று நீண்ட மயிர் இல்லாமல் கிரமமான அழகு வாய்ந்திருந்தால் நல்லது ; கூன்விழுந்து, வலிய மயிர் நிறைந்து, நெருங்கிய எலும்பும் நரம்பும் தோன்ற, உயர்ந்திருந்தாலும் மிகவும் தாழ்ந்திருந்தாலும் தீமையாகும் ; பிடரியின் நரம்பு கோணல் இல்லாமல் மெல்லிய தசையில் பொருந்தியிருந்தால் செல்வம் ; நன்றாகும்.]

37. சிறுபு றத்தினில் நரம்புஎழில்
வன்மயிர் சேரில்நீண் டிடில்கோணில்
அறவும் வற்றிடில் தீது;மென்
கழுத்துநால் அங்குலத்து அளவாகி
உறுவ னப்பொடும் கன்னியம்
கமுகெனத் திரண்டுஒளிர் வரைமூன்று
பெறுதல் நன்று ; அதுகுறுகிடில்
தாசியாம் ; பெருத்திடில் கலன்போக்கும்.

[சிறு பக்கங்களிலே நரம்பு தோன்றினாலும், உரமான மயிர் சேர்ந் திருந்தாலும், மிகவும் நீண்டிருந்தாலும், கோணலாயினும், மிகவும் வற்றியிருந்தாலும் தீது ; மெல்லிய கழுத்து நான்கு அங்குல அளவாகி, பொருந்திய அழகோடு இளங்கமுகமரம்போல உருட்சியாய் ஒளிபொருந்திய மூன்று மடிப்புகளுடன் இருந்தால் நல்லது ; அது குறுகினால் தாசி யாவாள் ; பூரித்திருந்தால் மாங்கலியம் இழப்பாள்.]

38. உலர்ந்து நீண்டிடின் குறுகிடின்
மயிரெழில் உலப்பறு திருநீங்கும் ;
கலந்து நீள்மடிப்பு எய்திடின்
மலடியாம் ; நாடின்நன் கவின்எய்தி
நலஞ்சி றந்துஇரண்டு அங்குலத்து
அளவையாய்த் திரண்டிடின் நன்றாகும் ;
மலிந்து நீண்டுஇரு கூறதாய்ப்
பருத்துவன் மயிர்உறில் தீதாமால்.

[உலர்ந்து நீண்டிருந்தாலும் குறுகியிருந்தாலும் மயிர் தோன்றினா லும் அளவற்ற செல்வம் போய்விடும் ; நீண்ட மடிப்புகள் கலந்திருந் தால் மலடியாவள் ; நல்ல அழகு பெற்று நலம் சிறந்து இரண்டு அங்குல நீளம் உள்ளதாகத் திரண்டிருந்தால் நல்லது ; கனத்து நீண்டு இருபிரிவாகப் பூரித்தும் வலிய ரோமம் கொண்டும் இருந்தால் தீது.]

39. அனுந ரம்புஉறு மயிர்இவை
ஒழிந்திடில் அழகுறும் ; வளைந்தோங்கி
நனிஇ ளைத்துஅறக் குறுகிமென்
மயிர்உறின் அவையதாம் ; கபோலங்கள்
இனிய வாய்த்தசைந்து ஆடியின்
எழில்கவர்ந்து இயைதல்நன்று ; எழில்நாளும்
கனிவு றுதுஅறப் பள்ளமாய்
மயிரொடும் கடினமயாய் உறில்தீதாம்.

[கன்னத்தில் நரம்பு மயிர் ஆகியவை இல்லாமல் இருந்தால் அழகு பெறும் ; வளைந்து, உயர்ந்து, மிகவும் மெலிந்து, அதிகமாகக் குறுகி, மயிர் தோன்றியிருந்தால் குற்றம் ஆகும் ; கன்னங்கள் இனியனவாகித் தசைப்பற்றுடன் கண்ணாடியின் பொலிவைப் பெற்றிருத்தல் நல்லது ; எந்நாளும் முதிராமல் (பூரிக்காமல்), பள்ளமாய் மயிர்பெற்றுக் கடின மாய் இருந்தால் தீது.]

40. ஒளிஉ மிழ்ந்துநல் வட்டமாய்
எழில்திகழ் உவாமதி எனத்தோன்றி
நளின மென்மணம் வீசுவாள்
முகம்எனின் நன்று ; கீழ்இதழ் சேந்து

வளர்செ ழும்துகிர்க் கடிகைபோல்
திரண்டுஅதின் நடுவணோர் வரைசேரில்
களைக ணுய்உலகு அளித்திடும்
அரசரின் கிழத்தியாய்க் களிகூரும்.

[முகம் ஒளிவீசி நல்ல வட்டவடிவமாய் அழகிய பூர்ண சந்திரன் போல் தோன்றி மென்மையான தாமரை மலர் மணம் வீசுமானுல் நல்லது ; கீழ் உதடு சிவந்து செழுமையாக வளரும் பவளத் துண்டுபோல் திரண்டு, அதன் நடுவே ஒரு கீற்று இருந்தால் உலகுக்கு ஆதரவாகப் பிறக்கும் அரசன் தேவியாய் மகிழ்வாள்.]

41. பருத்து நாணெனச் சிறுத்துஇரண்டு
இதழ்எனப் பகர்ந்திடும் வரைமேவில்
திருத்த ணப்புறும் ; கறுத்துஅறப்
பருத்திடில் கைம்மையாய்த் துயர்சேரும் ;
பொருத்து மேலிதழ் நடுச்சிறிது
உயர்ந்துஎழில் பொருந்திடில் நன்ருகும் ;
விரித்து உலர்ந்துநீண் மயிரொடும்
பொருந்திடின் மிக்கவெந் துயர்கூரும்.

[உதடு பருத்து, கயிறுபோல் சிறுத்து இரண்டு இதழ் என்று எடுத்துக் காட்டக்கூடியதான ரேகை இருந்தால் செல்வம் விலகும் ; கறுத்து அதிகமாகப் பருத்திருந்தால் விதவையாகித் துயர் அடைவாள் ; பொருத்த மான மேல் உதடு நடுவே கொஞ்சம் உயர்ந்து அழகானுல் நல்லது ; பரந்து உலர்ந்து நெடிய மயிருடன் இருந்தால் மிகக் கொடிய துன்பம் அனுபவிப்பாள்.]

42. முருந்து எறிந்துவெண் ணிலாக்கதிர்
விரித்தஒளிர் முத்தினை நிரைத்தென்னத்
திருந்து வெண்பல்எண் நான்கெனும்
தொகையவாய்ச் சிறந்திடின் நன்ருகும் ;
பரந்து உயர்ந்துநீண்டு அகன்றுபொன்
நிறத்தவாய்ப் பசுமையாய்த் தெற்றித்துக்
கரிந்து சிப்பிபோன்று இருந்திடின்
துயரொடும் கையறவு உறுமாதோ.

[மயில் இறகின் அடி வெண்குருத்தைவென்று, வெண்மையான நிலவுக் கிரணங்களைப் பரப்பி ஒளிரும் முத்துக்களை வரிசையாக வைத்தது போல் செவ்வையான வெண்பல் முப்பத்திரண்டு என்னும் தொகையாகி நெருங்கி இருந்தால் நன்மை பயக்கும் ; பரவி, உயர்ந்து, நீண்டு, அகன்று, பொன்னிறம், பசுமை பொருந்திய பாசிநிறம் பெற்றும் தெற்றுப் பல்லாக ஒன்றேடு ஒன்று பின்னியும், கறுமை வாய்ந்தும் சிப்பிபோலும் இருந்தால் துன்பத்தோடு தரித்திரத்தையும் அடைவாள்.]

43. அணரி மேயபல் உயர்ந்திடில்
தாய்உயிர் அழிந்திடும் ; தெற்றுஆகில்
கணவன் வீந்திடும் ; நீங்கிடில்
பலரொடுங் கலந்திடும் ; நாச்சேந்து
தணிவின் மென்மையாய் இருந்திடின்
இனியன நுகர்ந்திடும் ; தழல்வெங்கண்
பணியின் நாவென நுனிகவர்ந்து
அகன்றிடின் படுதுயர் உறுமாதோ.

[மேல் வாய்ப் பக்கத்தில் உள்ள பல் உயர்ந்திருந்தால் அவளுடைய தாய் இறப்பாள் ; தெற்றுப் பல்லாகப் பின்னி இருந்தால் புருஷன் இறப்பான்; இடைவெளி பெற்று நீங்கி இருந்தால் பலருடனும் கூடுவாள் ; நாக்குச் சிவந்து மிகமிருதுவாக இருந்தால் நல்ல போகங்களை அனுபவிப்பாள்; நெருப்புப்போன்ற கொடிய கண்ணையுடைய பாம்பின் நாக்குப்போல நுனி பிளந்து (இரண்டாகி) அகலமாக இருந்தால் மிகுந்த துன்பத்தை அடைவாள்.]

44. நாவி ளர்த்திடின் புனலின்வீழ்ந்து
இறந்திடும் ; நனிகறுத் திடின்சீறும்
ஓவறப்பெருத் திடின்இரப்பு
எய்திடும் ; உயர்ந்துநீண் டிடின்நாளும்
யாவ தாயினும் வரைவிகந்
திருந்திடும் ; அகன்றிடில் இகல்செய்யும் ;
மேவு இன்றஉள் நாச்சிவந்து
இழுதென மென்மையா மெனின்நன்றே.

[நாக்கு வெளுத்திருந்தால் தண்ணீரில் விழுந்து உயிர் துறப்பாள் ; மிகவும் கறுத்திருந்தால் கோபம் மிகுந்தவளாக இருப்பாள் ; குறை வின்றிப் பெருத்திருந்தால் பிச்சை எடுக்கவேண்டி நேரும் ; உயர்ந்து நீண்டிருந்தால் எந்நாளும் எதுவாக இருந்தாலும் ஒப்புக்கொள்ளாது தாழ்த்திப் பேசுவாள் ; அகலமானால் சண்டைபோடுவாள் ; உள்நாக்குச் சிவந்து நிணம்போல் மென்மையாக இருந்தால் நல்லது.]

45. இன்ன தன்மையின் அன்றிஉள்
நாஅறத் தூற்றிநீண்டு எழுந்துஓங்கிப்
பொன்மை யாமெனின் புறநகர்
எங்கணும் போக்குஅயர்ந் திடும் ; அன்றி
வன்மை யாமெனின் கள்வர்தம்
மனைவியாம் ; விளர்ப்பின்மங் கலநீங்கும் ;
துன்ன ருங்கறுப்பு எய்திடின்
கொழுநனைப் பிரிந்துவெந் துயர்கூரும்.

[இவ்விதம் இல்லாமல், உண்ணுக்கு மிகவும் கிளைத்து நீண்டு நிமிர்ந்து உயர்ந்து பொன்னிறமாயிருந்தால் அன்னிய தேசம் எல்லாம் செல்வாள்; அல்லாமல், கடினமாக இருந்தால் சோரர்களுடைய மனைவியாவாள்; வெளுத்திருந்தால் விதவையாவாள்; மிகவும் கறுத்திருந்தால் கணவனைப் பிரிந்து மிக்க துன்பத்தை அடைவாள்.]

46. இலகு பொற்கொடி மூக்கின்என்பு
உள்சிறிது உயர்ந்துசேந்து இயல்எள்ளின்
மலரின் வண்ணமாய் நீண்டுதாழ்ந்
திராதுமேல் வரவர வுறநேர்ந்து
நிலவு மென்துளை சிறுத்துஇரு
புறங்களு நேர்பெறச் சமனுகில்
உலக மியாவையும் கைதொழுது
ஏத்திடும் ஒண்மலர்த் திருவொப்பாள்.

[பொற்கொடி என விளங்கும் மாதர் மூக்கு, உள்ளே எலும்பு சிறிது உயர்ந்து, சிவந்து, எள்ளின் பூவைப்போல் நீண்டு, தாழ்ந்திராமல், மேலே செல்லச் செல்ல மிகவும் குறுகி, நாசித்துவாரம் சிறுத்து இருபுறமும் ஒத்துச் சமமாக இருந்தால் எல்லா உலகும் வணங்கித் துதிக்கும் ஒளி வீசும் தாமரை மலரில் வசிக்கும் திருமகளை ஒத்திருப்பாள்.]

47. கருமை யாய்நுனி வளைந்துஇடை
பள்ளமாய்க் கவிழ்ந்துஅறப் பருத்துஓங்கி
அருண மாய்நுனி பருத்திடின்
கைம்மையாம்; சிலதியாம் மடிப்புற்றால்;
உருவு தேய்ந்துஅறக் குறுகிடின்
கலதியாம்; உறுகவுள் சுரித்துஒண்பல்
தெரிவு றுதுகண் ணிடுக்குறுது
இளநகை செய்திடில் இனிதாமால்.

[கருநிறம் உடையதாகவும், நுனி வளைந்தும், நடுவே பள்ளமாகவும் கவிழ்ந்தும், மிகவும் பூரித்தும், உயர்ந்தும், சிவந்தும், நுனி பருத்திருந்தாலும் விதவையாவாள்; மடிப்பு ஆனுல் குற்றேவல் புரியும் தோழியாவாள்; உருவம் தேய்ந்து மிகவும் குறுகினுல் மூதேவியாவாள்; சிரிக்கும்போது கதுப்புச் சுழித்து ஒளிவாய்ந்த பல் தெரியாமலும் கண் இடுங்காமலும் இருந்தால் நன்மை பயப்பதாகும்.]

48. சொல்லு மாறுஅலது உறுநகை
புரிந்திடின் தோம்உறும்; தும்முங்கால்
மெல்ல மெல்லென இருமுறை
மும்முறை தும்முதல் விதியாகும்;
அல்ல தீது; கண்மணிகறுத்து
இமைகறுத்து அயல்இடம் விளர்ப்பாகிச்
சில் அரிக்கடை சிவந்துபைங்
குவளையின் செவ்விவாய்ந் திடின்நன்றும்.

[மேலே சொல்லியவிதம் அல்லாமல் நகைபுரிவாளானால் குற்றம் அடைவாள் ; தும்மும்போது மெல்ல மெல்ல இரண்டுதரம் மூன்றுதரம் தும்முதல் முறையாகும் ; அல்லவாயின் தீது ; கண்ணில் மணி கறுத்து, இமையும் கறுத்து மணியைச் சுற்றிய பக்கத்து இடம் வெளுப்பாகி மெல்லிய செவ்வரி படர்ந்து, கடைக்கண் சிவந்து பசுமையான குவளை மலர்போல் செவ்வையாய் இருந்தால் நன்மையாகும்.]

49. கண்உ யர்ந்திடில் ஆயுள்போம் ;
 வட்டமேல் கலந்திடும் பலரோடும் ;
அண்ணல் யானையின் கண்நிகர்
 அமைந்திடில் அகற்றுதல் குணமாகும் ;
வண்ண மென்புரு நிறமெனின்
 நற்குணம் வாய்ந்திடாது ; அறச்சேப்பின்
உண்ணுங் காதலன் உயிரினை ;
 ஆழுமேற் சிலதியாய் உழல்கிற்பாள்.

[கண் உயர்ந்திருந்தால் ஆயுள் போய்விடும் ; வட்டமாக இருந்தால் பல ஆடவர்களோடு கூடுவாள் ; பெருமை வாய்ந்த யானையின் கண்ணை ஒத்திருந்தால் அவளை விலக்கிவிடுதல் நல்லது ; அழகிய புருவின் நிறமானால் நல்ல குணம் பெறமாட்டாள் ; மிகவும் சிவந்தால் கணவன் உயிரைக் குடிப்பாள் ; ஆழ்ந்திருக்குமாயின் குற்றேவல் புரியும் தோழியாகி வருந்துவாள்.]

50. ஆன்கண் ஒப்புறின் கலவியில்
 விழைவுறும் ; ஆடுமே தியின்கண்ணே
போன்று மாறுகண் ணாகியும்
 இருந்திடின் பொலிவிலள் ; இடப்பாலின்
என்று நோக்குறின் சிலதியாம் ;
 வலப்புறத்து இயைந்திடின் மலடாகும் ;
நான்ற தேனிறம் அமைந்திடில்
 இருநிதி நண்ணிவான் சிறப்பெய்தும்.

[பசுவின் கண்போல் இருந்தால் கலவியில் விருப்பம் கொள்வாள் ; ஆடு, எருமை ஆகியவைபோன்றிருந்தாலும், மாறுகண் ஆனாலும் பொலிவு பெறமாட்டாள் ; இடப்பக்கம் சாய்ந்து பார்த்தால், குற்றேவல் புரியும் தோழியாவாள் ; வலப்புறமானால் மலடி ; துளிக்கின்ற தேன் நிறம் பொருந்தினால் மிகுந்த செல்வம் பெற்று உயர்கீர்த்தி அடைவாள்.]

51. இமையின் மென்மயிர் பருத்துஅற
 நேர்ந்திடாது எழிலொடும் கறுப்பெய்தின்
அமையும் நல்திரு ; பொன்மையாய்ப்
 பருத்துஇடை இடைவெளி உறில்ஆகா ;

சமர்மு கத்துவில் போன்றுஅற
மென்மையாய்க் கருமைசார்ந்து எழிலாகி
உமிழ்க திர்க்கொடிப் புருவம்மற்றென்
றெடொன்று உறுதெனின் மிகநன்றும்.

[கண் இமையில் மெல்லிய மயிர் பருத்து மிகவும் குறுகாமல் அழகுடன் கறுத்திருந்தால் நல்ல செல்வம் சேரும்; பொன் நிறமாய்க் கனத்து நடுநடுவே விலகி இருந்தால் ஆகாது; புருவம் போர்க்களத்து வில் போல வளைந்து மென்மையாகக் கறுத்து, அழகு பெற்று, கிரணங்களைப் பொழியும் கொடிபோல் ஒன்றோடு ஒன்று சேராமல் இருந்தால் மிகவும் நல்லது.]

52. புருவ மென்மயிர் பருத்துநீண்டு
இடையிடை அகன்று பொன்னிறமாகி
விரவி ஒன்றெடொன்று உற்றிடில்
அருந்துயர் மேவும்; அம் செவிநாப்பண்
உருவ நன்சுழி இருந்திடின்
நன்மக வுயிர்த்திடும்; உதிப்பின்றி
மருவு பன்மயிர் நரம்புஎழுந்து
உயர்ந்துமேல் வளைந்திடின் தீதாமால்.

[புருவத்தில் உள்ள மெல்லிய ரோமம் பருத்து நீண்டு நடுநடுவே விலகிப் பொன்னிறமாகி இருபுருவங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து இருந்தால் கொடிய துன்பம் அடைவாள்; அழகிய காதின் நடுவில் அழகிய நல்ல சுழி இருந்தால் நற்புதல்வரைப் பெறுவாள்; தோற்றம் இல்லாமல் மயிர் மிகுதியும் சேர்ந்து நரம்பு தோன்றி உயர்ந்து மேனோக்கி வளைந்திருந்தால் தீமையாகும்.]

53. நெற்றி மூவிரல் அகலமாய்ச்
சின்மயிர் நெறித்திடு நரம்பின்றிக்
குற்ற மின்றிவெண் பிறையென
இருந்திடின் குலவிய திருவெய்தும்;
உற்ற சொத்திக ரேகைசேர்ந்
திடில்அவள் உரியள்மன் னவர்க்கென்ப;
நெற்றி நீளநரம் பொடுமயிர்
அணிந்திடின் சேர்குவள் பலரோடும்.

[நெற்றி மூன்று விரல் அகலமாய், சிறுரோமங்களும் நெறித்திடும் நரம்பும் இல்லாமல், குற்றம் இல்லாமல், வெண்மையான பிறைச் சந்திரன் போல் இருந்தால், செல்வம் வந்து அடையும்; சுவஸ்திகையின் ரேகை பொருந்தியிருந்தால் அவள் அரசன் தேவி என்பர்; நெடிய நரம்பும் மயிரும் சேர்ந்திருந்தால் அவள் பலரோடும் கூடுவாள்.]

54. ஒழுகி வார்ந்தொளிர் சீமந்த
ரேகைநன்கு உற்றிடின் சிறப்பெய்தும் ;
பழுதில் சென்னிமேல் உயர்ந்துஅணி
வட்டமாய் அழகுறின் பலன்எய்தும் ;
கழிய வீங்கிடின் விதவையாம் ;
நீளுமேல் காமுறும் பலர்பாலும் ;
எழில் அகன்றுஅற இருந்திடில்
யாவரும் இகழ்தர இரப்பாமால்.

[வரிசையாக நீண்டு அமைந்திருக்கும் சீமந்த ரேகை எனப்படும் மயிரின் வகிடு நன்றாகப் பொருந்தியிருந்தால் சிறப்பு அடைவாள்; குற்றம் இல்லாத சிரசு மேலே உயர்ந்து அழகான வட்டவடிவாக இருந்தால் பலன் அடைவாள்; மிகவும் பருத்தால் விதவையாவாள்; நீண்டிருந்தால் பலர்மீதும் ஆசைகொள்வாள்; அழகு இல்லாமல் இருந்தால் யாவரும் பழிக்கும்படி பிச்சை எடுப்பாள்.]

55. கரிய மையினை நூற்றென
வளர்ந்துமென் கடைகுழன்று அறநேர்கின்
முருகு வாய்மடுத் தளிநிறம்
பூத்துற முறைமுறை நெறிப்பாகிப்
பெருகல் நீளுதல் குறுகுதல்
வளர்கடை பிளந்திடல் இவையன்றிப்
பொருவில் மேன்மையாய் நெறித்திடில்
அளிமலர்ப் பூங்குழல் இனிதாமால்.

[வண்டு மொய்க்கும் மலர் சூடும்குழல் கருமையான மையைப் பூசியது போல நீண்டு வளர்ந்து நுனி குழைந்திருந்தாலும், மிகவும் மெலிந்திருந்தாலும் தேன் குடிக்கும் வண்டின் நிறம்கொண்டு வரிசையாக நேராயிருந்தாலும், பெருகுதல், நீளுதல், குறுகுதல், வளர்கின்ற நுனி பிளவுபடுதல் ஆகியவை இல்லாமலும், சமானம் இல்லாத மேன்மை பெற்று நெறித்திருந்தாலும் இனியதாகும்.]

56. கடைபி ளந்துஇடை வெளிவெளி
யாய்அறக் கடினமாய்க் குழைவின்றி
வடிவம் இன்றிமற் றுலறுசெந்
நிறத்ததாய் வயங்குபொன் னிறமாகில்
கொடிய வெந்துயர் நிரப்புறும் ;
நெற்றியில் கொடிநெடும் புருவத்தின்
இடையின் வாய்ந்தசெம் மறுவுள
தாம்எனில் எழுகடற் புவிகாக்கும்.

[நுனி பிளந்து, நடுவே விலகி, மிகவும் கடினமானதாகிக் குழைவு இல்லாமல், அழகில்லாமல் செந்நிறம் வாய்ந்தும், பொன்னிறம் உடைய தாயும் இருந்தால் மிகக்கொடிய துன்பம் உண்டாகும்; நெற்றியிலே கொடிபோன்ற நீண்ட புருவத்தின் நடுவே, சிவந்த மறுவிருந்தால் கடல் சூழ்ந்த பூமியைக் காக்கும் அரசி ஆவாள்.]

57. இடப்பு றத்தில்நல் தழும்புமென்
புள்ளிசேப்பு எய்திய மறுவுண்டேல்
அடுக்கு நல்திரு; வலமுலை
தன்னில்தழும்பு அணிமறு உளதாகில்
கடற்பு விக்குஒரு திலகமாம்
புதல்வன்வேற் கண்ணிய ரொருநால்வர்
வடத்தின் மெல்லிலை நல்லெழில்
கவற்றிய வயிறுவாய்த் திடுமன்றே.

[இடப்பக்கத்தில் நல்ல தழும்பு, மெல்லிய புள்ளி, சிவந்த மறு ஆகியவை இருந்தால் நல்ல செல்வம் வரும்; வலது கொங்கையில் வடு, அழகிய மறு ஆகியவை இருந்தால், உலகத்துக்கு ஒரு திலகம் போன்ற மகன், வேல் போன்ற கண்ணையுடைய புத்திரிகள் நால்வர் ஆகியோரை ஆலமரத்தின் தளிர் இலை போன்ற தன் வயிற்றில் பெறுவாள்.]

58. சேந்த நன்மறு மூக்கினுள்
நுதியிடைச் சேர்ந்திடில் உலகாளும்;
வேந்தர் நன்மனைக் கிழத்தியர்க்கு
அல்லது மேவுரு முன்சொன்ன
காந்து நன்மறுக் கறுப்பெனின்
துயரொடும் கைம்மையாம்; அலதென்னின்
தோய்ந்த கேள்வரைப் பிழைத்துஅலர்
தூற்றிட ஏதிலா ரொடும்தோயும்.

[சிவந்த நல்ல மறு மூக்கினுள்ளே முனையில் பொருந்தியிருந்தால் பூமியை அரசு புரிவாள்; அரசன் மனைவிக்கு அன்றி வேறு யாருக்கும் தோன்றாத ஒளி பொருந்திய இந்த மறு கறுப்பாக இருந்தால் துன்பம் அடைந்து விதவையாவாள்; இல்லையானால் தன்னைக் கூடிய கணவனைக் குற்றம் செய்து பிறர் பழித்துத் தூற்றும்படி அன்னியரோடு கூடுவாள்.]

. இடப்பு றத்தவாங் கைதனில்
கழுத்தினில் இருசெவி தனில்ஏற்ற
கொடிற்றில் நன்மறு வுடைத்தெனின்
மூன்னர்நற் குமரனைப் பெறுகிற்பாள்;

அடிப்பு றத்தின்மேல் எழில்திகழ்
உந்தியின் அளவும்எள் கொசுகுவெய்ப்ப
வடுத்த யங்கிடில் நல்குர
வுழந்துபின் வான்துயர்க் கடல் வீழும்.

[இப்புறத்தில் உள்ள கையிலும் கழுத்திலும் இரு காதுகளிலும் கதுப்பிலும் மறுவிருந்தால் முதலிலே நல்ல மகனைப் பெறுவாள்; புறங்காலின்மேலே அழகுடன்கூடிய நாபிவரையில் எள், கொசுகு போன்ற வடுக்கள் இருந்தால் தரித்திரம் அனுபவித்துப் பின் துன்பக் கடலில் வீழ்வாள்.]

60. நுதலில் முத்தலைப் படைநிகர்
வரையுறின் உழைநுசுப் பகல்அல்குல்
மதர்வை நோக்கியர் ஆயிரர்
வழிபட மலர்மகள் எனவைகும்;
மதும லர்க்கையில் மார்பினில்
உந்தியில் வலஞ்சுழி உறின்நன்கு;
முதுகி னில்வலஞ் சுழிவலப்
புறத்துறின் மொழிவர்நன் கெனமாதோ.

[நெற்றியில் சூலம் போன்ற ரேகை இருந்தால், அழகிய மாதர் ஆயிரவர் பணி செய்ய லட்சுமிபோல் வாழ்வாள்; மலர்போன்ற கையிலும் மார்பிலும் நாபியிலும் வலஞ்சுழியானால் நல்லதாம். முதுகின் வலப்புறம் வலஞ்சுழியிருந்தாலும் நல்லது என்பர்.]

61. பிற்பு றத்தினில் வலஞ்சுழி
இரண்டுஉறில் பெருகும் ஆயுளுநாளு
மற்பின் மீக்குயர் மக்களும்;
கோடுஉயர் அல்குலின் அடிப்பாட்டில்
பொற்பி னல்வலஞ் சுழியுறின்
அரசர்இற் கிழத்தியாம்; புகல்ஆங்கண்
உற்ற பாண்டிலஞ் சுழியுறின்
ஆயுளும் மைந்தரும் உளவாமால்.

[பின்புறத்தில் இரண்டு வலஞ்சுழி இருந்தால், ஆயுளும் அன்பின் மேம்பட்ட மக்களும் அதிகமாம்; வரம்புயர்ந்த அல்குலின் அடிப்பக்கத்தில் அழகிய வலஞ்சுழி இருந்தால் அரசன் தேவியாவள்; அங்கே பாண்டில் சுழி இருந்தால் ஆயுளும் மக்களும் உண்டு.]

62. கடிதொ டங்கிஎந்து அல்குல்மட்டு
ஒருசுழி இடந்திடில் கணவன்சேய்
முடிவர் ; மென்கடி முதல்வயிற்று
அளவினும் மொழிந்தநீள் சுழிமேவின்
உடைய காதலன் இறந்திடும் ;
ஆயிடைச் சுழியிரண்டு உறுமாயின்
வடுவில் கன்னியங் கற்பழிந்து
அலர்புனை வம்பலர்க்கு இடனாகும்.

[கடிதடம் தொடங்கி எடுப்பான அல்குல்மட்டும் ஒரு சுழி இருந்தால் கணவனும் மக்களும் மரிப்பர் ; கடிதடம் முதல் வயிறு வரையில் அத்தகைய நீண்ட சுழி இருந்தால் அவள் கணவன் இறப்பான் ; அவ்விடம் இரண்டு சுழி இருந்தால் அவள் கற்பழிந்து அலர் தூற்றும் வம்பர்க்கு இடமாவாள்.]

63. கண்ணில் மென்சுழி யுடைத்தெனிற்
கைம்மையாம் ; அன்றெனில் கற்பேகும் ;
நண்ணு மூக்கினில் சுழியுறில்
கற்புறும் ; நலங்கெழு செவிமீதில்
வண்ண வார்குழல் வகிர்ச்சியில்
வலஞ்சுழி வதியின் நாயகன்ஆவி
உண்ணும் ; உச்சியில் ஒருசுழி
இருசுழி யுற்றிடில் கலன்போக்கும்.

[கண்ணில் மெல்லிய சுழி இருந்தால் விதவை ஆவள் ; அல்லது கற்பு இழப்பாள் ; மூக்கில் சுழியிருந்தால் கற்புடையவள் ; நலம் நிறைந்த காதின்மீதும், அழகிய கேசத்தின் வடுவினும் வலஞ்சுழி இருந்தால் கணவன் உயிரைக் குடிப்பாள் ; உச்சியிலே ஒரு சுழியோ இருசுழியோ இருந்தால் மங்கலியத்தை இழப்பாள்.]

64. நெற்றி மேல்வலஞ் சுழியுறின்
அவள்தனை நீக்குதல் குணனாகும் ;
முற்று மென்சுழி வலம்இட
மாய்ப்பிடர் எய்திடின் ஓர்ஆண்டில்
பெற்ற வின்னுயிர்க் கேள்வனை
இழந்திடும் ; பெட்பொடும் துயில்போது
பற்க றித்திடில் பலபல
இலக்கணம் பயிலினும் கொளல்ஆகா.

[நெற்றியில் வலஞ்சுழியிருந்தால் அவளை விலக்கிவிடுவது நன்று ; மெல்லிய சுழி வலமாகவும் இடமாகவும் கழுத்தில் இருந்தால் அவள் ஓர் ஆண்டில் தன் உயிர்க்காதலனான கணவனை இழப்பாள் ; அழகோடு துயிலும்போது பல்லைக்கடித்தால் வேறு நல்ல லட்சணங்கள் பல இருந்தாலும் அவளைக் கொள்ளுவது ஆகாது.]

65. அரையில் மென்சுழி உடையளேனும்
கன்னியங் கற்பினுக்கு அயலாவாள் ;
உரைசெய் நூல்முறை இலக்கணம்
அனைத்தையும் ஒருங்குவாய்ந் தனளேனும்
பொருவி னற்குணம் பொருந்துதல்
வேண்டு(ம்)மென் பூங்குழல் படைவாள்கண்
திருவ னார்கள்தம் இலக்கணம்
உரைத்தனம் ; மணவினை தெரிகிற்பாம்.

[அரையிலே மெல்லிய சுழியை உடையவள் அழகான கற்புக்கு அவள் அன்னியம் ஆவாள் ; சாமுத்திரிக நூலில் கண்ட இலட்சணம் அனைத்தையும் பெற்றிருந்தாலும், ஒப்பற்ற நற்குணங்களையும் அடைந்திருத்தல் வேண்டும். மெல்லிய மலர் சூடிய கூந்தலையும், வாள் போன்ற கண்ணையும் பெற்ற லக்ஷ்மிபோன்ற மாதர்கள் இலக்கணம் இதுவரையில் சொன்னேனும். மணம் செய்யும் முறையை மேலே கூறுவோம்.]

பிர்சேர்கை–2

வராஹமிஹிரர் இயற்றிய பிரஹத் ஸம்ஹிதை

அறுபத்தெட்டாம் அத்தியாயம்

புருஷ லட்சணம்

(1) சாமுத்திரிக லட்சணத்தை அறிந்த சமர்த்தன் முதலில் மனிதனுடைய உயரம், கனம், நடை, சரீர புஷ்டி, வலிமை, நிறம், எண்ணைக் கசிவு போன்ற பளபளப்பு, குரல், இயற்கைக் குணம், தோற்றத்தில் பிரதிபலிக்கும் சீலம், உடல் உறுப்புகள், உடற் காந்தி ஆகியவற்றைக் கவனித்து அவனுடைய கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் சொல்லுகிறான்.

(2) அரசனுடைய பாதங்கள் வேர்வை யில்லாமலும், மிருதுவான உள்ளங்கால்களை உடையனவாயும், தாமரை மலரது உட்புறத்தின் காந்தியைப் பெற்றும், நெருங்கிய விரல்களையும், அழகிய சிவந்த நகங்களை யும் உடையனவாயும், நன்கமைந்த குதிகால்களைப் பெற்றும், வெது வெதுப்பாகவும் நரம்பு எழாமலும் நன்றாக மறைந்த பரடுகளை அடைந்தும் ஆமை யோடு போன்ற புறவடி (பாதத்தின் மேற்பாகத்தை)ப் பெற்றும் இருக்கும்.

(3) பாதங்கள் முறம் போன்ற உருவம் கொண்டும், முரடாகவும், வெளுத்த நகங்களைப் பெற்றும், வளைந்து கோணலாகவும், நரம்பு நிறைந்தும், நன்கு உலர்ந்தும், விரல்கள் விலகியனவாகவும் இருந்தால் வறுமைத் துன்பத்தைக் கொடுக்கும். நடு உயர்ந்து பெரிய பாதங்களானால் வழி நடக்கவேண்டும். கஷாய நிறமானால் வமிச நாசம் ஏற்படும். உள்ளங்கால் சுட்ட மண் நிறமானால் பிரம்மஹத்தி செய்வான். மஞ்சள் நிறமானால் கூடத்தகாத பெண்டிருடன் கூடுவான்.

(4) கணைக்கால்கள் திரண்டும், அடர்த்தியற்ற மெல்லிய ரோமங்களை யுடையனவாகவும், தொடைகள் யானைத் துதிக்கைபோலவும், முழங்கால்கள் பருத்து, ஒன்றையொன்று ஒத்தும் இருந்தால் அவன் அரசனுவான், கணைக்கால்கள் நாய், குள்ளநரி ஆகியவற்றினுடையவைகளைப்போல் இருந்தால் செல்வம் இல்லாதவன்.

(5) அரசனுக்கு (உடலில்) மயிர்க்கால் ஒவ்வொன்றிலும் ஒரு ரோமம் இருக்கும். வேதம் வல்லார்களுக்கும் கற்றோர்களுக்கும் ஒரு காலில் இரண்டு ரோமம் இருக்கும். மூன்றும் அதற்கு மேலும் இருந்தால் அவர்கள் வறுமையையும் துன்பத்தையும் அடைவர். தலைமயிரும் இம் மாதிரியே நன்மையாகவும் தீமையாகவும் இருக்கும்.

(6) முழங்கால் சதைப் பற்று இல்லாமல் இருந்தால் அவன் பிற நாட்டிலே இறப்பான். சிறியதாக இருந்தால் சௌபாக்கியம் உண்டாகும். அகன்று விகாரமானுல் தரித்திரன் ஆவான். தாழ்ந்திருந்தால் பெண்டிர் அவனை வெற்றி கொள்வர். சதைப்பற்றுக் கொண்டிருந்தால் அரசுரிமை கிட்டும். பருத்திருந்தால் நீண்ட ஆயுள் அடைவான்,

(7) லிங்கம் சிறுத்திருந்தால் தனவான் ஆவான்; பருத்திருந்தால் பிள்ளையில்லாதவன்; இடது பக்கம் சாய்ந்திருந்தால் செல்வம் குறைவு. கோணலாக இருந்தால் செல்வம், புத்திரப்பேறு இல்லாதவன். கோணலாக இல்லாவிட்டால் பிள்ளைப் பேறு உடையவன். கீழ் நோக்கானால் வறுமை. நரம்பு எழுந்திருந்தால் புத்திரப் பேறு குறைவு. நுனி முடிப்புப்போல் பருத்திருந்தால் சுகத்தை அடைவான். மிருதுவாகில் மேகரோகம் போன்றவை ஏற்படும்.

(8) உரையால் மூடியது போன்ற லிங்கமானால் அரசன் ஆவன். நீண்டிருந்தாலும் வளைந்கியிருந்தாலும் செல்வம் அற்றவன். நேராகவும் உருண்டும் இருக்குமானாலும், மென்மையான நரம்பு எழுந்திருந்தாலும் தனவான் ஆவான்.

(9) ஒற்றைப் பீஜம் உடையவன் நீரில் மரிப்பான். ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தால் பெண்களிடம் சபலம் கொண்டவன்; இரண்டும் சரியாக இருந்தால் அரசன்; மேல் இழுத்துக்கொண்டிருந்தால அற்பாயுசு; தொங்குபவையானால் நூறு வயது இருப்பான்.

(10) மணி சிவந்திருந்தால் செல்வம் நிறைந்தவன்; வெளுத்தும் கறுத்தும் இருந்தால் பொருள் அற்றவன். சிறுநீர் ஓசையுடன் விழுந்தால் சுகம் அனுபவிப்பான்; ஓசையில்லாதிருந்தால் வறுமை.

(11) சிறுநீர் வலம்புரியாக இரண்டு மூன்று நான்கு தாரைகளாக விழுந்தால் அரசன் ஆவான். சிதறி விழுவதானால் செல்வம் அற்றவன்.

(12) சிறுநீர் ஏகதாரையாகச் சுழன்று விழுந்தால் மிகுந்த அழகோடு புத்திரன் அடைவான்.* மணி உயர்ந்து சமமாக இருந்தால், அவன் செல்வம், பெண்டிர், ரத்தினம் ஆகியவற்றை அடைவான்.

(13) மணி நடுவில் தாழ்ந்து இருந்தால், பெண்களையே பெறுவான்; அதனோடு வறுமையும் உறுவான்; நடுவில் உயர்ந்திருந்தால், கால்நடைச் செல்வம் மிகுந்தவன்; தடித்திருந்தால் வறுமை.

(14) சிறுநீர்த்துவாரம் நன்றாக உலர்ந்திருந்தால், செல்வம் இல்லாதவனாகவும், குரூபியாகவும் இருப்பான். சுக்கிலம் மலர்போன்று நறுமணம் வீசினால் அரசனாவான்.

(15) சுக்கிலம் தேன் மணம் கமழ்ந்தால் மிகுந்த பணக்காரனாக இருப்பான்; மீன் நாற்றம் கொண்டிருந்தால் அநேகம் பிள்ளைகள் பிறப்பர். நீர்த்து (தடிப்பு இல்லாமல்) இருந்தால் பெண் குழந்தைகளை அடைவான்; இறைச்சி நாற்றம் கொண்டிருந்தால் வெகுபோகி.

(16) சுக்கிலம் சாராய நாற்றம் வீசினால் யாகம் செய்வான்; உவர் நாற்றமானால் வறுமை எய்துவான். சீக்கிரமாய்ப் போகம் செய்பவன் நீண்ட ஆயுள் உடையவன்; அவ்விதம் இல்லாதவன் அற்பாயுசு கொண்டவன்.

* வேறு பாடத்தின்படி 'நல்ல அழகு வாய்ந்தவன். ஆனால், புத்திர பாக்கியம் இல்லை' என்று ஆகும்.

(17) பிருஷ்டபாகம் (சூத்தாம்பட்டை) மிகவும் பருத்திருந்தால் வறுமை அடைவான் ; சதைப்பற்றுடன் சமமாக இருந்தால் இன்பம் அனுபவிப்பான் ; பாதி அளவே இருக்குமாயின் நோயால் பீடிக்கப்படுவான் ; தவளையினுடையதைப்போல் இருக்குமானால் அரசனாவான்.

(18) இடை (கடி) சிங்கத்தினுடையதைப்போல் இருந்தால் அரசனாவான் ; குரங்கு, ஒட்டகம் ஆகியவற்றின் இடையை ஒத்திருந்தால் செல்வம் நீங்கியவன் ஆவான் ; அடி வயிறு (மேடு பள்ளம் இல்லாமல்) சமமானதாக இருந்தால் சுகம் அனுபவிப்பான் ; குடம், தட்டு ஆகியவை போலானால் ஏழையாவான்.

(19) விலா குறைவின்றிச் சதைப்பற்றுடன் இருந்தால் பணக்காரன் ஆவான் ; பள்ளமாகவும் கோணலாகவும் இருந்தால் வாழ்க்கையின்பத்தை அனுபவிக்க மாட்டான் ; மேடு பள்ளம் இல்லாமல் சமமான வயிறு ஆனால் போகத்தை நன்கு அனுபவிப்பான் ; தாழ்ந்திருந்தாலோ போகம் இல்லாதவன் ஆவான்.

(20) (மேல்) வயிறு உயர்ந்திருந்தால் அரசன் ஆவன் ; சமமாக இல்லாத மனிதர்கள் வக்கிர சுபாவத்தைப் பெற்றிருப்பர் ; பாம்பின் வயிற்றைப் போல் (நீண்டு மெலிந்து) உடையவர்கள் வறுமையால் வாடுவர் ; அதனோடு பெருந்தீனிக்காரராகவும் இருப்பர்.

(21) வட்டமாகவும், உயர்ந்தும், அகன்றும் உள்ள தொப்புளை உடையவர்கள் சுகத்தை அனுபவிப்பர் ; சிறியதும் கண்ணுக்குப் புலப்படாததும் (தாழ்ந்தும்) ஆழமாகவும் உள்ள தொப்புளை உடையவர்கள் துக்கத்தை அனுபவிப்பர்

(22) கோட்டின் நடுவில், அதாவது சதைமடிப்பின் நடுவில், உள்ளதோ, சரியாக இல்லாமல் மாறாக அமைந்தோ உள்ள தொப்புள் சூலை (வயிற்று வலி) நோயையும், வறுமையையும் காட்டும். இடஞ்சுழியாக இருந்தால் வஞ்சகனாவான். வலஞ்சுழியானால் புத்திசாலியாவான்.

(23) தொப்புள் பக்கவாட்டில் அகன்று அமையக்கொண்டவன் நீண்ட ஆயுளை உடையவன் ; மேற்புறமாக அகன்றிருந்தால் அரசனாவான் ; கீழ்ப்புறமாக விருந்தால் (ஆநிரை) பசுச்செல்வம் நிறைந்தவன். தாமரையின் காய்போன்ற காந்தியையுடையதானால் அவன் அரசனாவான்.

(24) வயிற்றில் சதைமடிப்பு ஒன்றையுடையவன் ஆயுதத்தால் மரணம் அடைபவன். இரண்டு இருக்குமானால் ஸ்திரீபோகம் உடையவன். மூன்றானால் ஆசிரியனாவான். நான்கானால் அநேக புத்திரர்களை அடைவான் சதைமடிப்பே இல்லாதவன் அரசனாவான்.

(25) அந்த மடிப்பு கோணலாக இருந்தால், அவன் சேரத்தகாத மாதருடன் கூடுவான் ; பாவியுமாவான். அது நேராக (சரியாக) இருக்குமானால் அவன் அயல் மாதரை வெறுப்பவனாவான்.

(26) விலாப்பக்கம் சதைப்பற்றுடன் மிருதுவாகவும், வலஞ்சுழியான ரோமங்களைப் பெற்றுமிருந்தால் அவன் அரசனுவான். இதற்கு மாருக (அதாவது விலாப்பக்கம் சதைப்பற்று இல்லாமலும் சொரசொரப்பாகவும் இடஞ்சுழி ரோமங்களையுடையதாகவும்) இருந்தால் அவன் சுகத்தை அடையாமல் வறுமையுடன் பிறருக்கு அடிமையாவான்.

(27) உயர்ந்து இல்லாமல் உள்ள மார்புக்காம்பை உடையவர்கள் பாக்கியசாலிகள். ஒன்றையொன்று ஒவ்வாமல் நீண்டவைகளாக உள்ளவர்கள் வறுமையில் உழல்வர். பருத்தோ உயர்ந்தோ அழுந்தியோ உடையவர்கள் அரசர்களாகவும் சுகத்தை அனுபவிப்பவராகவும் ஆவர்.

(28) மார்பு உயர்ந்து பருந்து உறுதியானதாகச் சதைப்பற்று மிகுந்ததாகவும் உள்ளவர் அரசராவர். விகாரமான மயிர் நிறைந்து நரம்புடன் கூடியதாக உள்ள மார்பையுடையவர் அதமர் ஆவர்.

(29) மார்பு சமமாக உள்ளவன் செல்வந்தனுவான். பருத்த மார்பையுடையவன் வீரன் ஆவன்; குறுகியிருந்தால் வறுமை எய்தும். சரியாக இல்லாமல் (மேடு பள்ளங்களைக் கொண்டோ கோணலாகவோ) இருந்தால் ஆயுதத்தால் மரணம் அடைவான்.

(30) (ஜத்ரு = தோளும் கழுத்தும் சேரும் இடம்) பிடரி ஒன்றோடொன்று ஒத்திராமல் உள்ளவன் கொடியவன். தோள் எலும்பு கூடும் சந்தி அகலமாக இருந்தால் பொருள் அற்றவன்; வறியன். உயர்ந்திருந்தால் போகத்தை அனுபவிப்பவன்; தாழ்ந்திருந்தால் தரித்திரம். பருத்து இருந்தால் பொருள் உடையவன்; செல்வந்தன்.

(31) கழுத்து தட்டையாகவோ, சதைப் பற்று இன்றி உலர்ந்து நரம்பு புடைத்தோ உள்ளவன் தரித்திரன். எருமையின் கழுத்தைப் போன்ற கழுத்துள்ளவன் வீரன்; காளையின் கழுத்தைப் போன்றுள்ளவன் ஆயுதத்தால் உயிர் துறப்பான்.

(32) கழுத்து சங்கு போல் இருந்தால் அரசன் ஆவான்; தொங்கும் கழுத்தை உடையவன் நன்றுகச் சாப்பிடுவான் (பெரு வயிறன்); முதுகு வளைவில்லாமலும் புறமயிர் இல்லாமலும் இருந்தால் அவன் பொருள் உடையவன். இதற்கு மாருக இருந்தால் கெடுதல்.

(33) அக்குள் வேர்வையில்லாமல் பருத்து உயர்ந்து சமமாக அமைந்து நறுமணம் உடையதாகவும், மயிர் அடர்ந்ததாகவும் இருந்தால் அவன் செல்வம் படைத்திருப்பான். இதற்கு மாருக இருந்தால் பொருள் இல்லாதவன்; வறியன்.

(34) கழுத்து, தசை (மாம்சம்) இல்லாமலும் மயிர் அடர்ந்தும் வளைவாகவும் குட்டையாகவும் (சிறுத்தும்) இருந்தால் பொருள் அற்றவன் ஆவன். விசாலமாகவும், உயர்ந்தும், தோளோடு நன்கு பொருந்தியும் இருந்தால் சௌக்கியத்தையும் வீரியத்தையும் (வலிமையையும்) அளிக்கும்.

(35) கைகள் ஒன்றை யொன்று ஒத்து, திரண்டு, பருத்து, யானைத் துதிக்கை போல் முழங்கால் வரை தொங்கினால் அவற்றையுடையவன் அரசனாவான். குறுகி மயிர்அடர்ந்து இருப்பவன கீழ்ப்பட்டவன் (அதமன்) ஆவான்.

(36) கை விரல்கள் நீண்டிருந்தால நீண்ட ஆயுளைக் கொடுக்கும். விரல்களிலே சதை மடிப்பு இல்லாமல் இருந்தால் பாக்கியவான் ஆவான். மெலிந்த விரல்களையுடையவன் மேதாவி. தட்டையாயிருந்தால் பிறருக்கு அடிமைப்பட்டு வாழ்வான்.

(37) பருத்த விரலானால் செல்வம் இல்லை ; வெளிப்புறமாக வளைந்த விரலானால் ஆயுதங்களால் மரணம் அடைவன். குரங்கின் கையைப் போல் அமைந்திருந்தால் தனிகன், செல்வம் உள்ளவன். புலியினுடையதைப் போல் இருந்தாலோ பாவியாவான்.

(38) மணிக்கட்டு வெளியில் தெரியாமல் மறைந்தும் திடமாகவும் நன்றாக் கூடியுள்ள பூட்டை உடையதாகவும் இருந்தால் அரசனாவான் ; இந்த இலக்கணத்தில் குறைந்தால் கைக்குச் சேதம் உண்டாகிறது. தளர்ந்தும் சப்தத்தோடு கூடியிருந்தாலும் (நெட்டை முறித்தாலும்) பொருள் அற்றவன் ஆவன்.

(39) உள்ளங்கை ஆழ்ந்திருந்தால் தந்தையின் பொருள் (பிதுரார்ஜித சொத்து) கிட்டாது. உருண்டு பள்ளமாக இருந்தால் பொருள் உடையவர்கள். நன்கு மேடான உள்ளங்கையை உடையவர்கள் வள்ளல்கள் ஆகி வழங்குவர்.

(40) உள்ளங்கைகள் ஒன்றையொன்று ஒத்திராமல் இருந்தால் கொடியவனாகவும் தரித்திரனாகவும் ஆவான். சிவந்திருந்தால் அரசன்; மஞ்சள் நிறமாயிருந்தால் அடையத்தகாத மங்கையரைப் புணருபவன். மழமழப்பு இல்லாத உள்ளங்கையானால் பொருள் செல்வம் அற்றவன்.

(41) நகம் உமிபோல் இருந்தால் நபும்சகன்; தட்டையாகவோ பிளந்தோ இருந்தால் பொருள் இழந்தவன் (தரித்திரன்); சொத்தை யாகவோ நிறம் குலைந்தோ இருந்தால் பிறருக்கு அடிமையாக (நூல் வேலை செய்பவனாக) இருப்பான். சிவந்திருந்தால் அரசனாவான்.

(42) பெரு விரலில் யவ-தானியம் போன்ற ரேகை இருந்தால் பணக்காரன். பெருவிரலின் அடிப்புறத்தில் உள்ளவை புத்திர பாக்கியத்தைக் காட்டும். விரல் இறை (கணு) நீண்டிருந்தால் பாக்கியவானாகவும் தீர்க்காயுள் உடையவனாகவும் இருப்பான்.

(43) கைரேகைகள் ஆழ்ந்து அழகாக (பளபளப்பாக) இருந்தால் செல்வம் உள்ளவன் ஆவான். அவ்விதம் இல்லாதுபோனால் தரித்திரம். விரல்கள் நெருங்கியிராமல் இருந்தாலும் ஏழைமை ; பருத்து நெருங்கி யிருந்தால் செல்வம் மிகுந்து வாழ்க்கையில் சிறந்து விளங்குவான்.

(44) மணிக்கட்டிலிருந்து தொடங்கி உள்ளங்கையை அடையும் மூன்று ரேகைகள் உள்ளவன் அரசனாவான். மீன் போன்ற இரண்டு ரேகைகள் இருந்தால் அவன் யாகங்களைச்செய்து எப்போதும் அள்ளி வழங்குபவனாக இருப்பான்.

(45) வச்சிராயுதம் போன்ற ரேகையானால் செல்வம் உடையவன். மீன்வால் போன்ற ரேகையானால் வித்தை அடைவான். சங்கரேகை யானால் அரசன். குடை, பல்லக்கு, யானை, குதிரை, தாமரை ஆகியவை போன்ற ரேகைகளும் சமமான பலனை (அரச பதவியை) அளிக்கும்.

(46) குடம், தாமரைத்தண்டு, வெற்றிக்கொடி (பதாகை), அங்குசம் இவை போன்ற ரேகையுடையவர்கள் குபேர சம்பத்து உள்ளவர்கள். மாலை போல் ரேகை இருந்தால் பணக்காரன். ஸ்வஸ்திகை உருவமானால் ஐச்வர்யம் பெருகும்.

(47) சக்கரம், கத்தி, கோடரி, தோமராயுதம், சக்தி, வில், ஈட்டி ஆகியவை போன்ற ரேகைகள் இருந்தால் சேனாதிபதிகளாக (வீரர்களாக) ஆவர். உரல் போன்ற உருவத்தைப்பெற்ற ரேகை உள்ளவர் விதிப்படி யாகம் செய்பவராவர்.

(48) மகரம், துவசம் (கொடி), பொக்கிஷம் இவை போன்ற ரேகை களையுடையவர்கள் [இந்தப் பகுதியை வேறு விதமாகவும் பொருள் கொள்ளமுடியும். மகரக்கொடியை உடைய மன்மதன் பொக்கிஷமான யோனி போன்ற ரேகை உள்ளவர்கள்] பெருஞ்செல்வத்தைப் பெற்றிருப்பர். பெருவிரல் அடியில் யாகவேதி போன்ற உருவத்தையுடைய பிரம்ம தீர்த்தம் எனப்பெறும் ரேகை இருந்தால் அக்நிஹோத்திரம் செய்தவ ராவர்.

(49) முக்கோண வடிவமான ரேகையுள்ளவர்கள் குளம், கோயில் முதலியவற்றை நிர்மாணித்துத் தருமம் செய்பவர். பெருவிரலின் அடியில் உள்ள ரேகைகள் பிள்ளைகளைக் குறிக்கும். மெல்லிய ரேகைகள் பெண்கள் ஆகும்.

(50) பெருவிரலுக்குப் பக்கத்து விரலான சுட்டுவிரலை அடையும் ரேகை நூறு வயதைக் குறிக்கும். குறைந்தோ நடுவில் அறுந்தோ இருந்தால் மரத்திலிருந்து விழுவதைக் கற்பனை செய்யவேண்டும். (மரத் திலிருந்து விழுந்து உயிர் துறப்பர் என்றோ வயது குறையும் என்றோ கொள்ளலாம்.) அதிகமான ரேகைகள் இருந்தாலும், ரேகைகளே இல்லா விட்டாலும் தரித்திரம்.

(51) மோவாய் மிகவும் குறைவாக (மெலிந்து) நீண்டிருந்தால் தரித்திரம்; பொருள் அற்றவன் ஆவான். சதைப்பற்றுடன் கூடியிருந் தால் தனம் மிகுந்தவன் ஆவான். கோணல் இல்லாமல் கோவைப் பழத்தை ஒத்த (சிவந்த) உதடு வாய்ந்தவர்கள் அரசராவர். சிறுத்திருந்தால் ஏழைமை.

(52) உதடு வெடித்தோ, துண்டிக்கப்பட்டோ (அறுந்தோ), நிறம் அற்றோ, மாறியோ, குரூரமாகவோ இருந்தால் பொருள் அற்றவர் ஆவார். அழகு வாய்ந்து நெருங்கி மிகவும் கூர்மையாக உள்ள கோரைப் பற்களும் சமமாக வரிசையாக உள்ள பற்களும் நன்மை பயக்கும்.

(53) நாக்கு சிவந்து நீண்டு மெல்லியதாகவும் பொருத்தமானதாக (சம்மானதாக)வும் இருந்தால் சுகத்தை நல்கும். வெளுத்தோ, கறுத்தோ, பருத்தோ (உலர்ந்து குரூரமாகவோ) இருந்தால் பொருள் அற்றவன் ஆவான். (தவடையும்) கன்னமும் அப்படியே.

(54) நன்கு பொருந்தி மூடும் வாயைப் பெற்று அழகாகவும் அழுக்கற்று (குற்றம் இல்லாமல்), சமமாக (கோணல் இல்லாமல்) உள்ள முகம் அரசர்க்கு உரியதாகும். இதற்கு மாறாக அமைந்திருந்தால் துக்கத்தை அனுபவிப்பார்கள். மிகப்பெரிய முகத்தைப் பெற்றவர்கள் பாக்கியமில்லாதவர்கள் ஆவர்.

(55) பெண் முகத்தைப் பெற்றவர்களுக்குக் குழந்தை இல்லை. வட்டவடிவமான முகம் கபடிகளுக்கு ஆகும்; நீண்ட முகம் ஏழைமையைக் குறிக்கும். பெண் முகத்தைப் பெற்றவர்கள் பாபத்தொழிலைச் செய்வார்கள்.

(56) தூர்த்தர் (மோசக்காரர்) களுடைய முகம் சதுரமாக இருக்கும்; பிள்ளை இல்லாதவர்களுக்குத் தாழ்ந்து (பள்ளமாக) இருக்கும்; லோபிகளுக்கும் (பொருள் அற்றவர்களுக்கும்) மிகக் குறுகலாக இருக்கும். போகிகளுக்கு நிறைந்து அழகாகக் காணப்படும்.

(57) மீசை மயிர் நுனிபிளவாமல் வழுவழுப்பாகவும், மிருதுவாகவும், வணக்கமாகவும் இருந்தால் சுபத்தை அளிக்கும். சிவந்தோ, விகாரமாகவோ, அற்பமாகவோ இருக்குமானால் அவர்கள் திருடர்கள் என்று அறிக.

(58) காது சதைப்பற்று இல்லாமல் இருந்தால் பாபத்தினால் மரணம் அடைவர். சப்பட்டையான காது வெகுபோகங்களை அளிக்கும். சிறியதாகக் குறுகிய காதை உடையவன் கிருபணன் (தரித்திரன்). இரும்பு முளை போன்ற காது உள்ளவர் அரசர் ஆவர்.

(59) காதில் மயிர் உள்ளவர் நீண்ட ஆயுளை உடையவர். விசாலமான காது செல்வத்தை அளிக்கும். நரம்புமிகுந்து தோன்றும் காதை உடையவர் கொடியவர் (குரூரர்). சதைப் பற்றுமிகுந்தோ நீண்டு தொங்குவதாகவோ உள்ள காது வாய்ந்தவர் நல்ல சுகத்தை அனுபவிப்பர்.

(60) கன்னம் தாழ்ந்து பள்ளமாக இராமல் (மேடாக இருந்தால்) போகத்தை அளிக்கும். சதைப்பற்று மிகுந்த கன்னத்தை உடையவன் மந்திரி ஆவான். கிளிமூக்குப் போன்ற மூக்கை உடையவன் சுகத்தை அடைவான். வற்றி இருந்தாலும் (சிரஞ்சீவி) நீண்ட ஆயுளை அடைவான்.

(61) அறுந்ததுபோன்ற உருவத்தைப் பெற்ற மூக்கு உடையவன் புணரத்தகாத மாதரை அடைவான். நீண்ட மூக்கானால் செல்வம். நன்றாக வளைந்திருந்தால் திருடன் ஆவான். சப்பையாக இருந்தால் மங்கையரால் மரணம் எய்துவான்.

(62) மூக்கின் நுனி கோணியிருந்தால் (வளைந்திருந்தால்)பெரும் பணக்காரன். வலதுபக்கமாக வளைந்திருந்தால் அதிகமாகச் சாப்பிடுகிறவன்; கொடியவன். நேராகவும், சிறுதுவாரங்களைப் பெற்றும், அழகாகவும் உள்ள நாசி பாக்கியத்தை அளிக்கும்.

(63) தும்மும்போது தும்மல் இரண்டு மூன்று சேர்ந்து (தொடர்ச்சியாகப்) பலத்த சப்தத்துடன் வெளிப்பட்டுப் பிறகு எதிர் ஒலித்தால் அவன் பணக்காரன் ஆவான். தும்மல் ஒன்றோடு ஒன்று சேராமலும் கெட்டியாகவும் இருந்தால் நீண்ட ஆயுளை உடையவன்.

(64) தாமரை இதழின் (காந்தியை) அழகை உடைய கண்களைப் பெற்றவர் தனிகர்; சிவந்த கடையோடு கூடிய கண்களைப் பெற்றவர் செல்வத்தை அடைவர்; தேன்போன்ற பொன்னிறம் வாய்ந்த கண்ணை அடைந்தவர் மிகப்பெரும் பணக்காரர். பூனைக் கண்ணை உடையவர் பாவிகள் ஆவர்.

(65) பச்சை, (மஞ்சள்), வெண்மை கலந்த நிறத்தை உடைய கண்ணைப் பெற்றவரும், வட்டமான கண்ணை உடையவரும் பாவிகள். கண் கோணலாக இருந்தால் திருடர். சாய்ந்த (அல்லது காய்ப்புண்ட) கண்ணை உடையவர் குரூரமனம் படைத்தவர். யானைக்கண் போன்ற கண்ணை அடைந்தவர் அரசர் ஆவர்.

(66) கம்பீரமான, அதாவது ஆழ்ந்த கண்களையுடையவர்கள் ஐச்வர்யத்தை அடைவர். நீலோத்பலம்போன்ற நிறம் கொண்டிருந்தால் வித்வான் ஆவர்; மிகவும் கறுப்பான கருவிழிகளானால் அந்தக் கண்கள் பிடுங்கப்பட நேரும்.

(67) பெரிய கண்களை உடையவர் மந்திரிப்பதவி அடைவர்; பொன்னிறமானால் பாக்கியம் கிட்டும். ஏழைகளின் கண்கள் மெலிந்து தோற்றம் அளிக்கும். பளபளப்புடன் விளங்கினால் மிகுந்த செல்வமும் நல்ல போகமும் கிட்டும்.

(68) புருவம் மிகவும் உயர்ந்திருந்தால் அற்பாயுசு உள்ளவன்; விசாலமாகவும் உயர்ந்தும் இருந்தால் மிகுந்த இன்பத்தை அடைவான். ஒன்றையொன்று ஒவ்வாமல் இருந்தால் வறுமை. இளம் பிறைபோல் வளைந்த புருவமானால் தனவான் ஆவான்.

(69) நீண்டு தொடர்ச்சியான (ஆனால் நடுவில் கூடாத) புருவமானால் தனிகர்கள் ஆவர்; நடுவிலே பிளந்திருந்தால், செல்வமற்றவர்; நடுவில் தாழ்ந்து வளைந்திருக்கும் புருவமானால் புணரத்தகாத மாதரிடம் பற்றுதல் கொள்வர்.

(70) உயர்ந்து அகன்ற நெற்றிப் பூட்டை உடையவர்கள் செல்வம் மிகுந்தவர்; பள்ளமாக இருந்தால் செல்வம் இராது ; பிள்ளைகளும் இல்லை. நெற்றி மேடுபள்ளமாக இருந்தால் பொருளற்றவர்; பாதிச் சந்திரன் போன்றிருந்தால் தனவான்.

(71) முத்துச் சிப்பிபோல் நெற்றி விசாலமாக இருந்தால் ஆசாரியர் ஆவர். நரம்பு நிறைந்து இருந்தால் அதர்மத்தில் இச்சையுள்ளவர். ஸ்வஸ்திகை போன்ற உருவங்களில் நரம்பு புடைத்திருந்தால் செல்வம் நிறைந்தவர் ஆவார்.

(72) தாழ்ந்த நெற்றியை யுடையவர்கள் சிறைப்படுவர்; கொலை நிமித்தமும் ஏற்படும் ; கொடிய தொழிலிலும் இச்சை கொள்வர்; உயர்ந்த நெற்றியானால் அரசர் ஆவர்; நெருங்கியிருந்தால் கிருபணன் ஆவன்.

(73) ஒருவனுடைய அழுகை தீனமாக இல்லாமலும், கண்ணீர் இல்லாமலும் அழகாகவும் இருக்குமானால் அது அவனுக்கு நன்மை பயக்கும். தீனமாகவும் அதிகக் கண்ணீரை உடையதுமான அழுகை நன்மை அளிக்காது.

(74) நடுக்கமற்ற சிரிப்பு நன்மை பயப்பதாகும் ; கண்ணை மூடிக் கொண்டு சிரிப்பவன் பாவி ; சந்தோஷம் உள்ளவனுக்கும், பைத்தியக் காரனுக்கும் சிரிப்பு அடிக்கடியும் புன் சிரிப்பாகவும் ஏற்படும்.

(75) நெற்றியிலே நீண்ட ரேகைகள் மூன்று இருந்தால் அவன் நூறு ஆண்டு வாழ்ந்திருப்பான். நான்கு ரேகைகள் இருந்தால் அரசுப் பதவியுடன் தொண்ணூற்றைந்து ஆண்டு வாழ்வான்.

(76) அறுந்து போன ரேகையானால் புணரத்தகாத மாதரைக் கூடுவான்; ரேகையே இல்லாவிட்டால் தொண்ணூறு வயது வாழ்வார். ரேகை இரு புறமும் கேசத்தைத் தொடுமானால் எண்பது வயது வரை வாழ்வார்.

(77) ஐந்து ரேகையானால் எழுபது வயது; ஆறு ஆனால் அறுபது; அதிகமான ரேகைகளானால் ஐம்பது ; கோணலாக வளைந்திருந்தால் நாற்பது வயது.

(78) ரேகை புருவத்தைத் தொட்டிருந்தால் முப்பது வயது ; இடது புறம் வளைந்திருந்தால் இருபது ; சிறு ரேகைகளானால் அற்பாயுசு; (இன்னும்) குறுகியிருந்தால் அதற்கு ஏற்றவாறு ஆயுள் அமையும்.

(79) உருண்டை வடிவான தலையையுடையவன் ஆநிரைச் செல்வம் அடைந்தவன் ஆவான். குடை போன்ற வடிவம் ஆனால் அரசன்; சப்பட்டையானால் பெற்றோர்களைக் கொல்பவன் ; எலும்பு பருத்த தலையானால் நீண்ட காலம் உயிர்வாழ்வான்.

(80) பானைபோன்ற தலையை உடையவனுக்குத் தியானத்தில் ருசி ஏற்படும்; இரட்டை மண்டையானால் பாபம் செய்பவன் ; செல்வமற்றவன் ;

பள்ளமான தலையானால் பெரியோராவார்; மிகவும் பள்ளமானால் அனர்த்தம் விளையும்.

(81) தலை, மயிர் மயிர்க்காலுக்கு ஒன்றாகவும், பளபளப்பாகவும், கறுத்தும், சுருண்டும், நுனி பிளக்காமலும், மிருதுவாகவும், மிகவும் அதிகமாக இல்லாமலும் இருந்தால் நல்ல சுகத்தை அனுபவிப்பனாகவோ அரசனாகவோ ஆவான்.

(82) தலைமயிர் மயிர்க்காலில் அதிகமான ரோமங்களும், ஏற்றக் குறை வாகவும், செம்பட்டை நிறமாகவும், தடித்தும், பிளந்த நுனியுடனும், சொரசொரப்பாகவும், குட்டையாகவும், அதிகமாகச் சுருண்டும், மிகச் செறிந்தும் இருந்தால் தனம் அற்றவன் ஆவான்.

(83) உடலின் எந்த உறுப்பும் உயர்ந்து, தசைப்பற்று இல்லாமல் நரம்பு எழுந்து இருக்குமானால், அது நன்மை பயக்காதது என்பது. மாறுபட்டு இருந்தால் நன்மை பயப்பதாகும்.

(84) உடலிலே மூன்று இடங்கள் விசாலமாகவும், மூன்றிடம் ஆழ்ந்தும், ஆறு உயர்ந்தும், நான்கு குறுகியும், ஏழு சிவந்தும், ஐந்து மெலிந்தும், ஐந்து நீண்டும் இருந்தால், அவன் அரசனாகவும் பூஜிக்கத் தக்கவனாகவும் ஆகிறான்.

(85) மனிதனுக்குத் தொப்புள், குரல், சுபாவம் (தன்மை) ஆகிய மூன்றும் ஆழ்ந்திருத்தலே நன்று. ஆண்களுக்கு மார்பு, நெற்றி, முகம் ஆகிய மூன்றும் விசாலமாக இருத்தல் சிறந்தது.

(86) இன்னும் மார்பகம், அக்குள், நகம், மூக்கு, வாய், பிடரி ஆகிய ஆறும் உயர்ந்து இருத்தல் நலம். ஆண்குறி, முதுகு, கழுத்து, கணைக்கால் ஆகிய நான்கும் குறுகியிருத்தல் நன்மை பயக்கும்.

(87) கடைக்கண், கால், கை, கன்னம், உதடுகள், நாக்கு, நகம், ஆகிய ஏழும் சிவந்திருந்தால் சிறந்ததாகும். பல், விரற்கணு, தலைமயிர், நகம், தோல், ஆகிய ஐந்தும் மெலிந்து இருந்தால் இன்பத்தை அளிக்கும். துன்பம் அனுபவிக்கப் பிறந்தவர்களுக்கு இவ்விதம் இராது.

(88) தவடை, கண், கை, மூக்கு, மார்பகம் (முலைக் காம்புகளுக்கு இடைப்பட்ட பாகம்) ஆகிய ஐந்தும் நீண்டதாயின் அரசர்கள்; அல்லா தார்க்கு இவ்விதம் இராது.

(89) ஸ்படிக ரத்தினத்தாலான குடத்தில் இட்ட விளக்கின் ஒளி பிர காசிப்பது போல் மனிதன், மிருகம், பறவை ஆகியவற்றின் உடலில் தோன்றும் பளபளப்பைக் கொண்டு தேஜஸின் குணங்களால் நன்மை தீமைகளைச் சாமுத்திரிகாலட்சணம் வல்லவர் தெரிந்து கொள்வார்.

(90) பூமி தத்துவத்தினின்றும் உண்டாகும் காந்தி, பல், தோல் நகம், கேசம், புற மயிர் ஆகியவற்றுக்கு மழமழப்புள்ள ஒரு பளபளப்

ஸ்பயும் நல்ல வாசனையையும் அளித்து, சந்தோஷம், தனலாபம், இகலோக போகம் ஆகியவற்றையும் நல்கி, எப்போதும் தர்ம வழியில் நிலைக்கச் செய்கிறது.

(91) நீரினின்றும் உண்டாகும் காந்தி அழகாகவும், கறுப்பாகவும் நிர்மலமாகவும், பச்சை நிறமுள்ளதாகவும், கண்ணுக்கு இனிமையாகவும் இருக்கும். அது பிராணிகளுக்குத் தாயைப் போல எல்லா விஷயங்களி லும் சித்தியை அளித்து, பாக்கியம், மிருதுத்தன்மை, சுகம், இகலோக போகம் ஆகியவற்றுடன் மங்களத்தையும் நல்குவது.

(92) நெருப்பினின்றும் உண்டாகும் காந்தி குரூரம் வாய்ந்ததும், ஒதுக்கமுடியாததும், தாமரை, பொன் அல்லது நெருப்புப் போன்ற நிறத்தைக்கொண்டதும் தேஜஸ் (பிரபாவம்), பராக்கிரமம், சக்தி ஆகிய வற்றோடு கூடியதும் ஆகும். அது மக்களுக்கு வெற்றியைக் குறிப்பதாக ஆகும். விரும்பிய பொருளைச் சீக்கிரம் அடையவும் செய்யும்.

(93) காற்றினின்றும் உண்டாகும் காந்தி அழுக்கடைந்தும், குரூரமாக வும், கறுத்தும், நல்ல வாசனை இல்லாததுமாக இருக்கும். அது கொலை, சிறை, நோய், அனர்த்தம், பொருளழிவு ஆகியவற்றை உண்டாக்கும். ஆகாய வெளியினால் ஏற்படும் காந்தி ஸ்படிகத்தை ஒத்து நிர்மலமாகவும், கம்பீரமாகவும் உள்ளது. அது அதிருஷ்டத்தோடு கூடி எல்லா நன்மைகளுக் கும் கருவூலம் போன்றது.

(94) நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய இவற்றினின்றும் உண்டாகுபவை ஐந்து. இன்னும் சிலர் சூரியன், விஷ்ணு, இந்திரன், யமன், சந்திரன் ஆகிய ஐவரிடமிருந்து தோன்றுபவையென வேறு ஐந்தையும் கூறுவர். அவற்றின் லட்சணம், பலன் ஆகியவை மேலே கூறியபடிதான். ஆகவே பத்து எனக் கொள்ளவேண்டியதில்லை. ஐந்தே ஆகும்.

(95) யானை, காளை, தேர், வெள்ளம், பேரிகை, மிருதங்கம், சிங்கம் இவற்றின் ஓசையைப் போன்ற குரலை உடையவர் அரசர்கள் ஆவர்; கழுதை, ஜர்ஜரப்பறை போன்ற கரேமான குரலை உடையவர்கள் செல்வம், இன்பம் ஆகியவை அற்றவர் ஆவர்.

(96) உயிர்ப்பிராணிக்கு உடலிலே கொழுப்பு, எலும்புக் கசிவு (மஜ்ஜை), தோல், எலும்பு, சுக்கிலம், ரத்தம், மாமிசம் என ஏழு சாரங்கள் (உள் பலம்) உண்டு. அவற்றின் பயன் பின்வருமாறு :

(97) கன்னம் (அண்ணம்), உதடு, எயிறு, நாக்கு, கடைக் கண், குதம், கை, கால் ஆகியவை சிவந்திருந்தால், ரத்தத்தின் சாரம் நிறைந்திருக் கிறது என்றாகும். அப்படிப்பட்டவர்கள் மிகுந்த சுகம், பெண்டிர், பிள்ளை, செல்வம் ஆகியவற்றைப் பெற்றிருப்பர்.

(98) மழமழப்பான தோலை உடையவர்கள் மிகுந்த பணக்காரர்கள்; மிருதுவான தோலானால் பாக்கியவான்கள்; மெல்லிய தோலானால் நல்ல அறிஞர்கள் ஆவர். கொழுப்பு, எலும்புக் கசிவு (மஜ்ஜை) ஆகிய சாரம் நிறைந்தவர்கள், அழகிய தேகத்தை உடையவர்களாகவும்; மக்கள், செல்வம் நிறைந்தவர்களாகவும் இருப்பர்.

(99) எலும்பு சாரம் மிகுந்தவன் பருத்த எலும்பை உடையவனாக இருப்பான். நல்ல பலமும், வித்தையும், அழகிய ரூபமும் பெற்றிருப்பான். தடித்து நிறைந்த சுக்கிலம் உடையவன் பாக்கியவான். வித்தை, அழகு ஆகியவற்றையும் அடைந்திருப்பான்.

(100) மாமிசஸாரம் மிகுந்தவன் நன்றாக வளர்ச்சி பெற்றிருப்பான்; வித்துவானாகவும், செல்வம் நிறைந்தவனாகவும், அழகுள்ளவனாகவும் இருப்பான். உடல் உறுப்புகள் நன்றாக இணைந்து பொருந்தி இருந்தால் அதற்கு ஸங்காதம் (சேர்க்கை, செறிவு) எனப் பெயர். அவ்விதம் உள்ளவன் சுகத்தை அனுபவிப்பான்.

(101) வாய், நாக்கு, பல், கண், நகம் ஆகிய ஐந்து இடங்களிலும் பளபளப்பான ஜொலிப்பு காணப்படும். அவ்விதம் இருப்பவனுக்கு செல்வம், மக்கள், பாக்கியம் ஆகியவை கிட்டும். அவ்விதம் இல்லாமல் சொரசொரப்பாக இருந்தால் வறுமை ஏற்படும்.

(102) மிகுந்த பளபளப்பான ஜொலிப்பு வாய்ந்து ஒளி வீசும் உடலைப் பெற்றவர் அரசராவர்; நடுத்தரமாக உடையவர்கள் செல்வம், மக்கள் பெற்றிருப்பர்; ஜொலிப்பு இல்லாமல் சொரசொரப்பாக இருந்தால் பொருளற்றவராவர்; அந்த ஜொலிப்பு சுத்தமாக இருந்தால் நன்மை பயக்கும். கலப்பாக இருக்குமானால் நன்மை பயக்காது.

(103) சீலத்தை (முன்வினைப்பயனை) முகத்திலிருந்து அறியலாம். பசு, எருது, புலி, சிங்கம், கருடன் ஆகியவற்றின் முகம்போல் இருந்தால், தடுக்க முடியாத வீரத்தையும், எதிரிகளை வெல்லும் வல்லமையையும் பெற்று அரசர்கள் ஆவார்.

(104) குரங்கு, எருமை, பன்றி, ஆடு ஆகியவற்றின் முகம் போலிருந்தால் மக்கள், செல்வம், சுகம் ஆகியவற்றை அடைவர். கழுதை, ஒட்டகம் ஆகியவை போன்ற முகமும் உடலும் இருந்தால் செல்வம், சுகம் இல்லாத தரித்திரர் ஆவர்.

(105) உத்தமம், மத்திமம், அதமம் ஆகிய மூவகை ஆடவர்களின் உயரம் முறையே நூற்றெட்டு, தொண்ணூற்றாறு, எண்பத்து நான்கு அங்குலம் (கைவிரல் அளவு) கொண்டதாக இருக்கும்.

(106) தராசில் நிறுத்தால் அரைப்பாரம் எடையுள்ளவன் மக்கள் செல்வம் உள்ளவன்; அதற்குக் குறைந்தால் துக்கம் அனுபவிப்பான்; ஒரு பாரம் எடை உள்ளவன் தனிகன் ஆவான். அதற்குமேல் ஒன்றரைப் பாரம் எடையுள்ளவன் பூமி முழுவதையும் ஆளும் அரசன் ஆவன்.

(107) உயர்த்தையும் எடையையும் பெண்களுக்கு இருபது வயதிலும், ஆண்களுக்கு இருபத்தைந்து வயதிலும் அதாவது அவர் அவர் ஆயுள் பரிமாணத்தில் நாலில் ஒரு பாகம் கழிந்ததும் கணக்கிடவேண்டும்.

(108) நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயவெளி, தேவர், மனிதர், அரக்கர், பிசாசு, மிருகம் ஆகியவற்றின் தன்மையை (ஸத்துவத்தை)ப் பெற்றவனாகிருன் மனிதன். அவற்றின் லக்ஷணம் பின்வருமாறு :

(109) பூமியின் தன்மை வாய்ந்தவன் மங்களகரமான புண்ணிய வாசனை யுடையவன் ; நல்ல போகங்களை அனுபவிப்பான் ; அழகிய மூச்சை உடையவன் ; திடமானவன். நீரின் தன்மை வாய்ந்தவன் ; அதிகம் நீரைப் பருகுவான் ; மனைவியிடம் நீங்காத காதல் கொண்டவன் ; ரசமான பொருள்களை நுகர்பவன் ஆவன்.

(110) நெருப்பின் தன்மை பெற்றவன் அலைபாயும் மனத்தை உடையவன் ; மிகவும் கடுமையானவன் ; பெருங்கோபி ; அதிகப்பசி உடையவன் ; பெருந்தீனிக்காரன். காற்றின் தன்மை வாய்ந்தவன் நிலையில்லாதவன் ; மெலிந்த சரீரம் உள்ளவன் ; சீக்கிரம் கோபத்தை அடைபவன் ஆவன்.

(111) ஆகாயத்தின் தன்மை வாய்ந்தவன் கெட்டிக்காரனாகவும் சப்தங்களின் இலக்கணத்தை அறிந்தவனாகவும் நன்கு அமைந்த உடலுறுப்புகளை உடையவனாகவும் இருப்பான். தெய்வத்தன்மை பொருந்திய ஆடவன் தியாகம் புரிபவனாகவும், அற்பமான கோபத்தை உடையவனாகவும் நட்பிலே விருப்பமுள்ளவனாகவும் இருப்பான்.

(112) மானிடத் தன்மை பெற்ற மனிதன் சங்கீதம், ஆபரணம் ஆகியவற்றில் ஆசை யுள்ளவனாகவும் எப்போதும் பகுத்தறியும் சீலம் உள்ளவனாகவும் இருப்பான்.

(113) ராக்ஷஸத் தன்மை வாய்ந்தவன் கடுங்கோபியாகவும், துஷ்டகாரியங்களைச் செய்பவனாகவும், பாபியாகவும் இருப்பான். பேயின் தன்மை பெற்றவன் நிலையில்லாதவனாகவும், அழுக்கடைந்தவனாகவும், அதிகமாகப் பேசுகிறவனாகவும், பருத்த அங்கங்களை உடையவனாகவும் இருப்பான்.

(114) மிருகத்தன்மை பெற்றவன் பயந்தவன் ; கோரமான பசியை உடையவன் ; பெருந்தீனிக்காரன். மனிதனுடைய ஸத்துவத்தை (தன்மையை) அறிந்தவர்கள் இவ்விதம் கூறுவர்.

(115) புலி, அன்னம், மதயானை, ரிஷபம், மயில் ஆகியவற்றின் நடையை ஒத்தவர்கள் அரசர்கள் ஆவர் ; ஓசைப்படாமலும், வேகமில்லாமல் மந்தமாகவும் நடையுள்ளவர்கள் சீமான்கள், தலைவர்கள் ஆவர். விரைவாகவும் குதித்துக் கொண்டு நடப்பவர் தரித்திரர்கள் ஆவர்.

(116) எவனுக்குக் களைப்படைந்த சமயம் வாகனமும், பசித்த சமயம் ஆகாரமும், தாகம் எடுத்த வேளையில் தண்ணீரும், பயம் உண்டான போது பாதுகாப்பும் இட்டுகிறதோ அவனைப் புண்ணியவான் என்று சாமுத்திரிகா லட்சணம் அறிந்தவர் கூறுவர்.

(117) இந்தப் புருஷ லட்சணம் மாமுனிவர் கூறியதைக் கொண்டு என்னால் சுருக்கமாக வரையப்பட்டது. இதைப்படித்தவன் அரசனுக்கு வேண்டியவனாகவும் எல்லோருக்கும் பிரியனாகவும் ஆவன்.

69-ஆம் அத்தியாயம் சோதிட நூலை அனுசரித்து ஜனன காலத்தில் பலம் பெற்று விளங்கும் இரக நக்ஷத்திரங்களைக் கொண்டு வகுக்கப் பெறும் ஐந்து வித புருஷர்களின் லக்ஷணங்களைக் கூறுவது, இவ்விடம் மொழி பெயர்த்துக் கொடுக்கப் பெறவில்லை.

எழுபதாம் அத்தியாயம்.

மகளிர் இலக்கணம்.

(1) உயர்ந்த நுனி (முனை)யைப் பெற்று வழுவழுப்பாக உள்ள பாதம்; சிறுத்துச் சிவந்த நகங்கள்; சரியான வளர்ச்சியோடு அழகாக வெளிக்குத் தெரியாமல் மறைந்திருக்கிற பரடு (கணுக்கால்); தாமரை மலரின் காந்தியைப் பெற்ற உள்ளங்கால்; ஆகியவை அடைந்த பெண்ணை மணந்து கொள்பவன் தரணி ஆளும் அரசனுவான்.

(2) மீன், அங்குசம், தாமரை, தானியம் (நெல்), வச்சிராயுதம், கலப்பை, கத்தி ஆகியவற்றின் குறிகளைக் கொண்டு, வேர்வையில்லாமல் மிருதுவான உள்ளங்கால்களைப் பெற்றுள்ள பாதங்கள்; மயிர், நரம்பு இல்லாமல் (தோன்ருமல்) உருண்டு திரண்டு உள்ள கணைக்கால்; ஒன்றையொன்று ஒத்துப் பூட்டுப் பருக்காமல் சரியாகவுள்ள முழங்கால்கள்; ஆகியவை சிறந்தவை.

(3) நெருங்கி, யானையின் துதிக்கையை ஒத்து, மயிர் இல்லாமல் காணும் தொடை; அரசிலையைப் போன்று விசாலமான அல்குல்; பரந்து ஆமை முதுகு போல் உயர்ந்து தோன்றும் யோனியின் நெற்றி; மறைந்து தோன்றும் மணி; இவை செல்வத்தை அளிக்கும்.

(4) சதைப் பற்று மிகுந்து, பருத்து, விசாலமான நிதம்பப் பிரதேசத்தை உடைய மங்கை அரைநூல்மாலை என்னும் ஆபரணத்தைத் தரிக்கும் பேறு அடைவாள். ஆழ்ந்து அகன்று வலஞ் சுழி பெற்ற தொப்புள் சிறந்தது.

(5) மூன்று (சதை) மடிப்புகள் பெற்று, மயிர் இல்லாமல் உள்ள இடை; ஒன்றையொன்று ஒத்து நெருங்கிப் பருத்துக் கடினமாக விளங்கும் கொங்கைகள்; மயிரில்லாமல் மிருதுவான மார்பகம், சங்குபோல் உயர்ந்த கழுத்து; ஆகியவை பெற்ற மங்கையர் சிறந்தவர்கள்; பொருள், இன்பம் ஆகியவற்றை அடைவார்கள்.

(6) செம்பருத்தி மலரை ஒத்துச் சதைப் பற்று மிகுந்து, அழகிய கொவ்வைப் பழத்தின் தோற்றம் வாய்ந்த உதடு; மல்லிகை மொக்கைப் போன்று ஒன்றுக்கொன்று வேறுபாடு இல்லாமல் வரிசையாக உள்ள பற்கள்; இவை பெற்ற பெண் இல்லற இன்பத்தையும் செல்வத்தையும் அடைவாள்.

(7) (நயம்) தாக்ஷிண்யத்துடன் கூடி, வஞ்சனையற்று, குயில், அன்னம் ஆகியவற்றின் குரலைப்போல் அழகான பேச்சை உடையவள் ஈனதசையை அடையமாட்டாள்; குறைவற்ற சௌக்கியத்தை அடைவாள். சமமாக ஒன்றையொன்று ஒத்த பக்கத்தைப் பெற்று நேராகவுள்ள அழகிய மூக்கு, கருநெய்தல் இதழின் காந்தியை வெல்லும் கண் ஆகியவை சிறந்தவை,

(8) ஒன்று கூடாமலும், அதிகமாகப் பருத்திராமலும், பிறைச் சந்திரன் போல் வளைந்திருக்கும் புருவங்கள் சிறந்தவை. பாதிச் சந்திரன் போன்ற உருவத்தைப் பெற்று, ரோமம் இல்லாமல், வணங்காததும் உயர்ந்திராததும் (பள்ளமாகவோ மேடாகவோ இல்லாமல்) உள்ள நெற்றியானது சிறந்தது!

(9) இரண்டு காதுகளும் ஒன்றையொன்று ஒத்து, ஏற்றபடி மாம்சம் நிறைந்து ஒட்டினாற் போலவும் மிருதுவாகவும் ஒலியைக் கேட்பதில் கூர்மையாகவும் இருந்தால் சிறந்தவை. தலைமயிர் வழவழவென்று கறுத்துச் சுருண்டு மிருதுவாகவும் தனித் தனியாக முளைத்ததாகவும் இருந்தால் சுகத்தை அடைவாள். தலை (கோணல் முதலிய குறைகள் இல்லாமல்) சமமாக இருக்கவேண்டும்.

(10) உள்ளங்காலிலோ உள்ளங்கையிலோ கும்பம், சிங்காதனம், குதிரை, யானை, தேர், கற்பக விருக்ஷம், யூபஸ்தம்பம், பாணம், மாலை, குண்டலம், சாமரம், அங்குசம், தானியம் (யவ-நெல்), மலை, கொடி, தோரணம், மீன், ஸ்வஸ்திகை, வேதி, விசிறி, சங்கு, குடை, தாமரை ஆகியவை போன்ற ரேகையை உடைய ஸ்திரீ அரசனை மணந்து அரசி ஆவாள்.

(11) வெளிக்குத் தோன்றாமல் மறைந்துள்ள மணிக்கட்டுடன் மலர்ந்த தாமரையின் உட்புறத்தை ஒத்த கைகள், சிறுத்து நெருங்கியிராத கணுவையுடைய விரல்கள், தாழ்ந்தோ உயர்ந்தோ இல்லாமல் அழகிய நல்ல ரேகைகளுடன் கூடிய உள்ளங்கை, இவைகளோடு கூடியவர்கள் அரசன் மனைவியாவார்கள். அவர்கள் நீண்டகாலம் சுமங்கலிகளாகப் பிள்ளைகளை அடைந்து சுகம், செல்வம், ஆகியவற்றை அனுபவிப்பார்கள்.

(12) ஸ்திரீயின் உள்ளங்கையில் மணிக்கட்டிலிருந்து கிளம்பி நடுவிரலை அடையும் ஒரு ரேகை இருந்தாலும் அல்லது உள்ளங்காலில் நெடுக ஒரு ரேகை (ஊர்த்துவமாக) இருந்தாலும் அல்லது (அவளுடைய) புருஷனுக்கு இவ்விதம் இருந்தாலும் அவள் ராஜ்ய சுகத்தை அடைவாள்.

(13) சுண்டு விரலின் அடியில் தோன்றிச் சுட்டு விரலுக்கும் (அதாவது ஆள்காட்டி விரலுக்கும்) நடு விரலுக்கும் இடையை அடையும் ரேகை அவளுடைய ஆயுள் பூரணமானது என்பதைக் காட்டுகிறது. அது குறைந்திருப்பது ஆயுளின் குறைவைக் காட்டும்.

(14) பெரு விரலின் அடியில் உள்ள ரேகைகள் பிள்ளைப் பேற்றைக் குறிக்கும். பருத்துள்ள ரேகைகள் ஆண் குழந்தைகளையும், மெல்லிய ரேகைகள் பெண் குழந்தைகளையும் காட்டும். அந்த ரேகைகள் நடுவில் அறுந்து போகாமல் நீண்டு இருந்தால் குழந்தைகள் தீர்க்காயுள் உடையவர்கள்; அறுந்திருந்தால் அற்பாயுள் உடையவர்கள் என்பதை அறிவிக்கும்.

(15) இவ்விதம் சொன்னவை பெண்களுடைய நல்ல லக்ஷணங்கள். இவற்றுக்கு மாறுபட்டு உள்ளவை கெடுதல்களைக் கொடுப்பனவாம், அவற்றையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்,

(16) காலின் சுண்டு விரலோ அதை அடுத்த விரலோ பூமியில் பதியாமல் இருந்தாலும், கால் பெரு விரலுக்கு அடுத்த விரல் பெரு விரலைக் காட்டிலும் நீண்டிருந்தாலும் அவள் கற்பில்லாதவள்; மிகுந்த பாபத்தைச் செய்பவள்.

(17) மேல் பாகம் பருத்து, உருண்டையாகவோ சதைப்பற்றுடன் திரண்டோ, நரம்பு தெரியும்படியாகவோ, வற்றியோ, மயிர் நிறைந்தோ, அதிகமான சதைப்பற்றுடனே உள்ள கணைக்கால்; ஆழ்ந்தோ மிகச் சிறுத்தோ, அப்பிரதக்ஷிணமான சுழியை உடையதாகவோ அமைந்த யோனி, பானைபோன்ற வயிறு ஆகியவை மங்கையருக்குத் துக்கத்தை அளிக்கும்.

(18) பெண்களுக்குக் கழுத்துக் குட்டையாகி, குறுகியிருந்தால் மிகவும் வறுமை; நீண்டிருந்தாலோ குல க்ஷயம்; பருத்திருந்தாலோ அவள் குரூரம் வாய்ந்தவளாக இருப்பாள்.

[குல க்ஷயம் = வமிச நாசம் அல்லது பரம்பரையாக வருகிற எலும்புருக்கும் நோய்.]

(19) சாய்ந்த (அதாவது ஓரக்கண்) பார்வை பெற்றோ, பொன்னிறமாகவோ, கறுப்பும் மஞ்சளும் கலந்த (சியாவ நீல) நிறம் வாய்ந்ததாகவோ உள்ள கண்களையுடைய பெண் நடத்தை கெட்டவள்; குறுநகை புரியும்போது கன்னங்களில் குழி விழுந்தால் அவள் சந்தேகமில்லாமல் விபசாரி ஆவாள்.

(20) ஒருத்தியின் நெற்றி (தொங்கிக் கொண்டிருந்தால்) தாழ்ந்திருந்தால் அவளுடைய மைத்துனன் மரணம் அடைவான். வயிறு தொங்கினால் மாமனுருக்கும், பிருஷ்டபாகம் தொங்குவதானால் கணவனுக்கும் மரணம் நேரும். மயிர் மிகுந்து நெருங்கிக் கூடிய மேல் உதடு கீழ் உதடுகளையுடையவளும் கணவனைக்காட்டிலும் உயரமானவளும் நன்மை பயக்கமாட்டாள்.

(21) மயிருடன்கூடியோ, மாசு நிறைந்தோ, நன்கு ஒளி பெற்றோ, ஒன்றுக்கொன்று சரியில்லாமலோ உள்ள கொங்கைகளும் காதுகளும் மங்கையருக்குக் கிலேசத்தைக் கொடுக்கும். பருத்தோ, கோணலாகவோ, ஒழுங்கில்லாமலோ, கறுத்த சதை மிகுந்தோ காணப்படும் பற்களையுடைய பெண்ணும் கிலேசத்தை அடைவாள்; அவள் திருட்டுத்தனம் உள்ளவளாகவும் இருப்பாள்.

(22) கையில் உள்ள ரேகைகள் விகாரமாகவும், செந்நாய், காக்கை கழுகு, பாம்பு, கோட்டான் இவை போன்றனவாகவும், கைகள் சுருங்கியோ நரம்பு தோன்றியோ உடைய பெண் சுகம், தனம் ஆகியவை இல்லாதவள்.

(23) மேல் உதடு உயர்ந்தும் தலைமயிரின் நுனி வழுவழுப்பாக இல்லாமலும் உடையவள் கலகத்தில் ஆசையுள்ளவளாக இருப்பாள். பார்வைக்கு விகார உருவம் படைத்த பெண்ணிடம் பெரும்பாலும் குறைகள் தோன்றுகின்றன. அதேபோல அழகான உருவம் பெற்றவளிடம் நல்ல குணங்கள் தோன்றுகின்றன,

(24) கணு(பரடு)வோடு கூடிய பாதம் முதலாவது ஆகும். முழங் காலுடன் கூடிய கணைக்கால் இரண்டாவது ; லிங்கம், தொடை, விருஷணம் இவை மூன்றுவது ; தொப்புளும் இடுப்பும் நாலாவது.

(25) வயிறு ஐந்தாவது ; ஸ்தனங்களோடு கூடிய மார்பு ஆறுவது ; பிறகு வரும் தோளும் தோள்பட்டையும் எழாவது ; உதடு, கழுத்து ஆகியவை எட்டாவது என்பர்.

(26) புருவங்களோடு உள்ள கண் ஒன்பதாவது ; நெற்றியுடன்கூடிய தலை பத்தாவது ; இவ்விதம் உடலைப் பத்துப் பிரிவாகக் கொள்வர். இந்த உறுப்புகள் அசுப லக்ஷணங்களைப் பெற்றிருந்தால் கெடுதலான பலனை அளிக்கும். அவை நல்ல லக்ஷணங்களையுடையனவாக இருந்தால் நன்மை பயக்கும்.

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

புருஷ லட்சணம்

(எண்—செய்யுள் எண்)

ஸ்திரீ லட்சணம்.

(எண்—செய்யுள் எண்)

ஸ்திரீ லட்சணம்—தொடர்ச்சி.

நந்தி நூல் (சர நூல்).

நந்தி நூல் (சரநூல்)—தொடர்ச்சி.

(எண்—செய்யுள் எண்)

நந்தி நூல் (சரநூல்)—தொடர்ச்சி.

(எண்—செய்யுள் எண்)